1111
09.01.08

வெளியீடு 14-9-2007 Issued 14-9-2007

தமிழ்நாடு சட்டமன்றக் காப்பகம்
29
சென்னை-600 009
எழும்பூர்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 2, 2007—தொகுதி 33—எண் 3

Wednesday the 2nd May 2007—Volume 33—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

227664

## 2–5–2007

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 747-748

**கவன ஈர்ப்பு—**

நெல்லிக்குப்பம், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலைக் கழிவு நீரால் பாதிப்பு 748-754

திரு. தி. வேல்முருகன் 749-754

*மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் 749-752,754

**மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி 755-792, 797-862, 863-907

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை
(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)
(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
(ஈ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை
— 755-792

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் 755-773, 787-790

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 774-786

பக்கங்கள்

**3. மானியக் கோரிக்கைகள், 2007-2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 44 – சிறு தொழில்கள் துறை
(ஊ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — 797-907

*மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 797,828,830, 831,894-905

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன் 814,828 886-894

திரு. மா. சந்திரகாசி 829-838

*திரு. ந. சுந்தரம் 838-844

*திரு. அ. சின்னசாமி 844-850

*திரு. அ. தமிழரசு 850-855

திரு. வே. மாரிமுத்து 855-859

திருமதி பி. பத்மாவதி 859-862

*திரு. பெ. காமராஜ் 863-868

திரு. டி. மூர்த்தி 868-872

திரு. விடியல் எஸ். சேகர் 872-878

திரு. கே.எஸ். விஜயகுமார் 879-885





பக்கங்கள்

**4. விதி 110–ன்கீழ் அறிக்கை**—

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்– மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை 793-796

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 793-796

**5. அறிவிப்பு**—

'பெரியார்' திரைப்படம் திரையிடுதல்– உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி 862-863

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 907-909

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 19, சர்வஜித் - திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மே 2, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு."*

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருந்தால் [illegible] வாடாமல் இருந்தால் [illegible] செழிப்பும் [illegible] ஒவ்வொரு நாளும் அரசின் [illegible] ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டும்.

[**குறிப்பு:** ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறவில்லை என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** Mr. Speaker Sir

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்து நாங்கள் ஏற்கெனவே கவன ஈர்ப்பு கொண்டு வந்தோம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள் (குறுக்கீடு) எல்லாம் நாளைக்குப் பார்க்கலாம். உட்காருங்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கின்றன. நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள்

[2007 மே 2

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, mike கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் என்ன matter என்று சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Mike கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject–ஐச் சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருந்தேன். நாளைக்கு எடுப்பதாகச் சொல்லியிருந்தீர்கள். ஆனால், இன்றைக்கு அதை மறுத்துக் கடிதம் வரப்பெற்றிருக்கிறது. என்ன காரணம் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். (குறுக்கீடு) அதற்குப் பிறகு ஆய்வு செய்தபோது, எனக்கு அது சரியாகப்படவில்லை. அதனால் reply-ஐ உங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன காரணமென்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன காரணமென்றால், என்னுடைய view–விலே அது privilege–லே வராது; உட்காருங்கள்.

## 2. கவன ஈர்ப்பு

### நெல்லிக்குப்பம், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலைக் கழிவு நீரால் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. தி. வேல்முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

(அனைந்திந்[illegible] அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உ[illegible] அவையிலிருந்து வெளியேறினர்.)

227664



2007 மே 2]

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையின் கழிவு நீரால், விவசாய நிலங்கள், நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நெல்லிக்குப்பத்தில் உள்ள திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் சர்க்கரை ஆலை 1944 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 5,000 டன் கரும்பு அரைக்கும் திறன் கொண்டதாகும். இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 980 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேற்றப்படுகின்றது. இத்தொழிற்சாலையின் கழிவு நீர், இத்தொழிற்சாலை அமைத்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலைக்குச் சொந்தமான 78.13 ஏக்கர் நிலத்திலும், தனியார் குத்தகை நிலங்களான சுமார் 63.13 ஏக்கர் நிலத்திலும் விவசாயப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் மாதிரிகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஒவ்வொரு மாதமும் சேகரிக்கப்பட்டு, வாரிய ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இவ்வாறு ஆய்வு செய்யப்பட்டதில், கழிவு நீர் மாதிரியின் தரம், பொதுவாக வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்குட்பட்டு உள்ளது.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நிலங்களிலிருந்து நிலத்தடி நீர் மற்றும் மண் படிவங்கள், கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆய்வு, மண்ணின் கார, அமிலத் தன்மை சம நிலையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், நிலத்தடி நீரின் B.O.D.-யின் அளவு விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீருக்கான வரையறுக்கப்பட்ட அளவுக்கு உட்பட்டுள்ளது.

இந்நிறுவனம், கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழக உதவியுடன் நிலத்தடி நீரின் தன்மை மற்றும் மண்ணின் தன்மை குறித்துத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. மேலும், இது குறித்த அறிக்கைகளைத் தொடர்ந்து சமர்ப்பிக்குமாறு வாரியம் இந்நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இத்தொழிற்சாலை வளாகத்தில் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான எரிசாராயத் தொழிற்சாலை ஒன்றும் உள்ளது. இது மாதம் ஒன்றுக்கு 1,000 கிலோ லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும். இதிலிருந்து நாளொன்றுக்கு 440 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேறுகின்றது. இக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, உயிர் எரிவாயு (Bio-gas) தயாரிக்கப்படுகின்றது. இக்கழிவு நீரில் பயிருக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் உள்ளதால், கழிவு நீரின் ஒரு பகுதி சர்க்கரை ஆலை கசடு மண்ணுடன் (Press mud) கலந்து உயிர் உரம் (Bio-compost) தயாரிக்கப்படுகிறது. மீதம் உள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், லாரிகள்மூலம் எடுத்துச் செல்லப்பட்டு. தனியார் விவசாயிகளின் நிலங்களில் அவர்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப, பாசனத்திற்கு, குறிப்பிட்ட அளவு நீருடன் கலந்து ஒரு பயிர் போகத்திற்கு ஒரு முறை மட்டுமே பாய்ச்சப்படுகிறது (one time application). மேற்கூறிய கழிவு நீர்ப் பயன்பாடு, கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த ஆலை 1944–ல் தொடங்கப்பட்டு, மாசினுடைய பாதிப்பு அளவு கட்டுக்குள் வைக்கப்பட்டிருப்பதாகவும், அது வெளியேற்றுகிற கழிவு நீரை நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்காணித்து வருவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தை நம்முடைய சுற்றுச் சூழல் துறையினுடைய அதிகாரிகளும், வாரியத்தினுடைய D.E. அவர்களும் சென்று ஆய்வு செய்கிறபோது மட்டும், அவர்கள் அந்தக் கழிவு நீரைச் சுத்திகரித்து, B.O.D. இல்லாத



அளவிற்கு அனுப்புகிறார்கள். இதற்கு மிகப் பெரிய காரணம், அந்த ஆலைக் கழிவை மறுசுழற்சி முறை செய்யும் பணியில் இயங்குகின்ற இயந்திரங்களுக்கு மின்சாரக் கட்டணம் ஒரு மாதத்திற்கு ரூ.30 இலட்சம், ரூ.40 இலட்சம் என்று ஆகின்ற காரணத்தினால், அவர்கள் அதை இயக்குவதில்லை. அரசினுடைய அதிகாரிகளும், துறையினுடைய அதிகாரிகளும் ஆய்வுக்குச் செல்கின்ற நாட்களில் மட்டும், அவர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டுவிடுவதால், அன்றைக்கு மட்டும் அந்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன. மற்ற நேரங்களில் அவை இயக்கப்படாத காரணத்தினாலே, மிகப் பெரிய மாசோடு, அங்கிருக்கின்ற காராமணிக்குப்பம், பில்லாலி, தொட்டி, திருமாணிக்குழி, அருங்குணம், திருவந்திபுரம் மேலும் அதையொட்டியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களிலுள்ள விவசாய நிலங்கள், குறிப்பாக, நெல் பயிரிடுவதெல்லாம் இன்றைக்கு மிகப் பெரிய சேதத்திற்குள்ளாகியிருக்கின்றது.

ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புவது, இதுபோன்று அரசு அதிகாரிகள் ஆய்வு செய்கின்றபோது மட்டும் இயந்திரங்களை இயக்கி, மற்ற நேரங்களில் இயந்திரங்களை இயக்காதவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, தொடர்ந்து இயந்திரங்களை இயக்கி, B.O.D. அதிக அளவில் இல்லாத அளவிற்கு நீரை வெளியேற்றி, அந்த மக்களையும், குடிநீரையும் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் சர்க்கரை ஆலை, 1944 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 5,000 டன் கரும்பு அரைக்கும் திறன் கொண்டது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 980 கிலோ லிட்டர் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் கீழ்க்கண்டவாறு விவசாயப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது; தொழிற்சாலைக்குச் சொந்தமான நிலம் 78.13

ஏக்கர். தனியார் குத்தகை நிலங்கள் 63.13 ஏக்கர். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் மாதிரியின் தரம், பொதுவாக வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்கு உட்பட்டுள்ளது. இந்த ஆலையோடு ஓர் எரிசாராயத் தொழிற்சாலையும் அதிலே இயங்குகிறது. தொழிற்சாலையினுடைய வளாகத்தில் இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக எரிசாராயத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. மாதம் ஒன்றுக்கு 1,000 கிலோ லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யும் திறன்கொண்டது. நாள் ஒன்றுக்கு 440 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. இக்கழிவு நீர், சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு bio-gas தயாரிக்கப்படுகிறது. இந்தக் கழிவு நீரில் பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் உள்ளதால், கழிவு நீரின் ஒரு பகுதியுடன் சர்க்கரை ஆலையின் கசடு மண்ணும் கலந்து உயிர் உரம் தயாரிக்கப்படுகிறது. மீதியுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் லாரிகளின்மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, தனியார் விவசாயிகளின் நிலங்களில், அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப, பாசனத்திற்கு, குறிப்பிட்ட அளவு நீருடன் கலந்து ஒரு பயிர் போகத்திற்கு ஒரு முறை மட்டுமே பாய்ச்சப்படுகிறது. இக்கழிவு நீர்ப் பயன்பாடு, கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது.

முற்பகல் 9–35

உறுப்பினர் சொன்னபடி, மேலும் அதிலே பிரச்சினை இருக்கும் என்று கருதுவாரேயானால், அங்கிருக்கிற விவசாயிகள், கோவை, விவசாயப் பல்கலைக்கழகம், மாசு கட்டுப்பாடு வாரியம், பாரி சர்க்கரை ஆலையினுடைய பிரதிநிதிகளுடன் கலந்து, அதற்கான உரிய நடவடிக்கையை எடுப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,000 கிலோ லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற தகவலையும் தெரிவித்திருக்கிறார்கள். எரிசாராயம் தயாரிக்கப் பயன்படுகின்ற கழிவுகளும், சர்க்கரை உற்பத்திக்கான கழிவுகளும், எரிசாராயத்திற்கான molasses-ஐ, அந்தப் பாகை அவர்கள் உருக்குகின்றபோது அதிலிருந்து





வருகின்ற வாடை, அந்த துர்நாற்றத்தால் அந்த வழியாகச் சாலைகளில் செல்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டுதான் அந்தப் பாதையை cross செய்ய முடியும்.

இரண்டாவது, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதில் அறிக்கையில் அங்கு இருக்கின்ற விவசாய மக்கள் விரும்பி, அந்தக் கழிவு நீரை லாரிகளில் எடுத்துச்சென்று, அவர்கள் அதிலே கொஞ்சம் வேறு நீரைக் கலந்து விவசாய நிலங்களின் பயன்பாட்டுக்கு விடுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். அப்படி அங்கு நடைபெறுவதில்லை. அங்கு இருக்கின்ற ஆலை அதிபர்கள், அந்தப் பகுதியில் இருக்கின்ற செல்வாக்குள்ள சில நபர்களைக் கையிலே வைத்துக்கொண்டு, எந்தவிதச் சுத்திகரிப்பும் செய்யாமல், நேரடியாக டேங்கர்போன்ற பெரிய லாரிகளில் கொண்டு வந்து, அந்தக் கழிவு நீரை அப்படியே டேங்கர்களிலே load செய்து கொண்டு வந்து கிராமப்புறங்களில் இருக்கின்ற அப்பாவி ஏழை விவசாயிகள், ஏமாந்தவர்களுடைய நிலைங்களில் அப்படியே கொட்டிவிடுகிறார்கள். குறிப்பாக, என்னுடைய நிலத்திலே அந்த ஆலையையொட்டி முந்திரித் தோப்புகள் இருக்கின்றன. லாரிகளில் கொண்டு வந்து அந்த முந்திரித் தோப்புகளுக்குள் யாருக்கும் தெரியாமல் அந்த இடத்திலே கழிவு நீரைக் கொட்டிவிடுகின்ற காரணத்தினாலே, பண்ருட்டி தொகுதியிலே இருக்கின்ற பரவலான, நூற்றுக்கணக்கான முந்திரி மரங்களெல்லாம் இன்றைக்குப் பட்டுப் போய் இருக்கின்றன.

நேற்றையதினம்கூட 'தினமலர்', 'தினத்தந்தி' ஆகியவற்றின் கடலூர் மாவட்டப் பதிப்புகளிலே பெரிய செய்தியாக அது வெளிவந்திருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம், நம்முடைய மாசு கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்துகின்ற வழிகளுக்கு ஏற்றவாறு அவர்களைக் கண்காணிக்க வேண்டும். கழிவு நீரைக் கண்காணித்து, அதைச் சுத்திகரித்து வெளியே அனுப்பினால் பாதிப்பு இல்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதற்கு நேர் மாறாக, ஒவ்வோர் ஆலையும், கழிவு நீரைச் சுத்திகரிக்கின்ற அந்த machinaries-ஐ இயக்குகின்றபோது இலட்சக்கணக்கான ரூபாய் மின்சாரச் செலவு ஏற்படும் என்பதற்காக, மின்சாரச் செலவை மிச்சப்படுத்துவதற்காக லோக்கலில் இருக்கின்ற சில பெரும்புள்ளிகளைக் கையிலே வைத்துக்கொண்டு, அவற்றை இயக்காமலேயே நேரடியாக அந்தக் கழிவுகளையெல்லாம் டேங்கர் லாரிகளிலே ஏற்றி, பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற விவசாய நிலங்களிலும், முந்திரிக்

காடுகளிலும், வாழைத் தோப்புகளிலும் இரவு நேரங்களில் விடுகின்றனர். இதனால் அந்தப் பகுதிகளினுடைய விவசாய மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். இன்னும் சொல்லப் போனால், காராமணிகுப்பத்தினுடைய பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிற ஒரு பெண்மணி இதற்காகப் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று, டெல்லியிலே இருக்கின்ற மாசு கட்டுப்பாடு வாரியத்தினுடைய அதிகாரிகளையும் சந்தித்து, தமிழ்நாட்டினுடைய அதிகாரிகளையும் சந்தித்து, இதற்காக ஒரு குறும்படத்தையே தயார் செய்து, இந்தக் கழிவு நீரால் எந்த அளவுக்கு அந்த மக்களுக்குப் பாதிப்பு இருக்கிறது என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரு செய்தி. கடைசியாக இது வந்து சேருகின்ற இடம் கெடிலம் ஆறு. அந்தக் கெடிலம் ஆற்றிலே கலந்து, கெடிலம் ஆறு கடலிலே கலக்கின்றபோது, அங்கும் மிகப் பெரியதொரு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மீன்களெல்லாம் இறப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அங்கே அந்தத் தண்ணீரைக் குடிக்கின்ற ஆடு, மாடுகளுக்கெல்லாம் போதை ஏறிவிடுகிறது. இதில் கொடுமை என்னவென்று சொன்னால், சாராயக் கழிவு, சர்க்கரையினுடைய வெல்லப் பாகு போன்றவற்றை அளவுக்கு மீறிக் குடிக்கின்ற ஆடு, மாடுகள், மற்ற பிராணிகளெல்லாம் மூலை முடுக்குகளிலே வயிறு வெடித்துச் சாவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் கண்காணித்து, நம்முடைய மாசு கட்டுப்பாடு வாரியமும், நம்முடைய மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்களும் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கருத்தில்கொண்டு எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்கு, கோவை, விவசாயப் பல்கலைக்கழகம், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், மாசு கட்டுப்பாடு வாரியம், விவசாயிகள் அத்தனை பேரும் சேர்ந்து, கூட்டாகப் பேச்சுவார்த்தை நடத்தி, அதன்மூலம் ஒரு முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



# 3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**
**(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**
**(ஈ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007–2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 28–4–2007 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக, மிகச் சாதாரணக் குடும்பத்திலே பிறந்து, வளர்ந்த என்னை 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக ஆவதற்கு வாய்ப்புத் தந்து, அதன் பின்னாலே கழகத்தின், மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பையும் தந்து, இன்று ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்று இருக்கின்ற அவருடைய இந்த அமைச்சரவையிலே வனத் துறை அமைச்சர் பொறுப்பையும் தந்து இரண்டாவது முறை அந்த மானியக் கோரிக்கையிலே பதில் அளிப்பதற்கு வாய்ப்புத் தந்த தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரில்லாத் தலைவர், 70 ஆண்டு காலம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக இளமைக் காலம் தொட்டுப் பணியாற்றி வருகின்ற, ஐந்தாவது முறை இந்தச் சட்டமன்றத்திலே முதலமைச்சராகப் பதவியேற்று, சட்டமன்றப் பணியிலே பொன் விழாக் காணுகின்ற மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றில், ஒரு

ஜனநாயக இயக்கத்தில் அவர் தொண்டனாக இருந்து தலைவராக உயர்ந்து, 38 ஆண்டு காலம் இந்தக் கழகத்தை வழிநடத்திச் சென்று, இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாதுகாப்புத் தந்து வருகின்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே நான் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

அமைதியின் திருவுருவாய், அவையின் முன்னவராய், கழகத்தின் பொதுச் செயலாளராய், மாண்புமிகு நிதி அமைச்சராய் இருக்கின்ற மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழப் பேரரசை உருவாக்கிய இராஜராஜ சோழனுக்கு ஒரு இராஜேந்திர சோழனைப்போல், கடாரம் வென்ற இராஜேந்திர சோழனுக்குத் தளபதி அறையன் இராஜராஜனைப்போல், நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தளபதியாகவும், தரணி போற்றுகின்ற நம்முடைய தலைவர் அவர்களுக்குத் தலைசிறந்த மகனாகவும், இளைஞர்களின் எழுச்சி நாயகனாக, நாளைய தமிழ்ச் சமுதாயத்தின் காவலராக, உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதியார் அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பின் திருவுருவம், கழகத்தின் பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டக் கழகத்தின் செயலாளர் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு சகோதரர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மானியக் கோரிக்கையின்மீது ஏழுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளையெல்லாம் இங்கே பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய பதிலிலே விளக்கத்தைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தை என்றும் காப்பது சூரியன்தான். அதைப்போல, அனைத்து உலகிலும் இருக்கின்ற உயிர்களையெல்லாம் காப்பது சூரியன்தான். ஏனென்றால், சூரியனிலிருந்து வருகின்ற ஒளிக் கதிர்களைத்தான் மனிதன் வாழ, வாழ வேண்டிய சக்தியாக மாற்றி, தாவரங்கள் நமக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றன. எனவேதான், தாவரங்கள், மரங்கள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதைக் குறிப்பிடும் வகையில், ஒரு



மரம் நடும் விழாவிலே மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், ‘மரங்களை மக்கள் வளர்த்தால் மக்களை மரங்கள் வளர்க்கும்’ என்று மரங்களுடைய பெருமையை, மரங்கள் வளர்க்க வேண்டியதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலத்தான், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அய்யன் திருவள்ளுவர் அவர்களும்,

> *“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
> *காடும் உடைய தரண்”*

என்று, காடுகளுடைய, அடர்ந்த காடுகளுடைய பெருமையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது இன்றைய சூழ்நிலையில் எவ்வளவு பொருத்தம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், இப்போது பெருகி வருகின்ற மக்கள் தொகை, அதைப்போல, தொழில் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற ஆலைகள், அவற்றிலிருந்து வெளிப்படுகின்ற புகை, நெருப்புக் கோளங்களெல்லாம் இந்த பூமியை எந்த அளவிற்கு உஷ்ணப்படுத்திக்கொண்டிருக்கின்றன, சூடாக்கிக்கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 9–45*

உலக அளவிலே 600 கோடியாக உயர்ந்திருக்கின்ற மக்கள் தொகை, வாகனங்கள் வெளியிடுகின்ற கரியமில வாயு, இன்னும் பல்வேறு வகையான புகைகளிலிருந்து வருகின்ற நச்சுக் காற்று, chloro floro போன்ற carbon–களிலிருந்து வருகின்ற நச்சுக் காற்று, இவையெல்லாம் சூரியனுக்கும், பூமிக்கும் இடையே இருக்கின்ற ஓசோன் மண்டலத்தை ஓட்டையாக்கிவிட்டதாக அறிஞர்கள் சொல்கிறார்கள். இமய மலையே உள்ளே செல்லக்கூடிய அளவிற்கு, இந்தியாவின் பரப்பைப்போல ஐந்து மடங்கு அளவிற்கு ஒரு ஓட்டை விழுந்திருக்கிறது; இது எதிர்காலச் சமுதாயத்திற்குப் பாதுகாப்பானது இல்லை; தொழில் வளர்ச்சியிலே சென்ற நூற்றாண்டிலே மேலை நாடுகள் பெரிய அளவிற்கு வளர்ந்திருக்கின்றன; நாம் இப்போதுதான் தொழில் வளர்ச்சியிலே முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக, வெப்பநிலை 0.74 degree celsius உயர்வு பெற்று, பல இயற்கை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

சென்ற ஆண்டு 280 P.P.M.–ஆகக் காற்றிலே இருந்த கரியமில வாயு, இந்த நூற்றாண்டிலே, இப்போது 430 P.P.M.–ஆக மாறியிருக்கிறது என்று

சொல்கிறார்கள். இது 2035–2050 ஆம் ஆண்டிற்குள் 550 P.P.M.–ஐ எட்டிவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். 550 P.P.M.–ஐ எட்டினால், இங்கே இன்னும் 2 degree celsius வெப்பம் உயரும் என்று சொல்கிறார்கள். அப்படி உயர்ந்தால், அந்த வெப்பத்தின் காரணமாகப் பனி மலைகள் உருகும். கடல் மட்டம் 0.4 சென்டி மீட்டர் உயரும் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், பல இடங்களில், கடலுக்கு அருகில் இருக்கின்ற நிலங்கள் மூழ்கும் என்றும், அதிக வெப்பம் மனித இனத்திற்குக் கேடு; bio உயிரினத்திற்குக் கேடு; விவசாயத்திற்குப் பாதிப்பு; நீர்ப் பற்றாக்குறை; இப்படிப்பட்ட பல்வேறு துயரங்களையெல்லாம் நாம் சந்திக்க வேண்டியிருக்கின்ற காரணங்களால் மரங்கள் நடுவதை நாம் ஒரு முக்கியமான பணியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரங்களின் இன்றியமையாமையைக் குறித்து பழம்பெரும் புலவர் ஒருவர் கூறியிருக்கிறார். அன்று படையெடுத்துச் சென்ற மன்னவனுக்குக்கூட மரங்கள் இன்றியமையாதவையாக இருந்தன என்பதைக் குறிக்கின்ற வண்ணம்,

"தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே"

என்று குறிப்பிட்டிருக்கின்றார். வனத்திலுள்ள மரங்களினுடைய நிழல் எந்த அளவிற்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தக் காடுகள்தான் நீர் வள ஆதாரத்திற்கும் முக்கியமானவை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வேளாண்மைக்குத் துணை நிற்பது காடுகள்தான். பெரும்பாலும் வனங்களிலே, பெய்கின்ற மழைதான் நம்முடைய நீர்த்தேக்கங்களை, ஏரிகளை நிரப்புகின்றன. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 39,202 ஏரிகள், 62 சிறிய மற்றும் பெரிய அணைகள், நீர்த்தேக்கங்களெல்லாம் இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவையெல்லாம், பெரும்பாலும் வனங்களிலிருந்தான் நீர் வளத்தைப் பெருகின்றன. சில நீர்த்தேக்கங்கள் வனங்களின் உள்ளேயே அமைந்திருக்கின்றன. சில நீர்த்தேக்கங்கள் வனங்களின் பக்கத்திலே அமைந்திருக்கின்றன. பெரும்பாலான நீர் மின் நிலையங்களெல்லாம்



அணைக்கட்டுகளின் அருகிலேயே அமைந்திருக்கின்றன; வனங்களின் பக்கத்திலேயே அமைந்திருக்கின்றன. எனவே, விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரும், மின்சாரமும் கிடைப்பதற்குக் காடுகள் தங்களுடைய முக்கியப் பங்கை வகிக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அது மட்டுமல்ல. நாம் மட்டுமல்ல, உலக நாடுகளிலே உள்ளவர்கள் எல்லாம் காடுகளை மிகவும் அதிகமாக நேசிக்கிறார்கள் என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன். ஜப்பான் மிகவும் முன்னேறிய நாடு என்றாலும்கூட, அங்கே 67 விழுக்காடு காடுகளாக இருக்கின்றன. அவர்கள் நல்ல வளத்தோடு இருக்கிறார்கள். 13 சதவிகிதம்தான் அங்கே விளை நிலங்கள் உள்ளன. இருந்தாலும், அங்கே அவர்கள் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள். விவசாயத்தில் முன்னேறியிருக்கிறார்கள். காரணம், அவ்வளவு மழை அவர்களுக்குக் கிடைக்கிறது. அதைப்போல, உலகத்தின் பெரிய நகரமான டோக்கியோவிலே, மக்கள் தொகை நிறைந்திருக்கிற அந்த நகரத்திலே, நச்சுக் காற்றினால் அவர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் மாற்றுவதும் அந்த மரங்கள்தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, உலகத்தில் பரப்பளவில் ஐந்தாவது பெரிய நாடான பிரேசிலில், 60 சதவிகிதம் காடாக இருக்கிறது. அங்குதான் உலகத்தின் மிகப் பெரிய கொள்ளளவுள்ள அமேசான் நதி ஓடிக்கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் கடலிலே கலக்கின்ற நீரிலே 20 சதவிகிதம் நீரை அந்த அமேசான் நதி எடுத்துச் செல்வதாகச் சொல்கிறார்கள். அதேபோல தனியார்கள்கூடத் தங்களுடைய நிலங்களிலே 70 சதவிகிதம் காடுகளை வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் அந்த அளவிற்குக் காடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலேதான், அங்கே அதிக அளவுக்குத் தண்ணீர் கிடைக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

அதைப்போல, சீனா உலகத்தின் பெரிய நாடுகளில் ஒன்று. மக்கள் தொகையிலும், பரப்பளவிலும்கூட அது நான்காவது நாடுதான். அந்த நாட்டிலே 1950–ல் 8.6 சதவிகிதமாக இருந்த வனப் பரப்பை, காடுகளினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, இன்று 20 சதவிகிதமாக மாற்றியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய இந்தியாவைப் பொறுத்தளவில், பரப்பளவிலே ஏழாவது பெரிய நாடு. 32,87,263 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பெரிய நாடாக இருக்கிறது. அதில் இந்தியாவினுடைய வனப் பகுதி 7,74,74[illegible] சதுர கிலோ மீட்டராக இருக்கிறது. அதில் 23.57 விழுக்காடு வனம் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தளவில், நம்முடைய பரப்பளவு 1,30,058 சதுர கிலோ மீட்டர் என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய வனப் பரப்பு 22,877 சதுர கிலோ மீட்டரைக்கொண்டு 17.59 விழுக்காடாக இருக்கிறது. இன்னும் இதனை அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால், மழை பெய்வதற்கு ஒரு வாய்ப்பாக வனங்கள்தான் இருக்கின்றன என்பதைப் பழம்பெரும் புலவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் ஒரு கவிதையிலே,

**"சூல்கொண்ட மேகம் கால்கொண்டு நடந்திட,
மரங்களே மரகதப் படிகள் ஆகும்"**

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு வனங்கள் தேவை என்ற காரணத்தாலே வனச் சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். வனங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சட்டங்கள் இயற்றப்பட்டு, ஆங்கிலேயர் காலத்திலேயே தொடங்கப்பட்ட மிகவும் பழமையான ஒரு துறை இந்த வனத் துறை. நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பணியின் 50–வது ஆண்டுப் பொன் விழாவைச் சட்டமன்றம் கொண்டாடுகின்ற நேரத்தில், 19–12–1856–ல் தொடங்கப்பட்டு 150 ஆண்டுகளைக் கடந்திருக்கின்ற இந்த வனத் துறையும் தன்னுடைய 150–வது ஆண்டு விழாவை அவருடைய தலைமையிலே கொண்டாட இருக்கிறது என்பதைப் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1882–லே ஆங்கிலேயர்கள் காடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அதன் பின்னால் 1972–லே நம்முடைய தமிழக அரசு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், வன உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, வன உயிரினப் பாதுகாப்பு குறித்து ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள்.

வனப் பகுதிகள் எல்லாம் குறைந்துகொண்டு வருகின்ற காரணத்தால், பல்வேறு பணிகளுக்காக, அது விவசாயத்திற்கு என்றாலும் சரி அல்லது சாலைக்கு என்றாலும் சரி, பல்வேறு பணிகளுக்கு வனப் பகுதிகளை எடுத்துக்கொண்ட காரணத்தாலே, வனப் பரப்பு குறைவதை



அச்சத்தோடு பார்த்த மத்திய அரசு, இனி வன நிலங்களை எடுப்பதென்றால், மத்திய அரசினுடைய அனுமதி பெற்றாக வேண்டுமென்று வனப் பாதுகாப்புச் சட்டத்தை 1980–லே இயற்றியது. இங்கே பலர் சரணாலயங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். சரணாலயங்கள் உள்ள பகுதிகளிலே நிலம் எடுப்பதென்றால் இன்னும் சிரமம். நாம் இரண்டு பங்கு மாற்று நிலம் தருவதோடு மட்டுமல்ல, அந்த நிலத்திற்கு ஈடான தொகையைக் கொடுப்பது மட்டுமல்ல, அங்கு தோட்டங்கள் வளர்ப்புப் பணிக்குப் பணம் தருவது மட்டுமல்ல, சரணாலயப் பகுதிகளிலே நாம் நிலம் எடுக்க வேண்டுமேயானால், மத்திய தேசிய வன உயிரின ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும். உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மத்திய அதிகாரக் குழுவினுடைய அனுமதி பெற்று, அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவைப் பெற்றுத்தான் அமைக்க வேண்டும் என்ற காரணத்தாலேதான் அந்த சரணாலயங்கள் அமைப்பதிலேகூட நாம் மிகவும் யோசிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, வனங்கள் நமக்குப் பாதுகாப்பாக இருப்பதைப்போல, வனங்களில் வாழுகின்ற எல்லா உயிரினங்களுக்கும் பாதுகாப்பாக இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலே 1,56,006 சதுர கிலோ மீட்டர் பாதுகாக்கப்பட்ட இடமாக, பரப்பளவிலே 4.75 சதவிகிதமாக இருந்தாலும், வனங்களினுடைய பரப்பளவிலே 20 சதவிகிதமாக இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் 3,840 சதுர கிலோ மீட்டரைத்தான் நாம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக வைத்திருக்கிறோம். அவர்கள் 5,720 சதுர கிலோ மீட்டர் வேண்டுமென்று சொல்லியிருந்தாலும், நாம் அந்த வன உயிரினங்களைப் பாதுகாக்க நம்முடைய அய்யன் திருவள்ளுவர் குறிப்பிட்டதைப்போல,

**"பகுத்துண்டு பல்லுயிர் ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"**

என்பதைக் கருத்திலேகொண்டு, அதற்கும் பாதுகாப்பு அளித்திருக்கிறோம். எனவேதான், முக்கியமான வனங்களை வளர்ப்பதற்காகவும், அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் வனக் கொள்கைகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். 33 சதவிகிதம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் இப்பொழுதுதான் ஒரு 3.66 சதவிகித மரங்கள் நிறைந்த பகுதிகளாக மாற்றி, 22,877–லிருந்து 27,633.4 சதுர கிலோ மீட்டராக ஆக்கிவிட்டோம். ஆனால், 33 சதவிகிதம் அடைய வேண்டுமென்று சொன்னால், இன்னும் 15,286 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு உருவாக்க வேண்டும். அதற்காகச் சென்ற ஆண்டு

5,74,14,000 மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 6 கோடி மரங்கள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–55

வனங்களையெல்லாம் பசுமையாக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் எண்ணிய காரணத்தினாலேதான், அவர் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்தில், 'தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்' என்கின்ற ஒரு திட்டத்தை வகுத்து, ஜப்பானியப் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் நிதியுதவியைப் பெற்று, 480 கோடி ரூபாய் கடனாகவும், 205 கோடி ரூபாய் அரசின் சார்பாகவும் ஒதுக்கி, 685 கோடி ரூபாய் செலவிலே 1,367 கிராமங்கள் எடுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான நெறிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நெறிமுறைகள் சரியான முறையிலே வகுக்கப்பட்ட காரணத்தினாலே, அந்தத் திட்டம் வெற்றி பெற்று, அந்த 1,367 கிராமங்களிலே, 1,367 வனக் குழுக்கள் செயல்படுகின்றன. அதைப்போலவே, அங்கு 3,891 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படுத்தப்பட்டு, 60,097 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். அதைப்போல, அந்தப் பகுதிகளிலே உள்ளவர்களுக்குக் கடன் உதவி, மற்றும் சிறு கடன்களையெல்லாம் தருகின்றவிதத்திலே, 1,16,254 பேர், 51.31 கோடி ரூபாயைப் பெற்று, அவர்கள் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல மழை பொழிகின்ற காலத்திலே, தண்ணீர் எல்லாம் வடிந்து கடலுக்குச் சென்றுவிடாமல் தடுத்து, வனத் துறையும் தனது பங்கினை ஆற்றியிருக்கிறது. அங்கே, 23,454 தடுப்பணைகளைக் கட்டியிருக்கிறார்கள். 2,201 கசிவு நீர்க் குட்டைகளை அமைத்ததன்மூலம் 817.53 மில்லியன் கன அடித் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 4,80,179 எக்டேர் தரம் குன்றிய காடுகள், வளமான காடுகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. 6 கோடியே 9 இலட்சம் மனித வேலை நாட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 27 மாவட்டங்களிலுள்ள 946 கிராமங்களில் 4,722 பணிகளுக்கு 41.31 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் வெற்றிபெற்ற காரணத்தினால், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் இரண்டாம் நிலை 2005–லே தொடங்கப்பட்டு, இன்று நாம் மூன்றாவது இடத்திலே வந்திருக்கிறோம். அந்த ஆண்டு 800 கிராமங்கள் மற்றும் 150 மலைவாழ் கிராமங்களுக்கென்று 567.42 கோடி ரூபாயில் திட்டமிட்டு அதற்காக, 409 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஜப்பானியப்



பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் கடனாகவும், 158.34 கோடி ரூபாய் நம்முடைய அரசின் சார்பாகவும் போட்டு, அந்தத் திட்டத்தினைத் தொடங்கினார்கள் என்றாலும், முதல் ஆண்டிலே 135 கிராமங்களைத்தான் எடுத்துக்கொண்டார்கள். 76.2 கோடி ரூபாயைத்தான் அவர்கள் அதற்காகச் செலவு செய்தார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சென்ற ஆண்டு அதிகமான கிராமங்களை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு, 205 கிராமங்கள் எடுக்கப்பட்டு, அங்கே உள்ள 45,250 தரம் குன்றிய எக்டேர் நிலங்களைத் தரம் உள்ள காடுகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. 205 வனக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 703 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 10,119 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 6,326 பேர்களுக்கு சிறு கடன்களாக 2 கோடியே 98 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, அங்கே 998 தடுப்பணைகளும், 305 கசிவு நீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு, 162.89 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்குவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. 37 இலட்சத்து 16 ஆயிரம் மனித் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு 230 கிராமங்களை, அதில் 40 மலைவாழ் கிராமங்கள் உட்பட, எடுப்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் 115.22 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் 230 வனக் குழுக்களும், 750 மகளிர் சுய உதவிக் குழுக்களும் அமைக்கப்பட்டு, அவற்றில் 12 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். சிறு கடன்களாக, 7 கோடி ரூபாய் வழங்கப்படவிருக்கிறது. கட்டமைப்புகளுக்காக 480 இலட்சம் செலவிடப்படவிருக்கிறது. அதன்மூலம் 44 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படவிருக்கின்றன. இந்தத் திட்டம் வெற்றிபெறுவதற்கு இப்படிப் பல்வேறு வகைகளிலும் தலைவர் கலைஞர் அவர்களுடைய் அரசு முயற்சி செய்யும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சுனாமி ஆழிப் பேரலை 2004–ல் வந்த நேரத்தில் பல பாதிப்புகள் எல்லா இடங்களிலும் ஏற்பட்டன. ஆனால், எந்தெந்தக் கடற்கரையோரங்களில் அலையாத்திக் காடுகள் மற்றும் தொடர் தடுப்புத் தோட்டங்கள் இருந்தனவோ, அந்த இடங்களில் எல்லாம் பாதிப்பு இல்லை. எனவே, அவசர கால ஆழிப் பேரலை மறு

சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் சென்ற ஆண்டு அந்தத் திட்டம் சிறப்பாகப் பல்வேறு முறைகளிலே, ஆழிப் பேரலையினுடைய பாதிப்புகளைச் சீர்படுத்திடத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசும், அதற்கு நிதி தந்து, அந்தத் திட்டத்தின்மூலம் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழ்நாட்டினுடைய கடற்கரையோரங்களில், 13 மாவட்டங்களில், சென்னை நீங்கலாக 12 மாவட்டங்களை உள்ளடக்கிய 2,850 எக்டேர் பரப்பளவிலே தொடர் தடுப்புத் தோட்டங்களும், 1,650 எக்டேரிலே அலையாத்திக் காடுகளும் 14 கோடியே 51 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாயிலே அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 500 எக்டேரிலே தொடர் தடுப்புத் தோட்டங்களும், அலையாத்திக் காடுகளும் 550 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாயிலே உருவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

காடுகளை வளர்க்க வேண்டும், காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்றால், மரங்கள் தேவை. மனிதர்களுக்கு மரங்கள் அன்றாடத் தேவையாக இருக்கின்றன. அவற்றை உருவாக்க வேண்டும். மலைப் பகுதிகளிலே மரங்களை வெட்டுவதற்குப் பல்வேறு தடைகள். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவற்றையெல்லாம் வெட்டக்கூடாது என்றாலும் மரங்கள் தேவை. ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் குழந்தையாகத் தொட்டிலிலே இருக்கின்ற நேரத்திலே மரம் வேண்டும், அவனுக்கு நடை வண்டிக்கு மரம் வேண்டும், அவனுக்குக் கட்டிலுக்கு மரம் வேண்டும், ஊன்றுகோலுக்கு மரம் வேண்டும், கடைசியில் அவன் பயணம் செய்வதற்கு மரம்தான் தேவை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிப்பட்ட மனிதத் தேவைகளுக்கு மரங்களை உருவாக்க வேண்டும் என்கின்ற காரணத்தினாலே, தனியார் காடுகளிலே, வரப்புகளிலே மற்ற இடங்களிலே மரங்களை வளர்ப்பதற்காக—பயனுள்ள மரங்களை வளர்ப்பதற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதை நான் அறிவிப்பிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன.

அதைப்போல, படுகைத் தோட்டங்கள். ஆற்றின் கரைகளிலே படுகைத் தோட்டங்களை சென்ற ஆண்டு நாங்கள் உருவாக்கி



இருக்கிறோம். மேலும் இந்த ஆண்டும், 3,160 எக்டேரிலே 573 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாயிலே அந்தத் திட்டம் விரிவாக்கப்பட இருக்கிறது. நீங்களெல்லாம் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள், நீலகிரியிலே அடிக்கடி நிலச் சரிவு என்று. அங்கே ஏற்படுகின்ற நிலச் சரிவுகளைத் தடுக்க வேண்டும். தடுப்பணைகளைக் கட்டியோ, மரங்களை அதிகமாக வளர்த்தோ அல்லது மேம்படுத்தியோ மண் அரிப்பைத் தடுப்பதற்காக மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 237 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அதுபோன்ற திட்டங்கள் தொடர்வதற்காக 3 கோடியே 6 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். மேற்குத் தொடர்ச்சி மலைதான் வன உயிரினங்களின் வாழ்வுக்கு உய்விடமாக விளங்குகிறது. யானைகள் என்றாலும், புலிகள் என்றாலும், அவற்றுக்கெல்லாம் அது உய்விடமாக விளங்குகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நீலகிரியிலே ஆரம்பித்துக் கன்னியாகுமரி வரையிலே கிட்டத்தட்ட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட யானைகள் அதை உய்விடமாகக்கொண்டிருக்கின்றன. நம்மிடம் இருக்கின்ற கணக்கெடுப்பின்படி, இருக்கின்ற 89 புலிகளிலே களக்காடு முண்டந்துறையில் மட்டும் 30 புலிகள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதிகளை வளப்படுத்த வேண்டும். எனவே, நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், விருதுநகர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டம்போன்ற மாவட்டங்களையெல்லாம் மேம்படுத்துவதற்காகச் சென்ற ஆண்டு 2 கோடியே 9 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இந்த ஆண்டு 4 கோடியே 30 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் காடு வளர்ப்புத் திட்டத்தைப்போல, மத்திய அரசும் அதற்காக நமக்கு நிதி தருகிறார்கள். தேசிய வன வளர்ப்புத் திட்டம் என்கின்ற திட்டத்தின்கீழ் நம்மிடம் இருக்கின்ற 32 வன வள முகமைகளுக்கும் அவர்களால் நிதி தரப்பட்டு, 18 கோடியே 66 இலட்சம் ரூபாயிலே சென்ற ஆண்டு காடு வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அவை நிறைவேற்றப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, 12–வது நிதிக் குழு அறிக்கையிலே, 2006–2007–லிருந்து 2009–2010–க்குள், 4 ஆண்டுகளில் 30 கோடி ரூபாய் செலவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, தரம் குன்றியக் காடுகளை வளர்ப்பதற்கும், அங்கிருக்கின்ற சாலைகளைப் பராமரிப்பதற்கும், கட்டடங்களைப் பராமரிப்பதற்கும், பசுமைப் பரப்பை அதிகப்படுத்துவதற்கும், தரப்பட்ட நிதியிலிருந்து சென்ற ஆண்டு 13 கோடியே 27 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5 கோடியே 90 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வளவும் செய்து, இதைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, இந்தத் துறை அரசுக்கு தன்னால் இயன்ற அளவிற்கு வருவாயையும் பெற்றுத் தந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு 52 டன் சந்தனக் கட்டைகள் சேலத்திலே இருக்கின்ற கிடங்கிலே இருந்து ஒளிவுமறைவற்ற ஏலத்தின்மூலம் விற்பனைக்கு விடப்பட்டதிலே, 18,15,41,000 ரூபாயைப் பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–05*

அதைப்போல, தஞ்சை மாவட்டத்திலே, தஞ்சாவூர் மற்றும் சீர்காழி போன்ற இடங்களிலெல்லாம் தேக்கு மரக் கிடங்குகள் இருக்கின்றன. அங்கும் ஒளிவுமறைவற்ற ஏலம் நடந்ததிலே, சென்ற ஆண்டு 7,243.4 cubic metre மரம் விற்பனை செய்யப்பட்டு, 11 கோடியே 84 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் வருவாய் பெறப்பட்டிருக்கிறது. கருவேல மரத் தோட்டங்களையெல்லாம் நாம் உருவாக்கி இருக்கிறோமே, சமூக நலக் காடுகள் என்ற திட்டத்தால், 8,044 எக்டேர் நிலத்திலே இருந்த அந்தக் காடுகள் விற்பனை செய்யப்பட்டதிலே 10 கோடியே 26 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றிருக்கிறது. எனவே, வனத் துறை தன்னுடைய பங்கைச் சரியாகச் செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடுகிற நேரத்தில், வனத் துறையிலே இன்னும் பல்வேறு திட்டங்களையெல்லாம் நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

3 கழகங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் திருச்சியை மைய இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் 13–6–1974–லே அந்தக் கழகம் உருவாக்கப்பட்டது. அது தன்னுடைய கடமைகளைச் செவ்வனே ஆற்றி வருகிறது.



புகளூரிலே இருக்கிற தமிழ்நாடு காகித ஆலைக்கு அங்கிருந்துதான் மரக் கூழ் தயாரிப்பதற்கான தைல மரங்கள் அனுப்பப்படுகின்றன. அதைப்போல, முந்திரித் தோட்டங்கள் மற்றும் நெல்லி, சவுக்கு போன்ற மரங்களையெல்லாம் வளர்க்கின்ற பணியை அவை செய்துகொண்டிருக்கின்றன. அங்கே 74,963 ஏக்கரில் வனத் துறையிடம் நிலம் பெற்று அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட, 3,601 ஏக்கரிலே தைல மரத் தோட்டங்களையும், 1,219 ஏக்கரிலே முந்திரித் தோட்டங்களையும், 22 ஏக்கரிலே சவுக்குத் தோட்டங்களையும் உருவாக்கி, தன் கடமையைச் செவ்வனே செய்து, ஒரு இலாபமுள்ள நிறுவனமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்ற ஆண்டு 1,20,846 டன் விற்பனை செய்திருக்கிறார்கள். அதன்மூலம் அவர்கள் நல்ல வருவாயாக 21 கோடியே 75 இலட்சம் ரூபாயைப் பெற்றிருக்கிறார்கள். முந்திரியின்மூலம் 3 கோடியே 49 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்திலேயுள்ள மேல்செங்கத்திலே, 3,904 ஏக்கரில் மத்திய, மாநில விதைப் பண்ணைகளிலிருந்து மரக் கன்றுகளைப் பெற்று, ரூ.85,04,000/- பெற்று, அங்கும் மரம் வளர்க்கின்ற பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. மொத்தமாக 13 கோடியே 33 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் அந்தக் கழகம் இலாபம் பெற்றிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, தமிழ்நாடு அரசுத் தேயிலைத் தோட்டக் கழகத்தைக் குன்னூரைத் தலைமையிடமாகக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள்தான் 22–8–1975–ல் தொடங்கி வைத்திருக்கிறார்கள், அதற்குமுன் வனத் துறை பொறுப்பிலே, Srimavo Bandaranaike and Shastri ஒப்பந்தத்தின்கீழ் அங்கிருந்த தமிழர்கள் குடிபெயர்ந்து இங்கேயுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புத் தர, தேயிலைத் தோட்டக் கழகத்தைத் தலைவர் அவர்கள் உருவாக்கினார்கள். அந்தக் கழகம் 4,431 எக்டேர் நிலத்தோடு, 6,250 நிரந்தரத் தொழிலாளர்களோடு– 2,445 இலங்கை வாழ் தமிழர்கள், ஒரு குடும்பத்திற்கு இருவர் வீதம் 4,890 பேர்களும், 1,360 தனியார்களையும் சேர்த்து, ஆக, 6,250 பேரும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் 3,000 பேர்களும் சேர்ந்து அந்தக் கழகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில ஏற்றத்தாழ்வுகளை அது சந்தித்து வந்தாலும், செவ்வனே நடைபெற்று இந்த ஆண்டு நான்கரைக் கோடி ரூபாய் இலாபம் வரும் என்று எதிர்பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, தமிழ்நாடு அரசு இரப்பர் கழகம் நாகர்கோவிலைத் தலையிடமாகக்கொண்டு 4,279 எக்டேர் நிலத்தில் அங்கே இலங்கை வாழ் தமிழர்கள் 386 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை சேர்த்து, 1,536 பேர் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; ஒப்பந்தத் தொழிலாளர்களாக 365 பேர் இருக்கிறார்கள். இவ்வளவு தொழிலாளர்களும் அங்கே வேலை செய்கிறார்கள். இரப்பரின் தேவை குறைவாக இருந்த நேரங்களிலும், பல்வேறு நிலைகளிலும், இந்த ஆண்டு 2,115 டன் இரப்பரை உற்பத்தி செய்து, உலகச் சந்தையிலே 21 கோடியே 81 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்து, 3 கோடியே 82 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படி அந்தத் தொழிலிலும் எல்லா வழிகளிலும் வனத் துறை சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல, வனப் பாதுகாப்பை நாம் மேற்கொள்ள வேண்டும். வனப் பாதுகாப்பை மேற்கொள்கின்ற நேரத்திலே, பல்வேறு மரத் திருட்டுகள், கஞ்சா பயிரிடுதல், மாடு மேய்த்தல் போன்ற சட்டத்திற்கு விரோதமான பணிகளைத் தடுப்பதற்கு இந்த அரசு கவனத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இங்கே நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு திட்டங்களைப் பற்றிப் பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்லி முடிக்கிறேன். ஒன்று, இந்த வனப் பாதுகாப்பிற்கு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற எரிவாயு அடுப்பு எந்த அளவிற்கு வனத்தைக் காக்கிறது என்பதை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். 80 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு அவை தரப்படுமேயானால், ஒரு குடும்பத்திற்கு 150 கிலோ மரம் என்று கணக்கிட்டாலும் ஓராண்டு முழுவதுக்கும் என்று எடுத்துக்கொள்வீர்களேயானால், 12 இலட்சம் டன் விறகுகள் தேவைப்படுகின்றன. அதற்காக 40 இலட்சம் டன் மரங்கள் அழிக்கப்படுகின்றன. ஆனால், எரிவாயு அடுப்புகள் கொடுத்ததன்மூலம், மரங்களின் தேவை குறைந்து போகிறது. அதனாலே வனங்களெல்லாம் காப்பாற்றப்படும். எனவே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு வனத் துறை அமைச்சர் என்ற முறையிலே என்னுடைய நன்றியை நான் சமர்ப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வனங்கள் வளர்வதற்கு அது இன்றியமையாதது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.



வனங்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு குந்தகங்களையெல்லாம் இந்த அரசு உன்னிப்போடு கவனித்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே, ஆடு, மாடு மேய்ப்பதற்கு எங்களுக்கு நிலம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நான் அவர்களுக்கு மெத்த அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன், பட்டி மாடுகளையோ, பட்டி ஆடுகளையோ மேய்ப்பதற்கு அங்கே இடம் தர முடியாது. தனியார் 4, 5 மாடுகளை மேய்க்க வேண்டுமென்று கேட்டால், அதற்கு இலவசமாக அனுமதிக்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே ஆணையிட்டிருக்கின்றார்கள். எனவே, காடு வளர்ப்புத் திட்டம் எங்கெங்கே நடைமுறையில் இல்லையோ, அந்தப் பகுதிகளிலே இலவசமாக ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு அனுமதிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொன்றைப் பற்றியும் இங்கே எல்லோரும் பேசியிருக்கின்றார்கள். கவன ஈரப்புத் தீர்மானம்கூடக் கொடுத்திருக்கின்றார்கள். காடுகளிலேயிருந்து வன விலங்குகள் வெளியே வந்து பயிர்களையும் அழித்துவிடுகின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் சூரிய மின் வேலி அமைப்பதற்கு உத்தரவு தந்திருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்களுக்கு விவசாயிகளுடைய நலன் ஒன்றுதான் முக்கியம் என்ற காரணத்தினால், ஒரு முன்னோடித் திட்டமாக இந்தியாவிலே வேறு எங்காவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவில்லை; 1990–லே விவசாயிகள் விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற மின்சாரத்தை இலவசமாகத் தந்து உதவியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இதனை எண்ணிப் பாருங்கள். இன்று வரையிலே யாரும், எந்த மாநிலத்திலும் அதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை, பார்க்க முடியவில்லை என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, விவசாயிகள் பயிர்களை விளைவிக்கின்ற நேரத்திலே, சாகுபடிச் செலவிற்கும், உரத்திற்கும் அவர்கள் செலவு செய்துவிட்டு, கடனாளியாகவே வாழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டு, அவர்கள் கடனற்றவர்களாக வாழ வேண்டுமென்று எண்ணி, அவர்களுடைய கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். விவசாயிகளுடைய பயிர்கள் பாழ்பட்டுவிடக் கூடாது; விளைந்த தானியங்கள் பத்திரமாகக் களஞ்சியத்திற்கு வந்து சேர வேண்டுமென்று எண்ணி, தலைவர் கலைஞர் அவர்கள்தான்

சூரிய மின் வேலி அமைக்க உத்தரவு தந்தார்கள். கடந்த ஆட்சியைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த ஆட்சியில் 131 கி.மீ. வரைதான், சூரிய மின் வேலி கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் நிறுவியிருந்தீர்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த ஓராண்டு கால ஆட்சியிலே மட்டும் 262½ கி.மீ. தூரத்திற்கு 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவு செய்ததோடு, அடுத்த ஆண்டு 300 கி.மீ. தூரத்திற்கு அதனை விரிவுபடுத்துவதற்கும் உத்தரவு தந்திருக்கின்றார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறை தொடங்கப்பட்டு 150 ஆண்டுகள் முடிந்த நிலையில் தன்னைத் திரும்பிப் பார்க்கிறது. அது கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலேயர் காலத்திலே இது போற்றப்பட்டாலும்கூட, தடி மரங்களுக்காக, இரயில்வே குறுக்குக் கட்டைகளுக்காக, எரிபொருளுக்காகக் காடுகளையெல்லாம் அவர்களும் அழித்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், நம்முடைய சுதந்திர இந்தியாவிலேதான் படுகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதைப்போல, சமூக நலக் காடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அரசு இரப்பர் கழகம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் உருவாக்கப்பட்டது. இப்படிப் பல்வேறு சாதனைகளைச் செய்து, இந்த அரசு, இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எதிர்கால மனித வாழ்வில் ஏற்படுகின்ற சவால்களைச் சந்திப்பதற்கு இந்தத் துறை தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, சில அறிவிப்புகளை இங்கே வைக்க விரும்புகின்றேன். அறிவிப்புகளைச் சுருக்கமாகச் சொல்லிவிட விரும்புகின்றேன்.

முதல் அறிவிப்பாக, தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் பொன் விழாக் காணும் இந்த நேரத்தில், 50 இலட்சம் மரக் கன்றுகள் சிறு, குறு விவசாயிகளுக்கு 2 கோடி ரூபாய் செலவிலே இலவசமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, தனியார் மரம் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்கு, அவர்களுக்கு மானியமும் தந்து, 50 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே, 10 கோடி ரூபாய் செலவிலே மரம் வளர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, விவசாயிகளெல்லாம் வனச் சாலைகளிலே செல்கின்ற நேரத்தில், அவர்கள் சாலை வரி செலுத்த வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) சொல்லிவிடுகின்றேன். இந்தப் பிரச்சினையைத் தலைவர் கலைஞர் அவர்களிடம் அவர்கள் கொண்டு வந்த நேரத்தில், இனி விவசாயிகள்



வனச் சாலைகளில் செல்கின்ற நேரத்தில், சாலை வரி செலுத்த வேண்டியதில்லை என்று அந்தக் கட்டணத்தை இரத்துச் செய்திருக்கின்றார்கள்.

1968–லே மரங்களை எடுத்துச் செல்கின்ற நேரத்திலே, வனத் துறையிலே அனுமதிச் சீட்டைப் பெற வேண்டும் என்றிருந்தது. அவ்வாறு பெறுகின்ற நேரத்திலே, தனியார் காடுகளிலே விளைகின்ற மூங்கில்களுக்குக்கூட அனுமதிச் சீட்டு பெறுவதிலே அவர்களுக்குப் பல்வேறு இன்னல்கள், இடர்ப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன என்பதைத் தலைவர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்திலே, அந்த அனுமதிச் சீட்டை சில மர வகைகளுக்குப் பெற வேண்டியதில்லை என்ற உத்தரவை அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10–15

அதேபோல, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் மற்றும் செங்கோட்டைப் பகுதியிலும், ஈட்டி, தேக்கு மரம் வளர்ப்பதற்கு உரிமைத் தொகை—royalty—கட்ட வேண்டுமென்று இருந்தது. அந்த royalty தொகையை இனி கட்ட வேண்டாமென்று தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளிலே சாலைகள் அமைக்க வேண்டுமென்றும், சாலைகளை மேம்பாடு செய்ய வேண்டுமென்றும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். அவர்களுக்குச் சாலைகள் அமைத்துத் தரவும், சாலை மேம்பாட்டிற்கும் 10 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல இடங்களிலே புதிய சாலைகள் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். வனத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும், வன உயிரினத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் கோரியிருந்தார்கள். ஆனால், மனிதனுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணிப் பார்த்து, இந்த ஆண்டு ஐந்து வனச் சாலைகளை எடுத்துக்கொள்வதற்கு, அதாவது, 1. வருசநாடு–கம்பத்துமொட்டை–கொடிக்குளம்–கிழவன்கோயில் வழியாக ஸ்ரீவில்லிபுத்தூர் வரை செல்கின்ற சாலை; 2. தேனி மாவட்டத்திலுள்ள சாக்குளத்துத்தோப்பு முதல் சாக்குளத்துமெட்டு

வரை செல்கின்ற சாலை; 3. நாமக்கல் மாவட்டத்திலுள்ள நரியன் காடு முதல் முள்ளுக்குறிச்சி வரை செல்கின்ற சாலை; 4. திருச்சி மாவட்டத்திலுள்ள புளியஞ்சோலை முதல் நாமக்கல் மாவட்டத்திலுள்ள பிளாத்தூண்பட்டி வரை செல்கின்ற சாலை; 5. நீலகிரி மாவட்டத்திலுள்ள சிரியூரிலிருந்து புதுப்பட்டி வரை செல்கின்ற சாலை ஆகிய ஐந்து சாலைகள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளுக்கு, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குகின்ற முகத்தான், அவர்கள் வசிக்கின்ற பகுதிகளிலே 10 கோடி ரூபாய் செலவிலே அவர்களுக்குப் பள்ளிகள் அமைக்க—ஏற்கெனவே 19 பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன— 5 கோடியே 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள காணி குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய முடியவில்லை என்று நம்முடைய திருவட்டாறு சட்டப்பேரவைத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், விளவங்கோடு சட்டப் பேரவைத் தொகுதியின் உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள் எனவே, அந்த அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தப் பகுதிகளுக்கு சரணாலயப் பகுதிகளிலிருந்து விலக்கு அளிப்பதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதேபோல, மகளிர் மேம்பாட்டிற்கு 5,067 குழுக்கள் இருக்கின்றன. இன்னும் 750 குழுக்களையும் சேர்த்து, அந்தக் குழுக்களுக்கெல்லாம் ஐந்தாயிரம் ரூபாய் சிறு கடன் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான அறிவிப்பு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்படுகின்ற இந்த நேரத்திலே, அவருடைய அந்தத் துறையின்கீழ் இருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள், அந்தப் பகுதிகளிலுள்ள சமூக நலக் காடுகளில், சமூகத் தோட்டங்களில், தரிசு நிலங்களிலே உள்ள மரங்களை ஏலம் எடுத்து வெட்டிச் சென்றால், தங்களுக்குப் பங்குத் தொகைக்கு உரிமையிருக்கிறது என்று நீண்ட நாளாகக் கேட்டு வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டில் தரப்படாத காரணத்தால், இந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பங்குத் தொகையை எல்லாம்



ஒரே தவணையில் ரூபாய் 15 கோடியே 90 இலட்சத்தை ஊராட்சிகள் மேம்பாட்டிற்காகக் கொடுப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.

இப்படி 32 திட்டங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். 2007–2008 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்@ அடங்கிய புத்தகம், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நேரத்தின் அருமை கருதி, அதனை நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மரம் வளர்க்க வேண்டுமென்று 34 உறுப்பினர்களும், மரம் வெட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று 19 உறுப்பினர்களும், மின் வேலி அமைக்க வேண்டுமென்று 9 உறுப்பினர்களும், சரணாலயம் அமைக்க வேண்டுமென்று 7 உறுப்பினர்களும், ஆடு மேய்ப்பதற்கென்றும், பழங்குடியினர் பாதுகாப்பிற்கென்றும், அரசு ஊழியர்களின் நலனுக்கென்றும், இப்படி பல்வேறு பணிகளுக்காக உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் அவற்றையெல்லாம் படித்துப் பார்த்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவற்றையெல்லாம் செய்து தருவதற்கு ஆவன செய்வேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அருள்கூர்ந்து திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பல கோடித் தமிழர்களையும் காத்து வருபவரும், எங்களுக்கெல்லாம் நிழல் தந்து விழுதாய் எங்களை வளர்த்து வருபவரும், கடுஞ்சொல் வீசுபவர்களையும் கருணையோடு நேசிப்பவரும், தமிழுக்காக, தமிழ் இனத்திற்காகத் தன்னை இளமையிலிருந்து அர்ப்பணித்துக்கொண்டு பாடுபட்டு, 84 வயதிலும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பாடுபட்டு வருகின்ற தலைவர் கலைஞர் அவர்கள், பல கோடி மக்களுக்கு நிழலாக நின்று இந்தத் தமிழ்ச் சமுதாயத்தைக் காத்து வருகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

---

@ 911 முதல் 921 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*முற்பகல் 10–20*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்பார்வையில் இயங்குகிற பொதுத் துறையைக் குறித்தும், தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) குறித்தும் இங்கே பதில் அளிக்கின்ற அந்தப் பொறுப்பை அவர்கள் சார்பாக நான் ஏற்று, இந்த பதிலைத் தெரிவிக்க இருக்கின்றேன்.

இந்த மானியங்களில் பொதுத் துறை சார்பாக 134 கோடியே 41 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் வருவாய்க் கணக்கிலேயும், 5 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலேயும் கோரிக்கை வைக்கப்பட்டது. அதேபோல, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) சார்பாக ரூபாய் 24 கோடியே 58 இலட்சத்து 37 ஆயிரத்திற்குக் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு இந்த முழுத் தொகையும் நேரடியாக வரவு–செலவிலே இடம்பெறாது.

தமிழ் வளர்ச்சிக்காக இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூபாய் 19 கோடியே 40 இலட்சத்து 28 ஆயிரம். அதைக் குறித்தும்கூட ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தத் தொகை குறைவாக இருக்கிறது என்று வெட்டுத் தீர்மானத்திலே தெரிவித்திருக்கிறார். அந்தத் தொகை கடந்த காலத்திலே வழங்கப்பட்ட தொகையைவிட அதிகம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த காலத்திலே அது ரூபாய் 4 கோடியிலே தொடங்கி, கடந்த 2005–2006–வது ஆண்டில் அது ரூபாய் 15 கோடியே 31 இலட்சத்து 84 ஆயிரமாக இருந்து, கடந்த ஆண்டு—2006–2007–ல் ரூபாய் 16 கோடியே 21 இலட்சத்து 58 ஆயிரமாக உயர்ந்து, இந்த ஆண்டு ரூபாய் 19 கோடியே 40 இலட்சத்து 31 ஆயிரமாக உயர்ந்துள்ளது. தமிழ் வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஆண்டுக்காண்டு உயர்த்தப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காலத்தில் தமிழ் வளர்ச்சித் துறை மிகுந்த அளவிலே ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தப் பொதுத் துறை என்பது பல தனித் தனி இயல்போடு இயங்குகிற துறைகளை இணைக்கின்ற ஒரு துறையாக அமைந்திருக்கிறது. பொதுவாக, பொதுத் துறையில் மிகப் பெரிய அரசியல் தலைவர்கள், பிற நாட்டுத் தூதர்கள்போன்றவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகிறபோது, அவர்களை வரவேற்கிற, அவர்களுக்கு அளிக்க வேண்டிய மரபு உரிமைகளை வழங்கி மதிக்கின்ற அந்தக் கடமையை இத்துறை நிறைவேற்றுவதாகப் பொதுவாக அறியப்பட்டாலும், இந்தத் துறைதான் தேர்தல்கள் பற்றிய அந்தப் பணியையும் தனியாக ஓர் அமைப்புமூலம் நிறைவேற்றி வருகிறது. அதற்கும் சேர்த்து வரவு–செலவுக் கணக்கிலே, அதற்கான நிதியும் ஒதுக்கப்படுவதற்கான துறையாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தேர்தல்களைப் பற்றிய அந்தப் பணிகள் சீராக நடைபெற்று வருகின்றன என்பது நாடறிந்த ஒன்றாகும். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில், தொகுதி அமைப்பைச் சில இடங்களில் மாற்ற வேண்டும் என்ற வேண்டுகோள், ஊராட்சி அமைப்புகளைப் பிரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள், வாக்குச் சாவடியை வேறு இடத்தில் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோள், அதேபோல வாக்காளர்களுடைய எண்ணிக்கையை ஒரு வாக்குச் சாவடியிலே கூட்ட வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்ற அந்த வேண்டுகோள் ஆகியவையெல்லாம் வெட்டுத் தீர்மானங்களிலே இடம்பெற்றிருக்கின்றன.

எந்தப் பணியாக இருந்தாலும், இப்பொழுது அகில இந்திய அளவிலே தொகுதிச் சீரமைப்புப் பணி, அதிலேயும் குறிப்பாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொகுதிச் சீரமைப்புப் பணி அதற்குரிய குழுவாலே நிறைவேறி வருகிறது. ஏறத்தாழ பெரும் பகுதி அந்தக் கடமையை நிறைவேற்றி, அவர்கள் எந்த வகையிலே தொகுதிகளைப் பிரிக்க இருக்கிறார்கள் என்பதை அடையாளம் காட்டி, அவைகளைப் பற்றிப் பொது மக்களுடைய கருத்தை அறிவதற்கான தேதிகளையும் அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பணி இன்னும் 2, 3 திங்களில் முழுவதும் நிறைவடைந்ததற்குப் பின்னர்தான், தேர்தல் பற்றிய எந்த வேண்டுகோளாக இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாகப் பரிசீலித்து, நிறைவேற்றப்பட முடியும். வாக்காளர்களைச் சேர்ப்பது, புகைப்படத்தோடு வாக்காளர்களைச் சேர்ப்பதன்மூலம் தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏறத்தாழ 4 கோடியே 66 இலட்சத்து 3 ஆயிரத்து 740 வாக்காளர்கள் மொத்தமாகப் பட்டியலிலே இருந்தார்கள். இப்போது இந்த ஆண்டு அது இன்னும் சற்று அதிகமாகும். புகைப்படம் ஒட்டி வாக்காளர்களுடைய பெயர்ப்

பட்டியலிலே இடம்பெறாதவர்கள், புகைப்படம் எடுத்து சேர்க்கப்பட வேண்டியவர்கள், ஏறத்தாழ ஏழு விழுக்காடுதான் இன்னும் சேர்க்கப்படவில்லை. அதை விரைவில் சேர்ப்பதற்காகத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. தேர்தல் கமிஷனர் அறிவித்திருக்கிறார். அந்த நாட்களில், ஒவ்வொரு தொகுதியிலும் விடுபட்ட வாக்காளர்கள் தமிழ்நாடு முழுவதும் சேர்க்கப்படுவார்கள்.

முற்பகல் 10–25

அதேபோல, தேர்தல் தொகுதி சீரமைப்புக் குழு காரணமாக, நாடாளுமன்றத்தின் தொகுதிகள் அப்படியே 39 தொகுதிகளாக இருக்கும். ஏறத்தாழ இடங்கள் மாறும், அவற்றினுடைய பரப்பு மாறும், வாக்களிக்கிற மக்கள் மாறுவார்கள், ஆனால், 39 என்ற எண்ணிக்கை மாறாது.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் 234 என்ற எண்ணிக்கையும் அப்படியேதான் இருக்கும். ஆனால், ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகுதிகளினுடைய எண்ணிக்கை சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிகளில் ஏற்கெனவே 42 ஆக இருந்தன. Reserved seats, அந்த மக்கள் தொகை பெருகியிருப்பதன் காரணமாக, இப்போது அவை 44 ஆக உயருகிற நிலைமை ஏற்படுகிறது.

அதேபோல, மலைவாழ் மக்களுடைய தொகுதிகள் மூன்றாக இருந்தன, இப்போது இரண்டாகக் குறைகின்றன. இவையெல்லாம் தேர்தல் பற்றிய தொகுதி சீரமைப்புக் குழுவினுடைய கொள்கை முறைப்படி, அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கிற அந்தக் கொள்கை அடிப்படையிலே ஏற்பட்டிருக்கிற விளைவுகளாகும். இதைப் பற்றிய சில மாறுபாடுகள், வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. அது குறித்து சிலர் நீதிமன்றங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். மக்களுடைய ஆலோசனையும் கேட்கப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு சட்டப்படி மறுபரிசீலனை செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு அவர்கள் மறுபரிசீலனை செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதேபோல, இந்தத் துறையின் சார்பாக மிகப் பொறுப்போடு நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமையாக இருப்பது, இலங்கை அகதிகளுடைய பிரச்சினையாகும். கடந்த காலத்திலே இலங்கை அகதிகள் மிக அதிக அளவிலே வந்து திரும்பியிருக்கிறார்கள். சற்று அந்த எண்ணிக்கை குறைந்திருந்தது. மறுபடியும், இப்போது ஏறத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டிலே 12–1–2006–க்கு முன்பிருந்த அந்த



எண்ணிக்கை, ஏறத்தாழ 18,464 இலங்கைத் தமிழர்களாக இருந்த அந்த எண்ணிக்கை, இப்போது உயர்ந்திருக்கிறது. தற்போது 19,235 குடும்பங்களைச் சேர்ந்த 72,784 இலங்கைத் தமிழர்கள் ஏறத்தாழ 120 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கையிலே உள்ள பிரச்சினை ஒரு வகை, அதனுடைய மறுவிளைவாக இந்த அகதிகளைத் தாங்குகிற பிரச்சினை இன்னொரு வகை. ஆனாலும், இந்தக் கடமையைச் செய்யாமல் இந்த அகதிகளை நாம் புறக்கணித்துவிடக் கூடாது, நல்ல முறையிலே அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற உணர்வோடு, இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் கலைஞர் அவர்கள் இரண்டு அமைச்சர்களை அந்த அகதிகள் முகாமைப் பார்வையிடச் செய்து, அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு ஆணையிட்டு, அவர்கள் தங்கியிருக்கிற இடமெல்லாம் மிகவும் பழுதடைந்திருந்ததைச் சீரமைக்கச் செய்து, அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையையும்கூட 1–8–2006 முதல் இரட்டிப்பாக்கி, அது உயர்த்தி வழங்கப்படுகிறது. ஏற்கெனவே அவர்களுக்கு, ஒரு குடும்பத் தலைவனுக்கு வழங்கப்பட்ட ரூ.200/- பண உதவித் தொகை, இப்போது ரூ.400/- ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கடுத்துள்ள ஒவ்வொரு பிரிவினருக்கும், adult-க்கு ரூ.144/- வழங்கப்பட்டது, ரூ.288/- ஆக்கப்பட்டிருக்கிறது. முதல் குழந்தைக்கு வழங்கிய ரூ.90/- என்பது ரூ.180/- ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து, ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.45/- என்று வழங்கிய தொகை, ரூ.90/- ஆக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, அந்த இலங்கைத் தமிழர்களைச் சார்ந்த அவர்களுடைய பிள்ளைகள், இலங்கையிலே தேர்வு எழுதக்கூடிய ஒரு வாய்ப்பை இழந்துவிட்ட காரணத்தால், அப்படிப்பட்ட தேர்வை இங்கே நடத்த வேண்டுமென்று அவர்கள் கேட்டு, அகதியாக வந்து சேர்ந்த 10 ஆம் வகுப்பு இலங்கைத் தமிழ் மாணவ, மாணவிகள் 105 பேருக்கு, இலங்கையிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து, மண்டபம் முகாமில் போதிய பயிற்சி அளித்து, பின்னர் அவர்களுக்குச் சென்னையில் அந்த இலங்கை அரசினுடைய தேர்வையும் இங்கே நடத்தி, அவர்களுடைய தேர்வு முடிவையும் அறிவித்திருக்கிறது.

முற்பகல் 10–30

அதேபோல, தமிழகத்திலே உள்ள மகளிர் மகப்பேறு எய்துகிற காலத்திலே, அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்படுவதுடன், அவர்களுடைய வயிற்றிலே வளர்கிற சிசு பாதிக்கப்படுகிறது என்பதை மாற்றுவதற்காக, கலைஞர் அவர்கள், பேறு காலத்திற்கு முதல் மூன்று

மாதங்கள், அடுத்து குழந்தை பிறந்த பின் மூன்று மாதங்கள், ஆக ஆறு மாதங்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்குவது என்று முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்மூலமாக அறிவித்து, அது இப்பொழுது நடைமுறையிலே இருக்கிறது. அந்த அகதிகளிலேயும் பெண்கள் கர்ப்பவதிகளாக இருக்கிறபோது, இந்த உதவியை அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கலைஞர் ஆணையிட்டு, முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி 6 மாத காலத்திற்கு அகதிப் பெண்களுக்கும் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே இரவு நேரத்திலே மட்டும்தான் மின்சாரம் வழங்கப்பட்டது. பகலிலே வழங்கப்படவில்லை. அது ஒரு குறையாக இருந்தது. இப்பொழுது பகலிலும் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு குடும்பத்திற்கான அடையாள அட்டை மட்டுமல்லாமல், ஒவ்வொருவருக்கும் தனித் தனி வண்ண அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, அவர்களுடைய பிள்ளைகளுக்கு, மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை, சீருடை, புத்தகம், உணவு மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதி வண்டி முதலியவற்றைத் தொடர்ந்து வழங்கிட, தமிழ்நாட்டு மாணவர்களுக்கு, பள்ளிப் பிள்ளைகளுக்கு நாம் என்ன வழங்குகிறோமோ, அதையே அவர்களுக்கும் வழங்கிட கலைஞர் அவர்கள் ஆணையிட்டு, அவையும் நிறைவேற்றப்படுகின்றன.

அதேபோல, தமிழகத்தினுடைய அரசு ஒரு பெரிய பொறுப்போடு நிறைவேற்ற வேண்டிய கடமையாக இருப்பது, முன்னாள் படை வீரருடைய நலனைப் பராமரிப்பது. முன்னாள் படை வீரர்கள், தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் பல ஆயிரக்கணக்கானவர்கள் படையிலே சேர்ந்து பணியாற்றியவர்கள். பணியாற்றுகிற குறிப்பிட்ட காலத்திலே, ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் பணியை நிறைவு செய்துவிட்டுத் திரும்பி வருகிறார்கள். அப்படி வந்து தமிழகத்திலே வாழ்வு தேடுகின்றபோது, அவர்களுக்குச் செய்ய வேண்டிய பல கடமைகளை, உதவிகளைச் செய்வதற்காகத் தமிழகத்தில் முன்னாள் படை ,வீரர் நலத் துறை என்று அதற்காகவே ஒரு துறையும், ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அந்தக் குழு சார்பாகப் பல காரியங்கள் அவர்களுடைய நலன்களுக்காக, அவர்களை வாழ வைப்பதற்காக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



குறிப்பாக நான் சொல்வதாக இருந்தால், அவர்களுக்கு அரசு நிதி பல வகைகளிலே வழங்கப்படுகின்றது. உயிர் நீத்த படை வீரர்கள் குடும்பத்திற்கு இலட்சம் ரூபாய், முழுமையாக ஊனமுற்றோருக்கு ரூ.40,000/-, ஓரளவிற்குக் கை, கால் இழந்தவர்களுக்கு ரூ.20,000/-, தீக்காயங்கள் பட்டவர்களுக்கு ரூ.10,000/- என்று அரசு மானியம் வழங்குகிறது. ஊனமுற்ற படை வீரர்களுக்கு ஆண்டு மானியமாக ரூ.2,000/- வழங்கப்பட்டு, அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்.

அதேபோல, அவர்களிலே யார், யார் தியாகத்தோடுகூடிய வீரப் பணியாற்றி, அதனாலே சில பாராட்டுக்களை யார், யாரெல்லாம் போர்க்களத்திலே பெற்றார்களோ, அவர்களுக்குத் தமிழகத்திலே நிதி வழங்குகிற ஒரு முறை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. 'பரம் வீர் சக்ரா' என்ற விருது பெற்றவர்களுக்குப் பண் முடிப்பாக ரூ.22,500/-; நிலத்திற்குப் பதிலாக ரூ.1,50,000/-. ஆண்டு உதவித் தொகை ரூ.1,000/-; 'அசோக சக்ரா' விருது பெற்றவர்களுக்குப் பண முடிப்பு ரூ.20,000/-, நிலத்திற்குப் பதிலாக ரூ.1,25,000/-, ஆண்டு உதவித் தொகை ரூ.800/-, இப்படிப் பல வகைகளில், பல நிலைகளில் பல்வேறுவிதமான சிறப்புப் பெற்றவர்களை, அவரவர்களுடைய சிறப்புக்கேற்ற வகையில் தமிழக அரசு நிதி உதவி வழங்கி, அவர்களைப் பாராட்டுகிறது.

குறிப்பாக, முதலாவது, இரண்டாவது உலகப் போரில் பணிபுரிந்து, ஓய்வூதியம் பெறாத முன்னாள் படை வீரர்களுக்கு மாதம் ரூ.700/- மற்றும் அவர்களது விதவைகளுக்கு ரூ.500/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. முன்னாள் படை வீரர்களின் ஒரு மகள் திருமணத்திற்கு ரூ.5,000/- வழங்கப்படுகிறது.

படை வீரர் இறப்பிற்கு, ஈமச் சடங்கிற்கு ரூ.3,000/-, புற்று நோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படை வீரர் விதவைகளுக்கு மாதம் ரூ.700/- உதவித் தொகை, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.500/- உதவித் தொகை, காச நோய்க்கு ரூ.500/- உதவித் தொகை, கண் பார்வை இழந்தவர்களுக்கு ரூ.500/-, இப்படிப் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தமிழக அரசு உதவித் தொகை வழங்குகிறது.

அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கும், அவர்கள் 5 ஆம் வகுப்பு வரையில் படிக்க ரூ.150/-, 8 ஆம் வகுப்பு வரையில் ஆண்டிற்கு ரூ.225/-; 9, 10 ஆம் வகுப்பிற்கு ஆண்டிற்கு ரூ.400/- என்றும் மேல்நிலைப் பள்ளிப் படிப்பிற்கு ரூ.500/-, இளங்கலைப் பட்டத்திற்கு ரூ.600/-, முதுகலைப் பட்டத்திற்கு ரூ.750/- என்று உதவித் தொகை வழங்கப்பட்டு, முன்னாள் படை வீரர் குடும்பங்கள் காப்பாற்றப்படுகின்றன.

முற்பகல் 10–35

அவர்களை மறு வாழ்வு பெறச் செய்வதற்காக தொழில் முனைவோருக்குப் பல்வேறுவிதமாக உதவி செய்யப்படுகிறது. தொழில் முனைவோருக்கு 50,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. 2½ இலட்சம் ரூபாய் வரையில் அவர்கள் கடன்பெறுவார்களேயானால், அந்தக் கடனுக்கு 50 விழுக்காடு வட்டித் தள்ளுபடி வழங்கப்படுகிறது. முன்னாள் படை வீரர் விதவையர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்களுக்கு 7½ இலட்சம் ரூபாய் வரையில் கடன்களுக்கு வட்டி மானியமாக 100 விழுக்காடு வட்டித் தள்ளுபடி செய்யப்படுகிறது. போரை ஒத்த நடவடிக்கையில் உயிர் நீத்தோர் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகையாக 30,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், கார்கில் வீரர்களுக்காக ஒரு பெரிய நிதி திரட்டி. அந்தப் போருக்கு ஏறத்தாழ ரூபாய் 50 கோடி என்று கருதுகிறேன், வழங்கியது மட்டுமல்லாமல், உயிர் நீத்தோர் குடும்பத்திற்கெல்லாம் ரூபாய் 5 இலட்சம் வழங்கியதோடு, முழுமையாக ஊனமுற்றோர்க்கு ரூபாய் 3 இலட்சம், ஒரு கால், கை இழந்தவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் என்று கார்கில் போர் வீரர்களுடைய நிவாரண நிதியாக தமிழக அரசு சார்பாக, வேறு எங்கேயும் இந்த அளவுக்குச் செய்யப்படுகிறது என்று சொல்ல முடியாத அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது.

அதேபோல, பொதுவாகவே தமிழ்நாட்டில் போர்க்களத்திலேயே சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கெல்லாம்கூட தமிழக அரசு அவர்களுக்குச் சிறப்பு நிதியுதவி வழங்குகிறது. அதேபோல, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் தமிழ்நாட்டிலேதான் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் கோரப்பட்டுள்ள மனுக்கள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான சான்றுகளைத் தேடி, அவர்களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குரிய ஓய்வூதியத் தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரசு உடனுக்குடன் அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்குகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. இராமன் அவர்கள் என்று கருதுகிறேன், அதேபோல மற்றொரு உறுப்பினரும் குறிப்பிட்டுள்ளார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு அலுவலங்களில் தர வேண்டிய மரியாதையைத் தருவதில்லை, protocol முறைப்படி உரிய மரியாதை வழங்குவதற்கு அறிவுறுத்தப்பட



வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவ்வாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ, பொது மக்களுக்கான கடமையைச் செய்கிறவர்கள் ஒரு அதிகாரியைக் காண வருவார்களேயானால், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் வேறு ஒருவருக்கு நேர்முகமாகக் காண்பதற்காக அந்த நேரம் ஒதுக்கப்பட்டிருந்தாலன்றி, வருகின்ற சட்டமன்ற உறுப்பினரை, நாடாளுமன்ற உறுப்பினரை உடனடியாக அதிகாரிகள் ஏற்று, அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதை நான் இந்த அவையிலே குறிப்பிடுவதன்மூலமாக அவர்கள் தங்களுடைய கடமையை முறையாகச் செய்வார்கள் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள், வெட்டுத் தீர்மானம்மூலமாக; தமிழக வடக்கு எல்லைப் போராட்ட வீரர்களுக்கு, எஞ்சியுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்க வேண்டுமென்று கேட்டார்கள். கடந்த 1–11–2006 அன்று தமிழ் மாநிலம் அமைந்து 50 ஆம் ஆண்டுப் பொன் விழா அரசு சார்பாகக் கொண்டாடப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் ரூபாய் 3,000/–ம், மருத்துவப் படி ரூபாய் 15/–ம், மரபு உரிமையாளர்களுக்கு ரூபாய் 1,500/–ம், மருத்துவப் படி ரூபாய் 15/–ம் என்று வழங்கி வந்ததை, திங்கள்தோறும் ரூபாய் 4,000/– என்றும், மருத்துவப் படி ரூபாய் 15/– என்றும், மரபு உரிமையாளர்களுக்கு ரூபாய் 2,000; மருத்துவப் படி ரூபாய் 15 என்றும் 1–1–2006 முதல் வழங்கி அறிவிப்புச் செய்தார்கள். எனவே, அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு இந்த நிதி வழங்கப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பொதுவாக, பெயர்ப் பலகைகளில் தமிழ் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். அது நம்முடைய தொழிலாளர் நலத் துறை சார்பாக அந்தத் துறை அதிகாரிகளால் கவனிக்கப்படுகிறது. இருந்தாலும், இந்த அவையில் அதை எடுத்துச் சொல்லுவதன்மூலமாக, எந்தப் பெயர்ப் பலகையாக இருந்தாலும் திருத்தப்படும் என நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், பலகையிலே தமிழிலே இல்லை, டச்சு மொழியிலே எழுதியிருக்கிறார்கள் என்றுகூட இங்கே குறிப்பிட்டார்கள். அதுவும் நல்லதுதான். அந்த இடம் யாருக்கும் தெரியக் கூடாது என்று அவர்கள் எழுதி வைத்தால், அதில் அவர்கள் மறைந்துகொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள். இருந்தாலும்கூட,

தமிழில் எழுத வேண்டுமென்பதை நடைமுறைப்படுத்துவதற்கு நிச்சயமாக இந்த அரசு தொடர்ந்து முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

தமிழ் வளர்வதற்கு இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள், கல்வித் துறையிலே தமிழுக்கு ஆற்றுகிற பணியையும், தமிழ் வளர்ச்சித் துறைப் பணியையும், இரண்டையும் ஒன்றோடொன்று இணைத்து, அந்தக் கண்ணோட்டத்திலே பல வெட்டுத் தீர்மானங்களை வழங்கியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, தமிழ் வளர்ச்சித் துறைக்கு அதிலேயும் ஈடுபாடு உண்டு. அந்த முறையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ் கட்டாயமாக ஒரு மொழிப் பாடமாக முதல் வகுப்பிலே இருந்து இறுதி வகுப்பு வரையிலே, கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டமே கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்திற்கு சில எதிர்ப்புகள் இருந்தாலும்கூட, அதற்குள்ள நியாயங்கள் நீதிமன்றத்தாலே ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதேபோல, தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலக நாடுகளில் எல்லாம் தமிழ் மொழியை வளர்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது, கலைஞருடைய அரிய முயற்சியின் காரணமாக, தமிழ் செம்மொழி என்னும் அதனுடைய சிறப்புத் தகுதியை மத்திய அரசு ஏற்று, அங்கீகரித்து அறிவித்திருக்கிறது. அறிவித்தால் மட்டும் போதாது, செம்மொழிக்குரிய சிறப்புகளைச் செய்ய வேண்டும் என்ற முறையில் தமிழ்நாட்டிலே செம்மொழி ஆய்வு நிலையம் ஒன்றை, ஒரு பல்கலைக்கழகம்போன்ற, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்போன்ற ஓர் அமைப்பை செம்மொழிக்காகவே மத்திய அரசு ஏற்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அது தமிழக அரசால், கலைஞர் அவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி, அந்தச் செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் இங்கே அமைக்கப்படுவதற்கு நிலம் வழங்க வேண்டும் என்பதைத் தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 150 கோடி ரூபாய் அளவுக்கு அதற்கு நிதி வழங்க வேண்டுமென்று, மத்திய அரசால் இதற்காக அமைக்கப்பட்டிருக்கிற இரண்டு குழுக்கள், ஒன்றுக்குப் பெயர், எண்பேராயம், மற்றொன்றுக்குப் பெயர், ஐம்பெருங்குழு, அந்தப் பழந்தமிழ்ப் பெயர்கள், மன்னர் காலத்தில் அந்த மன்னர்களுக்கு அறிவுரை, ஆய்வுரை வழங்கக்கூடிய தகுதியோடு இருந்த அந்தக் குழுக்களுடைய பெயர்கள் இந்தக் குழுக்களுக்கு



வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழுக்களின் சார்பாக, கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தைத் தமிழகத்தில் விரைவில் தொடங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். அது விரைவில் நிறைவேறும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி அந்த அமைப்பு வருகிறபோது, உலகத்திலே பல்வேறு நாடுகளிலே உள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழ் ஆய்வு நடத்துகிற அமைப்புகளோடு அல்லது அந்தத் துறைகளோடு செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் தொடர்புகொண்டு, உலகம் முழுவதும் தமிழுக்கு ஆக்கம் செய்யக்கூடிய பல பணிகளை நிறைவேற்றும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில நண்பர்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதுவும் நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள், வேலூரிலே தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நபிகள் நாயகம் சொன்ன ஒரு மொழி, 'அறிவைத் தேடுவதற்கு சீனாவுக்கே செல்' என்பது. அரபு நாட்டுத் தலைவர் அந்த நாட்டு மக்களுக்குச் சொல்கிறபோது, அறிவைத் தேடுவதற்கு சீனாவுக்குச் செல்லலாம் என்று குறிப்பிட்டார். அரபுகள்கூட சீனாவுக்குச் சென்றாவது அறிவைத் தேடு என்றார்கள். வேலூரிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து இந்தத் தமிழ் அறிவைத் தேடக் கூடாதா? (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இருக்கிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்று மதுரையிலே தொடங்கப்பட்டு, அதனுடைய நிர்வாகம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–45*

அதேபோல, தேவநேயப் பாவாணருடைய அரியதொரு ஆராய்ச்சியாக, தமிழ் மொழிக்கு மிகப் பெரிய ஆக்கம் தேடித் தரக்கூடிய ஒரு பணியாக அமைந்தது அவருடைய 'அகர முதலித்' திட்டம். ஆனால், அவருடைய 'அகர முதலித்' திட்டத்தை, அவரைத் தவிர மேலும் யாரோ 5 பேர், 10 பேர் என்ற அளவிலே அவருடைய மாணவர்களாக இருந்தவர்கள், அவரோடு பழகியவர்கள், அந்த முறையில் தேர்ந்தவர்கள், அந்த வழியில் தமிழை ஆராயக்கூடியவர்கள்தான் அதிலே ஈடுபட்டுப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்களே தவிர, பொதுவாகப் பல பேர்

அந்தப் பணியில் ஈடுபடக்கூடியவர்களாக அமையவில்லை. எனவே, அந்தப் பணி கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் 1974–வது ஆண்டிலே தொடங்கப்பட்டது. பாவாணர் அவர்கள் ஒரு மிகப் பெரிய அறிவாளியே தவிர, நடைமுறைகளைத் தெரிந்துகொண்டு, அந்த நடைமுறைகளுக்கு ஏற்ப சில முறைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளவோ, காரியத்தை விரைந்து செய்யவோ அவரால் இயலவில்லை. ஆகவே, அதன் காரணமாக அது மெல்ல, மெல்லத்தான் நடைபெற்றது. இருந்தாலும், விரைந்து நடத்துவதற்கு, எவ்வெப்போதெல்லாம் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தாரோ, அந்தக் காலக்கட்டத்திலேயெல்லாம் ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த முயற்சியின் காரணமாக, இதுவரையில் ஏறத்தாழ 31 மடலங்கள் வரவேண்டியவற்றுள், 18 மடலங்கள் வெளி வந்திருக்கின்றன. இன்னும் 6 மடலங்கள்; மடலங்கள் என்பது பகுதிகள்–Chapters. அது ஒவ்வொன்றும் ஏறத்தாழ 500 பக்கம், 600 பக்கம் உள்ள பெரிய அகராதியாகத்தான் அமையும். அந்த 6 பகுதிகள் இந்த ஆண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்மூலமாக அச்சிடப்பட்டு வருகின்றன என்று அதன் இயக்குநர் தெரிவித்திருக்கிறார். அந்த 6 மடலங்கள் வரும். மேலும், 3, 4 மடலங்களை இயற்ற வேண்டுமென்பதற்கு அவர்கள் சில திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டப் பணிகளை எந்த முறையிலே நிறைவேற்றுவது என்பது பற்றி விரைவிலே ஆலோசனை செய்து, அவர்களுக்கு அறிவுறுத்தப்படும். அப்படி அறிவுறுத்தப்பட்டாலும்கூட, இன்னும் 2, 3 ஆண்டுகள் அப்பணி நடந்து, அந்த 'அகர முதலித்' திட்டம் நிறைவேறும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சென்னைப் பல்கலைக்கழகத்திலேயிருந்து ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்னாலே வெளிவந்தது, லெக்சிகன்—பேரகராதி; அதிலே சில குறைபாடுகள் இருந்ததாகக்கூட அந்தக் காலத்தில் பல தமிழ் அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இருந்தாலும், அது ஒரு முதல் முயற்சி. அந்தப் பேரகராதியை மறுபடியும் சீர்திருத்தி, அதை மேலும் விரிவுபடுத்தி வெளியிடுவது என்று சென்னைப் பல்கலைக்கழகத்திலேயுள்ள தமிழ்த் துறைத் தலைவர்மூலமாக ஒரு பணி ஆற்றப்படுகிறது. அந்தப் பணியை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதற்குத் தமிழ் வளர்ச்சித் துறை எந்த வகையிலே அவர்களை ஊக்கப்படுத்த முடியுமோ, அந்த வகையிலே ஊக்கப்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த அவையிலே உள்ளவர்களுக்கு நான் மேலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கட்சியினுடைய ஆட்சி இருக்கிறபோது தமிழுக்கு ஆக்கமாக நிறைவேற்றப்பட்ட எந்தப் பணியாக இருந்தாலும், இன்னோர் ஆட்சி வருமானால், அந்த ஆட்சிக் காலத்திலே அந்தப் பணியை அலட்சியப்படுத்துவதோ, புறக்கணிப்பதோ, நிறுத்திவிடுவதோ அவ்வளவு நியாயமல்ல. கலைஞர் அவர்கள் கடந்த காலத்திலே ஆட்சியிலே இருந்தபோது ஏற்படுத்திய ஓர் அமைப்பு, சாகித்ய அகாடமிக்குச் சமமாக தமிழ்நாட்டிலே தமிழ் மொழிக்காக 'சங்கப் பலகை' என்ற ஓர் அமைப்பையும், அதன் சார்பாகக் 'குறள் பீடம்' என்ற ஒரு விருதையும் உருவாக்கினார்கள். அதன் பின்னர், நம்முடைய இந்தத் தி.மு.க. ஆட்சி மாறியதற்குப் பின்னர், அந்தக் குறள் பீடம், சங்கப் பலகை, இவற்றுக்காகச் செய்கின்ற செலவு அவ்வளவு பயனுடையதாக அவர்களுக்குத் தெரியாத காரணத்தால் என்று கருதுகிறேன்; குறள் பீடம், சங்கப் பலகை ஆகியவை இயங்குவதற்கான அலுவலகம் கலைக்கப்பட்டு, தமிழ் வளர்ச்சி இயக்ககத்துடன் இணைத்து ஆணையிடப்பட்டது. அந்த அரசாணை 3–10–2001 அன்று வெளிவந்தது. எனவே, அதன் காரணமாக அந்தப் பணி நின்று போய்விட்டது. இப்போது மறுபடியும் அதே பணியை நிறைவேற்றுவதற்கு செம்மொழி அமைப்பு வருகிற காரணத்தால், அதன்மூலமாக இந்தப் பணியும் சிறப்பாக நிறைவேறுகிற வாய்ப்பு உருவாகும் என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

அதேபோல, திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோள் இங்கே தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் உரையிலேயும் திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சி தொடர்ந்து நடைபெறும்.

அடுத்து, தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கச் செய்வது. இப்போது இந்தி, ஆங்கிலம் மட்டும்தான் இருக்கிறது. வேறு எந்த மாநில ஆட்சி மொழியையும், மாநில அரசினுடைய ஆட்சி மொழிகளையும் மத்திய அரசு ஆட்சி மொழியாக ஏற்றாலும், ஏற்காவிட்டாலும், தமிழ் மொழியை விரைந்து ஏற்று, ஆட்சி மொழியாக அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு வலியுறுத்துகிறது. அந்த முயற்சியும் தொடர்ந்து நடைபெறும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்]  [2007 மே 2

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய இல்லம் தஞ்சை மாவட்டத்திலே உத்தமதானபுரத்திலே இருக்கிறது. அவர்களுடைய இல்லம் அமைந்துள்ள அந்த இடம் ஏறத்தாழ 1,37,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டு, 23 இலட்சம் ரூபாய் செலவில் அதைச் சீர் செய்து, அந்த நினைவிடத்தைப் போற்றிப் பராமரிக்க அரசாணை இடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் நடைபெறும்.

*முற்பகல் 10-50*

அதேபோல, அறிவியல் தமிழ் மன்றம் ஒன்று கலைஞர் அவர்களுடைய திட்டப்படித் தொடங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய தலைவராக, திரு. மணவை முஸ்தபா அவர்கள் நியமிக்கப்பட்டு, வேறு பல துணைத் தலைவர்களும், மற்றவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இருந்தாலும், எதிர்பாராத வகையில், திரு. மணவை முஸ்தபா அவர்கள் உடல் நலக் குறைவால் சிகிச்சை பெற்று வருகிறார்கள். விரைவில் அந்த அறிவியல் தமிழ் மன்றத்தினுடைய பணி எந்த வகையில் உடனடியாகச் சிறப்பான பயன் தர முடியுமோ, அந்தப் பயன் தரக்கூடிய முறையில் அந்தப் பணி ஆற்றப்படும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, தமிழ் ஆக்கத்திற்கு, தமிழுக்குச் சீர்தேடுவதற்கு, பெருமை தேடுவதற்கு, தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துவதற்கு, முழுத் தகுதியும், திறனும், ஆற்றலும் வாய்ந்தவர் கலைஞர் என்பதைக் கூறி, இந்தத் துறைகள் அவர்மூலமாக மேலும் சீராகி, செம்மையாக இயங்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். 2007-2008 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்@ அடங்கிய புத்தகம், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

@ 922 முதல் 925 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



2007 மே 2]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில் வனத் துறைமூலம் ஏற்கெனவே பல ஆண்டுகளாக இயக்கப்பட்டு வந்த சந்தன எண்ணெய் ஆலை கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதற்குரிய சந்தன மரங்களை வனத் துறை அந்த ஆலைக்கு வழங்காத காரணத்தினால்தான் ஆலை மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் போதிய சந்தன மரங்களை சந்தன எண்ணெய் ஆலைக்கு அளித்து, மீண்டும் அந்தச் சந்தன எண்ணெய் ஆலையைத் துவக்கி இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 536 கிலோ லிட்டர் சந்தன எண்ணெய் அந்தத் தெற்குப்பட்டு சந்தன ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. சந்தன எண்ணெயினுடைய விலை உலக அரங்கிலே ஒரு கிலோ, ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து இப்பொழுது ரூ.67,000/- ஆகக் குறைந்திருக்கிறது. சந்தனக் கட்டை விலை அதிகமாக இருக்கின்ற நேரத்திலே, அதை எண்ணெயாக மாற்றிக் குறைந்த விலைக்கு விற்பது நட்டம் என்ற காரணத்தினாலே, தற்போது அந்த ஆலையை இயக்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உலக அரங்கிலே சந்தன எண்ணெயின் விலை உயர்ந்ததற்குப்பின், அந்தத் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள், ஜப்பானிய அரசு உதவியோடு காடுகளை வளர்ப்பதற்கும், காடுகளையொட்டி வாழ்கின்ற மக்களுடைய சமூகப் பாதுகாப்புக்குமான திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் தொடர்பாக வனக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வனக் குழுக்கள் கடந்த ஆட்சியின்போது அமைக்கப்பட்ட நேரத்திலே, ஜப்பானிய அரசு விதித்த நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்காமல், பல இடங்களிலே அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அந்த வனக் குழுக்களுக்குத் தலைமையேற்று நடத்தி வருகிறார்கள். சில இடங்களில் சமூக விரோதிகள்கூட அந்த வனக் குழுக்களுக்குள் புகுந்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அந்தக் குழுக்களைப் புதியதாகப் புனரமைத்து, எந்தத் திட்டத்திற்காக, எந்த எண்ணத்தோடு அந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டனவோ, அந்தக்

குழுக்களை அவ்வாறு செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வனத் துறை அதிகாரிகளை அணுகியபோது, ஐந்து ஆண்டுகளுக்கு அந்தக் குழுக்களை கலைக்கவே முடியாது என்று சொல்கிறார்கள். அந்தக் குழுக்கள்தான் அந்தப் பணிகளைச் செய்யும் என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனக் குழுக்கள் அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுடைய சமூக வாழ்க்கையிலே மிகப் பெரிய பங்கை வகிக்கின்றன. அந்தக் குழுக்களுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் கடனுதவியாக வழங்கப்படுகின்றன. எனவே, அந்தக் குழுக்களைப் புனரமைத்தும், அந்தத் திட்டங்களினுடைய உரிய பணிகளைச் செய்வதற்கான புதிய குழுக்களை அமைப்பதற்கும், ஏற்கெனவே இருக்கின்ற குழுக்களில் உள்ள நிர்வாகிகள் தவறு செய்தவர்களாக இருந்தால், சமூக விரோதிகளாக இருந்தால், அவர்களை மாற்றிவிட்டு, நல்ல சமூக எண்ணம் கொண்டவர்களை வனக் குழுக்களுக்கு நிர்வாகிகளாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று உங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனக் குழுக்களில் தேவையற்றவர்கள் அல்லது சமுதாயக் குற்றவாளிகள் இருப்பார்களானால், அவர்களைக் கண்டறிந்து, அவர்களை எந்த முறையில் நீக்க வேண்டுமோ நீக்கி, குழு உறுப்பினர்களே அவர்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்கிற முறை இருக்கின்ற காரணத்தால், அவர்களை நீக்குவதற்கான நடைமுறையும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், short ஆக இருக்க வேண்டும்.

***திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸை விடக் குறைவாகவே பேசிவிடுகிறேன். வனத் துறை ஆரம்பிக்கப்பட்டு 201 வருடங்கள் ஆகின்றன. அமைச்சர் அவர்கள் 150 வருடங்கள் என்கிறார். அந்த விவரத்தைக் கொஞ்சம் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், வனப் பரப்பில் 25 சதவிகிதம் உயிரினச் சரணாலயம் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி, தோகைமலை, நெல்லை, சத்தியமங்கலம் மற்றும் கொடைக்கானல்



சரணாலயங்களுக்கு மத்திய அரசின் அனுமதி கேட்டுத் தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால், சரணாலயங்களை அமைப்பதால் வளர்ச்சித் திட்டங்களில் நிறைய இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், வனப் பரப்பில் 25 சதவிகிதம் வன உயிரினச் சரணாலயம் இருந்தால்தான், நாட்டில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும். நமது எதிர்காலச் சந்ததியினரின் சிறந்த சுற்றுச்சூழலுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதாக இருக்கும். இதன்மீது அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதையும் கேட்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் சமூக விரோதிகள் வனக் குழுக்களின் தலைவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒரு கிராமத்தில் அதிக உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அங்கிருக்கிற வனச் சரகர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில்தான் அந்தத் தேர்தல் நடக்கிறது. இப்படி ஒரு தவறான தகவலைக் கடந்த ஆட்சியின்மீது திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்வது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வியை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட அந்த மலைப் பகுதிகளிலே சரணாலயம் அமைக்க வேண்டிய கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இருந்தாலும், ஏன் அதிலே ஆர்வம் காட்டவில்லை என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்கு அன்றே குறிப்பிட்டேன். இந்தியாவிலே 1,56,006 சதுர கிலோ மீட்டர்தான் வனப் பகுதி இருக்கிறது; 20 சதவிகிதம்தான் இருக்கிறது. அதிலும் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், 16.79 சதவிகிதம்தான் வனச் சரணாலயப் பகுதிகள் இருக்கின்றன. ஆனால், இதை அதிகப்படுத்துகின்ற நேரத்திலே, அடிப்படை வசதிகளை அமைப்பதிலே பல இடர்ப்பாடுகள்

இருக்கின்றன. சரணாலயப் பகுதி என்றால், மத்திய அரசின் அனுமதி மட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெறுகின்ற நேரத்திலே, பல இடங்களிலே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்களே, 21 ஆம் நூற்றாண்டிலே காலிக் குடியிருப்புப் பகுதிகளிலே எங்களால் அடிப்படை வசதிகளான மின் விளக்கு வசதி, தண்ணீர் வசதி போன்றவற்றை அமைக்க முடியவில்லை என்று சொன்னார்களே, அவற்றை அமைப்பதிலே இருக்கின்ற இடர்ப்பாடுகளாலேதான் அதைப் பற்றி நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, இந்தியாவிலே 25 சதவிகிதம் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் வருகின்ற நேரத்திலே தமிழ்நாட்டிலும் அந்தப் பகுதிகள் வரும். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை, 28–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.134,41,07,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), 28–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,58,37,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, 28–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.45,09,49,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

முற்பகல் 11–00

## (ஈ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, 28–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.183,25,66,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.143,48,84,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



# 4. விதி 110–ன்கீழ் அறிக்கை

## பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்– மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்துத் தொடர்ந்து ஏடுகளில் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இந்த அவையில் இதற்கு முன்பு 10–4–2007 அன்றும், 19–4–2007 அன்றும் இந்தப் பிரச்சினை பேசப்பட்டு, அதற்கு நான் இதே அவையில் பதிலும் அளித்திருக்கிறேன். இருந்தபோதிலும், தமிழக அரசும், பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பையேற்றிருக்கின்ற நானும் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருப்பதாகத் தோழமைக் கட்சியின் தலைவர் ஒருவர் வெளியிலே பேசியிருக்கிறார். அதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டியவனாக உள்ளேன்.

குறிப்பாக, ஆந்திர முதலமைச்சர் மாண்புமிகு ராசசேகர ரெட்டி அவர்கள் தமிழக முதலமைச்சருக்குக் கடந்த பிப்ரவரி மாதம் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடித விவரம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. கடித விவரத்தை வெளியிடாமல் மறைத்து வைத்தது ஏன் என்று அந்தத் தலைவர் கேட்டிருக்கிறார். கடந்த 10–4–2007 அன்று இதே அவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. பாண்டுரங்கன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பா.ம.க. சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி ஆகியோர் பாலாறு பற்றிப் பேசி விவரம் கேட்டபோது, நான் அளித்த பதிலில், "ஆந்திர மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படும் என்ற செய்தி 5–1–2006 முதல் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அப்போதிருந்தே தமிழக அரசு சார்பில் கடிதங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 5–8–2006 அன்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்று நம்முடைய மாண்புமிகு

உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும் — அப்பொழுது நான் உடல் நலமில்லாமல் மருத்துவமனையிலே இருந்த நேரம் — ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இது குறித்துப் பேசினார்கள். அப்போது தமிழக மக்களுடைய நலனைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் சட்டத்திற்குப் புறம்பாக எந்த அணையையும் ஆந்திர அரசு கட்டாது என்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். அப்படி ஏதாவது நாங்கள் கட்டுகிற நிலை ஏற்பட்டால், 1892 ஆம் ஆண்டின் பன் மாநில ஒப்பந்தப்படி அதனுடைய விவரத்தைத் தமிழக அரசுக்கு நாங்கள் அனுப்புவோம் என்று தெரிவித்திருந்தார்கள். பிறகு, மறுபடியும் அணை கட்டுவதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது என்ற செய்தி 22–1–2007 அன்று வந்தவுடன், பொதுப் பணித் துறையின் செயலாளர், ஆந்திர மாநில அரசுச் செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதினார். 25–1–2007 அன்று பூமி பூஜை நடைபெறுவதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தவுடன், அது குறித்து நானே ஆந்திர மாநில அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். இதற்கு மேலாக, ஆந்திர அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்துச் சரியான விவரங்களை அளிக்கும்படி 1–2–2007 அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில், இத்திட்டத்திற்கான வடிவமைப்பு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்றும், உறுதி அளித்தவாறு திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் என்றும் 5–2–2007 அன்று ஆந்திர முதல்வர் அவர்கள் நமக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள்".

இந்த விவரங்களை இந்தப் பேரவையில் நான் பேசி, அது அவைக் குறிப்பில் இடம்பெற்றுள்ளது. 3–2–2007 அன்று நமது முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இத்திட்டம் குறித்துத் தொலைபேசியிலும் விளக்கம் கேட்டார்கள். அது அப்போதே ஏடுகளில் வெளிவந்துள்ளது. ஆனால், இவ்வளவுக்கும் பிறகு இன்றையதினம் அந்தத் தலைவர் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் எழுதிய கடிதம் பற்றி அவைக்குத் தெரிவிக்கவில்லை என்றும், மறைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறியிருப்பதைப் பார்த்து நான் பெரிதும் வருந்துகிறேன்.

முற்பகல் 11–05

பா.ம.க. தலைவர் திரு. கோ.க. மணி ஒத்திவைப்புத் தீர்மானம் காண்டு வந்தபோதிலும், அது அனுமதிக்கப்படவில்லை என்றும்





பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திரு. கோ.க. மணி அவர்கள் 10 ஆம் தேதி சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசியிருக்கிறார். 19 ஆம் தேதி இதே பிரச்சினைக்காகக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பா.ம.க. சார்பில் திருப்பத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, பேரவையில், இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அனுமதிக்கப்படவில்லை என்பதும் தவறான குற்றச்சாட்டாகும்.

ஆந்திர அரசுக்குத் தொடர்ந்து நாம் வலியுறுத்தியதன் பயனாக, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு கடிதம் எழுதி, அது நேற்றையதினம் நமக்கு வந்துள்ளது. அந்தக் கடிதத்தில் அவர்கள் இதற்கு முன்பு உறுதியளித்துள்ளவாறு, பாலாற்றின் குறுக்கே அவர்கள் கட்டவுள்ள தடுப்பணைக் குறித்த விவரத்தை எழுதி, அதன் காரணமாக 200 m.c.ft. தண்ணீர் குடிநீருக்காகவும், 400 m.c.ft. தண்ணீர் 4,000 ஏக்கர் பாசனத்திற்காகவும், இரண்டும் சேர்த்தால் 0.6 t.m.c., ½ t.m.c.-க்குக் கொஞ்சம் மேலே தண்ணீர் மட்டும் எடுக்கவிருப்பதாகவும் சொல்லி, அந்தத் திட்டத்திற்கான வரைபடத்தையும் இணைத்து அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கடிதம் நேற்றுதான் வந்தது. இதைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏற்கெனவே 25–4–2007 அன்றே உச்ச நீதிமன்றத்தில் ஆந்திர அரசின் நடவடிக்கைக்குத் தடை விதிக்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மனுத் தாக்கல் செய்திருக்கிறோம். எனவே, பாலாறு பற்றி இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எந்தவிதமான சுணக்கமும் காட்டவில்லை என்பதையும், தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

தமிழக அரசு குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருப்பதாக பா.ம.க. தலைவர் பேசயிருக்கிறார். எங்கள் தலைவரைக் கேட்டால், நாம் மேலும் தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்று ஊக்கப்படுத்துவதற்காகத்தான் தோழமைக் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் அவ்வாறு கூறியிருப்பார் என்று கூறுவார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"

என்ற அய்யன் திருவள்ளுவரின் அரிய மொழிக்கேற்ப, அற்புதமான பண்புகளைக்கொண்டு தமிழ்நாட்டின் முதல்வராகப்

[திரு. துரைமுருகன்] [2007 மே 2

பணியாற்றிக்கொண்டு வருபவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மட்டும் இரவில் தூங்குவதில்லை; அமைச்சர்கள் யாரையும் அவர் தூங்க விடுவதுமில்லை. பொதுப் பணித் துறை பற்றி ஏட்டில் ஒரு செய்தி காலை 5–00 மணிக்கு வெளிவந்தால் அதற்கு அடுத்த நிமிடம் எனக்குத் தொலைபேசி வரும். அவரையோ, இந்த அரசையோ தூங்குகிறது என்று சொல்வதை, பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பொன்மொழிக்கேற்ப பொறுமையோடு ஏற்றுக்கொள்வார். ஆனால், அவர் தலைமையில் உள்ள இந்த அரசு தூங்கிக்கொண்டிருக்கிறது என்பதை, அன்றாடம் ஒரு சாதனையையும், சலுகையையும் அனுபவித்துக்கொண்டிருக்கிற மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைக் கூறி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110–ன்கீழ் தரப்படுகின்ற அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதியைக் கேளுங்கள்.

"(1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம்.

(2) அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது." (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Hon. Speaker Sir, Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Mr. Gnanasekaran. உட்கார்ந்துகொண்டிருந்தால் உங்களுக்குக் கால் வலிக்குமா? எப்பொழுதும் நின்றுகொண்டேயிருக்கிறீர்களே? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. மணி, விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) Not permitted, உட்காருங்கள்.



# 3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

## (உ) கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை

## (ஊ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

*****

## (உ) கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.35,71,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 312, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. அனுமதி கிடையாது. (குறுக்கீடு) விதி 110–ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) விதி 110–ன்கீழ் அமைச்சர் வாசித்த அறிக்கையின்மீது விவாதம் கூடாது. (குறுக்கீடுகள்) அதுதான் பேரவையின் விதி.

முற்பகல் 11–10

வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 318, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5357, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7301, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8818, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9820, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11398, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5257, திரு. கு. பாண்டுரங்கன்.



**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6160, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11322, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7280, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8070*, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *8534*, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8749*, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *10069*, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *10267*, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11005*, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *11198*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11871*, திரு. வை. சிவபுண்ணியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசும்போதா Point of Order வந்துவிட்டது? (குறுக்கீடு)

**திரு. மா. சந்திரகாசி:** ரூ.116 கோடி என்பது வங்கிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவர்களுக்குக் கடனாக இதுவரையும் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அந்தத் தொகை ஏறத்தாழ வழங்கப்பட்டு விட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தொழிலாளர்களின் நலன் கருதி, VAT வரி முழுமையாக நீக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிந்து, தேவையான விதிமுறைகளை, நடைமுறைகளைப் பரிந்துரை செய்கின்ற அலுவலர் குழுவின் பணிகள் எந்த நிலையில் இருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

மேலும், 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த தொழில் முதலீட்டு மானியம் ரூ.11 கோடி எந்தெந்த மாவட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்டது? மிகவும் பின்தங்கிய மாவட்டமான எங்கள் மாவட்டத்தில் இதுவரை ஒருவர்கூடப் பயனடையவில்லை என்பதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள எலம்பலூரில், சிட்கோ வசமுள்ள 44.48 ஏக்கர் நிலத்தில் தொழில் தொடங்க நிலம் கேட்டுப் பணம் கட்டியவர்கள் இதுவரை 96 நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக சிட்கோமூலம் தொழில் தொடங்குவதற்கு நிலம் கொடுத்துத் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்புக்கு மேல் படித்த மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், உணவு பதப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் தயார் செய்தல், Automobile, Industrial, C.N.C. என்ற automatic மெஷின் பயிற்சி போன்ற நவீனப் பயிற்சிகளைக் கிராமப்புற இளைஞர்களுக்கு வழங்கி, சிறு தொழிலை ஊக்கப்படுத்த வேண்டுமெனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைத் தொழில், பித்தளைப் பாத்திரம் தயாரித்தல், மண்பாண்டம் தயாரித்தல், செங்கல் மற்றும் குடிசைத் தொழில்களுக்குத் தனி வாரியம் அமைத்து, நடைமுறை மூலதனத்தை நேரடிக் கடனாக வழங்கி, நலிவடைந்த குடிசைத் தொழில்களை மேம்படுத்த வேண்டுமெனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் ஆணையம்மூலம் பெறப்படும் விளிம்புத் தொகைக் கடன் திட்டத்தில் 30 சதவிகிதம் மானியம் I.O.B. வங்கியில் மட்டும் வழங்கப்படுகின்றது. மற்ற வங்கிகளை அணுகும்போது, அதை மும்பையிலுள்ள கதர் வாரியம்தான் வழங்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதனைத் தமிழ்நாடு கதர் வாரியமே வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கதர் கிராமத் தொழில்களுக்கு வழங்கப்பட்டு வந்த நேரடிக் கடன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் கொண்டு வந்ததைப்போல மீண்டும் கொண்டு வர வேண்டுமெனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தேர்தல் அறிக்கையில் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் என்று அறிவித்தீர்கள். ஆனால், இரண்டு ஏக்கர் நிலம் என்று சொல்லி, கையளவு நிலம் என்பதுபோல மாறி, இன்று நெசவாளர்களுக்கு ஏமாற்றம் இல்லாமல் இலவச மின்சாரம் முழுமையாக வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மிகவும் பின்தங்கிய தொகுதியான எங்கள் வரகூர் தொகுதிக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் முன்னேறுவதற்கு உதவ அரசு முன்வர வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 10 யூனியன்களையும் தொழில் துறையில் பின்தங்கிய யூனியன்களாக அறிவித்து, அவற்றுக்கான சலுகைகளை அறிவிக்க வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி, வேப்பூர், ஓலைப்பாடி பகுதிகளில் 200 ஏக்கர் நிலப் பரப்பில் சிமெண்ட் ஆலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கிருந்துதான் அரியலூர் அரசு சிமெண்ட், டால்மியாபுரம் சிமெண்ட், சங்கர் சிமெண்ட் போன்ற தொழிற்சாலைகளுக்கு எல்லாம் சுண்ணாம்புக் கற்களை எடுத்துச் சென்று, சிமெண்ட் தயாரிக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயே ஒரு சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்து உற்பத்தி செய்தால், அங்கே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், விவசாய மக்கள் பயனடைந்து, அந்தப் பகுதிகளினுடைய பொருளாதாரம் மேம்படும் எனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, பெரம்பலூர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் மருதையாறு கொள்ளிடத்தில் கலந்து, பின்பு கடலில் கலக்கிறது. மருதையாற்றின் குறுக்கே அருணகிரி மங்கலத்தில் தடுப்பணை கட்டினால், கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் நிலத்திற்குமேல் பாசனம் பெறும். அந்தப் பகுதியினுடைய விவசாயிகளும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டு, 12–4–2004 அன்று டெண்டர் விடப்பட்டு, சுல்தான் இப்ராகிம் என்ற ஒப்பந்தக்காரர் தேர்வு செய்யப்பட்டு, foundation வரையில் கட்டப்பட்ட மருத்துவமனைப் பணி கிடப்பில் உள்ளது. இந்தப் பணியில் தொடர்ந்து மக்கள் நலம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

வேப்பூர் வட்டாரத் தலைமை மருத்துவமனைக்கு நபார்டு உதவியுடன் கடந்த ஆண்டு ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இதுநாள் வரையில் பணி முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. அந்தப் பகுதியின் மக்கள் அவலத்தைக் களைய, இந்த அரசு முன்வர வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1–5–2007, அதாவது நேற்று, வேப்பூர் ஒன்றியம், வைத்தியநாதபுரம் கிராமத்தில் டி.வி. வழங்கப்படும் திட்டம் அறிவிக்கப்பட்டு, டோக்கன் வழங்கப்பட்டு, ஒன்றியத் தலைவர், வட்டாட்சியர், R.I., V.A.O., அரசு அலுவலர்கள் மற்றும், பொது மக்கள் எல்லாம் கூடிய பின்பு, தி.மு.க.வைச் சார்ந்த ஒருவர் பெயர் இடம்பெறவில்லை என்பதற்காக, தி.மு.க. ஒன்றியச் செயலாளர் மற்றும் கிளைச் செயலாளர் நம் கட்சிக்காரனுக்கு டி.வி. இல்லையென்றால், இந்த நிகழ்ச்சியை நிறுத்துங்கள் என்று, நேற்று டி.வி. வழங்காமல் நிறுத்திவிட்டார்கள் என்பதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதியில் வெலிங்டன் நீர்த்தேக்க அணையிலிருந்து ஒரு கால்வாய் அமைத்து, அதன்மூலமாக, வேப்பூர், சிறுமத்தூர், வடக்கலூர், ஒகலூர், அத்தியூர், அகரம்சிகூர்போன்ற பல கிராமங்களுக்கு நீர் எடுத்துச் சென்று விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு ஏரியும் சுமார் 400–லிருந்து 500 ஏக்கர் வரை நிலப்பரப்பு கொண்டவை. இந்த ஏரிகளைத் தூர் வாரிச் செப்பனிட்டால், அந்தப் பகுதிகளினுடைய எழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள். அந்த ஏரிகளைத் தூர் வாருவதற்கு நபார்டு உதவியுடனோ அல்லது மத்திய அரசின் நிதியைப் பெற்றோ அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் எங்கள் வரகூர் தொகுதியினுடைய விவசாய மக்கள் பயனடைவார்கள் என இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11–30

அதேபோல, இலவசமாக அதைத் தருகிறோம், இதைத் தருகிறோம் என்று வாக்குறுதிகளை அறிவித்து ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால், எதையுமே உருப்படியாகத் தரவில்லை. சொன்னதையும் செய்கிறோம், சொல்லாததையும் செய்கிறோம் என்று சொல்லி வருவதற்கேற்ப, இலவசமாக வெடிகுண்டுக் கலாச்சாரத்தை மக்களுக்கு



வழங்கியிருக்கிறீர்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31-1-2007 அன்று வசிஷ்டபுரத்தில் நாட்டு வெடிகுண்டுகளுடன் மூன்று கொள்ளையர்கள் நகை வியாபாரி ஒருவரைத் தாக்கிக் கொள்ளை அடிக்கும்போது, வெடிகுண்டு தவறி, கொள்ளையர்களின்மேலே விழுந்து வெடித்ததால், காயமடைந்த மூவரும் கரும்புத் தோட்டத்திற்குள் மறைந்துகொண்டனர். இந்தத் தகவலை அறிந்தவுடன், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்தில், இதுபோன்று அடிக்கடி எனது தொகுதியில் நடக்கிறது என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தொலைபேசிமூலம் சொன்னபோது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த மாவட்டத்தில்? எப்போது?

**திரு. மா. சந்திரகாசி:** பெரம்பலூர் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துறை சம்பந்தமாகப் பேசுங்கள்.

**திரு. மா. சந்திரகாசி:** "நீங்கள் ஒன்றும் இதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை" என எனது பேச்சைத் துண்டித்துவிட்டார். பிறகு, போலீஸ்காரர்கள் அங்கு சென்று தேடிப் பார்த்துவிட்டு வந்துவிட்டனர். ஆனால், மறுநாள் வயலிலே ஆடு, மாடு மேய்த்தவர்கள், அங்கேதான் அந்தக் கள்வர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னவுடன், காவல் துறையினர் அங்கு சென்று, அந்தத் திருடர்களைக் கைது செய்தனர். ஆக, ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்கின்ற கருத்தைக் கேட்பதற்குக்கூட மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு நேரமில்லாமல், திருடர்களையும் கண்டுபிடிக்காத ஒரு நிலை அங்குள்ள காவல் துறையில் இருக்கிறது என்பதை இப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்க வேண்டுமென்று இப்போதுகூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்கச் சென்றபோது, அங்கே மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் உட்கார்ந்திருந்தார். நான் சென்றவுடன், கால்மேல் கால் போட்டுக்கொண்டு, யாரோ ஒருவர் வந்ததுபோல், அலட்சியமாக

நடந்துகொள்கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்று, இப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதியில் உள்ள பெருமத்தூர் பகுதியில் அடிக்கடி மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அங்கே ஒரு துணை மின் நிலையத்தை அமைத்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரிக்கை வைக்கிறேன்.

அதேபோல, சிறு தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலை மட்டும்தான் இந்த நாட்டில் அதிகப்படியான மக்கள் செய்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது, சிறு தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலுக்குப் போதிய நிதி, இந்த மானியத்தில் ஒதுக்கப்படவில்லை. எனவே, இந்தத் தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டுமானால், இந்தத் துறைக்குக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து, கிராமப்புற இளைஞர்களை ஊக்குவித்து, அதன்மூலம் ஏழையெளிய மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் சிறு தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் நலத் துறையை முன்னேற்ற வேண்டுமென என்னுடைய தொகுதியின் சார்பாகக் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதிக்கு உட்பட்ட மருதையான்கோவில் சாலையில், வயலூர் என்ற இடத்தில் மிகப் பெரிய பாலம் உள்ளது. மழைக் காலங்களில் அங்கே அதிகப்படியான நீர் வரும்போது, எங்கள் பகுதியிலிருந்து, அதாவது கடலூர் மாவட்டத்தில் இருந்தும், அரியலூரிலிருந்தும் வருகின்ற பேருந்துகள், இரண்டு பக்கங்களிலும் நிறுத்தப்பட்டு, போக்குவரத்து தடைப்படுகிறது. நீண்ட நாட்களாக அந்தப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கடந்த ஆட்சியிலேயே நிதியொதுக்கீடு செய்யப்பட்டும், இந்த ஆட்சியில் டெண்டர் விடப்பட்டும், இதுவரையிலும் அந்த டெண்டரை யாரும் எடுக்காமல் இருப்பதாக அறிகிறேன். அந்தப் பணியை மிக விரைவில் செயல்படுத்தி, அந்தப் பாலத்தைக் கட்டி, அந்தப் பகுதியில் உள்ள மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.



அதேபோல், பெருமத்தூரிலிருந்து லெப்பைக்குடிக்காடு செல்லும் சாலையில் பெரிய ஆறு உள்ளது. அந்த ஆற்றிலும் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று எங்களுடைய தொகுதியிலிருந்து நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறோம். அந்தக் கோரிக்கையையும் பரிசீலனை செய்து, நபார்டு திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அந்தப் பாலத்தையும் மிக விரைவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *15* நிமிடங்கள் ஆகிவிட்டன.

முற்பகல் *11–35*

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட குன்னம்–வேப்பூர் வழியாக, பெருமத்தூரிலிருந்து லெப்பைக்குடிக்காடு வரையிலும் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். ஏனெனில், எங்கள் பகுதியில் இருக்கிற கிராம மக்கள் குன்னத்திற்கோ, அரியலூருக்கோ செல்ல வேண்டுமென்றால், போதிய போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அடிக்கடி கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அண்மையில்கூட ஒரு இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டு, பெருமத்தூர் ஆற்றில் புதைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதேபோல, செங்கணம் அருகே உள்ள ஒரு கிராமத்தில், ஒரு இளம் பெண் கற்பழிக்கப்பட்டு, நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டு இறந்திருக்கிறாள். அந்தக் கொலையைச் செய்தவர் யார் என்றும் இதுநாள் வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எங்கள் மாவட்டத்தில் இதுபோன்ற அத்துமீறல்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. அதையெல்லாம் கட்டுப்படுத்துவதற்குக் காவல் துறைக்கு உரிய அங்கீகாரம் கொடுக்க வேண்டுமெனப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) அதற்குக் காவல் துறை நடவடிக்கை எடுத்துக்கொண்டேதான் இருக்கும்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வருவார்கள்; தமிழக மக்கள் விரும்பும் மகத்தான திட்டங்களை அறிவிப்பார்கள். நாங்களெல்லாம் அம்மாவின் மகத்தான திட்டங்களைக் கண்டு வரவேற்றுக் கரவொலி எழுப்புவோம்.

மீண்டும் பிறவி ஒன்று இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் உண்மை விசுவாசியாகப் பிறக்க வேண்டும் என்று இறைவனிடம் வரம் வேண்டி, இந்தப் பேரவையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கிய துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றக் கட்சியின் கொறடா அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள். நீங்கள் கன்னிப் பேச்சுப் பேசுகிறீர்களா?

**திரு. ந. சுந்தரம்:** இல்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்களைப் பார்த்ததே இல்லை. அதனால்தான் கேட்கிறேன். (சிரிப்பு)

***திரு. ந. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான கதர்த் துறை மானியக் கோரிக்கையில், சட்டப் பேரவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி, அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், எனது அரசியல் வழிகாட்டியும், மத்திய நிதி அமைச்சருமான மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் திரு. கார்த்தி சிதம்பரம் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்டத்தினுடைய இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக அமைச்ச



பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனது காரைக்குடி தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன் விழாக் காணும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வைர விழா, பவள விழாக் காண வேண்டும் என்று எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் வாழ்த்தி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியில் ஏழையெளியோர், அடித்தட்டு மக்களின் உயிர் நாடியாகச் செயல்பட்டு வரும், கதர் கிராமத் தொழில்களின் மாவட்டத் தலைமையிடமாகக் கொண்டு, சிவகங்கையில் இயங்கி வந்த உதவி இயக்குநர் அலுவலகத்தைக் கடந்த ஆட்சியில் விருதுநகருக்கு மாற்றிவிட்டார்கள். விருதுநகருக்கும், சிவகங்கைக்கும் சேர்த்துத் தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.50 இலட்சம் மானியமாக, தொழில் கடனாகக் கதர் ஆணைக் குழு தந்து வருகின்றது. ஆனால், அதில் ஒரு ரூபாய்கூட சிவகங்கை மாவட்டத்திற்கு வழங்கப்படுவதில்லை.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் இயங்கி வந்த 10 கதர் அங்காடிகளைக் கடந்த ஆட்சியில் 5 ஆகக் குறைத்துவிட்டார்கள். மீண்டும் இந்த 5 கதர் அங்காடிகளும் செயல்பட, தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், கதர்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், அவர்களின் சொந்த ஊரான கண்டனூரில், தனது சொந்த இடமான 26.16 ஏக்கர் நிலத்தை இனாமாக வழங்கினார்கள். அவர்கள் இனாமாக வழங்கிய 26.16 ஏக்கர் இடத்தில் கதர், கிராமத் தொழில் பணி மேற்கொள்ள தாட்கோ மற்றும் வாரிய நிதியிலிருந்து பணிக் கூடங்கள் கட்டப்பட்டு, 25-9-1988-ல் கதர் வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் நவீன தறி அலகு, நோபாளி தறி அலகு, கிராமிய நூற்பு நிலையங்கள், காலணி உற்பத்தி அலகு, கைமுறைக் காகித உற்பத்தி அலகு, சோப்பு உற்பத்தி அலகு மற்றும் தச்சுக் கொல்லு அலகு, ஆகிய ஏழு அலகுகளில் இயந்திரத் தளவாடங்கள் நிறுவப்பட்டு, கிராமப்புற மக்களுக்கு டிரைசம் மூலம் பயிற்சியும் அளிக்கப்பட்டு, செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், அது கடந்த ஆட்சியில் மூடப்பட்டது. தற்பொழுது நமது அரசு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே பொறுப்பேற்ற பிறகு, நானும், நமது மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மூடப்பட்ட கண்டனூர் கதர் வாரிய

மையத்தைத் திறந்து, மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தோம். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் எங்களது வேண்டுகோளை ஏற்று, உடனடியாக மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களைக் கண்டனூருக்கு அனுப்பி வைத்து, அதைத் திறந்து வைத்தார்கள். அதற்காக நமது கதர் வாரியத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களது முயற்சியில், மீண்டும் கொல்லு அலகு ஒன்று, மின் இணைப்புப் பெற்று விரைவில் தொடங்கப்படவுள்ளது. இரண்டு கிராமிய நாற்பு நிலையங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, சுமார் 40 பெண்கள் நாற்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சி இல்லாததாலும், ராட்டைகள் பழமை வாய்ந்ததாக உள்ளதாலும், அவர்களால் போதிய அளவு உற்பத்தி செய்து, அதிகக் கூலி பெற இயலாத நிலை உள்ளது. இப்பகுதியில் உள்ள பெண்களுக்குக் கிராமிய நாற்புப் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11-40

மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் கதர் வாரியத்திற்குக் கண்டனூரில் இனாமாக வழங்கிய நிலத்தில் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில், சிவகங்கை மாவட்டத்தினுடைய உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான், இந்த மாவட்டத்திற்குரிய பங்கினைப் பெறுவதற்கு உரிய வாய்ப்புக் கிடைக்கும். மேலும், எனது தொகுதி ஏழையெளியோருக்குக் கடன் வசதி செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும். இனாமாகக் கொடுத்த இடத்தில் உள்ள 11 கட்டடங்களும் பயனுள்ளவையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கதர் மையத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கும் ஏற்ற சூழ்நிலை உள்ளது. இந்தக் கதர் வாரிய மையத்தில் சர்வோதய சங்கத்தின்மூலமும், தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலமும் மகளிர் சுய உதவிக் குழுமூலமும் தொழில் தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அரசு அனுமதி வழங்கினால், அந்தப் பகுதியிலேயுள்ள சுமார் ஆயிரம் பெண்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

கிராமியப் பயிற்சி மையத்தின்மூலம், கரும்பு பயிர் செய்ய சொட்டு நீர்ப்பாசனப் பயிற்சி, கரும்பின் ஊடே ஊடு பயிர் சோயா பீன்ஸ் பயிற்சி, கறவை மாடு மற்றும் பால் மாடு வளர்த்தல் பயிற்சி, மண் புழு



உரம் தயாரித்தல், கயிறு தயாரித்தல், எலக்ட்ரீஷியன் பயிற்சி, செல்ஃபோன் ரிப்பேர், தையல் பயிற்சி, தோல் பை தயாரித்தல், ரெடிமேடு ஆடை தயாரித்தல் ஆகிய பயிற்சிகளை அளித்து வருகிறார்கள். மேற்கண்ட பயிற்சிகளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின்மூலம் கண்டனூரில் உள்ள கதர் கிராமத் தொழில் வளாகத்தில் தொடங்கிட அரசு அனுமதி வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனி எனது தொகுதியைப் பற்றிப் பேச அனுமதி வழங்குமாறு கேட்டு, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

எனது தொகுதியில் காரைக்குடி நகராட்சி முழுவதும் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர் வசதிக்காகப் பதிக்கப்பட்ட பகிர்மானக் குழாய்கள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து, தண்ணீர் செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. போர்க்கால அடிப்படையில், நகராட்சியில் உள்ள பழுதடைந்துள்ள அனைத்து பகிர்மானக் குழாய்களையும் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பில் உடனடியாக மாற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் சுமார் 750 மின் கம்பங்கள் மற்றும் மின் மாற்றிகள் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி அரசு பொது மருத்துவமனை இப்பகுதி மக்களுக்குப் பயன்பெறும் வகையில் உள்ளது. மேலும் பயனளிக்கும் வகையில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நவீன வகை ஆம்புலன்ஸ் வசதியோடு, 100 படுக்கைகள் அமைப்பதற்குப் புதிய கட்டடம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதி, அரண்மனைப்பட்டி ஊராட்சியில் உள்ள கல்லல் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி அரசு பொது மருத்துவமனைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்து, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த மருத்துவமனைக்கு ரூபாய் 2 கோடியே 5 இலட்சம் நிதி அளித்தமைக்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதி காரைக்குடி அருகே உள்ள அரியக்குடியில் பிறந்த இசை மாமேதை அரியக்குடி இராமானுஜ அய்யங்கார் அவர்களுக்கு அரசு நினைவு இல்லம் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி காரைக்குடியில் உள்ள அழகப்பா அரசுக் கல்லூரியில் 1998 ஆம் வருடம் மாண்புமிகு கலைஞர் ஆட்சியின்போது, பி.பி.ஏ., பி.எஸ்சி., மற்றும் எம்.எஸ்சி., இயற்பியல் போன்ற பாடத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இதுவரை இந்தப் பாடத் திட்டத்திற்கு உண்டான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் காலியாகவே இருந்து வருகின்றன. மேலும், இந்தக் கல்லூரியில் சுமார் 50 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, இந்தக் கல்லூரியில் காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் பணியிடங்களிலும் உடனடியாக நியமனம் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியில் வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்களது பெயரில் இயங்கி வரும் பல்கலைக்கழகம் தற்போது தர வரிசையில் 'A' Grade பெற்று மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், இதனை மத்தியப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கடந்த கூட்டத் தொடரிலேயே கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்ட ஆய்வுப் பணிக்கு வருகை தந்தபோது, எனது கோரிக்கையை ஏற்று, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இத்திட்டம் விரைவாகச் செயல்பட ஆவன செய்திட வேண்டுமாய் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி காரைக்குடியில் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள் மறைவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாக, அதாவது 1956-ல் சட்டக் கல்லூரி அமைக்க அடிக்கல் நாட்டியுள்ளார்கள். தமிழக அரசு அவரது நினைவாக சட்டக் கல்லூரியைத் தொடங்க வேண்டுகிறேன்.

சிவகங்கை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகும். இவர்களுக்கு வேறு வருமானம் வர வழியேயில்லை. இம்மாவட்டத்தில் பெரும் பகுதி வானம் பார்த்த பூமி. எனவே, விவசாயத்தை



முனைப்போடு செய்ய, இம்மாவட்டத்தில் விவசாயப் பணிகள் சிறப்போடு செயல்பட, விவசாயிகளுக்கு மின் இணைப்புகளைத் தாராளமாகக் கொடுக்கத் தமிழக அரசு முன்வர வேண்டும்.

முற்பகல் 11-45

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் உலகப் பிரசித்திபெற்றவை. தமிழ்த் தாய்க்கு, தமிழ்நாட்டிலேயே எனது தொகுதியான காரைக்குடியில் மட்டும்தான் கோயில் உள்ளது. இந்த மாவட்டத்தைச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற, அகல இரயில் பாதைத் திட்டம் மற்றும் விமானப் போக்குவரத்துத் திட்டம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். அதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களது முயற்சியால் தற்போது அகல இரயில் பாதைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, இந்த மாதம் விழாக் காண உள்ளது. மேலும், இம்மாவட்டத்திற்கு விமானச் சேவை ஏற்படுத்தித் தந்தால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, செட்டிநாட்டில் ஏற்கெனவே உள்ள விமான தளத்தைச் சீர் செய்து, விமான நிலையம் அமைக்கத் தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும்.

சாக்கோட்டை ஒன்றியத்தில் பரிட்சார்த்தமாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கண்மாயிலும், விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, மின் இணைப்பு மோட்டார் பொருத்தி, விவசாயத்திற்குப் பயன்படும்படி ஒரு திட்டத்தை உருவாக்கி, பருவ மழை தவறினாலும் விவசாயம் செய்ய முடியும் என்பதை நிரூபித்து, இத்திட்டம் வெற்றிபெற்றால், இதேபோல் மாநிலம் முழுவதும் செயல்படுத்த வேண்டும்.

காவிரியிலிருந்து எங்களது மாவட்டத்திற்குக் குடிநீர் கிடைக்க, காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எனது தொகுதியிலுள்ள கல்லல் ஒன்றியத்தைச் சேர்த்ததற்கு எனது நன்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இத்திட்டத்தின்கீழ் காரைக்குடி நகராட்சி மற்றும் சாக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்த்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லல் ஒன்றியத்தில் 44 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. கல்லலைத் தலைமையிடமாக வைத்து, தீயணைப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுகிறேன்.

கல்லல் ஒன்றியத்தில், பழைய வேப்பங்குளத்திலிருந்து விசாலயண்கோட்டைக்குச் செல்ல, விரிசுழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படாமல் சுமார் 25 கிலோ மீட்டருக்கு மக்கள் இரண்டு ஊருக்கும் இடையே சுற்றிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு ஆய்வுப் பணிக்கு வந்தபொழுது, இந்தக் கோரிக்கையை ஏற்று, செய்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அவர்களும் உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்துள்ளார்கள். அதற்காக அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வாய்ப்பினை அளித்த எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், துணைத் தலைவர் திருமதி யசோதா அக்கா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, கதர்த் துணிக்கு 50 சதவிகிதம் மானியம், அதுவும் வருடம் முழுவதும் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, ஏனைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து, சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரொம்ப நன்றாகப் பேசினீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி, உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுத்திருக்கிறோம்.

***திரு. அ. சின்னசாமி:** எனக்கு 15 நிமிடங்கள் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்காக எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலகத் தமிழ் மக்களின் இதயத் துடிப்பாக விளங்குகின்ற ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவரே, தமிழ்த் தாயின் தவப் புதல்வரே, செம்மொழிகண்ட செம்மலே, சங்கத் தமிழே, தொல்காப்பியப் பூங்காவே, கலைகளின் களஞ்சியமே, பொன் விழா நாயகரே, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் உரையினைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆன்றோர்களும், சான்றோர்களும் பணியாற்றியிருக்கின்ற இந்த மாமன்றத்தில் இந்தச் சாதாரணத் தொண்டனுக்கும் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்து, எனக்காகப் பிரச்சாரம் செய்து என்னை வெற்றிபெறச் செய்திட்ட எங்கள் குடும்பத் தலைவர், எனக்குத் தாயும், தந்தையுமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த மண்ணுலகில் வாழும் வரை தீராத நன்றிக் கடன்பட்டுள்ளேன். தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே அழைத்துச் செல்வதற்கு, வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை அளித்த எங்களுடைய மாண்புமிகு நிதி அமைச்சர், எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், எங்களுடைய இளைய கலைஞர், வாலிப அண்ணா, இளம் பெரியார், இளைஞர் அணிப் பட்டாளத்தின் ஏற்றமிகு தலைவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மண்ணின் மைந்தர்கள், எங்களுடைய கழகத்தினுடைய பொருளாளர், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களுடைய தலைமைக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களுக்கும், என்னுடைய மாவட்டத்தினுடைய பொறுப்பாளர், இராணிப்பேட்டை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், சாதனைச் செம்மல் அண்ணன் ஆர். காந்தி அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், எனக்கு வாக்களித்து இந்த மன்றத்தில் அமர வைத்த பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, கிராமப்புறத் தொழில்கள் வளரவும், கைவினைப் பொருட்கள், மலிவு விலை சோப்புகள், கைத்தறித் துணிகள் மற்றும் பல்வேறு வகையான பொருட்களுக்கு மிகச் சிறந்த விற்பனை மதிப்பினை உருவாக்கி, கதர், கிராமத் தொழில் வாரியம் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், கழக

முன்னோடிகளும், தெருத் தெருவாகத் தலையில் சுமந்து அறிமுகப்படுத்திய கதர்த் துணிகள் இன்று பல்வேறு வகைகளிலும் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளன. அதே நேரத்தில் அதன் விலை குறைந்து, ஏழை, நடுத்தர மக்களும் அதன் பயன்களைப் பெறுவது மிகவும் இன்றியமையாததாகும்.

விழாக் காலங்களில் கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி செய்வதுபோல், ஆண்டு முழுவதும் தள்ளுபடிச் சலுகை அளித்து, பெருவாரியான மக்கள் கதர்த் துணிகளை வாங்கி மகிழும் வகையில் சூழ்நிலையை உருவாக்கக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் இந்தியா வாழ்வதாக தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் கூறினார்கள். அதேபோல, கிராமங்களில், நகரங்களின் வசதிகளை உருவாக்கிட முனைப்போடு தமிழகத்தினுடைய காந்தி, முதல்வர் கலைஞர் அவர்கள் இப்போது செயலாற்றி வருகிறார்கள். மேலும், பட்டு உற்பத்தியில் மிக உற்சாகமான வளர்ச்சியைத் தமிழகம் கண்டு வருகிறது. பட்டு வளர்ச்சித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, கடந்த ஓராண்டில் மல்பரி சாகுபடிப் பரப்பு 151 விழுக்காடு அதிகரித்துள்ளது கூடுதல் சாகுபடிக்கும், பெரு வேக வளர்ச்சிக்கும் அடையாளமாகும். மேலும், துறையின் வரலாற்றிலேயே உச்சபட்ச அளவாக 8.31 இலட்சம் இரு சுழற்சியின் கலப்பினப் பட்டு முட்டைகள் உற்பத்தி குறிப்பிடத் தகுந்த சாதனையாகும். அத்துடன், பட்டுக் கூடு உற்பத்தியிலும் சற்றேறக்குறைய 40 முதல் 50 சதவிகித வளர்ச்சியை இத்துறை பெற்றுள்ளது.

**“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை”**

என்னும் குறள் வாக்கியத்தின்படி, வான் மழைபோல் பொழியும் முதல்வர் கலைஞரின் ஊக்கத்தால் ஆக்கம் தானாகவே ஏற்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சிக் கழகம்மூலம் சிறப்பான பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், திருக்கோயில்களுக்குத் தங்க ரதம், மரத் தேர் தயாரித்தல் போன்ற திருப்பணிகளையும் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். நலிவுற்ற பழங்காலக் கோயில்களுக்கும் இத்துறையின்மூலம் மேற்கூறிய பணிகளைச் செய்து, அவற்றைப் பொலிவுபெறச் செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றேன்.



கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பின்மீது மிகுந்த அக்கறையோடு, அவர்களுக்கென ஒரு காப்பீட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் சிறு தொழில் துறை பெரிய அளவில் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. சிறு தொழில் மேம்பாட்டிற்கென நிதியுதவி அளிப்பதிலும், புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதிலும் முன்மாதிரியாக இவ்வரசு திகழ்கிறது.

சர்வோதய சங்கத்திற்கு 50 விழுக்காடு மானியத்தை வழங்கி, அந்த சர்வோதய சங்கத்தின்மூலமாக எந்தெந்தப் பகுதிகளில் மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவோ, அந்தப் பகுதிகளிலே பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும், வேலூர் மாவட்டம், தெக்குப்பட்டில் சந்தன ஆலை செயல்பட்டு வந்தது. அதற்கு மீண்டும் சந்தன மரங்களை வழங்கி, அந்த ஆலை செயல்படுவதற்கும், அந்தப் பகுதியிலே உள்ள தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை அளித்திடவும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டிலே ஒரு கூட்டுறவுத் தோல் தொழிற்சாலை உள்ளது. அது மீண்டும் செயல்படுவதற்கு அந்தக் கூட்டுறவுத் தோல் தொழிற்சாலைக்கு மானியம் வழங்கி, நல்ல முறையில் செயல்படுவதற்கும், அங்கே தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதற்கும் அரசு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தில், விவசாயிகள் அதிகமாகத் தென்னை மரச் சாகுபடி செய்கிறார்கள். அதிகமான நார்த் தொழிற்சாலைகள் உள்ளன. தொழிலாளர்கள் சாலையோரங்களில் கயிறு செய்கின்ற தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்கள் பகுதியிலே அதிகமான நார்த் தொழிற்சாலைகள் உள்ளன. நார் அதிகமாகக் கிடைக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு கயிறு தொழிற்சாலையை ஆரம்பித்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். மேலும், விவசாயிகளை உற்சாகப்படுத்துகின்ற வகையில், அந்தப் பகுதியிலே விவசாயிகள் பட்டு உற்பத்தியில், பட்டுக் கூடுகளைத் தயாரிக்கின்ற

தொழிலையும், மல்பரிப் பயிர்களையும் வளர்த்து, அந்தப் பகுதியிலே
பட்டுக்கூடுகளை வளர்ப்பதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி
அளித்திடவும், அவர்களுக்கு மானியம் வழங்கி அந்தத் தொழிலில்
ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் வேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

பேரணாம்பட்டு நகரத்தில் நீண்ட காலமாகப் பேருந்து
நிலையம் இல்லாமல் இருக்கின்றது. இதனால், பொது மக்கள்
மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். ஆகவே, பேரணாம்பட்டு
நகரத்திலே பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்கும்படிக்
கேட்டுக்கொள்கின்றேன்.

மழைக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சாரங்கல் ஆற்றுப்
பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அதனால் சாரங்கல்லில் உள்ள
பொது மக்களும், மாணவர்களும், பேரணாம்பட்டு, ஆம்பூர்
போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.
ஆகவே, சாரங்கல் ஆற்றில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துக்
கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

நரியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள அனைத்துக்
குடியிருப்புகளும் உடைந்து விழுந்துள்ளன. புதிய குடியிருப்புகளை
அமைத்துக் கொடுக்கும்படியும், 10 படுக்கை வசதிகள்கொண்ட
கட்டடங்களை அமைத்துக் கொடுக்கும்படியும், X-ray, Lab போன்ற
வசதிகள்கொண்ட கட்டடங்களை அமைத்துக் கொடுக்கும்படியும்
கேட்டுக்கொள்கின்றேன்.

தேவஸ்தானம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் மழைக்
காலங்களில் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டிய நிலையில்
இருக்கின்றார்கள். அப்பகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று ஒரு
மேம்பாலத்தை அமைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதியான அரவட்லா கிராமத்திற்குச் செல்கின்ற சாலையில்
தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தினால், அடிக்கடி விபத்துக்கள்
ஏற்படுகின்றன. ஆகவே, மலைப் பகுதியான அரவட்லா சாலையில்
தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.
அரவட்லா கிராமத்திலிருந்து ஆந்திராவில் உள்ள நெல்லுபட்லா
கிராமத்திற்கு ஆந்திர அரசாங்கம் சாலை அமைக்க வேண்டும். இதற்கு
நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.



ஏரிகுத்தி கிராமத்திலிருநது பரவக்கல், மேல் ஆலங்குப்பம்
கிராமங்களுக்குச் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்படிக்
கேட்டுக்கொள்கிறேன். எருக்கம்பட்டு ஊராட்சி, கோட்டையூரில்
இருந்து ஆந்திராவில் உள்ள கடப்பநத்தம் கிராமம் வரை சுமார் 5
கி.மீ. தூரம் சாலை அமைக்க வேண்டும்.

கைலாசகிரியில் உள்ள சுப்பிரமணியசுவாமி மலைக் கோயிலுக்கு
நம் கழக ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு, 2,400 மீட்டரில், 1,800
மீட்டர் மண் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 600 மீட்டருக்கு
மண் பாதை அமைக்கவும், 2,400 மீட்டர் தூரத்திற்கும் தார்ச் சாலை
அமைத்துக் கொடுக்கும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட பத்திரப்பள்ளி ஆற்றில் அணைக்கட்டுத்
திட்டம் இருக்கிறது. மழைக் காலங்களில் ஆந்திரப் பகுதியிலிருந்து
அதிவேகமாகத் தண்ணீர் வந்து, பாலாற்றில் கலக்கிறது. அந்த
பத்திரப்பள்ளி அணைத் திட்டத்தின்மூலம் தற்போது ஆற்றின்
கரையிலுள்ள விவசாயிகள் பயனடையும் நிலை உள்ளதால், அதனை
விரிவுபடுத்தினால், தொகுதியிலுள்ள பெரும்பான்மையான மக்கள்
பயனடைய வாய்ப்பிருக்கிறது. எனவே, பத்திரப்பள்ளி அணையிலிருந்து
பாசனத்திற்குப் பயன்பெறும் வகையில், அந்த நீரை உமராபாத்,
வெங்கடசமுத்திரம், கரும்பூர், வடசேரி பாசன வாய்க்கால்மூலம்
வாணியம்பாடி வரைக்கும் கொண்டு செல்ல முடியும். அதன்மூலம்
சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுப் பலனடைய
வாய்ப்பு இருக்கிறது. 15–க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பவும்
வாய்ப்பிருக்கிறது. ஆண்டு முழுவதும் தென்னை சாகுபடி செய்ய
முடியும். எனவே, இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, பாசன வாய்க்கால்
அமைத்தால், விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்ததாக அமையும்.
எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு
பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் பத்திரப்பள்ளி
அணைத் திட்டத்தை விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உயர் கல்வி நிறுவனங்கள்
இல்லாத பெருங்குறை உள்ளது. உயர் கல்விபெறும் மாணவர்கள்,
ஆம்பூர், வேலூர், வாணியம்பாடி பகுதிகளுக்குச் செல்ல
வேண்டியுள்ளது. குறிப்பாகப் பெண்கள் கல்லூரி, வாணியம்பாடி
பகுதியில் மட்டுமே அமைந்திருக்கிறது. பேரணாம்பட்டு தொகுதியில்
3 மேல்நிலைப் பள்ளிகள், கரும்பூர், வடசேரி, அழிஞ்சிகுப்பம்
ஆகிய இடங்களில் உள்ளன. மேல்நிலைப் பள்ளிகளில்

படிக்கின்ற மாணவர்கள், உயர் கல்விபெற முடியாமல் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். மேலும், பெண்கள் உயர் கல்விபெற பொருளாதாரச் சூழ்நிலை இல்லாததாலும், உயர் கல்விபெறும் நிறுவனங்கள் மிகவும் தூரத்தில் இருப்பதாலும், அவை சுயநிதிக் கல்லூரிகளாக இருப்பதாலும், உயர் கல்விபெறும் வாய்ப்பை இழக்கின்றார்கள். ஆகவே, எங்கள் பகுதிகளுக்கு ஒரு. . .

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** ஒரு கல்லூரியினை அமைத்து கொடுக்கவும், தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தரவும் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிக்கு உட்பட்டு ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையும், shoe தயாரிக்கும் தொழிற்சாலையும் இருக்கின்றன. இதனால் 15 கிராம மக்கள் பயனடைகின்றார்கள். ஆனால், 250–க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்கள் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் போதுமான வேலைவாய்ப்பு இல்லாமல் அண்டை மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்ற நிலைமை இருக்கின்றது. இதனால் நிரந்தர வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

***திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில், கைவினைப் பொருட்கள் துறை மற்றும் சிறு தொழில் துறை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொடர்ந்து பேசுங்கள், திரு. அ. தமிழரசு உங்களுக்குப் பத்து நிமிடங்கள்தான்.

**திரு. அ. தமிழரசு:** மானியத்திலே பேசுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்த எங்களது தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா, பசுமை நாயகர் மருத்துவர் சின்ன அய்யா, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் திரு. கோ.க. மணி மற்றும் தங்களுக்கும் எனது முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பாரதப் பிரதமர் அவர்கள் தொழில் வளர்ச்சி குறித்து ஆற்றிய உரையில், "நாட்டில் சில பகுதிகளில் மட்டுமே தொழில் வளர்ச்சி உள்ளது. நகர்ப்புறங்களுக்கு இணையான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. மீதப் பகுதிகள் விடுபட்டுப் போகின்றன. இது கவலையளிப்பதாக உள்ளது" என்று தன் வருத்தத்தைக் கூறியுள்ளார்கள். "சிறிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் அதிகம் உருவானால்தான் நிறையப் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். .

கோக், பெப்சி போன்ற மிகப் பெரிய நிறுவனங்கள் கிராமப்புறங்களில் தயாராகும் அனைத்து சோடா, குளிர்பான நிறுவனங்களுக்கு மூடுவிழா நடத்திவிட்டார்கள்.

இன்றைக்குக் காய்கறிச் சந்தையில் நுழைந்துள்ள ரிலையன்ஸ் நிறுவனத்தார், வெகுவிரைவில் இலட்சக்கணக்கான சிறு சில்லரை வியாபாரிகளையும், விவசாயிகளையும், பட்டினியால் சாகடிக்கும் நிலை உருவாவதை அரசு உடனடியாகத் தடுக்க வேண்டுமென்ற எங்கள் மருத்துவர் அய்யாவின் குரலுக்கும், பா.ம.க. கொள்கைக்கும் அரசு செவிசாய்த்து, ரிலையன்ஸ் நிறுவனத்தை நாட்டைவிட்டே துரத்தியடிக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்போது தமிழகத்திலே சுய உதவிக் குழுக்கள் உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டு, ஆயிரக்கணக்கிலே சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களும் இலட்சக்கணக்கிலே அதிகமாகியுள்ளார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்களுடன் ரூபாய் பத்தாயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இருப்பினும், உறுப்பினர்கள் சுய தொழில் செய்ய மேலும் கூடுதல் வழிகாட்டுதலும், சிறு தொழில் முனையப் பயிற்சியும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நல்ல விலைக்கு விற்பனை செய்ய ஊராட்சி ஒன்றியத்திற்குத் தனியாக ஒரு வணிக வளாகமும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அளவிலே டான்சி நிறுவனம் நலிவடைந்துள்ளது. இதற்குக் காரணம், அரசு சார்பில் கட்டடங்களுக்குத் தேவையான தளவாடச் சாமான்கள், மரம் மற்றும் இரும்பு, மின்சாரத் துறைக்குத் தேவையான மின் பொருட்கள் டான்சியிலே உற்பத்தி செய்யப்பட வாய்ப்பு வழங்கப்படவில்லை. தனியாருக்கு ஆர்டர் கொடுத்துச் செய்து வருகிறார்கள். இதனால் தரம் குறைகிறது. இதை டான்சி நிறுவனம்மூலம்

செய்தால், நிறுவனத்தைக் காப்பாற்றுவதுடன், தரமான பொருளாக அரசுக்குக் கிடைக்கவும், இதனால் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது.

இதைப்போலவே, கொசு வலை உற்பத்தி இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலுள்ள சேலம், நாமக்கல், கரூர் பகுதிகளில் மட்டும்தான் நடைபெறுகின்றது. இந்தியாவின் ஒட்டுமொத்தக் கொசு வலைத் தேவையை இந்த மூன்று மாவட்டங்கள்தான் பூர்த்தி செய்கின்றன. தற்போது கொசு வலை உற்பத்தித் தொழில் நலிவடைந்த நிலையில் உள்ளது. இந்தத் தொழிலை நம்பி, கரூர் மாவட்டத்தில் ஒரு இலட்சம், சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஒரு இலட்சம், ஆக மொத்தம் இரண்டு இலட்சம் கொசு வலை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் காக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விசைத்தறிக்கு இலவச மின்சாரம் வழங்கியதுபோல, மனிதர்களைக் கொசு மற்றும் பூச்சித் தொல்லைகளிலிருந்து காக்கும் கொசு வலையை உற்பத்தி செய்யும் மின் தறிக்கு இலவச மின்சாரம் வழங்கி உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

இன்றைக்கு, சேலத்திலே பட்டு வளர்ச்சி ஆணையரகம் உள்ளது. அது தமிழகத்திற்கே தலைமையிடமாக சேலத்திலே இருந்து வருகிறது. மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து பட்டுக் கூடுகளைக் கொண்டு வந்தாலும், விவசாயிகளுக்கு ஆதாய விலை, தேவையான விலை, உரிய விலை, நியாயமான விலை கிடைப்பதில்லை. காரணம், வியாபாரிகளுக்கு இடையே சிண்டிகேட் அமைத்துக்கொண்டு அங்கே செயல்பட்டு வருகிறார்கள்.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோபிசெட்டிப்பாளையம் போன்ற இடங்களில் ஏராளமான மல்பரிச் செடிகள் பயிரிடப்பட்டு, 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பட்டுக் கூடுகளை அண்டை மாநிலமான கர்நாடகத்திற்கு அனுப்பி, நல்ல விலைக்கு விற்று வருகிறார்கள்.

கர்நாடகாவில் பட்டுக் கூடு விற்பனை மையங்களில் பட்டுக் கூடுகள் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதால், நல்ல விலை கிடைக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பிப்ரவரி 6 ஆம் தேதி காவிரிப் பிரச்சினையின்போது போக்குவரத்து தடைப்பட்டதால் தருமபுரி பட்டுக் கூடு விற்பனை மையத்தில் தினம்



ஒரு டன் கூடு வரத்துக்குப் பதில் 5 டன் விற்பனைக்கு வந்தது. இந்நிலையை மாற்றி, விவசாயிகள் கூடுதல் விலைபெற சிண்டிகேட் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

பட்டு நூலுக்கு ஏல மையம் அமைத்தால், பட்டுச் சேலை அதிக அளவில் உற்பத்தியாகும். சேலம், கொண்டலாம்பட்டி, ஓமலூர், சிந்தாமணியூர் மற்றும் மேச்சேரிபோன்ற பகுதிகளில் பட்டுச் சேலை நெசவு மேலும் வளர்ச்சிபெறும். பட்டு நூல், ரீலிங் நவீனமயமாக்கப்பட வேண்டும். மானியத்துடன் அவர்களுக்குக் கடன் வழங்கி தொழில் நவீனப்படுத்தப்பட வேண்டும். கர்நாடகாவைப்போல பட்டு வளர்ச்சிக்குத் தனி அமைச்சர் தமிழகத்தில் நியமிக்கப்பட வேண்டும். பட்டுக் கூடு மையத்தில் கம்ப்யூட்டர் தராசு அமைக்கப்பட வேண்டும்.

1996 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே கதர், கிராமத் தொழில் வாரியத்தில் ஆரம்பப் பள்ளிகளுக்கு Map and Chart சப்ளை செய்ய ஒப்பந்தம் கொடுத்ததில் முன்பணமாக ரூ.13½ இலட்சத்தை ஓமலூர் தொகுதி பாகல்பட்டியைச் சார்ந்த பி. சதாசிவம் என்பவர் பெற்று, இதுவரை அவை சப்ளை செய்யப்படாமல் இருந்து வருகின்றன. இதுவரை கதர் வாரியமும் இது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அரசுக்கு 13½ இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே பணத்தை மீட்டு, இதற்குத் துணையாக இருந்த அதிகாரிகள்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது சேலம் மாவட்டத்திலே மேட்டூர் அணை இருந்து வருகிறது. மேட்டூர் அணையிலிருந்து வருகின்ற காவிரி நீர் தமிழகத்திலேயுள்ள பல பகுதிகளுக்கு விவசாயத்திற்கும், குடிநீருக்கும் சென்றுகொண்டு இருக்கிறது. மேட்டூரிலிருந்து காவிரி நீர் வீராணத்திற்கு வந்து, வீராணம் ஏரியிலிருந்து பம்பிங் செய்து குழாய்மூலம் சென்னைக்குக் குடிநீருக்காக வந்துகொண்டிருக்கிறது. இப்படி இருக்க, மேட்டூரிலுள்ள காவிரி நீர் சேலம் மாவட்ட மக்களுக்கு முழுமையாகப் பயன்படுவதில்லை. சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகள் தண்ணீர் இல்லாமல் சேலம் மாவட்டத்தில் இருந்து வருகின்றன.

மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடிக்கும் மேல் இருக்கும்போதும், 16 கணவாய்களிலும் தண்ணீர் நிரம்பி வழியும்போதும், தாரமங்கலம் தொகுதியில் உள்ள கூனாண்டியூர், கீரைக்காரனூர் பிரிவு, மூலை ரோடு என்ற இடங்களில் தேங்கக்கூடிய காவிரி நீரை, அதே இடத்தில் ஒரு

pump house அமைத்து, இரட்டைக் கிணறு, நரியனூர் திட்டு, மல்லிக்குந்தம், மேச்சேரி, கோல்காரனூர் திட்டு ஆகியவற்றின் வழியாகத் தண்ணீரை அனுப்பி, அதன் பிறகு இயற்கையான வாய்க்கால் அமைத்து, அதன் வழியாக செலக்கல் திட்டு, ஓமலூர், சரபங்கா நதி இணைப்பு மற்றும் சேலம் முதல் பெங்களூர் நான்கு வழிப்பாதை வழியே வாய்க்கால் அமைத்து, அதன் வழியாக Burn and Co. Mines நிறுவனத்திலே இருக்கின்ற நீர்த்தேக்கத்திலும், TANMAG நிறுவனத்திலே இருக்கின்ற நீர்த்தேக்கத்திலும் குடிநீரை நிரப்புவோம் என்று சொன்னால், அங்கு விவசாயிகளுக்கென்று இருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினையும், பொது மக்களுக்கென்று இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சொல்லிக்கொள்கின்றேன். இதனால் இன்றைக்கு 5,000 ஏக்கர் ஏரிப் பரப்பளவு பயனடையும். 100 டி.எம்.சி. கொள்ளளவு நீர் அந்த ஏரிகளில் இன்றைக்குத் தேக்கி வைக்கப்படும். இதனால் 1 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். வருடத்திற்கு 5 இலட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலே, 10 இலட்சம் மக்கள் பயனடையக்கூடிய வகையிலே, சுமார் 25 கோடி ரூபாய் செலவிலே இதற்கான ஒரு திட்டம், நல்ல திட்டமாக இப்போது தயார் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓமலூரில் கயிறு திரிக்கின்ற தொழிற்சாலை கேட்கலாமே?

**திரு. அ. தமிழரசு:** எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டும். சேலம் மாவட்ட மக்கள் நலன் கருதி இந்தத் தண்ணீரை எங்கள் மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, ஓமலூருக்காக இங்கு நமது துணைத் தலைவர் சொன்னதுபோல, கயிறு தொழிற்சாலை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கயிறா, கயிறு திரிக்கின்ற தொழிற்சாலையா?

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அங்கு ரூபாய் ஒன்றரைக் கோடியிலே கயிறு உற்பத்தித் தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக்கு இந்தக் கூட்டத் தொடரிலே நிதியினை ஒதுக்கி, அந்தத் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12–10*

இன்றைக்கு ஓமலூருக்கு என்று R.T.O. அலுவலகத்திற்கு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டுவதற்கு, தமிழகத்திலே எட்டு இடங்களிலே ஒரு இடமாக ஓமலூரைத் தேர்வு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்த நேரத்திலே நன்றியினைச் சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் துறை, சிறு தொழில்கள் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலில் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு 1960 ஆம் ஆண்டு கதர், கிராமத் தொழில் வாரியம் உருவாக்கப்பட்டது. கதர் வாரியத்தின்மூலமாக ஏறத்தாழ 153 கிராமிய நூற்பு நிலையங்கள், 58 உப கிளைகள், 12 நோபாளி தறி நிலையங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. ஏறத்தாழ 12,500 கிராமியப் பெண்கள் உட்பட 20 ஆயிரம் கைவினைஞர்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்பினை உருவாக்கி வருவதாகவும் கொள்கைக் குறிப்பு கூறுகிறது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக கிராமிய நூற்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்கிற விவரத்தை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, கடந்த மூன்று ஆண்டு காலமாகப் புதிய வேலைவாய்ப்பும், வேலை செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, இத்துறையின்மீது அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 2006–2007 ஆம் ஆண்டில் சுகாதாரம், கல்வி, இரயில்வே மற்றும் இதர அரசுத் துறைகளுக்கு ஏறத்தாழ 81 இலட்சத்து 40 ஆயிரம்

ரூபாய் அளவிற்கு வாரிய அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். ஆனால், இது மட்டும் போதுமானதல்ல. இந்தத் துறையை மேலும் வலுவடையச் செய்யும் வகையில், கிராமிய நூற்பு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மேலும், கதர் மற்றும் கிராமியப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்திட மூலதன மானியமாக 50 கோடி ரூபாயை இத்துறைக்கு அரசு வழங்க வேண்டும்.

கதர் உற்பத்தியால் இலட்சக்கணக்கான நெசவாளர்கள் இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இன்றைக்குக் கதரினுடைய விலை கூடுதலாக இருக்கிறது. எனவே, அரசு rebate தொகையைக் கூடுதலாக உயர்த்திக் கொடுப்பதன்மூலமாகக் கதர்த் துணி விற்பனையை அதிகரிக்க முடியும். மேலும், கதர், கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அரசுத் துறைகளான மருத்துவமனை, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மின் வாரியம், ஆவின், P.T.C., Metro Water போன்ற துறைகள் வாங்க வேண்டுமென்கிற உத்தரவை அரசு இட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இத்துறை தனியார் துறையோடு போட்டி போட வேண்டுமென்று சொன்னால், சில நூதனமான வடிவங்களில் கதர் வாரியம் உற்பத்தி செய்யும் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. விளம்பரம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. 'விளம்பரம் செய்யப்படாத எப்பொருளும் விநியோகமாகாது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். எனவே, கதர்ப் பொருட்களை விளம்பரம் செய்வதற்குக் கூடுதல் நிதியை அரசு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியத்தின், மாநிலம் முழுவதுமுள்ள 38 சோப்பு அலகுகளில் ஏறத்தாழ 300–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், 20 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகளாகத் தினக் கூலிகளாகப் பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, கதர், கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959, அத்தியாயம் 5, விதி 30(2)–ன்படி இவர்களை நிரந்தரம் செய்திருக்க வேண்டும். நீதிமன்ற உத்தரவுப்படி இவர்களுடைய பணி விவரங்களை ஆராய்ந்து, தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அவர்கள், பணியில் சேர்ந்து 480 நாட்கள் பணி முடித்தவுடன், நிரந்தரம் செய்யும்படி வாரியத்திற்குக் கடித எண் 1862/98, நாள் 28–1–98–ன்படி அறிவுறுத்தியுள்ளார்கள். ஆனால், இதையெல்லாம் வாரியம் ஏற்றுக்கொள்ளாமல், இதை வாரிய



அதிகாரிகள், மேல்முறையீடு என்று சொல்லி நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், கடந்த 25 ஆண்டு காலமாக இத்தொழிலாளர்கள் அல்லல்படுகின்றனர். எனவே, வழக்கை வாபஸ் பெற்று, இத்தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியத்தில் ஏறத்தாழ 862 ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யக் கடந்த ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது. 97 ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். சென்னை உயர் நீதிமன்றம் 97 ஊழியர்களுக்கு மீண்டும் பணி வழங்குமாறும், ஆட்குறைப்பு ஆணை செல்லாது என்றும் தீர்ப்பு அளித்ததன் காரணத்தினால், 97 ஊழியர்கள் மீண்டும் கதர் வாரியத்தில் பணியமர்த்தப்பட்டனர். இந்த நிலையில், மே 2006–ல் வாரியக் கூட்டமர்வில் 862 ஊழியர்களை உபரிப் பணியாளர்கள் எனக் குறிப்பிட்டு, வேறு துறைகளில் பணியமர்த்த அரசுக்குக் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும்கூட, 862 ஊழியர்களை உபரிப் பணியாளர்கள் என குறிப்பிடுவது ஊழியர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளது. எனவே, 862 ஊழியர்களையும் கதர் வாரியத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். வேறு வழி இல்லையென்கிற சூழ்நிலையில், வேறு துறையில் பணியமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

தமிழக அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டு வழங்கப்படும் அகவிலைப் படியில் நிலுவையாக உள்ள ஏறத்தாழ 21 சதவிகித அகவிலைப் படியைக் கதர் வாரிய ஊழியர்களுக்கு அரசு ரொக்கமாக உடனே வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். வாரியப் பணியமைப்பு விதிகளைத் திருத்தம் செய்து, அனைத்துப் பிரிவு ஊழியர்களுக்கும் சமச்சீரான பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சித் துறையில் விரிவாக்கப் பணியில் உள்ள செயல் முறை பட்டுப் புழு வளர்ப்பாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் அனைவரும் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாகப் பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லாமல் உள்ளனர். எனவே, அனைத்துக் களப் பணி நிலைகளையும் மேம்படுத்திட வேண்டுகிறேன்.

மேலும், பட்டு வளர்ச்சித் துறையில் ஊழியர்கள் சங்கம் நடத்திய இயக்கங்களில் கலந்துகொண்ட ஊழியர்களுக்கு 'No work, No pay'

என்கிற அடிப்படையில் 1993 ஆம் ஆண்டு முதல் 11 நாட்கள் ஊதியப் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த நாட்களை வரன்முறைப்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறு விவசாயிகள் பயன்படும் வகையில், குறைந்த அளவு பரப்பில் தனி புழு வளர்ப்பு மனை கட்டிய விவசாயிகளுக்கு, மானியம் ரூ.10,000 வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக அந்தத் திட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டு வந்தது. அதைத் தொடர்ந்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மானியத் தொகையை ரூ.25,000 ஆக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பட்டுப் பண்ணைகளில் வீரிய இன மல்பரி நாற்றுக்களை உற்பத்தி செய்து (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விடுகிறேன். உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் வழங்க வேண்டும். இதனால் கூடுதல் பரப்பைத் தமிழகத்தில் உண்டாக்குவதுடன், விவசாயிகளுக்குத் தரமான நாற்று கிடைக்கிறது. கூடுதல் பட்டுக் கூடு உற்பத்தி செய்யப்படுவதால், விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும். இதனால், பட்டுப் பண்ணைகளில் தொழிலாளர்களுக்குக் கூடுதலான வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். பட்டு வளர்ச்சித் துறையின் வளர்ச்சிக்குக் காரணமான, அரசு பட்டு நூற்பகங்கள் பல செயல்படாமல் உள்ளன. பல நூற்பகங்கள் 10, 20 வருடங்களாகப் பழைய machine-களைக் கொண்டே செயல்படுகின்றன. அதனால் குறைந்த உற்பத்தி செய்யப்படுகிறது. இவை அனைத்தும் வளர்ந்துள்ள புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும். அதனால் பட்டுக் கூடு அங்காடிகளில் பிரதான ஏலதாரராக அரசு செயல்படும் வாய்ப்பு உள்ளது. கிராம நூற்பு நிலையங்களில் பணிபுரியும் முதுநிலை நூற்பாளர்களுக்குத் தினக் கூலி ரூ.15 ஆக இருந்து, 9-1-2000 முதல் திராவிட முன்னேற்றக் கழக அரசில் ரூ.1,000 தொகுப்பூதியமாகப் பெற்று வருகின்றனர். அனைத்து இயந்திரங்களையும் பழுதுபார்த்தல், அதற்கான சிட்டா கணக்குகளைப் பராமரித்தல்போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள். இந்தத் தொகுப்பூதியம் ரூ.1,000 என்பது போதுமானதல்ல. இவர்களுடைய வேலை நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிறு தொழில்கள் என்று வருகிறபோது, மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய பின்தங்கிய பகுதிகளைக் கணக்கெடுத்து, பின்தங்கிய பகுதிகளில் வட்ட வாரியாக சிறு தொழில்களை



உருவாக்குவதற்கு வங்கிக் கடன் கிடைப்பதற்கு, மாநில அரசு மின்சாரத்தை இலவசமாக வழங்குவதன்மூலமாக சிறு தொழில்கள் உருவாவதற்கு வழி ஏற்படும்.

இறுதியாக ஒரே ஒரு கோரிக்கை. நாகை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம் கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் 2006-2007 கல்வியாண்டு முடிந்ததற்குப் பின்னாலும்கூட நாகை மாவட்ட மாணவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்கப்பெறவில்லை. எனவே, உடனடியாக அந்தத் தொகையை அரசு விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி. உங்களுக்கு 7 நிமிடங்கள்தான்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தின் அனைத்துக் கிராம மக்களுக்கும் நேரடியாக சுமார் 40 ஆண்டு காலமாக வேலைவாய்ப்பளித்து வரும் கதர், கிராமத் தொழில் வாரியம் 1960-ல் உதயமானது. 1956 ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசால் கதருக்குத் தனித் துறை ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. கதர், கிராமத் தொழில் வாரியத்திலுள்ள சுமார் 2,000 பணியாளர்கள் மற்றும் 2,300 ஓய்வூதியர்கள் அரசு அளிக்கும் மானியத்திலிருந்து சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் பெற்று வருகின்றார்கள். பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்குக் கடந்த 5 ஆண்டுகளாக அரசு அனுமதித்த பயன்கள் உடனுக்குடன் வழங்கப்படாததால், 5,000 குடும்பங்கள் மிகவும் வறுமையான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. கதர் வாரியப் பணியாளர்களுக்கு 5 ஆண்டு காலமாக வழங்க வேண்டிய அகவிலைப் படி தற்போது வரையில் 21 சதவிகிதம் அரசால் அனுமதிக்கப்பட்ட தேதியிலிருந்து நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பொது சேம நல நிதியில் 75 சதவிகிதம் 6 மாதத்திற்கு ஒரு முறை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். உபரிப் பணியாளர்கள் எனக் குறிப்பிட்டுள்ள 862 பணியாளர்களில் அதிகமாகப் பெண்கள் பணியாற்றி வருகிறார்கள், இவர்களை வேறு துறைகளில் பணியில் அமர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பணியாளர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் கருவூலம் மூலம் வழங்க வேண்டுமெனவும், அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரே நேரத்தில் பட்டியல் தயார் செய்து, பதவி உயர்வு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்திட மூலதன மானியமாக ரூபாய் 50 கோடி வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். கதர்த் துறையில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விளம்பரம் செய்திட அரசு மானியம் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அரசுத் துறைக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் கிராமப் பொருட்கள் அனைத்தையும் இத்துறையில் கொள்முதல் செய்திட அரசு நிலையான ஆணை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். 20 ஆண்டு காலமாகத் தொகுப்பூதியம்பெறும் முதுநிலை நூற்பாளர்களுக்கு ரூபாய் 3,000 என ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். கிராமிய நூற்பு நிலையம் செயல்படவில்லை. உற்பத்தி மையங்கள் மூடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நூற்பு மையக் கட்டடங்களைப் புதுப்பித்து, சமுதாயக் கூடங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கூடங்களாக அமைத்துக் கொடுக்கலாம் என்ற ஆலோசனையை நான் முன் வைக்கின்றேன்.

27 கைத்தொழில்கள் இவ்வாரியத்தில் இருக்கின்றன. இவற்றை மேம்பட்ட முறையில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கதர் வாரிய அங்கீகாரம்பெற்ற நிறுவனங்கள் நல்ல முறையில் இலாபம் ஈட்டும்பொழுது, கதர் வாரியம் ஏன் நஷ்டம் அடைகிறது என்பதை ஆராய வேண்டும். கதர் வாரியத் தொழில் மேம்பட, வங்கிக் கடன் வழங்க ஏற்பாடு செய்து, அத்தொழில்களை நவீனப்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். கதர் வாரியப் பட்டுப் புடவைகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது. அந்த உற்பத்தி நிலையங்கள்கூட சரியாக இயங்கவில்லை. ஓராண்டிற்கு ரூ.25 முதல் ரூ.30 கோடி வரை விற்பனை இருந்தது. இம்மையங்கள் சரிவரச் செயல்பட நிபுணர்கள் குழு அமைத்து ஆராய்ந்து, இத்துறையை மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாட்டில் பனைத் தொழில் என்பது பழைமை வாய்ந்த தொழில். இன்றும் பல இலட்சம் மக்கள் இத்தொழிலைச் செய்து வருகின்றார்கள். இதனால்



இத்தொழிலில் கால மாறுதலுக்கு ஏற்ப மாற்றங்களை உருவாக்காததால், நலிந்து வருகிறது. பனைத் தொழிலில் பதநீர் என்பது அடிப்படையான ஒரு பொருள். பதநீரை மென்பானமாக மாற்றுவதற்கு ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறேன். பதநீரை மென்பானமாக மாற்றி, மென்பானங்களுக்குச் சமமான விற்பனைச் சூழ்நிலையை உருவாக்குவதன்மூலம் பனைத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க முடியும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பனைப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பல பொருட்களை இன்று சந்தைப்படுத்த முடியாததனால் பனைப் பொருட்கள் உற்பத்திக்கு என்று ஒதுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நிதி இல்லாமல் செயலிழந்து உள்ளன. எனவே, பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையங்களின் ஊழியர்கள் சங்கம், பனைத் தொழில் வாரியம், தமிழ்நாடு மாநில, மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு இணையங்கள் ஆகியவை 1996 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் சிறப்பாக நடைபெற்று, பல ஆயிரம் கிராம மக்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெற்றுத் தந்தது. ஆனால், கடந்த ஆட்சியில் முறையாக நடத்தப்படாததால், ஊழலுக்கு ஆளாகி நசிந்தன. அவற்றில் ஊழியர்களாக வேலை பார்த்த 135 நபர்கள் கடந்த 5 ஆண்டுகளாகச் சம்பளம் இல்லாமலும், ஓய்வுபெற்ற 55 நபர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் கிடைக்காமலும் அல்லல்படுகிறார்கள். எனவே, முதல்வர் அவர்கள் பனை வெல்ல மாநில, மாவட்டச் சங்கம் செயல்பட நிதியொதுக்கீடு செய்து தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் பதிவு செய்தும், பதிவு செய்யப்படாததுமான சுமார் 10 இலட்சம் குறுந்தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. 80 இலட்சத்திற்கும்மேலானோர் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளினால் தொழில் மற்றும் குறுந்தொழில்கள் பெருமளவில் சீரழிந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, சீனாவில் தயாரிக்கப்பட்டு, மலிவு விலையில் இந்தியாவில் விற்பனையாகும் பூட்டுகளால் இப்போது திண்டுக்கல், அலிகார்போன்ற இடங்களில் இயங்கி வந்த மரபுத் தொழிலான பூட்டுத் தொழில் நசிந்துவிட்டது. அனைத்து மாவட்டங்களிலும் குறுந்தொழில்களுக்கெனத் தனித் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் விவசாயிகள் மற்றும் நெசவாளர்களுக்கு நமது அரசு இலவச மின்சாரம் வழங்கியுள்ளதை நாம் வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். அதேபோல், குறுந்தொழில்களுக்கும் மின் கட்டணச் சலுகை வரம்பை 10 எச்.பி.–யிலிருந்து 25 எச்.பி. ஆக உயர்த்தித் தர வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றோம். வேலையில்லா இளைஞர்களைப் பாதுகாக்க வேலைவாய்ப்பினை உருவாக்க, சிறு, குறு தொழில்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் தொகையான சுமார் ரூபாய் 7 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்து, அவர்களின் கண்ணீரைத் துடைத்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழில் நலிவால் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் உள்ள சிறு, குறு தொழில் முனைவோர் நிலையைப் பரிவுடன் கவனத்தில் எடுத்து, வட்டி, கூட்டு வட்டியைத் தள்ளுபடி செய்து, இதுவரையில் அவர்கள் செலுத்திய தொகையைக் கடனிலிருந்து கழித்து, அசல் கடன் தொகையை மட்டும் செலுத்தி, கடனை முடித்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது தமிழகத்தில் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் சிறு, குறு தொழில்களை நம்பி ஏராளமானோர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, சிறு, குறுந்தொழில்களை வளர்ப்பதற்கான வகையில் அரசு மேம்பட்ட முறையில் பல்வேறு நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்பு

### 'பெரியார்' திரைப்படம் திரையிடுதல்–உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 'பெரியார்' திரைப்படம், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் இருக்கின்ற Good Luck தியேட்டரில் இன்று மாலை திரையிடப்படவிருப்பதால், மாலை 6–00 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதியைக் கருதி, அவர்கள் பார்ப்பதற்கு ஏதுவாக சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து



பேருந்து வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் சென்று, திரைப்படத்தைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. காமராஜ். (குறுக்கீடு) 'பெரியார்' திரைப்படம் பார்ப்பதற்கு திரு. காமராஜ் அவர்கள் வருகிறார்கள். (குறுக்கீடு) அதுதான், இந்த விடியலுக்காகத்தான் தந்தை பெரியார் பாடுபட்டார். உங்களுக்கென்ன?

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியாருடைய திரைப்படத்திற்குத் தமிழக அரசு உதவி செய்ததைப்போல, பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே ஒரு நல்ல திரைப்படம் தயாரிக்கப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. அதற்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்று தங்கள் வாயிலாக அவை முன்னவர் அவர்களையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களிடம் இது குறித்துக் கலந்து பேசி, அவையிலே அறிவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை

### (ஊ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

***திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டின் இலக்கணமாய்த் தோன்றி, தமிழினத்தின் கண் திறந்த காட்சியாய் விளங்கும், ஞாலம் தமிழ் காத்த நாயகர்க்கு நான் பட்டேன் காலம் முழுதும் கடனென்று சொல்லி, முந்து பிழைகள் முடங்க, சிந்தனைகளில் ஒட்டடை சேர்ந்த அவலம் போக, வாடிக் கிடந்த இனம் வாழ்வுபெற, முற்றும் தொழிலாளர் முன்னேறப் பாடுபட,

அற்புதமாய் வந்தே ஆட்சிக் கட்டிலேறி, மாட்சியுடன் ஆட்சி செய்யும் மாணிக்கமாம் தலைவர் கலைஞர் அவர்கள், வயதுகளை வளர்க்க வாழாமல், நல்ல செயல்களை வளர்க்கவே வாழுகின்றார், வாழவும் செய்வார் என்பதை அவையிலே எடுத்துரைத்து, அந்தத் தலைவருக்குத் தலை தாழ்த்தி, கழகம் அடைப்புக் குறிகளுக்குள் அடைக்கப்பட்டதல்ல, அது விற்பனைக்காகச் சந்தையில் கூறு கட்டப்பட்ட பொருளுமல்ல என்கிறவிதத்தில், கழகச் செயல்களைத் தன் கண்ணிமைகளாய்க்கொண்டு, கழகத்தைக் காத்து வரும் இளைஞரேறு, வருங்காலத்திற்கு அழைத்துச் செல்லும் கற்பனைப் பாதைகளுக்கு நடுவில் நிஜப் பாதையாகவே விளங்கி எங்களை அழைத்துச் செல்லும் எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என் தலைவர் கலைஞர் அவர்கள் 1957–ல் குளித்தலையில் வென்றார். மக்கள் பணியில், அரசியல் வரலாற்றில் அந்த வெற்றி, தலையாய வெற்றி. அந்த வெற்றியைத் தந்த அன்றைய மக்களில் பெரும்பாலோர் இன்று எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியிலேயே தங்களை நினைத்துப் பெருமையோடு வாழ்கிறார்கள். அவர்கள் எண்ணங்களை மனதிலே இருத்தி, அந்த எண்ணங்களைத் தலைவாழை இலையிட்டு, அவையிலே அதைப் பரிமாறி, அதற்குப் பின்னால் கைத்தறி மற்றும் சிறு தொழில்கள் மீதான மானியக் கோரிக்கைகளுக்குக் கை கொடுக்கலாம் என்றிருக்கின்றேன்.

1957–ல் குளித்தலைத் தொகுதியில், குளித்தலை, மாயனூர், வெள்ளியணை என்று மூன்று பிர்க்காக்கள் இருந்தன. 1967–ல் குளித்தலை என்றும், கிருஷ்ணராயபுரம் என்றும் இரு தொகுதிகளாகப் பிரிந்தபோது, கிருஷ்ணராயபுரம், மாயனூர் மற்றும் வெள்ளியணை பிர்க்காக்கள் எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியிலே நின்றுவிட்டன.

தலைவருக்கு வெற்றியைத் தந்த அந்தக் குளித்தலைத் தொகுதியின் பெரும்பாலான மக்கள் எனது தொகுதியிலேயே நின்றுவிட்டார்கள்.

*பிற்பகல் 12–30*

அப்பகுதியில், ஏழை மாணவர்களின் அறியாமை அகல, கல்லூரிகள் என்று எதுவுமில்லை; பெரும்பாலான வீடுகளில் வறுமைக் கோடு என்பது மாணவர்கள் வாழ்வில் ஒரு இலட்சுமணக் கோடாகவே இருந்தது. அந்தக் கோட்டை இன்று கோட்டையில் இருந்து, அழித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆம், கல்லூரிக் கல்வி வரை இலவசக்



கல்வி என்ற அவரது நல்லறிவிப்பால், மேல்நிலைக் கல்வியோடு நின்றுவிட்டவர்கள், இன்று மேல்தட்டு மக்களோடு மேற்கல்வி தொடருகிற வாய்ப்பு. எங்கள் பகுதி மாணவர்களோ, பொருளாதாரக் குறைவால், மேல்நிலைப் பள்ளியோடு நிற்பவர்கள். அவர்கள் கல்லூரிச் சுவ்ரையும் தாண்ட, கிருஷ்ணராயபுரம் தொகுதியிலே தற்போது ஓர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, அப்பகுதி மக்களின் வாழ்வு வளம்பெற, பெரு மருத்துவமனை வசதிகள் என்று எதுவுமில்லை; போக்குவரத்து வசதிகள் என்று எதுவுமில்லை; இன்னமும் அவர்கள் குக்கிராமங்களில் வழிப்போக்கர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

பீங்கான் பாண்டங்கள் செய்யத் தேவைப்படும் மூலப் பொருளான 'குவார்ட்ஸ்' எனப்படும் வெள்ளைக் கற்கள் எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியப் பகுதி முழுவதுமே விரவிக் கிடக்கின்றன. வீணாய்க் கிடக்கும் அக்கற்களை உபயோகித்து, பீங்கான் பொருட்களைத் தயாரித்தால், அப்பகுதியில் பல குடும்பங்கள் வாழும், பீங்கான் தொழிலும் வளரும். எனவே, சிறு தொழில்களையும் சிதைந்து போகாமல் காக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், அந்தப் பகுதியில் ஒரு பீங்கான் தொழிற்பேட்டையை அமைக்கப் பரிசீலிக்க வேண்டுமெனப் பரிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதி மக்கள் வாழ்வில் வசந்தம் வீச, அவர்கள் குடும்பங்களில் அறிவுச் சுடர் ஒளிர, அவர்கள் உடலில் நலம் பெருக, என் தலைவரின் வெற்றிக்குத் தோள் கொடுத்த அவர்களுக்கு, அவர்கள் வாழ்விற்கு, அவர்கள் வாழ்வுரிமைகளுக்குத் தலைவர் தோள் கொடுக்க மாட்டாரா என்று, தலைவரின் அருள்வாக்கை எதிர்பார்த்து, அவரது அரசின் நல்லறிவிப்புகளை எதிர்பார்த்து, வாழ்ந்துகொண்டிருக்கும் அக்காலத்துக் குளித்தலை மக்களுக்கு, அதாவது, இக்காலத்து கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களுக்கு, அரசு அறிவிக்கும் புதிய அறிவிப்புகளில் இடம் தந்து, அதிலே கொஞ்சம் முன்னுரிமையையும் தந்து, அந்த மக்களின் எதிர்பார்ப்புகளைத் தாங்கள் நிறைவு செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிருஷ்ணராயபுரத்திற்கு உதவுவது, அன்றைய குளித்தலை மக்களுக்கு உதவுவதாக அமையும் என்பதாக நினைத்துக்கொண்டிருக்கும் அந்த மக்கள் வயிற்றிலே தாங்கள் பால் வார்க்க வேண்டும் என்று சொல்லி,

கைத்தறிக்கும், சிறு தொழில்களுக்கும் தோள் கொடுக்கும் தாங்கள், கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களுக்கும் தவறாது தோள் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை தாராளமாக உண்டு என்று சொல்லிக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் ஆட்சியில் கைத்தறியும், சிறு தொழிலும் கைகோர்த்துச் சேர்ந்துள்ளதைக் காலக் கண்ணாடிகொண்டு காட்டும் முகத்தான், அத்துறை மானியங்களில் அற்புதமாய் நுழைந்து, நம் ஆட்சியின் மாண்புகளை நல்லோர் முன் வைக்கின்றேன்:

**'செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால்,**
**நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'**

என்பதும், 'ஆள் பாதி, ஆடை பாதி' என்பதும், நமது உடையையும், அந்த உடைக்குக் காரணமான கைத்தறித் தொழிலையும் சிறப்பிக்கவே எழுந்த சொற்றொடர்கள். அந்தச் சொற்றொடர்களெல்லாம், இன்று 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தலைவர் ஆட்சியில் அழகுபடுத்தப்படுகின்றன. அப்படி அழகுபடுத்தப்படுவதோடு நில்லாமல், அவை மெருகூட்டப்படவும் செய்கின்றன.

மானம் காப்போரின் மானம் காக்க, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்க, பொங்கல் திருநாளில் இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தை இந்த நிதியாண்டிலும் தொடர வைத்துள்ளார் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்காக இத்திட்டத்திற்கு ரூபாய் 256 கோடி நிதி ஒதுக்கவும் செய்துள்ளார்.

அண்ணாவைத் தோளில் சுமந்துகொண்டிருக்கிற நம் தலைவர் கலைஞர் அவர்கள், அந்த அண்ணா தனது தோளில் சுமந்துகொண்டிருந்த கைத்தறியைச் சுமக்கவா சோம்பல்படப் போகிறார்? நிலச் சொந்தக்காரனுக்குக் குத்தகை நெல் கிடைப்பதுபோல, மானம் காப்பவனுக்கு மானம் காக்க, இந்த நிதி பெரிதும் துணை செய்யும்.

நெசவுத் தொழிலில் நெசவாளர்கள் படும் பாட்டைத் 'தாளம் படுமோ, தறி படுமோ?' என்பார்கள். தாளம், அதன் வலியைப் பொறுத்துக்கொள்கிறபோதுதான், அதிலே இனிமையானதொரு இசை பிறக்கிறது. அதைக் கேட்கிறவர்களுக்கோ அது நாதம். அந்தத் தாளத்திற்கோ அது வலி. அதுபோல், ஆடையை உடுத்துபவர்கள், அந்த ஆடையால் தங்களை அழகுபடுத்திக்கொள்கிறார்கள். ஆனால், அதை



நெய்யும் நெசவாளர்களோ, முழங்கால் தெரிய இடுப்பில் மட்டுமே துணியோடு நிற்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்கி, அவர்களின் வாழ்வுத் தரத்தை உயர்த்த, கைத்தறித் துணி விற்பனைக்காக வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகை ஆண்டுக்கு 100 நாட்கள் என்று இருந்ததை மாற்றி, 1–4–1998 முதல் ஆண்டு முழுவதற்கும் 20 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்று கடந்த முறை தலைவர் கலைஞரின் கழக ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு, அந்த நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டது.

2007–2008 ஆம் ஆண்டுகளில், ஏற்றுமதி வாய்ப்புடைய கைத்திறன் பொருட்களின் உற்பத்தியில், கன்னியாகுமரியில் தேங்காய் ஓடு உற்பத்திக்கும், அதே கன்னியாகுமரியில் கடற்சிப்பி உற்பத்திக்கும், கிருஷ்ணகிரியில் இலகு மரச் செதுக்கு வேலைக்கும், திருச்சி மற்றும் சென்னையில் மரத்தினால் செய்யப்பட்ட மணி மாலைகளுக்கான உற்பத்தி வளர்ச்சிக்கும் சிறப்புக் கவனம் செலுத்த அரசு முனைந்துள்ளது. அந்த மாவட்டங்களில் தொகுப்பு மையங்களை ரூபாய் 10 இலட்சம் செலவில் உருவாக்கவும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** பனைப் பொருட்களின் உணவு வகைகளான நுங்கு, பதநீர், பனை வெல்லம் ஆகிய உடலுக்கு ஆரோக்கியம் தரும் பண்டைய தமிழர்களின் உணவு வகைகளைப் பேருந்து நிலையம், இரயில் நிலையம் போன்றவற்றில் கதர் வாரியம்மூலமாக விற்பனை செய்து பொது மக்களுக்கு உதவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

கழகம் ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களிலேயே 3,116 சிறு தொழில் அலகுகளும், 1,533 குடிசைத் தொழில் அலகுகளும், 875 கைவினை அலகுகளும் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. 31–3–2007 அன்றைய நிலவரப்படி, 340 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறு தொழில்கள் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் இத்துறையில் ரூபாய் 418.04 கோடி மதிப்பிற்கு விற்பனை நடந்துள்ளது என்கிற புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது, சிறு தொழில்களும் தலைவர் கலைஞர் ஆட்சியில் பெருந்தொழில்களாக மாறி வரும் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கலாம்.

சிட்கோ நிறுவனம் 2006–2007 ஆம் ஆண்டில் சுமாராக 247 மனைகள் மற்றும் 39 தொழிற்கூடங்களை விற்பனை செய்துள்ளது. வரும் ஆண்டில் இதே நிறுவனம் 574 மனைகளை மேம்படுத்த இருப்பதோடு, 809 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 58 தொழிற்கூடங்களை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது என்பதைப் பார்க்கிறபோது, சிறு தொழில்களுக்கும் நம் கழக அரசு காலனாக இல்லாமல், காவலனாக உள்ளது என்கிற பெருமகிழ்வை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

வரும் நிதியாண்டில், கிருஷ்ணகிரி மாவட்டம் போளுப்பள்ளியிலும், காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்திலும், பெரம்பலூர் மாவட்டம் எலம்பலூரிலும், திருவள்ளூர் மாவட்டம் காக்களூரிலும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்தி, அப்படி மேம்படுத்தப்பட்ட தொழிற்பேட்டைகளை, சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையெல்லாம் எடுத்துக் கூறி, 'தொழிலை நீ எடுத்து நடத்து; தொழில் உன்னை எடுத்து நடத்த இடம் தராதே' என்று அறிஞர் பெஞ்சமின் ஃபிராங்க்ளின் சொன்ன கூற்றை மெய்ப்பிக்கிறவிதமாகத் தொழில் துறைகள் இன்று என் தலைவர் கலைஞர் அவர்களின் மேற்பார்வையில், தாராளமாகவே மேம்பட்டு வருகின்றன என்கிற செய்தியையெல்லாம் சொல்லி, தொகுதிக்கு ஒரு தொழிற்சாலை தலைவர் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொல்லி, அவற்றையெல்லாம் எடுத்துரைக்க இந்த மானியக் கோரிக்கைகள் எனக்கு ஒரு வாயிலாக அமைந்ததற்கும், அந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி. ஏழு நிமிடங்கள்தான்.

**திரு. டி. மூர்த்தி:** 10 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியாது. Straight ஆக பாயின்ட்டுக்குத்தான் வர வேண்டும்.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடியாது என்று சொல்லக் கூடாது. 2007–2008 ஆம் ஆண்டுக்கான ஊரகத் தொழில் துறை மற்றும் கதர், கிராமத் தொழில் துறை மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச மீண்டும் வாய்ப்பு வழங்கிய சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும்,



மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய அமைச்சர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் ஓய்வறியா உழைப்பாளி கோ.க. மணி அவர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படித்துவிட்டு வேலையில்லாமல் வேலை கேட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போர்களின் எண்ணிக்கை சுமார் 60 இலட்சம். அவர்களில் பெண்கள் 17 இலட்சம். இவர்களில் பல பேர் வேலையில்லாத காரணத்தினால், தீவிரவாதம், வன்முறை, போதை மருந்துபோன்றவற்றுக்கு அடிமையாக இருக்கிறார்கள். இந்த நிலை மாற, உதவித் தொகை நிரந்தரத் தீர்வு ஆகாது. எனவே, ஒன்றியங்கள்தோறும் தொழில்கள் ஆரம்பித்து, வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். தமிழகத்தில் கிராமப்புறங்களில் சிறு தொழில்களில், மண்பாண்டம் செய்வோர், கூடை முடைபவர்கள், கயிறு திரிப்பவர்கள், வீட்டிற்குத் தேவையான கைவினைப் பொருட்கள் செய்வோர், பனைப் பொருட்கள் உற்பத்தி செய்வோர் ஆகியோருக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலமாக மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் கொடுத்து, தொழிலை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கான தனித் தொழிற்பேட்டைகளை உருவாக்கி, அவற்றில் பெண் தொழிலதிபர்களை உருவாக்க அரசு முன்வர வேண்டும். தமிழகத்தில் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அதிகமாக உள்ள காரணத்தினால், அவர்களது வாழ்க்கைத் தரம், பொருளாதாரத் தரம் உயர, ஆண் தொழிலதிபர்களுக்கு இணையாக பெண் தொழிலதிபர்கள் உருவாக, இந்தியாவிலேயே பெண்களுக்கான தனித் தொழிற்சாலைகளை உருவாக்க நம்முடைய அரசு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள, திருப்போரூர் தொகுதி வளர்ந்து வரும் தொழிற்சாலைகள் அதிகமாக அமைந்திருக்கும் தொகுதி. எனவே, திருப்போரூர் தொகுதியில் பெண்களுக்கான தனித் தொழிற்சாலைப் பகுதியை அமைத்துத்தர டாக்டர் கலைஞர் அவர்கள் முன்வர வேண்டும். இதற்கான இடம் திருப்போரூர் தொகுதியில் அதிக அளவில் உள்ளது. இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்கின்ற பகுதிகளில் ஆதி திராவிடப் பெண்களுக்காக தனி இட ஒதுக்கீடுமூலம் தொழிற்சாலை வசதிகளை ஏற்படுத்தினால், ஆதி திராவிட மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெறுவீர்கள்

என்பதைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில், குறிப்பாகத் திருப்போரூர் தொகுதியில் அதிக அளவில் தொழிற்சாலைகள் இருந்தும் அங்கிருக்கும் படித்து, வேலையற்ற மாணவ, மாணவிகளுக்கு அப்பகுதியிலுள்ள தொழிற்சாலை நிறுவனங்கள், பணி வழங்க மறுக்கின்றன. எனவே, மண்ணின் மைந்தர்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் தமிழக அரசு, சட்டமாக இயற்றி, அங்குள்ள தொழிற்சாலைகளில் அவர்களுக்கு வேலை வழங்க உத்தரவு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனப் (சிட்கோ) பகுதிகளிலுள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன. குண்டுங்குழியுமாகப் பராமரிக்கப்படாமல் உள்ளன. குறிப்பாக, மறைமலை நகர் மற்றும் ஆலத்தூர், அம்பத்தூர் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள சாலைகளுக்குத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி, இந்தச் சாலைகளின் வசதிக்காக நிதியை அதிக அளவில் ஒதுக்கி, சாலை வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–40*

இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழில்களில் ஒன்றான மண்பாண்டத் தொழிலைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அபிவிருத்தி செய்து வரும் இந்தக் காலக்கட்டத்தில், மண்பாண்டத் தொழில் மிகவும் சீரழிந்து வருகின்றது. இது வளர்ச்சிபெற வேண்டுமானால், தமிழகத்திலுள்ள அனைத்து டீக் கடைகளிலும் பிளாஸ்டிக் டம்ளரை ஒழித்து, அதற்குப் பதிலாக மண்பாண்டக் குடுவையில் டீ வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். அதனால் பிளாஸ்டிக் பொருட்களால் மாசுபடுவதைத் தவிர்க்கவும் இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், மண்பாண்டத் தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்க்கைத் தரமும் உயரும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பனைத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது. இந்தியாவில் உள்ள சுமார் 8.01 கோடி பனை மரங்களில், தமிழ்நாட்டில் மட்டும் 4.61 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை மரம் தமிழ்நாட்டின் மாநில மரம் ஆகும். அது மட்டுமல்ல; இந்தியாவின் அதிசய மரம் என்று எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்



அடிக்கடிக் கூறுவார்கள். எனவே, இந்த அதிசய மரத்திலிருந்து உணவுப் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, நுங்கு, ஜாம் வகைகள், இன்னும் பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அதிக ஊக்கத் தொகை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருப்போரூர் தொகுதியில் உள்ள, ஆலத்தூர் பகுதியில் பல கெமிக்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் ஒரு சில கம்பெனிகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தொழிற்சாலைகளின் கழிவுகளை அங்குள்ள பக்கிங்காம் கால்வாயில் விட்டுவிடுகின்றனர். இதனால் அப்பகுதி மாசுபடுகின்றது. இதனால் அங்குள்ள பொது மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்துவதோடு, அதனை அங்குள்ள அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து, பொது மக்களைக் காக்க அரசு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் நிறுவனமான C.M.D.A. மற்றும் வீட்டு வசதி வாரிய நிறுவனம்மூலம் எனது திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர் நகராட்சியிலுள்ள, நின்னக்கரை கிராமம், கீழக்கரணை, செங்குன்றம், சித்தாமனூர் மற்றும் காட்டாங்கொளத்தூர்போன்ற பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களில் வீடு கட்டித் தருவதாகக் கூறி, கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பாக சுமார் 4,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதில் சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பு எந்தவிதப் பயன்பாட்டிற்கும் இல்லாமல் உள்ளது. எனவே, எந்தத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதோ, அந்தத் திட்டம் அங்கு நிறைவேற்றப்படவில்லை. அதனால் திட்டம் தோல்வியுற்ற காரணத்தினால், கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாய நிலங்களை மீண்டும் நிலத்தின் உரிமையாளர்களுக்கே வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூட்டுறவு விவசாயப் பொருட்களை அருகில் உள்ள பெங்களூருக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்கின்றனர். எனவே, கிருஷ்ணகிரியில் பட்டுக் கூட்டுறவு விற்பனை மையம் ஒன்றை ஏற்படுத்தி, விவசாயிகளின் குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருப்போரூர் தொகுதியில் பல சாலைகள் குண்டுங்குழியுமாக உள்ளன. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் பல கோரிக்கைகளை நான் வைத்தும், இதுவரை C.M.D.A. மூலம் நிதியொதுக்கப்படவில்லை என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனவே, உடனடியாக அந்தச் சாலைப் பணி நிறைவேற மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர். 10 நிமிடங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜருடைய திரைப்படத்திற்கு முதலமைச்சரோடு கலந்து பேசி நிதி உதவி அளிக்கப்படும் என்ற நல்ல அறிவிப்பைச் செய்த மரியாதைக்குரிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிதி அளிக்கப்படும் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) நிதி வழங்கப்படும் என்று சொல்லவில்லை. முதலமைச்சரோடு ஆலோசனை செய்கிறேன் என்று சொன்னார். (குறுக்கீடு) ஆனால், பத்திரிகையிலே வேறு மாதிரி news வந்துவிடும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, (குறுக்கீடு) ரொம்ப நன்றி. அந்த ஆலோசனைக்கு நன்றி தெரிவித்து, வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும், காமராஜருக்குக் கருணை காட்டிய தங்களுக்கும் நன்றி தெரிவித்து, இன்றைக்கு நான் இந்த மானியத்திலே பேசுவதற்கு முன்பாக, தொகுதியிலே இருக்கிற ஒரு சில கோரிக்கைகளை வைத்து, பிறகு தொடர்ந்து மானியத்திலே பேச விரும்புகிறேன்.

காங்கேயத்திலே நீதிமன்றக் கட்டடம் 25 ஆண்டுகளாக ஓர் ஓலைக் கொட்டகையிலே இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கே Bar Association Room இருக்கிறது. அங்கே பாம்புகள், பல்லிகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. பல ஆண்டு காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த முறை சட்டத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. இ. பெரியசாமி



அவர்களிடத்திலே நாங்கள் பணிவோடு வேண்டுகோள் விடுத்து, அந்த ஆயத்தப் பணிகள் நடந்து வருகிற நேரத்தில், கடந்த ஆண்டு அதற்கான அறிவிப்பே வரவில்லை. அடுத்த ஆண்டு கண்டிப்பாக அறிவிக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அறிவிப்பை இந்த ஆண்டும் எதிர்பார்த்தோம், வரவில்லை. ஏக்கத்தோடு காத்திருக்கிறோம். காங்கேயம் மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையான, காங்கேயம் நீதிமன்றப் புதிய கட்டடத்தை சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விரைவிலே நிறைவேற்றித்தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

அடுத்து, சென்னிமலையிலும், காங்கேயத்திலும் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிதண்ணீர் வருகிற ஒரு சோகச் சூழ்நிலை இருக்கிறது. பற்றாக்குறையைப் போக்கி, அதை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். காங்கேயம் அரசு மருத்துவமனையிலே ஒரேயொரு மருத்துவர்தான் பணியிலே இருக்கிறார். மூன்று, நான்கு மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்திலே ஒரேயொரு மருத்துவர்தான் பணியிலே இருக்கிறார். பல முறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறேன். 10 மாத காலமாகப் போராடிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கருணை காட்டி, காங்கேயம் அரசு மருத்துவமனைக்குத் தேவையான முதுநிலை மருத்துவர்களைப் பணியிலமர்த்தி, காங்கேயம் மக்களைக் காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காங்கேயம் தொகுதியிலுள்ள சென்னிமலை, திருப்பூர் குமரன் பிறந்த பூமி. அங்கே மணிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. அந்த மணிமண்டபம் கட்ட அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று செய்தித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, தீரன் சின்னமலை பிறந்தது, எனது தொகுதியிலே இருக்கிற மேலப்பாளையம் என்கின்ற ஊர். தீரன் சின்னமலை இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடிய முதல் வீரன், கொங்குச் சமுதாயத்தினுடைய மாவீரன். அந்த மாவீரனின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நானும், கைத்தறித் துறை அமைச்சரும், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சரிடத்திலே வேண்டுகோளாகப் பணிவோடு

கேட்டுக்கொண்டு, கைத்தறியினுடைய காவலன் பத்மஸ்ரீ நாச்சிமுத்து அவர்கள் சென்னிமலையிலே உதித்து, கைத்தறிக்காக இங்கே தில்லையாடி வள்ளியம்மை மாளிகையெல்லாம் கட்டிக் கொடுத்த கைத்தறியினுடைய காவலர், அவர் நினைவாகத் தபால் தலை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதோடு பத்மஸ்ரீ நாச்சிமுத்து அவர்கள் பிறந்த நாளை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய பரிந்துரையோடு 'நெசவாளர்கள் தினமாக' அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இனி தொழில் துறை மானியத்திலே சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

காங்கேயம் தொகுதி வறண்ட தொகுதி; பக்கத்திலே இருக்கிற பொங்கலூர் சட்டமன்றத் தொகுதியும் வறண்ட தொகுதி. இந்தப் பக்கம் வளம் கொழிக்கிற திருப்பூர் இருக்கிறது. மூன்றுக்கும் மையப் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக இருக்கின்றன. அதிலே சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைத்து, S.E.Z. என்கின்ற புதிய தொழிற்பேட்டை அமைத்து, அந்த வறண்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு வாழ்வளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே பின்னலாடைத் தொழில், Software தொழில், மின்னணுத் தொழில் போன்ற தொழிற்பேட்டைகள் அமைவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் கணினி யுகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். ஆகவே, கோவையிலே மென்பொருள் தொழிற்சாலை, மென்பொருள் தொழில் பூங்கா, மென்பொருள் பொருளாதார சிறப்பு மண்டலம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத் தொழிற்சாலைகளைப் பதிவு செய்வதற்காகச் செல்கிறபோது, நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருந்துகொண்டிருக்கின்றன. மாவட்டத் தொழில் மையத்தின்மூலமாக, அந்த நடைமுறைச் சிக்கல்களைக் களைந்து, தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிற நடவடிக்கைகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாரதப் பிரதமருடைய ரோஜ்கார் யோஜனா என்கின்ற நிதியுதவித் திட்டத்திலே இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு பல மாதங்கள் பிடிக்கின்றன. ஏழையெளிய, வேலையில்லாத இளைஞர்கள், இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே அரசினுடைய புள்ளிவிவரப்படி சுமார் 60 இலட்சம் பேர் பதிவு செய்து



காத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அவர்களுக்கு வாழ்வளிக்கிற வகையிலே, P.M.R.Y. என்கின்ற பாரதப் பிரதமருடைய சுய உதவித் திட்டத்திலே கடன் உதவியை எளிதாக்கி, தொழிலுக்குப் பயிற்சி அளித்திட வேண்டுகிறேன்.

பள்ளி, கல்லூரிகளின் இறுதி ஆண்டில் தொழிலுக்கான ஒரு பயிற்சி அளிக்கலாம். சிறு தொழில் சம்பந்தமாக, ஊரகத் தொழில் சம்பந்தமாகப் புதிய பயிற்சிகளை அளிக்கலாம். உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் தொழில் துறை ஆகியவை இணைந்து, புதிய பயிற்சிகளை, புதிய கருத்தரங்கங்கள்மூலம் தொழில் முனைவோருக்கான யோசனைகளைத் தெரிவித்தால், எதிர்கால இளைஞர்களுடைய வாழ்க்கைத் தரம் நன்றாக இருக்கும்.

அடுத்து, தொழில் முனைவோர்களுக்கு ஊக்குவிப்புத் தர வேண்டும். அதிலும் குறிப்பாகப் பெண் தொழில் முனைவோர்கள், உடல் ஊனமுற்ற தொழில் முனைவோருக்கு சிறப்புத் திட்டங்கள், சிறப்பு மானியங்கள், சிறப்பு உதவிகள் அளித்து முன்னுரிமை தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தரமான பொருட்களை உற்பத்தி செய்தால், ஏற்றுமதிக்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, தொழில் துறைமூலமாக, ஊரகத் தொழில் துறைமூலமாக தரமான பொருட்கள் உற்பத்தியாவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற தொழிலுக்கு ஏற்ற மாதிரித் தொழில்களை ஊக்குவிக்கலாம். பொள்ளாச்சியை எடுத்துக் கொண்டால், கயிறு தொழிற்சாலை, ஜவ்வரிசி என்றால், சேலம்; மாம்பழக் கூழ் என்று சொன்னால், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி, ஜவுளி என்று சொன்னால், ஈரோடு; விசைத் தறி என்று சொன்னால், நாமக்கல் மற்றும் கரூர்; தோல் தொழில் என்று சொன்னால், திண்டுக்கல் மற்றும் வேலூர்; இப்படி அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற தொழிற்சாலைகளை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டான்சி. டான்சியில் இன்றைக்குப் பலவிதமான மரப் பொருட்களையும், இரும்புச் சாமான்களையும் தயாரிக்கிறார்கள். அதனை அரசினுடைய நிர்வாகத்திற்கு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே துவக்கப்பட்ட டான்சி இன்றைக்குப் பல ஊர்களிலே வலுவிழந்து கிடக்கிறது. அதற்குப் புத்துணர்வூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

அடுத்து, எங்கே தொழிற்சாலை அமைத்தாலும், அங்கே மாசு என்பது ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த மாசுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும். காங்கேயம் தொகுதிக்குட்பட்ட பெருந்துறை சிப்காட் தொழில் வளாகத்திலேயிருந்து வருகிற கழிவு நீர், அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த மாசுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிற வகையில் கடந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கான பதிலுரையிலே முதல்வர் அவர்கள், ஒரத்துப்பாளையம் அணைக்கு வருகிற பின்னலாடைத் தொழிற்சாலைகளினுடைய கழிவு நீரை 700 கோடி ரூபாய் செலவிலே குழாய்மூலம் கொண்டு செல்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே சிப்காட் கழிவு நீரையும் எடுத்துச் செல்வதற்கான திட்டத்தினை இணைத்தால், அந்தப் பகுதி மக்களுடைய மேம்பாட்டிற்கு நன்றாக இருக்கும் என்கிற செய்தியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள்மூலம், மாதம் ஒரு முறை இளைஞர்களுக்கான ஆலோசனைக் கூட்டங்களை, கருத்தரங்குகளை மாவட்டந்தோறும் நடத்தி, அவர்களுக்குப் புதிய சிந்தனையை ஊக்குவிக்க வேண்டும்.

தேயிலைத் தொழிலுக்கான வாரியத்தின்மூலமாகத் தேயிலைத் தொழிலாளர்களின் விற்பனையை அதிகரித்து, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், கூலி உயர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, TAICO வங்கியின்மூலமாக நல்ல திட்டங்களை அறிவித்துப் பெருமை சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி அவர்கள் போற்றி வளர்த்தது கதர்த் துறை, இன்றைக்குக் கதர்த் துறைக்குத் தள்ளுபடி தருகிறபோது, rebate தருகிறபோது, 5 கோடி ரூபாய் என்ற ஒரு வரம்பை வைத்திருக்கிறார்கள். ஈரோடு, காங்கேயத்திலே, படியூர் என்ற இடத்திலே மிகப் புகழ்பெற்ற கதரினுடைய தொழிற்சங்கம் இருக்கிறது; கதர் நிறுவனமாக இருக்கிறது. இங்கே ஓராண்டுக்கு ரூ. 5 கோடிக்குத்தான் தள்ளுபடி, rebate தருவோம்; அதற்குமேலே விற்பனை செய்தால், அவர்களே சொந்தமாகப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டிலே



7 கோடி ரூபாய்க்கு விற்றார்கள். அந்த rebate அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாகக் கொடுக்க வேண்டிய rebate balance கொடுக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. Rebate balance தரப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. அந்த balance தொகையைத் தர வேண்டும். அதைப்போல, கூலி உயர்வு என்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கின்றது. மத்தியிலே K.V.I.C. என்கின்ற Khadi and Village Industries Commission 25 சதவிகிதம் கூலி உயர்வு தருவதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. காதியினுடைய நெசவாளர்களுக்கு—நூற்போருக்கும், நெய்வோர்களுக்கும்—விரைவாகக் கூலி உயர்வு கிடைக்க மத்திய கமிஷனோடு இணைந்து பேசி வழிவகுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வெளிமாநிலங்களுக்கு 10 கோடி, 12 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறோம். அங்கே தள்ளுபடியைத் தருகிறார்கள். ஆனால், வெளிமாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்கிறபோது—பீகாரிலிருந்து வருகிறது, West Bengal-லிருந்து நல்ல மஸ்லீன் துணிகள் வருகின்றன—அவற்றுக்கு rebate தருவதற்கு நம்முடைய தமிழக அரசு தயக்கம் காட்டுகிறது. 30 சதவிகித rebate–ஐத் தருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கதர்த் துறை வளர வேண்டும்; கைத்தறித் துறைபோன்ற துறைகள் வளர வேண்டுமென்று சொன்னால், இங்கே அமைச்சர்கள் இருக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் வாரத்திற்கு ஒரு நாள் கண்டிப்பாகக் கதர்த் துணிகளை, கைத்தறித் துணிகளை அணிவோம் என்கின்ற சபதத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் யோசித்து, முதல்வரோடு கலந்து பேசி, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகள் அத்தனை பேரும், வாரத்திற்கு ஒரு நாள் கண்டிப்பாகக் கதர் ஆடை அணிவோம் என்கின்ற சபதத்தை எடுத்துக்கொண்டால், கதர்த் தொழில், கைத்தறித் தொழில் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், அரசு உபயோகத்திற்குக் கதர்த் துணிகளை அதிகமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டு, அரசு அதற்காக முயற்சி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு தீபாவளி, பொங்கல்போன்ற பண்டிகை நாட்களில் போனஸ் வழங்குகிறபோது,

கண்டிப்பாகக் குறைந்தபட்சம் 500 ரூபாய்க்குக் கதர் ஆடைகளை வாங்க வேண்டுமென்ற ஒரு கட்டுப்பாட்டை விதித்தால், அது கதர்த் துறையினுடைய மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

கடந்த ஆட்சிக் காலத்திலே சுமார் 682 பேரை வேலைக்கு வேண்டாம் என்று சொல்லிப் பணி நீக்கம் செய்து, அவர்களை நிறுத்திவிட்டார்கள். பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, உபரிப் பணியாளர்களாக இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு மாற்றுப் பணி தருவதற்கோ அல்லது அவர்களை இந்தப் பணியையே அவர்கள் செய்வதற்கோ மீண்டும் வாய்ப்பளிப்பதற்கு மரியாதைக்குரிய கதர்த் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நமது கதர் வாரியத்திலே தயாரிக்கிற சோப்புகளுக்குக் கேரள மாநிலத்திலே நல்ல தேவை இருக்கிறது. ஆனால், சரியான முறையிலே கேரளாவிற்கு supply செய்வதில்லை; இங்கேயிருக்கிற சில அதிகாரிகள் அதிலே குளறுபடி செய்கிறார்கள் என்கிற ஒரு செய்தியை என்னிடத்திலே சொன்னார்கள். அதைக் களைந்து, தமிழகத்திலே தயாரிக்கிற சோப்புகளைக் கேரளாவிற்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

காலணிகளைப் பொறுத்தவரையிலே, சென்னையிலே மட்டும் உற்பத்தி செய்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் காலி நிலங்கள் இருக்கின்றன. அந்தந்த மாவட்டங்களில் காலணிகளை உற்பத்தி செய்தால், போக்குவரத்துச் செலவு குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

காந்தி அவர்கள் சொன்னதைப்போல, 80 சதவிகித மக்கள் கிராமங்களிலே, ஊர்ப்புறங்களிலே வாழ்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய நிலைமைகளைக் கருத்திலேகொண்டு, கதர்த் துறையை, கைத்தறித் துறையை, சிறு தொழில் துறையை முன்னேற்ற வேண்டுமென்று சொன்னால், இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்து, இந்த நாட்டினுடைய கதர் இயக்கத்தை, காந்தியக் கொள்கையை நனவாக்கிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல பணிகளை ஓராண்டு காலம் ஆற்றிக்கொண்டிருக்கின்ற கழகத் தலைவர் கலைஞருடைய அரசுக்கு நன்றி தெரிவித்து, பொன் விழா நாயகருக்கு நன்றி தெரிவித்து, உழைக்கிற தொழிலாளர் வர்க்கத்திற்கு, உழைக்கிற ஏழை நெசவாளர்களுக்கு, கைத்தறி, கதரை வாழ வைப்பதற்குத் தொடர்ந்து பல முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன், நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், உங்களுக்குப் பேசுவதற்கு 10 நிமிடங்கள்.

பிற்பகல் 12–55

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்று சொல்வார்கள். என் தந்தை வடநாட்டுக் கொள்ளையர்களால் தாக்கிக் கொல்லப்பட்ட பிறகு, திக்குத் தெரியாது இருண்டு கிடந்த நேரத்தில், எனக்கும், என் குடும்பத்திற்கும், தாயாய், தந்தைக்குத் தந்தையாய் விளங்கி, என்னையும், என் குடும்பத்தையும் வாழ வைத்து வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தந்தை தேர்ந்தெடுக்கப்பட்ட கும்மிடிப்பூண்டி தொகுதியில் என்னை இரண்டு முறை நிறுத்தி வெற்றிபெறச் செய்து, இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக்கி அழகு பார்த்துக்கொண்டிருக்கும் அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்து, என் உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சினை இது. கும்மிடிப்பூண்டி தொகுதியில் பல்வேறு ஏரிகளில் சவுடு மண் எடுப்பதற்காக மாவட்ட நிர்வாகம் கனிம வளத் துறையில் அனுமதி பெற்று, மூன்று அடிதான் எடுக்க வேண்டுமென்ற விதிகளை மீறி, 50 அடி, 60 அடி, 70 அடி என்று எடுத்து, அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடத்திலும் தெரிவித்த பின்பு, மாவட்ட ஆட்சியரிடத்திலே நான் நேரடியாகச் சென்று, மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவித்தபோதுகூட, செவிடன் காதில் சங்கு ஊதியதைப்போல, மாவட்ட நிர்வாகம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதன் பிறகு, அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று ஈடுபட்ட நேரத்தில், மாவட்டக் காவல் துறை அவர்களைக் கைது செய்த நடவடிக்கை என்னுடைய தொகுதியில் நடைபெற்றது. இங்கேயுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தோழர் மாண்புமிகு உறுப்பினர் டில்லி பாபு அவர்களுடைய சொந்தக் கிராமம் பூரிவாக்கம் என்னுடைய தொகுதியில்தான் அமைந்துள்ளது. அவருடைய கிராமத்திற்குப் பக்கத்துக் கிராமம் திருக்கண்டலம் ஏரியில் கடந்த மாதம் 60 அடி, 70 அடி மண் எடுத்ததற்கு, அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம்

செய்தபோது, 4 பெண்கள் உட்பட, 33 பேர்களைக் கைது செய்து, 9 நாட்கள் சிறை வைத்து, அந்த மக்கள்மீது பொய்ப் புகார்களை, பொய்யான வழக்குகளைப் பதிவு செய்தது இந்த அரசு என்பதை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஹைதராபாத்தைச் சேர்ந்த Ramkay Industries Wastage Management என்ற நிறுவனம், கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் அமையவுள்ளது. இந்நிறுவனம், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள எரிசாணக் கழிவுகளையும், தொழிற்சாலைக் கழிவுகளையும் பதப்படுத்தி, அனைத்துக் கழிவுகளையும் நிலத்தில் புதைக்கும் திட்டமாக இது அமைந்துள்ளது. இந்நிறுவனம் அமைந்துள்ள பகுதியைச் சுற்றி இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் என சுமார் 60 பேரை ஹைதராபாத்திலிருந்து இயங்கும் இதே நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றது ராம்கே நிறுவனம். ஹைதராபாத்திலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் இந்நிறுவனம் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தைச் சுற்றி 2 கிலோ மீட்டர் வரை துர்நாற்றம் கடுமையாக வருகிறது என்பது, அதைப் பார்த்து வந்தவர்கள் கருத்தாக உள்ளது. இந்நிறுவனத்தைச் சுற்றி 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்தக் கிராமமும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. National Environmental Engineering Research Institute—-NEERI, Nagpur என்ற ஆய்வகம், ஹைதராபாத் Ramkay Industries இப்பகுதியில் இத்திட்டத்தை அமைக்கக் கூடாது என்று மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது, 2005–ல். இப்பகுதி மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, இந்நிறுவனத்திற்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த அரசு உடனடியாகச் செயல்பட்டு, 20 கிராமங்களைச் சார்ந்த 25 ஆயிரம் மக்களை வாட்டி, வதைத்து வரும் ஆட்கொல்லி நிறுவனத்தைத் தடை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சியில், தொழில் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு உண்டு. சிறு தொழில்கள் வளர வேண்டும், சிறு தொழில் அதிபர்கள் பெருக வேண்டும். இதன்மூலம் வேலைவாய்ப்புப் பெருக வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். பல ஆண்டுகளாக சிறு தொழில்கள் தொடங்குவதும்,



பிறகு மூடுவதுமாக இருந்தது மறுக்க முடியாத உண்மை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சிறு தொழில் வளர்வதற்குப் பெரிதும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், பெரிய தொழில்கள், தொழிற்சாலைகள் நம் மாநிலத்தில் வரவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரிய தொழில்கள் துவக்கப்படுவதற்கு முயற்சிக்கும் அதே நேரத்தில், சிறு தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் பெரிதும் ஊக்கம் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போதைய முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தினசரி பன்னாட்டுத் தொழிலதிபர்களுடன், பல்வேறு தொழிற்சாலைகளுக்காகப் புதிய ஒப்பந்தங்கள் தமிழக அரசு சார்பில் செய்யப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன. தமிழகத்தில் பல்வேறு இடங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க இருப்பதாகவும், அதற்காக ஏழையெளிய நடுத்தர மக்களின் விளை நிலங்களைக் கையகப்படுத்த இருப்பதாகவும் அறிவிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமையும் என்ற போர்வையால், விளை நிலங்களைக் கையகப்படுத்தும் போக்கினை இந்த அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பது என்பது . . .

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும்போது, அரசாங்கம் 'நிலம் கையகப்படுத்துவதில்லை' என்று ஒரு முடிவெடுத்திருக்கிறது. ஏனென்றால், மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை இந்த அரசு உன்னிப்பாகக் கவனித்து, யார் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க முன்வருகிறார்களோ, அவர்களே நிலச் சொந்தக்காரர்களிடத்திலே பேசி, நிலத்தை வாங்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை இந்த அரசு விதித்திருக்கிறது. அதனாலே, அரசாங்கம் யாரிடத்திலும் போய்க் கட்டாயப்படுத்தி, நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகுமார், பேசுங்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பது என்பது பெருந்தொழிலை உருவாக்குவதற்காகத்தான் என்பது அனைவருக்கும் தெரியும். கோடீஸ்வரர்களை மேலும் கோடீஸ்வரர்களாக ஆக்குவதற்கு அமைக்கப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களால் வேலைவாய்ப்பு பெருகும் என்ற ஒரு நப்பாசையை அரசு காட்டி வருகிறது. உண்மையிலேயே வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டுமென்றால், பெரிய தொழில்களுக்கு ஈடாக சிறு தொழில்கள் வளர வேண்டும். உருவாக்கப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் சிப்காட் வளாகங்களோடு, சிட்கோ நிறுவனங்களையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கேற்றாற்போல், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்புக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தொடங்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளில் சேரக்கூடிய தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது என்ற கருத்து நாடு முழுவதும் பரவலாக இருக்கிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளைத் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து செயல்பட அனுமதிக்க வேண்டும். அப்படியொரு உத்தரவைப் பிறப்பித்தால்தான், அதில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்புக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குச் சில விளக்கங்களைத் தருவது நல்லது என்று நினைக்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கும்போதே, அமைச்சரவையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றித் தீர விசாரித்து, விவாதித்து, தமிழகத்திலே இருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்க வருகின்றவர்களிடத்திலே வற்புறுத்தியிருக்கிறார்கள்; அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே, தமிழகத்தில் இருப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும்.





**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இந்த அரசு ஏற்பட்ட 11 மாதங்களில், சிறு தொழில் துறையில் ஏற்பட்டுள்ள ஒரு அவலமான போக்கை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது நான் தெரிவிப்பதைக் குற்றச்சாட்டு என்ற வகையில் அல்ல; குறைபாடு என்ற வகையில் எடுத்துக்கொண்டு, அதைக் களைய முன்வர வேண்டும். சிறு தொழில்கள் வளர வேண்டும் என்பதற்காக சிட்கோ தொழிற்பேட்டையில் சிறு தொழில் முதலீட்டாளர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இந்த சிட்கோ தொழிற்பேட்டையில் இடங்களைப் பெற்ற பல பேர், அவற்றை வேறு நபர்களுக்கு நல்ல விலைக்கு விற்றுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அப்படி விற்பதற்கு சிட்கோ அதிகாரிகள் தடையில்லாச் சான்றிதழ்களும் அளிக்கிறார்கள். அதற்காக இலட்சக்கணக்கில் கையூட்டும் பெறுகிறார்கள். ஒரு காலத்தில் சிறு தொழில் தொடங்க வேண்டுமென்ற நல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தேவையில்லாத ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். கடந்த ஆட்சியிலே, 198 மனைகளைக் குறைகளுடனும், அதுவும் 118 பொது உபயோகத்திற்கென விடப்பட்ட இடங்களை மனைகள்—விற்கக் கூடாத மனைகளையெல்லாம், என்ன காரணத்தினாலோ, தொழில் தொடங்குபவர்களுக்கு விற்றிருக்கிறார்கள். இன்றைக்கு அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை யாருக்கும் அப்படி நாங்கள் விற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** ஒரு காலத்தில் சிறு தொழில் தொடங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், Small Scale Industries Certificate வாங்கி, இட ஒதுக்கீடுபெற்று உண்மையிலேயே தொழில்கள் நடத்திய சிறு தொழில் முதலீட்டாளர்கள் இருந்தார்கள். அவர்கள் நடத்திய தொழில் நலிவடைந்து, வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டதால், சிட்கோவே இந்த இடத்தை ஏலம் விடும். இவையெல்லாம் நடைமுறை உண்மைகள். ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக உள்ளது. பல Real Estate Broker–கள் சிறு தொழில் முனைவோருக்கான சான்றிதழைப் பெற்று, சிட்கோ தொழிற்பேட்டையில் இடத்திற்கு விண்ணப்பித்து, அதிகாரிகள் துணையோடு குறைந்த விலைக்கு இடங்களை வாங்குகிறார்கள். அந்த இடத்தில் தொழில் எதுவும் தொடங்காமல், 6 மாதங்கள், 1 வருடம்

கழித்து, அதே அதிகாரிகள் துணையோடு நல்ல விலைக்கு விற்றுவிட்டுக் கொள்ளை இலாபம் பார்க்கிறார்கள். இதுபோன்ற செயல்களால், சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற அரசின் நல்ல திட்டமே பாழ்பட்டுப் போகிறது. இதுபோன்ற நபர்களுக்கு ஆலோசனை சொல்வதே சிட்கோவில் பணியாற்றும் ஒரு சில அதிகாரிகள் என்ற தகவல் வேதனையளிக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

கடந்த 11 மாதங்களில், நலிவுற்ற எத்தனை சிறு தொழிற்சாலைகளை சிட்கோ நிறுவனமே ஏலம் விட்டிருக்கிறது அல்லது எத்தனை ஒதுக்கீட்டாளர்களுக்கு இடத்தை விற்கத் தடையில்லாச் சான்றிதழை சிட்கோ நிறுவனம் கொடுத்திருக்கிறது என்று விசாரியுங்கள்; அப்போது உண்மை புரியும்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12–54–க்குப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** பெரிய தொழிற்சாலைகள் வளர ஒரு புறம் அரசு ஊக்குவிப்பதால், சிறு தொழில்கள் முறையாக வளர முடியவில்லை என்பது மட்டுமல்ல. ஒரு சில அதிகாரிகளின் பணத்தாசையால் தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் நசிந்து வருவது மறுக்க முடியாத உண்மை. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2005–2006 ஆம் ஆண்டில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில்தான் சிறுசேரியிலே இருந்த சிப்காட் நிலங்களைக்கூட ரியல் எஸ்டேட்மூலம் விற்பதற்காகச் சட்டம் போட்டு, மறுபடியும் சட்டத்தைத் திரும்பப்பெற்ற காலங்கள் எல்லாம் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே 2005–2006 ஆம் ஆண்டில் 67,005 தற்காலிக மற்றும் 20,399 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் சிறு தொழில் இயக்ககத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்றபின், 2006–2007 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் 70,000 தற்காலிக மற்றும் 30,000 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களை வழங்க இத்துறை அனைத்து



முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2007–2008 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில், கடந்த ஆண்டு எத்தனை தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவிக்கவில்லை. இந்த ஆண்டிற்கான இலக்கைக் குறிப்பிடவில்லை. இதன்மூலம், இந்த அரசு சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. சிறு தொழில் துறைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் பாதுகாப்பு இருந்தது. அத்துறையைக் காத்தவர் அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டுக்கான அறிவிப்புகளில் தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்மூலம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார், உட்காருங்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இரண்டே நிமிடங்களில் முடித்து விடுகிறேன். சென்னையில் வாகன உற்பத்திப் பாகங்கள் குழுமம், திருப்பூரில் பின்னலாடைக் குழுமம், மதுரையில் தானியம் மற்றும் பருப்பு அரைவைக் குழுமம், ஆம்பூரில் தோல் தொழிற்சாலை உற்பத்திக் குழுமம், போன்றவைகளின் திட்ட மதிப்பீட்டுக்கான 370.89 கோடி ரூபாயில், மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு இந்தத் திட்டங்களுக்கு 198 கோடி ரூபாயைத் தனது பங்களிப்பாக ஒதுக்கியிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில், கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்காக மொத்தத் திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு அல்லது ரூ.50 கோடி, இதில் எது குறைவான தொகையோ, அதைத்தான் மத்திய வர்த்தக அமைச்சகம் உதவித் தொகையாக வழங்குகிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த முரண்போக்கான அறிவிப்பு எதற்கு என்று சிறு தொழில் துறை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான்கு நிமிடங்கள் அதிகமாகக் கொடுத்துவிட்டேன் (குறுக்கீடு) அனுமதிக்கப்பட்ட நேரத்தைவிட நான்கு நிமிடங்கள் உங்களுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த ஐந்தமிழ் அறிஞர், 50 ஆண்டு காலம் சட்டமன்றத்தில் பணியாற்றிப் பொன் விழாக் காணும் பொன்மனச் செம்மல், 14 வயது முதல் 84 வயது வரையிலும் 70 ஆண்டு காலம் தமிழ்ச் சமுதாயத்திற்கு மெழுகுவர்த்தியாயிருந்து தன்னைத் தானே உருக்கி, சமுதாயத்திற்கு வெளிச்சத்தைத் தந்து, தந்தை பெரியாரின் வழியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிகாட்டுதலில், இதுநாள் வரை பெற்ற முழு அனுபவங்களையும் ஒருங்கிணைத்து, தமிழ் மக்களின் இன்னல் களைய பொற்கால ஆட்சியைத் தந்துகொண்டிருக்கும் செம்மொழிச் செம்மல், அடித்தட்டு மக்களின் பாதுகாவலர், சிறுபான்மை இனத்தாரின் சீரிய காவலர், நீலகிரி மாவட்டத்தில் படகர் என்ற இனம் உண்டு; அவர்களும் திராவிட இனத்தின் ஒரு விழுது என்பதனை உலகிற்குத் தெரியும்வண்ணம், என்னையும் சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கியதை என் இனம், இந்தப் புவி உள்ள வரை மறக்காமல் தங்களை வணங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நானும், அய்யா, தங்கள் பாதம் தொட்டு வணங்கி, தன்மானச் சுடர், மலைகுலைந்தாலும் நிலைகுலையாத, பகுத்தறிவைத் தன் உயிர் மூச்சாகக்கொண்டு இச்சமுதாயத்திற்காக வாழ்நாள் முழுவதும் அரும்பணியாற்றி வரும் இனமானப் பேராசிரியர் அய்யா அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 30 ஆண்டு காலமாகத் தலைவர் கலைஞர் வழியில், பேராசிரியர் அவர்களின் ஆசியுடன், அரசியலில் பணியாற்றி இலட்சோப இலட்சம் கழகத்து இளைஞர்களுக்கு ஒளி தரும் சூரியனாய், ஓய்வில்லாமல் உழைத்து, தற்பொழுது உள்ளாட்சியிலும் பார் புகழும் நல்லாட்சியைத் தந்துகொண்டிருக்கும் எதிர்காலத் தமிழகத்தின் தலைவர், என்னுயிர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தைக் கட்டிக் காக்க, தொண்டர்கள் மன நிலையறிந்து, எத்தகைய சூழலிலும் தன்னிடம் வந்தவர்களுக்கு மனம் கோணாமல் கனிவுடன், இனிமையாகப் பேசி, முடிந்த எல்லா உதவிகளையும் செய்து தந்து, தொண்டர்கள் போற்றிப் புகழ்ந்து வரும் கழகப் பொருளாளர் அய்யா ஆற்காட்டார் அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது மானியக் கோரிக்கைக்கான பதிலுரையை இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு வளர்ப்பு, விவசாயம் சார்ந்த ஒரு ஊரகத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன், கால முறைதோறும் தொடர் வருவாயினை விவசாயிகளுக்கு வழங்குகிறது. உலகின் கச்சாப் பட்டு



உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்து நமது இந்தியாதான் உள்ளது. இந்தியாவின் கச்சாப் பட்டுத் தேவை அளவான 25,000 மெட்ரிக் டன்னில் 69 சதவிகித அளவான 17,305 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் தற்போது 25,107 ஏக்கரில் சுமார் 22,886 விவசாயிகளால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பிற்பகல் 1–10

பட்டு வளர்ச்சித் துறையில் செயல்படும் 11 வித்தகங்களில் 59,801 இலட்சம் கலப்பினப் பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 8,31,000 இரு சுழற்சியின கலப்பினப் பட்டு முட்டைகள் உற்பத்தியே துறையின் வரலாற்றில் உயர்ந்தபட்ச உற்பத்தியாகக் கருதப்படுகிறது.

100 பட்டு முட்டைகளுக்கான பட்டுக் கூடு அறுவடை 44.7 கிலோவிலிருந்து 62.4 கிலோவாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் பட்டுக் கூடு உற்பத்தி 2005–2006 ஆம் ஆண்டில் 5,225 மெட்ரிக் டன் என்று இருந்த அளவு, கடந்த ஆண்டில் 7,931 மெட்ரிக் டன் என்ற அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

மாநிலத்தில் பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்த, மூடப்பட்டுள்ள அரசு கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் பிரிவில் உள்ள நூற்பு அலகுகளை மீண்டும் புதுப்பித்தல், செயல்பட்டு வரும் அலகுகளை விரிவுபடுத்துதல், காட்டேஜ் பேசின், பலமுனை பட்டு நூற்பகம் மற்றும் தானியங்கி பட்டு நூற்பாலை எனப் பல்வேறு நிலைகளில் புதிய பட்டு நூற்பு அலகுகளை நிறுவுதல்போன்ற பல்வேறு முறைகளைக் கொண்ட நடவடிக்கை முன்மொழியப்பட்டுள்ளது.

ஏனங்களின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 1,853 ஆக உயர்த்தப்பட உள்ளது. மேலும் மாநிலத்தில் பட்டுக் கூட்டுக்குப் பிந்தைய நிலையை வலுப்படுத்தும் வகையில், ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகினை ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கோபிசெட்டிப்பாளையத்தில் நிறுவிட மத்தியப் பட்டு வாரியம் அனுமதி அளித்துள்ளது.

கடந்த ஆண்டில் 296 மெட்ரிக் டன் வெண் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இத்துறை மல்பரி நடவு, பட்டு முட்டை நுகர்வு, பட்டுக் கூடு உற்பத்தி, கச்சாப் பட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவைகளில் நிர்ணயிக்கப்பட்ட

இலக்கைக் காட்டிலும் அதிகப்படியாகச் சாதனை செய்துள்ளது. கடந்த ஆண்டில் பட்டு வளர்ச்சித் திட்டச் செயலாக்கத்திற்காக ரூ.322.434 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. அத்துடன், மத்தியப் பட்டு வாரியம் தனது பங்காக ரூ. 483.078 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்துறையின்கீழ் 17 பட்டுக் கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில் 3,203.800 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் மேற்படி அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் மற்றும் விற்பனை செய்வோரிடமிருந்து லெவி தொகையாக 0.75 சதவிகிதம் வீதம் பெறப்பட்டதில், ரூபாய் 53.049 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. கச்சாப் பட்டினை விற்பனை செய்ய, காஞ்சிபுரத்தில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் ஒன்று 1991 முதல் செயல்பட்டு வருகிறது. அண்ணா பட்டு பரிமாற்றகம் இடைத்தரகர்களைத் தவிர்த்து, பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டு நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு ஏற்படுத்தி, கடந்த ஆண்டில் 153.643 மெட்ரிக் டன் பட்டு நூல் விற்பனை செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றபின், காஞ்சிபுரத்தில் பட்டு மற்றும் சரிகைப் பரிசோதனைக் கூடம் மத்தியப் பட்டு வாரியத்தின்மூலம் நிறுவப்பட்டுள்ளது. இதில் எக்ஸ்ரே பகுப்பாய்வின்மூலம் பட்டின் தரம் உடனடியாகப் பரிசோதனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்—TANSILK, காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோவை, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய ஏழு இடங்களில் கிளை மையங்களை வைத்து, பெரும்பாலான கச்சாப் பட்டினை அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து கொள்முதல் செய்து, விற்பனை செய்து வருகிறது. இதில் தரமான பட்டு, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள்போன்ற சான்றுபெற்ற பிற நிறுவனங்களுக்கும் கடந்த ஆண்டில் 405.876 மெட்ரிக் டன் பட்டு நூல், டான்சில்க் நிறுவனத்தில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–15

பட்டு உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில், மத்தியப் பட்டு வாரியமும், மாநில அரசும் இணைந்து, 75 சதவிகிதம் வரை பட்டுப் புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கும், பல முறை பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதற்கும் மானியம் வழங்கி வருகிறது. நடப்பாண்டில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கும், பட்டு



நூற்பு செய்யும் தொழில் முனைவோருக்கும் மாநில அரசால் உயர் விளைச்சல் தரும் மல்பரிச் செடிகள் நடுதல், பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி மற்றும் பட்டு நூற்புப் பயிற்சி, மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவிடல், தனியாகப் பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்டுதல், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திடல், இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம் மற்றும் பட்டு நூற்பு அலகுகள் நிறுவிடல், தரமான கிருமி நாசினிகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல் போன்றவற்றிற்கு மத்திய, மாநில அரசுகளால் உதவிகள் வழங்கப்படும்.

நடப்பாண்டில், இரு சுழற்சியினப் பட்டு வளர்ப்பு செய்யப்பட்டு, உற்பத்தி அதிகரிக்கப்படும். இரு சுழற்சியினப் பட்டு முட்டை உற்பத்தி 10 இலட்சமாக உயர்த்தப்படும். ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகு, நான்கு பல முனை பட்டு நூற்பு அலகுகள் ஆகியவற்றை நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பட்டு வளர்ச்சிப் பணிகள் தொகுப்பு அணுகுமுறையில்—Cluster Approach—கவனம் செலுத்தி, செயல்படுத்தப்படும். இந்த முறையில் திட்ட உதவிகள் ஒட்டுமொத்த வடிவில் பயனாளிகளுக்கு வழங்கப்படும். பட்டு நெசவுக்குத் தேவையான பட்டு நூலைத் தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நோக்குடன் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்கும்பொருட்டு, இந்த ஆண்டில் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மல்பரி சாகுபடி செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் ரூ.15 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நடப்பாண்டு திட்டப் பணிகளுக்காக ரூ.3,122.35 இலட்சம் செலவிட நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1–8–1973 முதல் தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் பூம்புகார் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இதன் நோக்கம், தமிழகக் கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்குச் சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல், கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்த முறையான பயிற்சி அளித்தல், தரத்தை மேம்படுத்தி, அதிலுள்ள இடர்ப்பாடுகளைக் களைதல், வடிவமைப்புகளில் புதிய உத்திகளைப் புகுத்துதல், கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல் போன்றவையாகும்.

தற்பொழுதுள்ள 17 பூம்புகார் விற்பனை நிலையங்கள்மூலம் கடந்த ஆண்டு சாதனையாக ரூ.1,860 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு

ரூ.25 கோடிக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்காரப் பொருட்கள், நூக்க மர உபயோகப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் நாச்சியார்கோயில், மதுரை, தஞ்சாவூர், வாகைக்குளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது உற்பத்தி நிலையங்கள்மூலமாகப் பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. கடந்த ஆண்டு ரூ.210.36 இலட்சத்திற்குக் கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றில், 4,315 பித்தளை சலவைப் பெட்டிகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதில் சிறப்புக் கோயில் திட்டங்களும் உள்ளன. சென்ற ஆண்டில் இக்கழகத்தால், அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலின் கோபுர விமானத்திற்கு செப்புத் தகடு போர்த்தி, தங்க ரேக் அமைக்கும் பணி, ரூ.30.36 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. இதேபோல், தங்கத் தேர், மரத் தேர், செப்புத் தகடு போர்த்தும் பணிகளைப் பல கோயில்களுக்குச் செய்து வருகிறது.

ஏற்றுமதி வாய்ப்புடைய 4 கைத்திறப் பொருட்களுக்கான கைத்திறத் தொகுப்பு மையங்களை உருவாக்க, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, சென்னைபோன்ற இடங்களில் தேங்காய் ஓடு, கடற்சிப்பி, இலகு மரச் செதுக்கு வேலை, மரத்தினால் செய்யப்பட்ட மணி மாலைகள்போன்றவை உற்பத்தி செய்ய, நான்கு மாவட்டங்களில் தொகுப்பு மையங்கள் 10 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-20

கைத்தறி நெசவாளர்களைப்போல கைத்திறத் தொழில் கைவினைஞர்களுக்கும் உடல் நலப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காப்பீட்டுப் பயன்களாக, கைவினைஞர்களுக்கு இயற்கை மரணம் நேரிடும்பட்சத்தில் ரூபாய் 30,000/-, விபத்தில் உயிரிழக்க நேரிடும்பட்சத்தில் ரூபாய் 60,000/-, பகுதி செயலற்ற நிலை நேரிடும்பட்சத்தில் ரூபாய் 30,000/- முற்றிலும் செயலற்ற நிலை ஏற்படும்பொழுது ரூபாய் 60,000/- வழங்கப்படும்.



இத்துடன், 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் காப்புறுதி பெற்ற கைவினைஞர்களின் இரண்டு குழந்தைகளுக்கு வருடம் ரூ.1,200/- வீதம் உதவித் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில் கைவினைஞர்கள் கட்ட வேண்டிய காப்பீட்டுத் தொகையை 10,000 கைவினைஞர்களுக்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ.40/- வீதம் அரசே செலுத்தும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவாமிமலையிலும், கோயம்புத்தூரிலும் ஒருங்கிணைந்த கைத்திறன் மேம்பாட்டுக்கென, பொதுப் பயன்பாட்டு மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பஞ்சலோகச் சிலைகளுக்காக சுவாமிமலையிலும், பூ தையல் மற்றும் நூல் வேலை, சணல் வேலை, பனை ஓலை முடைதல், மணமூட்டும் மெழுகுவர்த்தி தயாரித்தல், ஊதுபத்தி தயாரிப்பு, தோல் பொருட்கள்போன்ற சிறுபான்மை இனப் பெண்கள் ஈடுபட்டுள்ள தொழில்களுக்காகக் கோயமுத்தூரிலும் மத்திய, மாநில அரசுகள், இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 10 இலட்சம் வழங்க உத்தேசித்துள்ளன.

மேலும், சென்னையில் ரூபாய் 2 கோடி செலவில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைக்கும் திட்டம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதேபோல் கன்னியாகுமரியிலும் அமைக்கக் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் நயம் மிக்க கடற்சிப்பிகள், மரச் சிற்பங்கள், கையினால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகள், தேங்காய் ஓட்டினாலான பொருட்கள், வாழை நார்ப் பொருட்கள் போன்றவைகளைச் செய்யும் கைவினைஞர்கள் அதிகம் உள்ளனர்.

பூம்புகார்மூலம் சிறந்த கைவினைஞர்களுக்கு வருடந்தோறும் பூம்புகார் மாநில விருது வழங்கி, மத்திய அரசின் தேசிய விருது, சில்பக் குரு விருது, யுனெஸ்கோ இளம் கைவினைஞர் விருது போன்ற விருதுகளை வழங்கி, கைவினைஞர்களை அரசு ஊக்குவித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், கதர், கிராமத் தொழில்களின் வளர்ச்சியை ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல, தொய்வடைந்த நிலையில் இருந்த உற்பத்தி

இந்த 11 மாதங்களில் கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.
இந்த உற்பத்திப் பணிகளுக்குத் தேவையான இராட்டைகள்
மற்றும் தறிகளைப் பழுது நீக்கம் செய்து, இயங்காத நிலையில் இருந்த
732 இராட்டைகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்பொழுது
1,358 இராட்டைகள் இயக்கத்தில் உள்ளன. இதன்மூலம் 1,358 நூற்பாளர்
குடும்பங்கள் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். மேலும், கடந்த
காலத்தில் 1,031 நெசவாளர்கள் மட்டும் பயன்பெற்று வந்தனர்.
தற்பொழுது 1,321 நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு
வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்களின் நலனைக்
கருத்தில்கொண்டு, நூற்போருக்கு ஒரு சிட்டத்திற்கு கடந்த ஆட்சிக்
காலத்தில் ரூ.1.25 கூலியாக வழங்கப்பட்டு வந்தது. ஏற்கெனவே சம்பளம்
உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். தற்பொழுது
அது 1–3–2007 முதல் ரூ.2 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது (மேசையைத்
தட்டும் ஒலி) அதேபோல, நெசவுப் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களது வழிகாட்டுதலின்படி, ஏற்கெனவே கடந்த ஆட்சியில்
வழங்கப்பட்டு வந்த கூலியைவிட 25 சதவிகிதம் 1–3–2007 முதல் உயர்த்தி
வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் இத்தொழிலின்மூலம் கடந்த
ஆண்டுகளில் 2,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது.
தற்பொழுது இந்த 11 மாதங்களில், முனைப்பு நடவடிக்கைகள்மூலம்
6,029 பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.
(மேசையைத் தட்டும் ஒலி) இவ்வகையில் கதர்த் துறை இந்தியாவிலேயே,
அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது.
இதை, முதல் இடத்திற்குக் கொண்டு வர முழு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறையில் 7 தச்சு மற்றும் கருமரத் தொழில் உற்பத்தி அலகுகள்
இயங்கி வருகின்றன. இதில் அரசுத் துறைகளுக்குத் தேவையான
தளவாடச் சாமான்கள் உற்பத்தி செய்யத் தேவையான நமூனாக்கள்
பெறப்பட்டு, இதன்மூலம் 400–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு
பணி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு ரூ.10
கோடிக்கு உற்பத்திக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியத் துறையின்கீழ் 19 தோல்
உற்பத்தி அலகுகள் உள்ளன. இதில் சுமார் 1,000 பணியாளர்களுக்கு
வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு
ரூ.10 கோடிக்குத் தேவையான நமூனா பெறப்பட்டு, உற்பத்தி செய்து,
விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



இத்துறையின்கீழ் இயங்கி வரும் 24 சோப்பு அலகுகளில் குளியல் சோப்பு, டிடர்ஜென்ட் சோப்பு, சலவை சோப்புபோன்றவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சுமார் ரூ. 15 கோடி அளவுக்கு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இத்துறையின்மூலம் கைமுறைக் காகிதங்கள், தேன் உற்பத்தி, அகர்பத்தி, கம்ப்யூட்டர் சாம்பிராணி, ஜவ்வாது மற்றும் சந்தன மாலைகள், வலி நிவாரணத் தைலம்போன்ற இனங்களில் தீவிரக் கவனம் செலுத்தி, உற்பத்தி, மற்றும் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1–25

மேலும், சுய உதவிக் குழுக்கள்மூலம் தயாரிக்கப்படும் பொருட்கள், கதர் ஆணைக் குழுவினுடைய கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் நிதியுதவிபெற்று, தொழில் முனைவோரிடம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும், கதர் வாரியத்தின் அங்காடிகள்மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் இத்துறையில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் இருந்து வந்த ஓய்வூதிய நிலுவைப் பயன்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.5.18 கோடி ஓய்வூதிய நிலுவைப் பயன்கள் வழங்கியுள்ளார்கள். மேலும், ஆறாவது ஊதியக் குழு நிலுவைத் தொகை, 60 சதவிகிதம் நிலுவைகளை வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கிட ரூ.2.35 கோடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் உள்ள மாநில இணையம் மற்றும் மாவட்டச் சம்மேளனங்களில் 2005–2006 ஆம் ஆண்டு ரூ.749.37 இலட்சத்திற்குப் பனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.804.36 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் உற்பத்தி ரூ807.53 இலட்சமாகவும், விற்பனை ரூ.857.15 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மாநில இணையம் மற்றும் மாவட்டச் சம்மேளனங்களின்மூலம் சுமார் 6 இலட்சம் ஆண், பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பனை மரம், தென்னை மரம் மற்றும் ஈச்ச மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்ந்து எடுத்துச் செல்லவும்,

பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கு ஓராண்டிற்கு உரிமம் வழங்கப்பட்டதை இவ்வாண்டு முதல் மூன்று ஆண்டுகள் முடிய உரிமம் நீட்டித்து, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை சம்பந்தப்பட்ட புதிய அறிவிப்புகள்@ புத்தக வடிவில் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உறுப்பினர்கள் கொடுத்துள்ள 137 வெட்டுத் தீர்மானங்களையும் மிகக் கவனத்துடன் படித்துப் பார்த்தேன். எதிர்காலத்தில் அதில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதிகூறி, அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் உறுப்பினர்கள் திரும்பப்பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்மீதான எனது பதிலுரையை இந்த மாமன்றத்திலே நிகழ்த்த வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தினைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லோரும் வியந்து, ஏறெடுத்துப் பார்க்கின்ற தலைவர், 20 ஆம் நூற்றாண்டின் இந்தியச் சரித்திரத்தில் பல பக்கங்களை ஆளக்கூடிய தலைவர், மத்திய அரசின் குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள் பலரை உருவாக்கிய தலைவர், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள 30 மாநில முதல்வர்களும் கடைப்பிடிக்கின்ற பல முன்னோடித் திட்டங்களை உருவாக்கிய தலைவர், இசைத் தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்று துறைகளிலும் முத்திரை பதித்த தலைவர், தொடர்ந்து 40 ஆண்டு காலம் ஒரு கட்சியின் தலைவராக இருக்கின்ற தலைவர், தொடர்ந்து வெற்றிபெற்று, 50 ஆண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்றத்தில்

@ 994 முதல் 999 வரையிலான பக்கங்களில் இணைப்பு–V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தோல்விக்கே தோல்வி தந்து, கின்னஸ் சாதனை படைத்த தலைவர், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தொடர்ந்து 70 ஆண்டு காலம் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட தலைவர், ஒரு சில சொட்டு மையால் தேர்தல் அறிக்கை தயாரித்து, தேர்தல் அறிக்கைக்கு இலக்கணம் படைத்து, நாட்டையே தன் பக்கம் திருப்பிய தலைவர், சொன்ன தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் தினம், தினம் நிறைவேற்றி வரும் தலைவர், என்னை 1965 ஆம் ஆண்டு, இளம் பிராயத்திலேயே அடையாளம் கண்டு, 1971 ஆம் ஆண்டு முதல் இந்த அரிய சபையின் உறுப்பினராக மூன்று முறை இடம்பெறச் செய்து, இரு முறை அமைச்சராகவும் உருவாக்கிய என் குலத் தலைவர், தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் மாண்புமிகு கலைஞர் அவர்களை முதலிலே வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எங்கள் கழகத்தின் சொத்து, செந்தமிழ்ச் செல்வர், என் வழிகாட்டி, இனமானப் பேராசிரியர் அவர்கள், என் அண்ணனைவிட அதிகம் பாசத்தோடு இருக்கும் என் அன்பு அண்ணன் ஆற்காடு வீராசாமி ஆகிய இருவரையும் வணங்குகின்றேன்.

வெண்சீர் உடையும், வெள்ளை உள்ளமும், மனதைக் கொள்ளைகொள்ளும் அழகும் ஒருங்கே பெற்று, இளைஞர் கூட்டத்தைத் தன் ஈட்டிமுனைச் சொற்களால் ஈர்த்து, எதிர்காலத்தில் இந்தச் சபையின் நாயகராக, எங்கள் நம்பிக்கை நட்சத்திரமாக உலா வர இருக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏனைய சக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, நான் எனது உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** நமது மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் தமிழகம் இன்றைக்கு உலகத் தொழில் வரைபடத்தில் முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கிறது.

நாட்டில் பல பெரிய தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்போது, அது சார்ந்த பல சிறு தொழில் நிறுவனங்கள் வளர வாய்ப்புள்ளது என்பதை அறிந்த அரசு, பதவியேற்ற 11 மாதங்களில் அதிக அளவு அன்னிய முதலீடுகளை ஈர்த்துள்ளதை அறிவோம். பல புதிய

தொழிற்சாலைகள் துவங்க வழி வகுத்து, அதன்மூலம் சிறு தொழில் வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளது இந்த அரசு. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

தமிழகத்திலே 31–3–2007 வரை சுமார் 5.3 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதிலே 16,608.34 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 36.65 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழ்நாடு, தோல் தொழில், ஆடைத் தொழில், பொறியியல் மற்றும் மோட்டார் வாகனத் தொழில்போன்ற உற்பத்தித் தொழில்களுக்கும், தகவல் தொழில்நுட்ப சேவைத் தொழில்களுக்கும் முக்கியத் தலமாக விளங்கி வருகிறது.

நாட்டின் மொத்தத் தொழிலகங்களில் ஏறத்தாழ 95 சதவிகிதத் தொழிலகங்கள் சிறு தொழில் வகையைச் சார்ந்ததாகும். மொத்த உற்பத்தியில் சிறு தொழில்களின் பங்கு 40 சதவிகிதம். மொத்த ஏற்றுமதியில் சிறு தொழில்களின் பங்கு 35 சதவிகிதம் என அமையப்பெற்றுள்ளது.

இது மட்டுமின்றி, பெருந்தொழில்களை ஒப்பிடும்போது, சிறு தொழில்கள் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடியவையாக இருக்கின்றன. வேலைவாய்ப்பு அளிப்பதில் வேளாண் தொழிலுக்கு அடுத்தபடியாக சிறு தொழில்கள் விளங்குகின்றன. சிறு தொழில்களின்மூலம் வேலைவாய்ப்பை அதிகரித்தால்தான் தற்சார்புடைய பொருளாதார வளர்ச்சி பெறும் என்பதை நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உணர்ந்து, சென்ற ஆண்டு சுமார் ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம். ஒரே இடத்தில், ஒரே மாதிரியான தொழில்கள் அதிக அளவில் இருந்தால், அவற்றை Cluster அல்லது குழுமம் என்று அழைக்கின்றோம். அந்த வகையிலே தமிழகத்தில் 50 குழுமங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 15 குழுமங்களைத் தேர்வு செய்து, அவற்றை ஊக்குவிக்கும் நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது.

அடுத்து, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம். மத்திய அரசின் திட்டமான பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம், படித்த இளைஞர்களுக்கு சுய தொழில் செய்ய நமது அரசு பெரிய உதவிகளைச் செய்து வருகிறது.



வங்கியாளர்களின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை அறிந்த நமது அரசு, மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம், அவர்கள் தலைமையில், நமது கோட்டையில் மாண்புமிகு நமது நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும் 9–9–2006 வங்கியாளர்களின் தலைமை அதிகாரிகளை இங்கே வரவழைத்து ஒரு கூட்டம் நடத்தியதன்வாயிலாக, கடன் ஒப்புதல் விழுக்காடு கடந்த காலத்தில் இல்லாத அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

2006–2007 ஆம் ஆண்டு 27,000 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 28,139 நபர்களுக்கு ரூபாய் 116.80 கோடி மதிப்பில் கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் சாதனை விழுக்காடு 104 சதவிகிதம் ஆகும். இத்திட்டம் ஆரம்பித்த 13 வருடங்களில் இதுவே அதிகமான சாதனையாகும்.

சிறு தொழில்களுக்கு மானியம். கடந்த ஆட்சியில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூபாய் ஒரு கோடி அளவிற்கான வேளாண் சார் தொழில்கள் ஆரம்பிக்க அறிவிக்கப்பட்டது. முன்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஆட்சியில் கொடுக்கப்பட்ட பின்தங்கிய வட்டாரங்களுக்கு 15 சதவிகிதம் முதலீட்டு மானியம் மற்றும் 40 சதவிகிதம், 30 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் என்ற விகிதாச்சாரத்தில் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட மின் மானியத்தை நிறுத்திவிட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால் நடந்தது என்னவென்றால், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 257 ஊராட்சி ஒன்றியங்களிலே மட்டும் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதிலும் 98 ஊராட்சிகளிலே மட்டும்தான் அவர்கள் நினைத்த ஒரு கோடி ரூபாயிலே தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தில் ரூபாய் 9 கோடி மானியம் மட்டுமே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு இன்றைய ஆட்சியில் அவர்கள் கொடுக்காமல் விட்டுச் சென்ற அந்த மானியத்தில் 6 கோடி ரூபாயை இப்போது நாங்கள் வழங்கியிருக்கிறோம்.

பிற்பகல் 1–35

385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சுமார் ரூ.60 கோடி மானியம் வழங்கப்பட வேண்டும். ஆனால், இந்தத் திட்டத்தின்மூலம் மொத்தமே ரூ.15 கோடி மட்டுமே மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், மாநில அளவில் தொழில் முனைவோர்களைத் தேர்வு

செய்யும் முறையினால் தொழில் முனைவோர்களுக்கு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. ஒரு வட்டாரத்திற்கு அதிகபட்சமாக ரூ.15 இலட்சம்தான் மானியம் ஒதுக்கப்பட்டது. மேலும், 5 வேளாண் சார் தொழிலகங்கள்தான் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கட்டுப்பாடும் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. ஆகவே, நமது அரசு பின்தங்கிய வட்டாரங்களைக் கண்டறிந்து, மானியம் வழங்கும் முறையை ஒழுங்குபடுத்த ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அதன் அறிக்கையை 26–4–2007 அன்று பெற்றிருக்கின்றது. அந்த அறிக்கையை ஆராய்ந்து, பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் எல்லாத் தொழில்களுக்கும் முதலீட்டு மானியம், மின் மானியம் போன்றவற்றை மீண்டும் வழங்கவுள்ளோம். மானியத் தொகை எவ்வளவு விழுக்காடு என்பதைப் பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள். இவ்வாண்டு பின்தங்கிய பகுதிகளுக்கான முதலீட்டு மானியத் திட்டத்திற்காக முன்பணமாக ரூ.20 கோடி ஒதுக்கியிருக்கின்றோம். இருப்பினும், கூடுதல் தேவையேற்படின் நிதி ஒதுக்கீடு செய்ய நிதித் துறை இசைவளித்துள்ளது.

**மானியம் வழங்குவதில் ஒப்பீடு:** 1996 முதல் 2001 வரை நடைபெற்ற 5 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ.137.83 கோடி நிதி உதவி சிறு தொழில்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. ஆனால், 2001 முதல் 2006 வரை நடைபெற்ற 5 ஆண்டு கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சிறு தொழில் மானியமாக மொத்தம் ரூ.56 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. மேலும், 1996–2001 வரை இருந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட தொழில்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ரூ.7 கோடி மின் மானியம் கடந்த 5 ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. கலைஞர் அரசு பொறுப்பேற்ற 9 மாதத்திற்குள்ளாகவே அந்த 7 கோடி ரூபாயை, 612 நிறுவனங்கள் பயன்பெற வழிவகை செய்யப் பட்டுவாடா செய்யப்பட்டது.

**மின் மானியம்:** அண்ணா மறுமலர்ச்சி புதிய திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள் மத்திய அரசிடம் முதலீட்டு மானியம் பெற்றால், தமிழக அரசிடம் முதலீட்டு மானியம் பெற முடியாத நிலை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அந்நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் மின் மானியத்தையும் பெறும் வகையில் புதிய ஆணை பிறப்பித்துள்ளது.

**பின்முனை வட்டி மானியம்:** சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில்களில் தொழில்நுட்ப மேம்பாடு—Technology Upgradation செய்துகொள்ளப் பெறப்படும் கடன்களுக்கான வட்டிச் சுமையைக்



குறைக்க அதிகபட்சமாக 3 சதவிகிதம் வட்டி மானியம் வழங்கப்படுகின்றது. இதுவரை இத்திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு ரூ.267.42 இலட்சமும், நமது ஆட்சி பொறுப்பேற்ற 10 மாதங்களில் மட்டும் ரூ.107.98 இலட்சமும் வட்டி மானியம் வழங்கப்பட்டது.

**சிறு தொழில்களுக்குப் புதிய சட்டம்:** சிறு தொழில்களுக்கான சட்டங்கள் இல்லாத குறையைப் போக்க. மத்திய அரசு 2006 ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி நுண் தொழில், சிறு தொழில் மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம், M.S.M.E.D. Act என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, தமிழகத்திலும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தின்மூலம் சிறு தொழில்களுக்கு வரையறை வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இயந்திரத் தளவாட முதலீடு ரூ.25 இலட்சம் வரை உள்ள தொழில்கள் நுண் தொழில்கள் எனவும், ரூ.5 கோடி வரை உள்ள தொழில்கள் சிறு தொழில்கள் எனவும், ரூ.10 கோடி வரை உள்ள தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளன. சேவைத் தொழில்களைப் பொறுத்தமட்டிலே, Service sector— இயந்திரத் தளவாட முதலீடு ரூ. 10 இலட்சம் வரை உள்ளவை நுண் சேவை நிறுவனங்களாகவும், ரூ.2 கோடி வரை உள்ளவை சிறு சேவை நிறுவனங்களாகவும், ரூ.5 கோடி வரை உள்ளவை நடுத்தரச் சேவை நிறுவனங்களாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்தப் புதிய சட்டப்படி 6,788 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

**ஒற்றைச் சாளரத் தொழில் அனுமதி:—Single Window Clearance:** இந்தத் துறை சார்ந்த மாவட்டத் தொழில் மையங்கள் ஒற்றைச் சாளர முறையில், தொழில் முனைவோர்களின் இடர்ப்பாடுகளைக் களைந்து, சட்டபூர்வமான அனுமதிகளைப் பெற்றுத் தருகிறது. இவ்வாண்டு 1,329 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,188 விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–40

**சிறு தொழில் நிறுவனங்களுக்கு விருது:** கடந்த ஆட்சியில் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வருடந்தோறும் விருதுகள் வழங்கி, திறம்படச் செயல்படும் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படாமல் இருந்தன. 2002–2003 ஆம் ஆண்டிற்கான விருதுகள் 2005–2006–லேதான், காலம் தாழ்த்தி வழங்கப்பட்டன. 2002–2003–க்குப்பின் உள்ள ஆண்டுகளுக்கான விருதுகள் இதுவரை வழங்கப்படவே இல்லை. சிறு தொழிலகங்களின்

நண்பனாக விளங்கும் கலைஞர் அரசு, ஒவ்வோர் ஆண்டும் தடையின்றி விருதுகள் வழங்கும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். விருதுத் தொகையும் அதிகப்படுத்தப்படும்.

**சிறு தொழில் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை (VAT):** சென்ற அரசு செயல்படுத்தத் தவறிய மதிப்புக் கூட்டு வரி முறையை இவ்வரசு பொறுப்பேற்றவுடனேயே செயல்படுத்தியுள்ளது. இது சிறு மற்றும் நுண் தொழில்களுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் சலுகையாகும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ரூ.11,000/– என்ற விலைக்கு விற்கப்படும் ஒரு மின்சார மோட்டார், 10 சதவிகித வரியோடு சேர்த்து 11,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்த மோட்டார், VAT வரி அமலுக்கு வந்தவுடன், 10 சதவிகித வரி 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, ரூ.10,400/– என்று ஆகின்றது. அதாவது, இப்பொழுது 4 சதவிகிதம் VAT வரிக்கு 400 ரூபாய் அதிகமாகிறது. அதே சமயம், மோட்டார் உற்பத்திக்கு வாங்கப்படும் Bearing, Coil, Bolt, Nut போன்றவற்றிற்கு அவர்கள் செலுத்தும் வரி ரூ.280/–. அவர்கள் செலுத்த உள்ள ரூ.400/–ல் கழித்தால் வெறும் ரூ.120/– மட்டும் அரசுக்கு வரியாகக் கட்ட வேண்டும். ஆகவே, இப்பொழுது மோட்டார் விலை ரூ.11,000/–க்குப் பதிலாக ரூ.880/– குறைந்து, ரூ.10,120/–க்கு விற்கப்படுகின்றது. இதேபோல, எல்லாத் தொழில்களுக்கும், இந்த VAT வரியைக் கழக அரசு அமல்படுத்தியதால், குறிப்பாக, சிறு, குறுந்தொழில்களுக்கு மிகப் பெரிய சாதகமான நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

**தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்:** நமது நாட்டில் வேலைவாய்ப்பை அதிக அளவில் உருவாக்க, தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, கூட்டு முயற்சியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. கடந்த 5 ஆண்டுகளில் நடத்தப்படாத தொழிற்கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நமது அரசு பொறுப்பேற்றவுடன் ஜூன் மாதம் தேர்தலை நடத்த அரசு முடிவெடுத்துள்ளதற்குத் தொழிற்கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் அமைச்சர் என்ற முறையிலே எனது நன்றியினைக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொழில் வணிகத் துறையின்கீழ் தற்பொழுது 340 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 60,861 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டு இலக்கான ரூ.377 கோடி விற்று, முதல் செய்ய வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிஞ்சி, ரூ.418.04 கோடி விற்று முதல் சாதனையை இந்தச் சங்கங்கள் எய்தியுள்ளன. இதன்மூலம் 1,05,802 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, ரூ.18.88 கோடி கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இதில் தேயிலை, சேகோ, கயிறு சங்கங்கள் முக்கியத்துவம்பெற்ற சங்கங்களாக விளங்குகின்றன.



**தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள்:** நீலகிரி மாவட்டத்தில் 63,000 விவசாயிகள் 30,000 எக்டேரில் தேயிலையைப் பயிரிட்டு வருகின்றனர். மேற்படி விவசாயிகளின் நன்மைக்காக, அவர்களின் நலன் காக்க, தமிழக அரசு 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றது. இதில் 20,000 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டில் 555.73 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.145.53 இலட்சம் கிலோ உற்பத்தி செய்யப்பட்டது. இதன் விற்பனை மதிப்பு ரூ.66.88 கோடியாகும். தேயிலை விவசாயிகளுக்கு சராசரியாகக் கடந்த ஆண்டு ஒரு கிலோ பச்சைத் தேயிலை ரூ.8.03–க்கு வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சராசரி விலையைவிடக் கூடுதலாகும் என்பதை எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, உண்ணாவிரதம் தேவையில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

**சேகோசர்வ் தொழிற்கூட்டுறவு நிறுவனம்:** தமிழகத்தில் 1.2 இலட்சம் எக்டேரில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு, 48 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்திய ஸ்டார்ச் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 90 சதவிகிதம் ஆகும். தமிழகத்தில் உள்ள 550 சேகோ நிறுவனங்களில் 364 நிறுவனங்கள் சேகோசர்வ் என்ற கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராக உள்ளனர்.

உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க சேகோ தொழிற்சாலைகளை நவீனப்படுத்த 30 நிறுவனங்களுக்கு ரூ.56 இலட்சம் மானியமாக இந்த ஆண்டு வழங்கப்படும். மேலும் சேகோசர்வ் நிறுவனத்தில், பரிசோதனை மையம் அமைக்க ரூ.1.2 கோடியும், பயிற்சிக்கு ரூ.10 இலட்சமும் அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பிற்பகல் 1–45

சேகோசர்வின்மூலம் 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.223.79 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் செய்யப்பட்டு, அதில் ரூ.1.28 கோடியை இச்சங்கம் இலாபமாக ஈட்டியதுடன் ரூ.4.62 கோடியை அரசுக்கு வரியாகச் செலுத்தியுள்ளது.

**கயிறு தொழிற்கூட்டுறவு சங்கம்:** தமிழகம் தென்னை நார் உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. மூன்றரை இலட்சம் எக்டேரில் தென்னை இங்கே சாகுபடி செய்யப்படுகிறது. அதில் கிடைக்கும் உரி தேங்காய் மட்டைமூலம் 1,19,000 டன் நார் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. நமது மாநிலத்திலுள்ள 76 கயிறு தொழிற்கூட்டுறவு சங்கங்களின்மூலம் 2006–2007–ல் ரூ.10.18 கோடி அளவிற்கு விற்பனைச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**TAICO BANK**: தாய்கோ வங்கி எனப்படும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி தமிழகத்திலே 23 மாவட்டங்களில், 29 கிளைகளைக்கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த வங்கி ரூ.262.40 கோடியை வைப்பு நிதியாக இந்த ஆண்டு திரட்டியுள்ளது. அதில் ரூ.230.24 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வங்கி 2006–2007–ல் ரூ.3,409.67 கோடியை வர்த்தகமாகச் செய்துள்ளது. மேலும், ரூ.3.16 கோடியை இலாபமாக ஈட்டியுள்ளது. ஆனால்., கடந்த ஆட்சியிலே 2005–2006–ல் ரூ.1.7 கோடி மட்டுமே இலாபமாக ஈட்டப்பட்டது.

இந்த வங்கியின் புதிய கிளைகள், சென்னையில் ஈக்காட்டுத்தாங்கலிலும், திருப்பூர், கிருஷ்ணகிரி, திருவாரூர் ஆகிய இடங்களிலும் இந்த ஆண்டு துவக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (குறுக்கீடு)

சிட்கோ: 1972 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் சிறு தொழில்களுக்காகத் தொழிற்பேட்டைகளை உருவாக்க சிட்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தில் இதுவரை 78 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு, 9,175 மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு 8,726 மனைகள் மற்றும் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்பேட்டைகளில் 6,347 நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இதன்மூலம் ரூ.11,000 கோடி ஆண்டு வர்த்தகம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதில் ஏற்றுமதி மட்டுமே சுமார் ரூ.2,000 கோடியாகும். இந்தத் தொழிற்பேட்டைகளில் மொத்தம் 5.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்தத் தொழிற்பேட்டைகளில் பொறியியல், மின்னணுத் தொழில்கள், ஆட்டோ உதிரிப் பாகங்கள்,



இரசாயன்ம், நெசவுத் தொழில், உணவு பதப்படுத்துதல் தொழில்கள், கால்நடைத் தீவனம், பூச்சிக் கொல்லி மருந்துகள்போன்ற பல்வகைத் தொழில் நடவடிக்கைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

சிட்கோ நிறுவனத்தின்மூலம் IID, IIUS, ACA போன்ற திட்டங்களின்கீழ் தொழில் மேம்பாட்டுப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. கிண்டி தொழிற்பேட்டைக்கு ரூ.13 கோடி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், அந்த கிண்டி தொழிற்பேட்டையை மேம்பாடு செய்வதற்கு 14–12–2006 அன்று துவக்க விழாப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. செப்டம்பர் 2007–லே இவற்றின் பணிகள் யாவும் முடிவடையும்.

IIUS திட்டத்தின்கீழ் ரூ.47 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர், திருமழிசை மற்றும் திருமுடிவாக்கம் ஆகிய தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் 4–4–2007 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் யாவும் ஜனவரி 2008–ல் முடிவடையும்.

இதேபோல, ACA என்ற திட்டத்தின்கீழ் ரூ.2.44 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலும், திருநெல்வேலியில் பேட்டை என்ற இடத்திலும், மதுரையில் கப்பலூர் தொழிற்பேட்டையிலும் மேம்பாட்டுப் பணிகள் துவக்கப்பட உள்ளன.

மத்திய அரசின் மானிய உதவியுடன் தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டுப் பணிகளை ஒரு புறம் செயல்படுத்தி வருவதுடன், மாநில அரசின் மானியம் மற்றும் சிட்கோவின் சொந்த நிதி ஆதாரத்திலிருந்தும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரை, சேலம், ஈரோடு, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, திருப்பூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு ஆகிய 10 இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் மொத்தம் ரூ.281.25 இலட்சம் செலவில் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

பிற்பகல் 1–50

2007–2008 ஆம் ஆண்டில் தேனி, அரியமங்கலம், தருமபுரி, கடலூர், வடலூர், பிள்ளையார்பட்டி, திருவண்ணாமலை, காட்பாடி, நாகர்கோவில், புதுக்கோட்டை ஆகிய 10 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**புதிய தொழிற்பேட்டைகள்:** மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேர் தங்களுடைய தொகுதிகளிலே புதிய தொழிற்பேட்டைகள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கைகளுக்கிணங்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட பகுதிகளிலே புதிய தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க வாய்ப்புகளை ஆராய உத்தரவிட்டுள்ளார்கள்.

2007–2008 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் போளுப்பள்ளியிலும், காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்திலும், திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் பகுதி–இரண்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதி–இரண்டிலும், எதிர்க்கட்சி நண்பர்கள் கேட்டுக்கொண்ட பெரம்பலூர் மாவட்டம், எலம்பலூர் ஆகிய இடங்களிலும் தொழிற்பேட்டைகள் துவங்கப்படவுள்ளன.

அதேபோல, தொழிற்பேட்டையே இல்லாத திருவாரூர் மாவட்டத்திலும், நமது மாண்புமிகு துணை சபாநாயகர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சேலம் மாவட்டம், சங்ககிரியிலும், நமது நண்பர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மொடக்குறிச்சியிலும், மதுரை மாவட்டம், சேடப்பட்டியிலும், வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஆகிய இடங்களிலும் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றி விரைவிலே ஆராய்ந்து, அவை செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) முடிந்தது. ஒரே ஒரு நிமிடம் (குறுக்கீடுகள்) சபாநாயகர் அவர்களே, இது முக்கியமான சப்ஜெக்ட். (குறுக்கீடு)

**டான்சி:** இது கொஞ்சம் பிரச்சினையுள்ள சப்ஜெக்ட். சென்ற ஆட்சிக் காலத்தில் டான்சி நிறுவனம் மூடும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. அது பற்றி இந்த மாமன்றத்திலும், தமிழ்நாட்டிலும் பல முறை பேசப்பட்டது. எழுதப்பட்டது. இது எல்லோரும் அறிந்ததே. அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. (குறுக்கீடுகள்)

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில், நலிந்து போன டான்சியின் 28 தொழிலகங்களும் இலாபத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டான்சியில் சென்ற ஆண்டான 2006–2007–ல் 60.75 கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்திச் சாதனை நிகழ்த்தப்பட்டு, 70 இலட்சம் ரூபாய் இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"**

என்ற அய்யன் திருவள்ளுவரின் வரிகளுக்கேற்ப தலைவர் கலைஞர் அவர்கள் 84 வயதிலும் ஓய்விற்கே ஓய்வு கொடுத்துப் பணியாற்றி, சட்டமன்றத்தில் பொன் விழாக் காணும் இந்த ஆண்டில் நானும் சிறு தொழில் துறைக்கான மானியக் கோரிக்கையை வைத்து உரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர், இந்த மானியக் கோரிக்கையிலே உரையாற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளை எல்லாம் இந்தத் துறை பரிசீலிக்கும். அதேபோல, 150–க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் கடந்த 2 நாட்களாகப் படித்து அதிகாரிகளோடு கலந்து பேசியுள்ளேன்.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்பைப் பதிந்துகொள்ளலாம் என்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** வெட்டுத் தீர்மானங்களை வேண்டுமென்றால் எல்லோருக்கும் காட்ட இருக்கின்றேன். ஆகவே, அந்த வெட்டுத் தீர்மானங்களில் கூறப்பட்டிருக்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் எதிர்காலத்திலே இந்தத் துறை பரிசீலிக்கும் என்பதைக் கூறி, என்னுடைய துறையின் புதிய அறிவிப்புகளைப் புத்தகமாக அச்சிட்டு வழங்கியுள்ளேன். அதனை நான் படித்ததாகக் கருதி@ அவைக் குறிப்பேட்டில் பதிந்து கொள்ள வேண்டும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, எனது மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, இன்றைக்குப் போதும். இவ்வளவு போதும் உங்களுக்கு. உட்காருங்கள். (குறுக்கீடு)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

@ 1000 முதல் 1007 வரையிலான பக்கங்களில் இணைப்பு–VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–55

## (உ) கோரிக்கை எண் 44 – சிறு தொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"சிறு தொழில்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,12,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.35,71,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஊ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.



"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.57,50,44,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–5–2007) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

72. 2005–2006 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

73. 2005–2006 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

74. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[2007 மே 2

75. 2005–2006 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

76. 2005–2006 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

77. 2005–2006 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

78. 2005–2006 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

79. 2005–2006 ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

80. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

176. மானியக் கோரிக்கை எண் 44–சிறு தொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

177. சிறு தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)



2007 மே 2]

178. மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

179. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயலாக்கத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

180. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள், 2006 என்கிற சிறு புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு I

(773 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## அறிவிப்புகள் 2007-2008

### 1. விவசாயிகள் நலன்

வேகமாக வளரக்கூடிய மற்றும் வறட்சியினைத் தாங்கக்கூடிய அரிய மற்றும் மண்ணிற்கேற்ற இனங்களை தமிழ்நாடு வனத் துறை நீண்ட ஆராய்ச்சிமூலம் கண்டறிந்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய வருமானத்தைப் பெருக்க வகை செய்யும்பொருட்டு இந்த ஆண்டு 50.00 இலட்சம் மரக்கன்றுகள் ரூ.2.0 கோடி செலவில் இலவசமாக வழங்கப்படும்.

தனியார் விவசாய நிலங்களில் உள்ள தரிசு நிலங்களில் அதிக விளைச்சல் தரக்கூடியவையும், வறட்சியினைத் தாங்கக் கூடியவையுமான தடிமர இனங்களை வளர்ப்பதற்காக, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிக்க ஒரு புதிய திட்டம் தொடங்கப்படுகிறது. இத்திட்டமானது ரூ.10.00 கோடி செலவில் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 50,000 ஏக்கர் தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்படும்.

வேளாண் விளைபொருட்களைக் கொண்டு செல்ல விவசாயிகள் வனச் சாலைகளை உபயோகிக்கின்றனர். இதற்கென சாலை வரி வசூலிக்கப்படுவதால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். விவசாயிகள் எந்தவித இடையூறுமின்றி வனச் சாலைகள் வழியாக விளைபொருட்களை எடுத்துச் செல்ல, சோதனைச் சாவடியில் வசூலிக்கப்படும் சாலை வரி இந்த ஆண்டு முதல் முழுவதுமாக இரத்துச் செய்யப்படும்.

தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள், 1968-ன்படி தடிமரங்களை அனுமதிச் சீட்டு பெற்றே எடுத்துச் செல்ல வேண்டும். தனியார் நிலங்களில் மூங்கில்போன்ற பொது வகை தடிமரங்கள் வளர்க்கப்பட்டாலும், அவற்றிற்கும் அனுமதிச் சீட்டு பெற வேண்டும் என்ற அவசியம் பெரும் இடர்ப்பாட்டை

ஏற்படுத்துகிறது. எனவே விவசாயிகள் தனியார் நிலங்களில் வளர்க்கப்படும் பல தடிமர இனங்களுக்கு தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகளிலிருந்து விலக்களிக்கப்படும். இந்த மர வகைகளுக்கு இனிமேல் அனுமதிச் சீட்டு பெற வேண்டியதில்லை.

5. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்திலும் கன மீட்டர் ஒன்றுக்கு ரூ.3,800/- தேக்கு மரத்திற்கும், கன மீட்டர் ஒன்றுக்கு ரூ.7,600/- ஈட்டி மரத்திற்கும் உரியத் தொகை வசூல் செய்யப்படுகின்றது. இவ்வுரியத் தொகை மாநிலத்தின் பிற பகுதிகளில் வசூல் செய்யப்படுவதில்லை. மாநிலத்திலுள்ள விவசாயிகள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டுமென்ற கோட்பாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் ஆகியவற்றிலுள்ள தேக்கு மரம் மற்றும் ஈட்டி மரத்திற்கு உரியத் தொகை வசூல் செய்வது இரத்துச் செய்யப்படும்.

### II. வனப் பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்துதல்

6. வனப்பகுதிகளில் ஏராளமான குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. சாலை வசதியில்லாததால் இவை பன்னெடுங்காலமாகப் போக்குவரத்து வசதியின்றி பின்தங்கிய நிலையில் உள்ளன. புறக்கணிக்கப்பட்ட இம்மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நடப்பாண்டில் சுமார் ரூ. 10.00 கோடி வனச் சாலைகளுக்காக செலவிடப்படும்.

7. வனப் பகுதிகளில் சாலைகள் அமைப்பதன்மூலம் மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களுக்கிடையே புதிய வழித்தடங்களில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறக் கூடும். அவ்வாறு சாலைகளை அமைப்பதற்கு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் ஒப்புதல் பெறுவது அவசியம். வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் ஆய்வறிக்கையைத் தயார் செய்து மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்புவது இத்தகைய புதிய சாலைகளை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். இந்த ஆண்டு கீழ்வரும் 5 வழித்தடங்களுக்கு வனப் பகுதிகளின்மூலம் சாலைகள் அமைப்பதற்கு ஆய்வறிக்கையைத் தயார் செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.



(அ) வருசநாடு-கம்பத்துமொட்டை-கொடிக்குளம்-கிழவன்கோயில் வழியாக ஸ்ரீவில்லிபுத்தூர் வரை

(ஆ) நரியன்காடு முதல் முள்ளுக்குறிச்சி வரை

(இ) திருச்சி மாவட்டத்திலுள்ள புளியஞ்சோலை முதல் நாமக்கல் மாவட்டத்திலுள்ள பிளாத்தூண்பட்டி வரை

(ஈ) சாக்குளத்துத்தோப்பு முதல் சாக்குளத்துமெட்டு வரை

(உ) நீலகிரி மாவட்டத்தில் சிரியூரிலிருந்து புதுப்பட்டி வரை.

### III. பழங்குடியினர் நலன்

8. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறை 19 பள்ளிகளை நடத்தி வருகிறது. இவற்றில் சுமார் 5,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு குடிநீர் வசதி, ஆய்வக உபகரணங்கள், பெண்களுக்கான தனி கழிவறை வசதி, விளையாட்டு உபகரணங்கள், வகுப்பறை அறைகலன்கள், கற்பிக்க உதவும் உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறையினரால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிமூலம் ரூ. 5.07 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து காப்புக் காட்டுப் பகுதிகளும் 2002 ஆம் ஆண்டில் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சரணாலயமாக அறிவிக்கப்பட்டன. இதனால் பல நூற்றாண்டுகளாக அப்பகுதிகளில் உள்ள பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளையும், அவற்றிற்குச் செல்லும் சாலைகளையும் சரணாலயப் பகுதியிலிருந்து நீக்கி அக்குடியிருப்புகளுக்கு சாலை, மின்சாரம், குடிநீர்போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### IV. மகளிர் மேம்பாடு

10. வனத் துறையின் மேற்பார்வையில் 5,067 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 750 மகளிர் சுய

[2007 மே 2

உதவிக் குழுக்கள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களில் நடப்பாண்டில் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.5,000 வரை சிறு கடன் வழங்கப்படும். இந்த சுய உதவிக் குழுக்கள் பால் பண்ணைத் தொழில், சோப்பு தயாரிப்பு, உணவு பதப்படுத்துதல், காய்கறி வளர்ப்பு மற்றும் விற்பனைபோன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடும். கிராமப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து சுழற்சி முறையில் கடன் உதவி, வங்கிக் கடன் பெறுவதற்கான அரசுசாரா நிறுவனங்கள் உதவி, அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மகளிர் திட்டம்மூலமாகத் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சி போன்ற பல்வேறு உதவிகள் வனத் துறைமூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு செய்து தரப்படும்.

## V. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பயன்கள்

11. ஊராட்சிகளுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் வளர்க்கப்படும் சமூகக் காடுகளின் ஏல வருமானத்தில் பங்குத் தொகை பெறுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமையுண்டு. இருப்பினும், பல ஆண்டுகளாக இந்தப் பங்குத் தொகை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அமைப்புகளுக்குச் சேர வேண்டிய பங்கான ரூ. 15.9 கோடி ஒரே தவணையில் இந்த ஆண்டு வழங்கப்படும்.

12. இந்த ஆண்டு முதல் சமூகக் காடுகள் தோட்டங்களை ஏலம் விடுவதனால் வரும் வருமானத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பங்கினை, அந்தந்த நிதியாண்டுக்குள்ளேயே பிரித்து வழங்கப்படும். இவ்வாறு வழங்குவதன்மூலம், ஊராட்சி அமைப்புகள் புது உத்வேகத்துடன் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த முடியும்.

## VI. வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல்

13. 2006-2007 ஆம் ஆண்டில் சூரிய மின் வேலி அமைத்ததன் காரணமாக வன விலங்குகள் வனங்களின் அருகே உள்ள கிராமங்களில் புகுந்து சேதம் விளைவித்தது பெரிதும் குறைக்கப்பட்டது. வனங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் சூரிய மின் வேலி அமைப்பதைப் பெரிதும் வரவேற்றுள்ளனர். 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 424 இலட்சம்



2007 மே 2]

செலவில் 262.5 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 480 இலட்சம் செலவில் 300 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்படும்.

14. வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் முதன்முறையாக மாநில அரசு 2006-2007 ஆம் ஆண்டில் வன விலங்குகளால் மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 2007-2008 ஆம் ஆண்டிலும் வன விலங்குகளினால் பாதிப்பு அடைபவர்களுக்கு இழப்பீடு வழங்க ரூ. 50 இலட்சம் அனுமதிக்கப்படும்.

## VII. உயிரியல் பூங்கா

15. சென்னைக்கு அருகே உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலாவினை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு திட்டச் செயல்பாடுகள் 2007-2008-ல் நடைபெறும். இந்தியாவில் 1500க்கும் மேற்பட்ட வண்ணத்துப் பூச்சி இனங்கள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 300 இனங்கள் உள்ளன. ஒரே இடத்தில் பல்வேறு வகைப்பட்ட வண்ணத்துப் பூச்சிகளை அவற்றின் இயற்கையான சூழலில் கண்டுகளிப்பதற்காக வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஒரு வண்ணத்துப் பூச்சி பூங்கா உருவாக்கப்படும்.

16. மத்திய உயிரியல் குழுமத்தின் உதவியுடன் திருச்சி மாவட்டத்தில் 100 எக்டேர் பரப்பளவில் ஒரு உயிரியல் பூங்கா ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இஃது தமிழகத்தில் வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் உயிரியல் பரவல் தன்மை பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் பெரிதும் உதவும்.

17. கிண்டி சிறுவர் பூங்கா (Children's Park—Guindy) ஆண்டுதோறும் 3 இலட்சம் சிறார்கள் வந்து செல்லும் ஒரு வன உயிரினக் கல்வி மையமாகும். சிறார்களிடையே வன உயிரினப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், கிண்டி சிறுவர் பூங்காவிற்கு வருகை தரும் அனைத்து சிறுவர்களும் இந்த ஆண்டு முதல் நுழைவுக் கட்டணமின்றி இலவசமாக அனுமதிக்கப்படுவர்.

## VIII. வனப்பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

18. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியுடன் ரூ. 567.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வனப் பகுதிகளை ஒட்டி வாழும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் இந்தத் திட்டத்தின்கீழ் செய்து தரப்படுகின்றன. இயற்கை வளமான சுற்றுச்சூழலை மீட்பதற்கான காடு வளர்ப்புப் பணிகளுடன், ஊரகப் பகுதி மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கி, அவர்களின் வருமானத்தை உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2007-2008 ஆம் ஆண்டில், 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 230 வன எல்லையோர கிராமங்களைச் சேர்ந்த 51,500 எக்டேர் பரப்பில் 115.22 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

19. தமிழகத்தில் மூன்று மாவட்டங்களில் மட்டுமே மாவட்ட வன அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. 2007-2008 ஆம் ஆண்டில் திருவாரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மாவட்ட வன அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படும்.

20. இத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 9,188 ஆகும். இவற்றில் 1,000-க்கும் மேலான இடங்கள் காலியாக உள்ளன. சிறந்த முறையில் வன மேலாண்மையினை நிறைவேற்றிட இந்தக் காலியிடங்கள் அனைத்தும் 2007-2008 ஆம் ஆண்டுக்குள் நிரப்பப்படும்.

21. வன நிலங்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்க இந்த நிதி ஆண்டில் ரூ. 173.50 இலட்சம் செலவில் 21,687 எல்லைக் கற்கள் நடப்படும்.

22. 2007-2008 ஆம் ஆண்டில், ரூ. 698.78 இலட்சம் மதிப்பீட்டில் 19 பகுதி II திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

23. உயிரியல் பரவல் தன்மை மற்றும் கரிமப் பொருட்களைப் பிரித்தெடுக்க வனங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இதனால் நுண்ணியமான வளர்ச்சி மதிப்பீடும், உயிரின பரவல் தன்மை கண்டுபிடிப்பும் அவசியமாகிறது. தாவரக் கூட்டமைவு மற்றும் நுண்ணிய வளர்ச்சிபோன்றவற்றை அறிவதற்குத் துல்லியமான கணக்கீடு அவசியமாகிறது. பல்வேறு



வன வகைகளில் தாவர அடர்த்தி, தாவர பரவல் தன்மை மற்றும் தாவர வகைகளை இனம் கண்டறிவதற்காகவும், தாவரங்களின் வளர்ச்சியைக் கணக்கிடவும் மாதிரித் தோட்டங்கள் எழுப்புவதற்கும் ரூ. 20.54 இலட்சம் செலவில் திட்டங்கள் இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

## IX. பணியாளர் நலன்

24. வனத் துறையிலுள்ள சார்நிலைப் பணியாளர்களான சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகியோர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ30/- சலவைப் படியாக வழங்கப்பட்டு வருகிறது. இதனை ரூ.100/- ஆக உயர்த்தி வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 51.00 இலட்சம் கூடுதல் செலவாகும்.

25. காட்டுத்தீயை பரவாமல் தடுக்கும் வனத் துறைப் பணியாளர்களுக்கு அதற்குத் தேவைப்படும் காலணிகளை வழங்க வேண்டியதன் அவசியம் அறிந்து தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வன ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் அனைவருக்கும், இந்த ஆண்டு முதல், வனப் பணிகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட காலணிகளை வழங்க ஆணையிட்டுள்ளார். இதனால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ. 36 இலட்சம் ஆகும்.

26. வனப் பகுதியில் பணியாற்றும் களப் பணியாளர்களான சரகர்கள், வனவர்கள், வனக் காப்பாளர்கள் மற்றும் வனக் காவலர்களுக்கு இந்த ஆண்டு 158 குடியிருப்புக் கட்டிடங்கள் சுமார் ரூ. 4.5 கோடி செலவில் கட்டப்படும்.

27. இந்த ஆண்டு முதல் அரசு ரப்பர் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் உள்ள 365 பணியாளர்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் அந்தக் கழகத்தின் அனைத்து மருத்துவமனைகளிலும் வழங்கப்படும்.

28. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 2002 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் ஊதிய ஒப்பந்தம் முடிவு செய்யப்படாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே தொழிலாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 74.62 என்ற விகிதத்திலேயே ஊதியம் பெறுகின்றனர். தொழிலாளர்கள் நலன்

காக்கும் வகையில், ஒரு ஊதிய ஒப்பந்தத்தை முடிவு செய்ய, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

## X. நகர்ப்புறங்களில் மரம் நடுதல் மற்றும் மாசுத்தடுப்பு

29. மாநகராட்சிகளிலும், அவற்றைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளிலும் நகரமயமாக்கல் மற்றும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தினாலும் காற்றின் தன்மை பெரிதும் மாசு அடைந்துள்ளதாகக் காணப்படுகின்றது. மரங்கள், கார்பன் மற்றும் மீத்தேன் வாயுக்களை உறிஞ்சுவதால் மாசு கட்டுப்பாட்டில் பெரிதும் உதவுகின்றன. எனவே மாநகராட்சிகளிலும், அவற்றைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளிலும் ரூ. 4.00 கோடி செலவில் மிகப் பெரிய நகர்ப்புற வனவியல் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

30. மாநிலத்தின் பல்வேறு நகராட்சிகளில் மரங்களைப் பெருமளவு நடுவதினால், காற்றில் கலந்துள்ள மாசு உறிஞ்சப்பட்டு, காற்றின் தன்மை தூய்மை அடையும். ஆகவே, இந்த ஆண்டு நகராட்சிப் பகுதிகளில் 108330 செடிகளை வனத் துறைமூலம் உற்பத்தி செய்து, கல்வி மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்குவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசுக்கு ரூ. 32.50 இலட்சம் செலவாகும்.

## XI. மாநில வன ஆணையம்

31. வனத் துறையானது வளமான பாரம்பரியத்தையும், நீண்ட வரலாற்றையும் கொண்டது. 2006 ஆம் ஆண்டில் 150 ஆண்டுகளை வெற்றிகரமாக முடித்த இந்தத் துறை தற்பொழுது தன்னுடைய 151 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. இத்தகைய சிறப்பான சாதனையைக் குறிக்கும் வண்ணம் மாநில வன ஆணையம் ஒன்று தோற்றுவிப்பது மிகவும் பொருத்தமாக அமையும். இந்த வன ஆணையமானது, தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். மாநில அளவில் ஒரு வன ஆணையத்தை ஏற்படுத்துவதில் தமிழகமே இந்தியாவில் முதல் மாநிலமாக விளங்குகிறது என்று இத்தருணத்தில் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன நிர்வாகத்தில் தற்போதுள்ள நிலையினை ஆராய்ந்து, வன நிர்வாகத்திற்கும், உள்ளூர் சமுதாயத்திற்கும் இடையே ஒரு அர்த்தமுள்ள நட்புறவை வளர்க்க வழிமுறைகளைக் கண்டறியவும்,



வனம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்னேற்றம் அடைவதற்கான வழிமுறைகளை வகுப்பது மற்றும் வன விஞ்ஞானக் கலைகளில் மேற்படிப்பை ஊக்குவிக்கும்வண்ணம் ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கக்கூடிய வாய்ப்பையும் ஆராய்ந்து மாநில வன ஆணையம் தம்முடைய பரிந்துரைகளை வழங்கும்.

## XII. சுற்றுச்சூழல்

32. 1998 ஆம் ஆண்டு முதல் முன்னோடி முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டு, வளர்ந்து பெருகி தற்பொழுது இயங்கி வரும் 1,200 சுற்றுச்சூழல் மன்றங்கள், வருடந்தோறும் மானியமாக ரூ. 1,250/- பெறுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு சூழல் மன்றத்திற்கும் வழங்கப்படும் மானியம், வருடத்திற்கு ரூ. 2,500/- ஆக உயர்த்தப்படும். சுற்றுச்சூழல் மன்றங்கள்மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சிறார்களிடையே சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். .

33. ராம்சார் உடன்பாட்டின்படி உலகில் உள்ள அனைத்து சதுப்பு நிலங்களும் மாசில்லாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவும் ராம்சார் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளது. பள்ளிக்கரணை சதுப்பு நிலம் சென்னைக்கு அருகில் அமைந்துள்ள தனித்தன்மை வாய்ந்த சூழல் அமைப்பாகும். கோவையில் உள்ள சலிம் அலி பறவைகள் மையம் மற்றும் இயற்கை அமைப்புமூலம் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு ஒரு மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இந்த சதுப்பு நிலத்தினைப் பாதுகாக்க நடவடிக்கைகள் இந்த நிதியாண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

34. நகர்ப்புற நீராதாரங்கள், நீரியல், உயிரியல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. பல்லாவரத்திலுள்ள பால்கேணி ஏரியை புனரமைக்கும் பணி ரூ. 10.00 இலட்சம் செலவில் 2007-2008 ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

35. சுற்றுலாத் தலமான கொடைக்கானலில் உள்ள ஏரியை மேம்படுத்த ரூ. 10.42 கோடி செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஏற்காட்டிலுள்ள ஏரியைப் புனரமைக்க ரூ. 4.38 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டங்களின்கீழ் வடிகால்கள் அமைத்தல், கழிவு நீரைத் தடுத்து

[2007 மே 2

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் திருப்பி விடுதல் மற்றும் நுண்ணுயிரிமூலம் தூய்மையாக்குதல், திடக் கழிவு மேலாண்மை ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இந்தப் பணிகள் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

## XIII. மாசு கட்டுப்பாடு

36. தமிழநாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, 25 மாவட்ட அலுவலகங்களையும், 14 சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது வாரியத் தலைமை அலுவலகம், 7 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 8 ஆய்வகங்களுக்கு மட்டும் சொந்தமான கட்டடங்கள் உள்ளன. 2007-2008 ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகக் கட்டடங்கள் முறையே ரூ. 125 இலட்சம் மற்றும் ரூ. 146 இலட்சம், ஆக மொத்தம் ரூ. 271 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்படும்.

37. சுற்றுச்சூழல் சீர்கெடுவதைக் கட்டுப்படுத்தும்வண்ணம் எட்டு மாதிரி நகராட்சிகளைத் தேர்வு செய்து, விஞ்ஞானரீதியாக நகர்ப்புற திடக் கழிவு மேலாண்மை செய்வதற்கு நிதி உதவியாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.1 கோடி வழங்கும்.

38. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதை மையக் கருத்தாக வைத்து அரசுசாரா அமைப்புகளின்மூலம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ. 60 இலட்சம் செலவில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே பெருகும்.

39. நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வாகனப் பெருக்கத்தால் நகர்ப்புறங்களில் காற்றின் தன்மை எவ்வாறு மாசுபடுகிறது என்பதைப் பல்வேறு திட்டங்கள்மூலமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. சென்னை மாநகரில் மணலி மற்றும் கத்திவாக்கம் ஆகிய இடங்களிலும், கோவை, திருச்சி, மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், தூத்துக்குடி நகரிலும் இந்தக் கண்காணிப்பு மையங்கள் இயங்குகின்றன. அவ்வாறு கண்காணிக்கப்படும் காற்றின் தன்மை பற்றிய விவரங்கள் பொது மக்கள் பார்த்து அறிந்துகொள்ளும்வண்ணம்



2007 மே 2]

ரூ. 30 இலட்சம் செலவில் எலக்ட்ரானிக் தகவல் பலகைகள் மேற்கூறப்பட்ட இடங்களில் அமைக்கப்படும்.

40. ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தும் வண்ணம் இந்த ஆண்டு முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிப்புப் பணிகளை, அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (சென்னை), பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிலையங்களில் ஆராய்ச்சித் துறைகளுடன் இணைந்து மேற்கொள்ளும்.

[2007 மே 2

## இணைப்பு II

*(786 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## அறிவிப்புகள்—2007–2008

### தமிழ் வளர்ச்சி இயக்ககம்

**1. சென்னையில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் அமைய நிலம் வழங்குதல்**

மைய அரசு தொன்மை மிகுந்த நம் செந்தமிழ் மொழியையும், செம்மொழித் (Classical language) தகுதியுடையது என்று அறிவித்துள்ளது.

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்குக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுகளுக்காக ரூ.150 கோடி கேட்கப்பட்டுள்ளது. சென்னையில், மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் அமையவும், கட்டடப் பணிகளையும் ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசுக்குக் குறைந்தது ரூ.150 கோடி மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழறிஞர்கள் ஆய்வு செய்வதற்கும் உலகத் தமிழறிஞர்கள் வந்து செல்வதற்கும் ஏற்ப, சென்னையில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் அமைவதற்குத் தற்போது தரமணியில் 5 ஏக்கர் நிலம் வழங்கப்படும்.

**2. ஆட்சி மொழிச் செயலாக்க சிறப்பாய்வுத் திட்டம்**

தமிழ் ஆட்சி மொழிப் பயன்பாட்டினை மேலும் முனைப்புடன் செயற்படுத்த, தலைமைச் செயலகத் துறைகளிலும், குறிப்பிட்ட சில துறைத் தலைமை அலுவலகங்களிலும் அனைத்துத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களையும், துணை இயக்குநர்களையும் கொண்டு சிறப்பாய்வு மேற்கொள்ளப் பெறும். இப்பணிக்காக ரூ.5.00 இலட்சம் செலவினம் அமையும்.



2007 மே 2]

**3. நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடல்**

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்கள் பொது மக்களுக்குக் கிடைக்கும் வகையில் ஆண்டுதோறும் ஒவ்வொருவரின் நூல்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நூலை வெளியிடும் பணி மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக இதற்கு இந்த நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் செலவினம் ஏற்படும்.

**4. நாட்டுடைமை நூல்கள்–இணையதளத்தில் வெளியிடுதல்**

தமிழறிஞர்களின் நூல்கள் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடம் சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்ட அறிஞர்களின் நூல்கள் இணைய தளத்தில் சேர்க்கப்படும். இந்த ஐந்தாண்டுத் திட்டப் பணிக்கு ரூ.15.00 இலட்சம் செலவினம் ஏற்படும்.

**5. தமிழ்ப் பேரகராதி சீரமைப்புத் திட்டம்–நிதியுதவி**

ஆய்வறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியைக் (Tamil Lexicon) கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும், பெருக்கியும் வெளியிடும் பணிக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதிப் பங்களிப்பை எதிர்நோக்கி இந்த நிதியாண்டில் ரூபாய் பத்து இலட்சம் வழங்கப்பெறும்.

**6. தமிழ் மருத்துவச் சுவடிகளின் செம்பதிப்புகள் உருவாக்கம்**

அச்சில் வராத அரிய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகள் வெளியிடப்பெற தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு இந்த நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் வழங்கப்பெறும்.

**7. திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவி**

திராவிடப் பல்கலைக்கழகத்தில் பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும், பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்திடும் திட்டப் பணிகளுக்குமாக இந்த ஆண்டு ரூ.10.00 இலட்சம் வழங்கப்பெறும்.

8. **பிற மாநிலங்களில் தமிழ் படிக்கும் வசதி குறைந்த மாணவ/மாணவியர்களுக்கு நிதியுதவி அளித்தல்**

குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி, இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கும், ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப்போன்ற உதவித் தொகைகள் வழங்கப்படும்.

9. **தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுதல்—பரிசுத் தொகை உயர்த்துதல்**

ஆட்சி மொழித் திட்டச் செயற்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்களில் பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் முதல் பரிசு ரூ.500/-லிருந்து ரூ.3,000/- ஆகவும் இரண்டாம் பரிசு ரூ.300/-லிருந்து ரூ.2,000/- ஆகவும் மூன்றாம் பரிசு ரூ.200/-லிருந்து ரூ.1,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கு ஆண்டிற்குக் கூடுதலாக ரூ.6,15,000/- செலவினம் அமையும்.

10. **தமிழ் மென்பொருள் பரிசு**

கணினி யுகத்திற்கேற்பத் தமிழ் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் கணியன் பூங்குன்றனார் பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/- வழங்குவதுடன் அந்த நிறுவனத்திற்குப் பாராட்டிதழும் வழங்கப்படும்.

11. **ஊர்தி வசதி அளித்தல்**

தமிழ் வளர்ச்சித் துறையில் இயக்குநர் ஒருவர், துணை இயக்குநர் மூவர், உதவி இயக்குநர்கள் 32 பேர் உள்ளனர். ஆனால், இத்துறைக்கென்று ஒரே ஒரு சீருந்து மட்டுமே உள்ளது. ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தில் முனைப்புடன் ஈடுபட ஏதுவாக, முதற்கட்டமாக மூன்று துணை இயக்குநர்களுக்கும், 10 உதவி இயக்குநர்களுக்குமாக 13 ஊர்திகள் வழங்கப்படும். ஆண்டுக்குப் பத்து ஊர்திகள் என்று அடுத்தடுத்த ஆண்டுகளில் மற்ற மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களுக்கும் ஊர்திகள் வழங்கப்படும். இவ்வகையில் இந்த ஆண்டு ரூ.66.00 இலட்சம் செலவினம் அமையும்.



12. **தமிழ் வளர்ச்சித் துறை நிருவாகக் கட்டமைப்பினை மேம்படுத்துதல்**

தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வரும் ஆய்வுப் பணிகளையும், திட்டப் பணிகளையும் நிறைவேற்ற துறையில் இணை இயக்குநர் பணியிடம் இல்லாமையைக் கருத்திற்கொண்டு, துறையில் உள்ள துணை இயக்குநர் பணியிடம் ஒன்று இணை இயக்குநர் பணியிடமாக மேலாக்கம் செய்யப்படும்.

*13.* புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கிருட்டிணகிரி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்குக் கணினி மற்றும் தொலைபேசி வசதி அளிக்கப்படும்.

*14.* தமிழ் வளர்ச்சித் துறையைக் கணினிமயமாக்கிட மண்டல மாவட்ட அலுவலகங்களுக்கு இணைய வசதி மற்றும் விரிந்த அலைவரிசை (பிராட்பேண்டு) வசதியளிக்கப்படும்.

## இணைப்பு III

*(828 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 44—ஊரகத் தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### சிறு தொழில் துறை

பொருளாதாரத்தில் முக்கியப் பிரிவாகவும், வேலைவாய்ப்பினை அளிப்பதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும், பங்கு வகிக்கும் உயிரோட்டம் உள்ள இன்றியமையாத பிரிவாக, நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன. நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர்களின் திறமையை மேம்படுத்தும் நாற்றங்கால்களாக விளங்குகின்றன. மொத்த உற்பத்தி நிறுவனங்களில் நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு 95 விழுக்காடு என்ற அளவில் 40 விழுக்காடு உற்பத்தி செய்யும் பிரிவாகவும், 35 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் பிரிவாகவும் அமைந்துள்ளது. 31-3-2007 அன்றைய நிலவரப்படி, 5.30 இலட்சம் நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களின் மொத்த முதலீட்டுத் தொகை ரூ.16608 கோடிக்கும் அதிகமாகும். இவற்றின்மூலம் 36.65 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

2. தமிழ்நாட்டில் நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தொழில் வணிக இயக்ககம் முகமையாக விளங்குகிறது. இவ்வியக்ககம் தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டு முனைப்புடன் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

3. மத்திய அரசு நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன மேம்பாட்டுச் சட்டம் 2006-ஐ, 2-10-2006-இல் நடைமுறைப்படுத்தும் நாளாக அறிவித்துள்ளது. இச்சட்டம் முன்பிருந்த சிறு தொழில் நிறுவனங்களுக்கான வகைப்பாட்டை மாற்றி அமைத்து ‘தொழிலகம்’ என்ற வகைப்பாட்டிற்குப் பதிலாக ‘நிறுவனம்’ என்று மாற்றியமைத்துள்ளது. தொழில் நிறுவனங்களின், இயந்திரங்களின்

மீதான முதலீட்டின் அடிப்படையில் முன்பிருந்த மற்றும் தற்போதைய வகைப்பாடு கீழே தரப்பட்டுள்ளன.

| | முந்தைய வகைப்பாடு | | தற்போதைய வகைப்பாடு | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி அலகு | சிறு தொழில் சேவை மற்றும் வியாபார நிறுவனங்கள் | உற்பத்தி | சேவை |
| குறுந் தொழில் | ரூ.25 இலட்சம் வரை | ரூ.10 இலட்சம் வரை | ரூ.25 இலட்சம் வரை (தற்போது குறுந்தொழில் என்பதற்குப் பதிலாக நுண் என்று அழைக்கப்படுகிறது) | ரூ.10 இலட்சம் வரை |
| சிறு தொழில் | ரூ.1 கோடி வரை (140 வகைகளுக்கு ரூ.5 கோடி வரை) (சேவைக்கான வகைப்பாடு இல்லை) | | ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.5 கோடி வரை | ரூ.10 இலட்சத்தில் இருந்து ரூ.2 கோடி வரை |
| நடுத்தரத் தொழில் | வகைப்பாடு இல்லை | | ரூ.5 கோடியில் இருந்து ரூ.10 கோடி வரை | ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடி வரை |

## 2. தொழில் முனைவோர் நிறுவன ஒப்பந்தங்கள் பதிவு செய்தல்

தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனங்களைப் பதிவு செய்வதில் முன்பிருந்த நடைமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நுண் அல்லது சிறு தொழில் நிறுவனம் துவங்க விரும்பும் எவரும், தானாகவே தொழில் முனைவோர் நிறுவன ஒப்பந்தத்தினை குறிப்பிட்ட படிவத்தில் பதிவு செய்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரிடமும், சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை மண்டல இணை இயக்குநர், தொழில் வணிகத் துறை அவர்களிடமும் சமர்ப்பித்து ஒப்புகை சான்று பெறலாம். நடுத்தர தொழில் நிறுவனங்களை பொறுத்தமட்டில் நிறுவன ஒப்பந்தங்கள் பதிவு செய்வது உற்பத்தி நிறுவனங்களுக்கு கட்டாயமாகும். சேவை நிறுவனங்களுக்கு விருப்ப ஒன்றாகும்.



## 3. ஒற்றைச் சாளரம்மூலம் பாதுகாப்பு சேவைகள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களின் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் அவர்கள் மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், உள்ளாட்சிகள், தீயணைப்புத் துறை, பொதுச் சுகாதாரத் துறை மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளை விரைவில் பெற்றுத் தரும் ஒற்றைச் சாளர மையங்களாக மாவட்டத் தொழில் மையங்கள் திகழ்கின்றன.

## 4. பரிசோதனை, பழுது நீக்குதல் மற்றும் உற்பத்தி வசதிகள்

### 4.1. பரிசோதனைக் கூடங்கள்

சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள், உற்பத்தி பொருட்கள் மற்றும் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்களைப் பரிசோதனைச் செய்வதற்காக சட்டபூர்வமான வகையில் இத்துறை பரிசோதனைக் கூடங்களை இயக்கி வருகிறது. மின் மற்றும் மின்னணுப் பொருட்கள் பரிசோதனைக் கூடங்கள் காக்களூர் மற்றும் ஓசூரிலும் உள்ளன. வேதியியல் பொருட்களைப் பரிசோதனை செய்ய சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பரிசோதனைக் கூடங்கள் உள்ளன. இச்சோதனைக் கூடங்கள் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சலுகைக் கட்டணத்தில் பரிசோதனை சேவையினை அளித்து வருகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் 6,080 மாதிரி மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், மின் மற்றும் மின்னணு தொழிற்கூடங்களிலும் 54,279 மாதிரி வேதியியல் பொருட்கள் வேதியியல் பரிசோதனைக் கூடங்களிலும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

### 4.2. மின் மருத்துவ உபகரண மையங்கள்

அரசு மருத்துவமனைகளில் உள்ள மின் மருத்துவ உபகரணங்களில் ஏற்படும் பழுதினை நீக்கி சேவை செய்வதற்காக கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மின் மருத்துவ உபகரண மையங்களை அரசு அமைத்துள்ளது. இம்மையங்களின் செயல்பாட்டினை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 மே 2

**5. பயிற்சி நிறுவனங்கள்**

தொழில் வணிகத் துறை, சிறப்புப் பிரிவுகளான கருவி பொறியியல், குளிர்பதனிகள், கண்ணாடி மற்றும் பீங்கான் தொழில்நுட்பம் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிப்பதற்காக முறையே திண்டுக்கல், கிண்டி, மற்றும் விருத்தாசலத்தில் பயிற்சி நிறுவனங்களை நடத்தி வருகிறது.

**6. ஒழுங்குமுறை நடவடிக்கைகள்**

**6.1. தரக் கட்டுப்பாட்டு ஆணைகளை அமலாக்குதல்**

தொழில் வணிக இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தரக்கட்டுப்பாடு ஆணை அமலாக்க மையம் (i) *1981* ஆம் ஆண்டு வீட்டு மின் உபகரணங்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை (ii) *2003* ஆம் ஆண்டு மின்கம்பி, உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் உபபொருட்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை, ஆகியவற்றை அமலாக்கம் செய்கிறது. முதல் ஆணையை மீறுபவர்களை *1955* ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்படி தண்டிக்கமுடியும். இரண்டாம் ஆணையில் குறிப்பிட்ட பொருட்கள் இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவன முத்திரை இல்லாமல் தயாரிப்பது அல்லது விற்பனை செய்வது அல்லது விநியோகத்திற்காகச் சேமித்து வைப்பது ஆகியவற்றைத் தடை செய்கிறது. இவ்வாணையை மீறுவது இந்திய தரக் கட்டுப்பாடு நிறுவனச் சட்டத்தின்படி குற்றமாகும். மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்கள் இவ்வாணைகளை நடைமுறைபடுத்த “உரிய அலுவலர்”களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். சென்னையைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) அந்த அதிகாரம் படைத்த அலுவலர் ஆவார்.

**6.2. நுண் மற்றும் சிறு தொழில் நிறுவன வசதியாக்க மன்றங்கள்**

தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) எண் *63*, சிறு தொழில் துறை, நாள் *8-12-2006*-ல், நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு வளர்ச்சி சட்டம் *2006*-ன்கீழ் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு நுண் மற்றும் சிறு தொழில் நிறுவன வசதியாக்க மன்றங்கள் அமைத்துள்ளது.



2007 மே 2]

அந்த வசதியாக்க மன்றங்களின் அதிகார எல்லை பின்வருமாறு:

| இடம் | அதிகார எல்லை |
|---|---|
| சென்னை | சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| திருச்சி | திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் |
| மதுரை | மதுரை, விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், கரூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |

இச்சட்டத்தின் அடிப்படையில் நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் காலதாமதமான பணப் பட்டுவாடாக்கள்மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க இந்தத் தீர்வு மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**7. அரசு தொழிற்பேட்டைகள்**

**7.1. பீங்கான் தொழிற்பேட்டை**

*1964*-இல் இருந்து *64* தொழிற்கூடங்களை உள்ளடக்கிய பீங்கான் பொருட்களுக்கான தொழிற்பேட்டை ஒன்று விருத்தாசலத்தில் இயங்கி வருகின்றது. அத்தொழிற்பேட்டையில் *58* உற்பத்தி தொழிற் கூடங்கள் உள்ளன. இங்குள்ள நிறுவனங்கள் குறைந்த மின்னழுத்த இன்சுலேட்டர்கள், குளியலறை மற்றும் கழிவறை சாதனங்கள், கலைப் பொருட்கள், உயர் வெப்பம் தாங்கக்கூடிய செங்கற்கள் மற்றும் இதர உயர் வெப்பம் தாங்கக்கூடிய பொருட்களை தயாரிக்கின்றன.

**7.2. மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்**

மின் மற்றும் மின்னணுப் பிரிவில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் எட்டு தொழிற்பேட்டைகள்

அமைந்துள்ளன. இவற்றில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி), திருவள்ளூர் (காக்களூர்), மதுரை (கப்பலூர்), சேலம் (சூரமங்கலம்), கோயம்புத்தூர் (காளப்பட்டி), கிருஷ்ணகிரி (ஓசூர்) மற்றும் திருச்சி (துவாக்குடி) ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் உள்ளன. இத்தொழிற்பேட்டைகளில் 515 மனைகளும், 140 தொழிற்கூடங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 8. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் நடத்துதல்

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் சிறு தொழிலின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் கூட்டுறவு இயக்க அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள், தத்தமது உறுப்பினர்களுக்கு உற்பத்தி, மூலப் பொருட்கள் வாங்குவது மற்றும் விற்பனை செய்வது, சந்தை வாய்ப்பு மற்றும் இதர சேவைகளை வழங்கி வருகிறது.

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் மாநிலத்திலுள்ள தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கான செயல் பதிவாளர் ஆவார். 31-3-2007 அன்றைய நிலவரப்படி, 340 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 201 சங்கங்கள் இலாபத்தில் இயங்கிவருகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் 31-3-2007 வரை ரூ.418.04 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

## 9. தொழிற்கூட்டுறவுகள்

கிராமப்புற கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் கூலி ஆட்களை உள்ளடக்கிய நலிவுற்ற பிரிவினருக்கு இலாபகரமான வேலை வாய்ப்பினை அளிப்பதில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை தேயிலை மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும், விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பொருட்களுக்கு தகுந்த விலை பெற உதவுகின்றது. மேலும் சிறுதொழில் முனைவோர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள், தொழிற்கூடங்கள் மற்றும் அவர்களுடைய தொழிலகம் நடப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அளித்தும் உதவுகின்றன. தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, வங்கி, பாலித்தின், கைவினைப் பொருட்கள், தையல், ஆட்டோ சேவை மற்றும் தொழிற்பேட்டைகள் அமைத்தல் ஆகிய முக்கிய வியாபாரப் பிரிவுகளில் இவ்வாறான தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இலாபகரமாக இயங்கி வரும் சங்கங்களை மேலும் புத்துணர்வு ஊட்டுவதற்கும், நட்டத்தில் இயங்கி வரும் சங்கங்களை இலாபகரமாக





இயக்குவதற்கும் தேவையான ஒரு ஆய்வினை நடத்தும் பணி குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆய்வுப் பணியினைத் துவக்கிவிட்டது. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**தேயிலைப் பிரிவு**

### 9.1. தேயிலைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

நீலகிரி மாவட்டத்தில் இத்துறையின் கட்டுப்பாட்டில் 17 தேயிலைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 15 உற்பத்திச் சங்கங்கள். ஏனைய 2 சங்கங்கள் விற்பனை சங்கங்களாகும்.

### 9.2. தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் (இண்ட்கோ)

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 20,000 சிறு தேயிலை சாகுபடியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 15 தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் மொத்த தேயிலைத்தூளில் சுமார் 17 விழுக்காடு இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள "இண்ட்கோ" தேயிலை தொழிற்சாலைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில் இண்ட்கோ தேயிலைத் தொழிற்சாலைகள் 555.73 இலட்சம் கிலோ மதிப்புள்ள பசுந்தேயிலையை வாங்கி 145.53 இலட்சம் கிலோ தேயிலைத் தூளை உற்பத்தி செய்து ரூ.6687.92 இலட்சம் மதிப்பீட்டிற்கு விற்பனை செய்துள்ளன.

### 9.3. இன்ட்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் தேயிலைத் தொழிற்சாலைகளை உறுப்பினர்களாகக் கொண்டு "இன்ட்கோசர்வ்" என பிரபலமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தேயிலை தொழிற்சாலைகளின் இணையம் என்ற தலைமைச் சங்கம் 1965-ல் குன்னூரில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சேமிப்புக் கிடங்கு வசதிகள் அளித்தல் மற்றும் தேயிலையை விற்பனை செய்தல் ஆகிய சேவைகளை செய்துவருகிறது. இவை தவிர இதன் உறுப்பினர்கள் மற்றும் தேயிலை சாகுபடியாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலையை பெற்றுத்தரும் நோக்கத்துடன் தமிழக அரசின் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஊட்டி டீ என்ற தேயிலையை விற்பனை செய்து வருகிறது. 2006-07 ஆம் ஆண்டில் "இன்ட்கோசர்வ்" 3053 மெட்ரிக் டன் "ஊட்டி டீ"யினை ரூ.2414.93 இலட்சம் மதிப்பீட்டிற்கு விற்பனை செய்து ரூ.489.93 இலட்சத்தினை உத்தேச இலாபமாக ஈட்டி உள்ளது.

[2007 மே 2

### 9.4. டீ சர்வ்

இந்தியாவிலேயே முதல் முறையாக மின்னணு ஏல மையமான டீ சர்வ் என்று அழைக்கப்படும் தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் 13-9-2003 அன்று குன்னூரில் துவங்கப்பட்டது. இந்த ஏலமையம் ஏல விற்பனையை வெளிப்படையாக நடத்தி, தேயிலை உற்பத்தியாளர்களுக்குச் சரியான விலை கிடைக்க செய்வதன்மூலம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு தாங்கள் விற்பனை செய்யும் பசுந்தேயிலைக்கு இலாபகரமான விலை கிடைக்க வழி செய்கிறது. 2006-07-இல் இச்சங்கம் 15785 மெட்ரிக் டன் தேயிலையை ரூ.7305.52 இலட்சத்திற்கு விற்பனை செய்து ரூ.3.42 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டி உள்ளது.

### 9.5. தேயிலைத் தொழிலினை புத்துயிர் ஊட்டும் திட்டம்

துறை எடுத்த முனைப்பான நடவடிக்கைகளை ஒட்டி, தேயிலை வாரியம் உபாசியின் (UPASI) உதவியுடன் ஒரு ஆய்வினை மேற்கொண்டு நீலகிரி மாவட்டத்தின் தேயிலைத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக பல்வேறு பரிந்துரைகளை அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(1) தேயிலைத் தோட்டங்கள் பராமரிப்பில் உள்ள பாரம்பரிய வழிமுறைகளை மேம்படுத்துதல்.

(2) ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் பசுந்தேயிலை அளவினை அதிகரித்தல்.

(3) பறிக்கப்பட்ட பசுந்தேயிலைகளை கொள்முதல் செய்யும் வழி முறைகளை நெறிப்படுத்தி, நிலைப்படுத்துதல்.

(4) தேயிலைத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் உற்பத்தி மற்றும் தர முறைகளை மேம்படுத்துதல்.

(5) கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலை தூள் விற்பனையை மேம்படுத்துதல்.

இதற்கான விரிவான திட்டம் ஒன்று ரூ.8856.65 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கும், தேயிலை வாரியத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.



2007 மே 2]

### 10. சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாவு பொருட்கள்

"சேகோசர்வ்" என்று அழைக்கப்படும் சேலம் மரவள்ளிக் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை கூட்டுறவுச் சங்கம் சேலம் பகுதியில் உள்ள சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாவு உற்பத்தி செய்யும் சிறு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைக்கும் நோக்கத்துடன் 1981-ல் சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 31-3-2007 அன்றைய நிலவரப்படி 364 சவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிலகங்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழக அரசின் பங்குத் தொகை ரூ.99.83 இலட்சத்தினை உள்ளடக்கி ரூ.681.64 இலட்சம் மொத்த பங்குத் தொகையுடன் இச்சங்கம் செயல்பட்டு வருகிறது. 2006-07 ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.223.79 கோடிக்கு விற்பனை செய்து ரூ.1.28 கோடியினை உத்தேச இலாபமாக ஈட்டி உள்ளது.

10.1 2006-07-இல் தமிழக அரசு முதல் தவணையாக ரூ.50 இலட்சத்தினை சேகோசர்வின் உறுப்பினர்கள் தங்கள் நிறுவனங்களை நவீனப்படுத்தும் திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்காக அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூ.4 இலட்சத்தினை சேகோசர்வ் மானியமாக வழங்கும். அதில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.2 இலட்சத்தினை தமிழக அரசு சேகோசர்விற்கு ஈடு செய்யும். தற்பொழுது நிலவி வரும் உலகளாவிய சந்தைப் போட்டியில் தரமான பொருளை உறுப்பினர்கள் உற்பத்தி செய்ய இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

10.2 சேலம் பகுதியில் உள்ள சவ்வரிசி தொழில் வளர்ச்சிக்காக, மத்திய அரசின் சிறு தொழில் குழும வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக, ஒரு பொது பயன்பாட்டு மையம் மற்றும் பரிசோதனைக் கூடம் நிறுவி செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11. கயிறு பிரிவு

பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது. இக்கயிறு தொழில் மாநிலத்தில் சுமார் 75,900 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. அதில் பெரும்பான்மையோர் பெண்களே ஆவர். கிராமப்புறங்களில் வசிக்கும் பெண் தொழிலாளர்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதில் கயிறுதொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்காற்றிவருகின்றன. 31-3-2007 அன்றைய நிலவரப்படி 10,835 உறுப்பினர்களைக் கொண்டு

[2007 மே 2

76 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்தப் பங்கு தொகையான ரூ.281.83 இலட்சத்தில் தமிழக அரசின் பங்குத் தொகை ரூ.223.27 இலட்சமாகும். இவற்றில் 62 சங்கங்கள் கயிறு திரித்தலிலும், எட்டு சங்கங்கள் நார் பிரித்தெடுத்தலிலும், ஒரு சங்கம் சுருள் கயிறு தயாரிப்பிலும், ஒரு சங்கம் இரப்பர் கலந்த கயிறு பொருட்கள் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றன. முதன்மைச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் இக்கயிறு பொருட்களை விற்பனை செய்வதற்காக நான்கு விற்பனைச் சங்கங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. கயிறு பொருட்களின் விற்பனையை உயர்த்துவதற்காக கயிறு வாரியம் சந்தை மேம்பாடு நிதி உதவித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு ஆண்டின் விற்பனையில் 10 விழுக்காட்டினை மானியமாக ஒவ்வொரு வருடமும் மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்று கயிறு சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. 2006-07-ல் ரூ.38.76 இலட்சத்தினை தத்தம் பங்காக மாநில அரசும் கயிறு வாரியமும் இத்திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கி உள்ளன. 2006-07 ஆம் ஆண்டில் இக்கயிறு சங்கங்கள் ரூ.1018.58 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

**12. சேவை கூட்டுறவுகள்**

தொழில் வணிகத் துறை, 31 தொழிலாளர்கள் ஒப்பந்த சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்துள்ளது. இவற்றில் ஏழு சங்கங்கள் எம்.ஆர்.எல்., என்.எல்.சி, பெல், செயில் மற்றும் கல்பாக்கம் அணு மின் நிலையம் ஆகிய பொது நிறுவனங்களில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களின் நலனுக்காக பதிவு செய்யப் பட்டவையாகும். இந்த ஏழு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 24 சங்கங்களும் மாநிலத்தில் அமைப்புசாராத் துறைகளில் பணிபுரியும் தொழில்நுட்பம் மற்றும் பகுதி தொழில்நுட்பம் வாய்ந்த தச்சர், மின்கம்பியர், பிளம்பர், ஆகியோர் நலன் கருதி 2006-07-லிருந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் தமிழக அரசு தலா ரூ.1 இலட்சம் வீதம் பங்கு மூலதனமாக ரூ.20 இலட்சத்தினை புதிய இருபது தொழிலாளர் ஒப்பந்த சங்கங்களுக்கு வழங்கி உள்ளது.

**13. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி**

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் கடன் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி) 1961 ஆம் ஆண்டு



2007 மே 2]

நிறுவப்பட்டது. இவ்வங்கி "நபார்டு" மறு உதவித் திட்டத்தின்கீழ் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வசதி அளிக்க மத்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதி அளிப்பதுடன் இவ்வங்கி மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் கடன் வசதி அளிக்கும் சேவையினை செய்து வருகிறது. இன்றைய தேதியில் இவ்வங்கி தமிழ்நாடு முழுவதும் 28 கிளைகளுடன் இயங்கி வருகிறது. 2006-07 ஆம் ஆண்டில் இவ்வங்கி உத்தேச இலாபமாக ரூ.3.16 கோடியினை ஈட்டியுள்ளது. 2005-06 ஆம் ஆண்டில் இவ்வங்கி 12 விழுக்காடு ஈவுத்தொகை அறிவித்துள்ளது.

**14. தொழிற்கூட்டுறவு பேட்டைகள்**

கூட்டுறவு அமைப்பின்கீழ் இத்துறை 11 தொழிற்பேட்டைகளை அமைத்து உள்ளது. இத்தொழிற்பேட்டைகள் சென்னை, கோயம்புத்தூர், சேலம், சிவகாசி, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவற்றில் எட்டு இயங்கி வருகின்றன. மூன்று தொழிற்பேட்டைகள் (அண்ணா தொழிற் பேட்டை, கோயம்புத்தூர், பிரியதரிசிணி தொழிற்பேட்டை, தென்காசி, சேலம் கிரானைட் தொழிற்பேட்டை, பாகல்பட்டி) செயலாக்கும் நிலையில் உள்ளன. இத்தொழிற்பேட்டைகளின் முக்கிய நோக்கம் நடுத்தர மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மேம்பாட்டு மனைகள், தொழிற்கூடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை அமைத்துத் தருதல் ஆகும். இத்தொழிற்பேட்டைகளில் 2,199 பேர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

**15. சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வு பரிசோதனை சங்கம் (மைக்கால்)**

இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் மாதிரிகளை ஆய்வு செய்து, இந்தியன் பார்மா கோபியா, ஐக்கிய நாடுகளின் பார்மா கோபியா மற்றும் மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தேவைப்படும் தரச்சான்றிதழ்களை வழங்கும் பணியினை சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு பரிசோதனைச் சங்கம் (மைக்கால்) செய்து வருகிறது.

இதைத் தவிர இச்சங்கம் சுங்கத் துறை மற்றும் இதர மாநிலங்களின் சுகாதாரத் துறை ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட முன் மாதிரிகளையும் பரிசோதனை செய்து வருகிறது.

## 16. பாலித்தின் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

மாநிலத்தில் 1005 பெண் உறுப்பினர்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் பன்னிரெண்டு பாலித்தின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இப்பாலித்தின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் வனத் துறை மற்றும் வேளாண் துறைக்குத் தேவையான பாலித்தின் பைகளை உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. 2006-07 ஆம் ஆண்டில் 12 பாலித்தின் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் ரூ.322.39 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

## 17. ஏனைய தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்குறிப்பிட்ட முக்கிய சங்கங்களைத் தவிர 190 ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் இத்துறையின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் பல்வேறு வகையான செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன. 31.3.2007 அன்றைய நிலவரப்படி 40 சிறப்பு வகை சங்கங்களும், 44 ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் சங்கங்களும், 31 அச்சக சங்கங்களும், 19 கைத்திறன் சங்கங்களும், 16 தையற் கூட்டுறவுச் சங்கங்களும், 5 தீப்பெட்டி சங்கங்களும், 16 பொறியியல் சங்கங்களும், 8 உலோக சங்கங்களும், 7 செங்கல் சங்கங்களும், 1 கரி மற்றும் பழுப்பு நிலக்கரி சேவை சங்கமும், 3 தோல் பதனிடும் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தையல் பிரிவு சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் பெண்கள் ஆவர்.

## 18. பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்

1993 ஆம் ஆண்டு அக்டோபர் 2 முதல் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் இத்திட்டம் குறைந்த அளவு படித்த ஏழைகளுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 2006-07 ஆம் ஆண்டின் குறியீடு 27,000 பயனாளிகள் ஆகும். 28,139 பயனாளிகளுக்கு வங்கிகளிடம் இருந்து கடன் ஒப்புதல் ஆணை ரூ.116.80 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 21,227 பயனாளிகளுக்கு 81.25 கோடி ரூபாய் கடனுதவியாகப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

## 19. தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் குழுமக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக மொத்தத் திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு அல்லது ரூ.50 கோடி இதில் எது குறைவான தொகையோ, அதனை மத்திய வர்த்தக மற்றும்



தொழில் அமைச்சகம் உதவித் தொகையாக வழங்குகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ரூ.361.68 கோடி மதிப்பிலான பின்வரும் ஐந்து திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க இசைந்துள்ளது. 1. வாகன உதிரிப் பாக குழுமம், சென்னை, 2. பின்னலாடைக் குழுமம், திருப்பூர், 3. தானியங்கள் பருப்பு அரவைக் குழுமம், மதுரை, 4. பம்ப் மோட்டார் மற்றும் வார்ப்படக் குழுமம், கோயம்புத்தூர் மற்றும் 5. தோல் குழுமம், ஆம்பூர். இந்த 5 திட்டங்களும் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

## 20. தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கு முதலீட்டு மானியம் அளிக்கும் திட்டம்

### 20.1 முதலீட்டு மானியம்

கடந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற் சாலைகளுக்கான முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டப்படும் என அறிவித்திருந்தார். தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான தகுதிகளை நிர்ணயம் செய்வதற்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலை குழுவின் அறிக்கை அண்மையில் பெறப்பட்டுள்ளது. அறிக்கையை ஆய்வு செய்த பின் ஆணைகள் வெளியிடப்படும்.

20.2 அரசாணை (நிலை) எண் 32 சிறு தொழில் துறை, நாள் 28-6-2002-இல் ஒப்பளிக்கப்பட்ட 385 வட்டாரங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 31-3-2007 வரை ரூ.288.56 கோடி திட்ட மதிப்பீட்டில் 257 வட்டாரங்களில் 455 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கி, 10,483 பெண்கள் உள்பட, 15,272 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ரூ.98.90 கோடி திட்ட மதிப்பீட்டிலான 185 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்படுகின்றன. மேலும், ரூ.147.40 கோடி மதிப்பீட்டிலான 215 திட்டங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள்மூலம் நிதி உதவி பெற விண்ணப்பித்துள்ளன. 31-3-2007 முடிய ரூ.1504.57 இலட்சங்கள் சிறப்பு மூலதனமானியமாகவும் மற்றும் குறைந்த மின்னழுத்த மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை, இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ள தொழிலில் பின்தங்கியுள்ள வட்டாரங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படும்.

[2007 மே 2

## 21. சிறு தொழில் நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம்

சிறு தொழில்கள் கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் வாங்கிய கடன் மீதான வட்டியை குறைக்கும் வகையில் பின்முனை வட்டி மானியம் டிசம்பர் 2003 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

(அ) தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீன மயமாக்கலுக்கான கடன்

(ஆ) தேசிய சமபங்கு நிதித்திட்டம்.

(இ) ஐஎஸ்ஓ (I.S.O.) தரச் சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின்மூலம் காப்புரிமை பெறுவதற்காக பெறும் கடன்.

(ஈ) தேசிய சிறு தொழில் நிறுவனம் - சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டமைப்புத் திட்டம், கூட்டுக் காலக்கடன் மற்றும் கடன் உத்திரவாத நிதிக் குழும திட்டத்தின் குறுந்தொழில்கள் பெறும் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் ஏராளமானோர் பயனடையும் வகையில் இத்திட்டத்தை மாற்றியமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 22. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

தொழில் வளர்ச்சிக்கு தொழில்முனைவோரிடம் தொழில் பண்புகளை மேம்பாடு அடைய செய்வது முக்கியமான ஒன்றாகும். மாநில அரசானது தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான திட்டங்களை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக நிறைவேற்றி வருகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்ட பயனாளிகள் மற்றும் அரசு சார்ந்த இதர திட்டங்களின் பயனாளிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறது. நடப்பாண்டில் 7159 பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்ட பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 3 நாட்கள் கொண்ட தொழில் முனைவோர்களுக்கான விழிப்புணர்வு முகாம்களை பல்வேறு கல்லூரிகளில் நடத்தி உள்ளது. நடப்பாண்டில் இந்நிறுவனம் திருவள்ளூர் மாவட்டத்தில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பயிற்சியை பற்றி மாதிரி மதிப்பீடு பணியை மேற்கொண்டுள்ளது.



2007 மே 2]

## 23. 2007–08 ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டங்கள்

2007-08 ஆம் ஆண்டில், தொழில் வணிகத் துறைமூலம் கீழ்க்கண்ட திட்டங்களை பகுதி 2 திட்டத்தின்கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. தேயிலை விற்பனையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்காக இன்ட்கோசர்விற்கு ரூ.5.00 இலட்சம் அளித்தல்.

2. சூலூர் ஆதி திராவிடர் பெண்கள் பாலித்தின் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நிரந்தர தொழிற்கூடம் அமைக்க அரசு பங்காக ரூ.7.90 இலட்சம் அளித்தல்.

3. பரிசோதனைக் கூடத்தின் மேம்பாட்டிற்காக "மைக்கால்" சங்கத்திற்கு ரூ.25.00 இலட்சம் பங்கு மூலதன உதவி அளித்தல்.

4. சேலம் கூட்டுறவு தொழிற்பேட்டைக்கு உட்கட்டமைப்பு வசதி அளிக்க ரூ.7.50 இலட்சத்தினை அரசுப் பங்காக அளித்தல்

5. ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்டத் தொழில் மையங்களுக்கு 9 ஊர்திகள் வாங்குதல்

6. ரூ.2.60 இலட்சம் மதிப்பில் கிண்டி மற்றும் அம்பத்தூரில் உள்ள தொழில்நுட்ப தகவல் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாட்டில் குறிப்பாக சிறு தொழில்களை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சிறு தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக சிட்கோ பல ஆண்டுகளாக திட்டங்களை செயல்படுத்துகிறது.

சிட்கோவின் இணையதளத்தின்மூலம் www.sidco.tn.gov.in அதன் திட்டங்களின் விவரங்கள் அறியலாம், அதாவது அனைத்து தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள மனைகள், தொழிற்கூடங்கள் ஆகிய மூலப்பொருட்கள், கிடங்குகளில் உள்ள மூலப்பொருட்களின் இருப்பு, விவரங்கள் அறியலாம்.

2. சிட்கோவினால் மேற்கொள்ளப்படும் கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்கள்:—

(1) தொழிற்பேட்டைகளை நிறுவுதல்
(2) மூலப்பொருட்களின் வினியோகம்
(3) விற்பனை உதவித் திட்டம்

**2.1. தொழிற்பேட்டைகளை நிறுவுதல்**

சிட்கோவின் பெரும்பாலான செயல்பாடுகளில் ஒன்றானது சாலைகள், மழை நீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள், தண்ணீர் விநியோகம் கால்வாய்கள் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவது. சிட்கோ நிறுவனம் மனைகளை மேம்படுத்தியும் தொழிற்கூடங்களை பல்வேறு அளவுகளில் கட்டியும் தருகிறது. மேலும் அவற்றை தவணை முறையிலும், முழுப்பணம் செலுத்தும் திட்டத்துடனும் ஒதுக்கீடு செய்கிறது. இந்நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை உருவாக்கியும், அரசின் 35 தொழிற்பேட்டைகளை நிருவகித்தும் வருகிறது.

2.2. 2006-07 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் சுமார் 247 மனைகள் மற்றும் 39 தொழிற்கூடங்களை விற்பனை செய்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் 574 மனைகள் மேம்படுத்துவதோடு 809 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 58 தொழிற் கூடங்களை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.

**3.0. தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடன் வலுப்படுத்துவது தொடர்பான விவரங்கள்**

இந்நிறுவனம் தற்போதுள்ள தொழிற்பேட்டைகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த முயற்சி மேற் கொண்டுள்ளது.

**மத்திய / மாநில அரசு நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்படும் மேம்பாட்டு பணிகள்**

3.1. ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டு (Integrated Infrastructure Development Scheme) திட்டத்தின்கீழ் கப்பலூர் கட்டம் 2, குறிச்சி மற்றும் விருதுநகர் தொழிற்பேட்டைகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு ரூபாய் 506.59 இலட்சமும் வழங்கியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில்



உள்ள ஊட்டி தொழிற்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள முகுந்தராயபுரம் தொழிற்பேட்டைக்கு ரூபாய் 168.00 இலட்சம் இந்திய அரசிடமிருந்து விரைவில் ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகள் நடைமுறைப்படுத்தப்படும். கிண்டி தொழிற்பேட்டையில் கட்டமைப்பு மேம்படுத்தும் பணி ரூபாய் 1296.40 இலட்சம் செலவில் கிண்டி தொழிற்பேட்டை கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் மூலம் நடைபெற்று வருகிறது.

3.2. கூடுதல் மத்திய உதவி (Additional Central Assistance) திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தொகை மற்றும் ஒதுக்கீட்டாளர்களின் 20 விழுக்காடு பங்கு தொகையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 244 இலட்சம் திட்ட முதலீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை, வேலூர் மாவட்டத்தில் ராணிப்பேட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் கப்பலூர் கட்டம்-I ஆகிய தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2007-08-இல் இப்பணிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

3.3. அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள், தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (Industrial Infrastructure Upgradation Scheme) கீழ் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை வாகன உதிரி பாகங்கள் கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் இத்திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. ஒப்பளிப்பு செய்யப்பட்ட இத்திட்டத்தின் மதிப்பு ரூபாய் 47.49 கோடியாகும். இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி ரூபாய் 27.74 கோடி. 2007-08-இல் பணிகள் முடிவடையும்.

**3.4. மாநில அரசு உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளவை**

மதுரை (கோசாகுளம் புதூர்), சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டிற்கு பகுதித் தொகையாக ரூபாய் 25 இலட்சங்களை 2006-07 ஆம் ஆண்டில் அரசு மானியமாக வழங்கியுள்ளது. மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் ரூ.101.5 இலட்சம் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 2007-இல் இந்தப் பணி முடிவடையும்.

3.5கூ. டுதலாக சிட்கோ 2006-07 ஆம் ஆண்டில் தனது அனைத்து தொழிற்பேட்டைகளிலும் மேம்படுத்தும் பணிகளை வெவ்வேறு

கட்டடங்களில் செயல்படுத்தும். கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகளில் சிட்கோ சொந்த நிதியிலிருந்து ரூபாய் 179.75 இலட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன:

1. திண்டுக்கல்
2. புதுக்கோட்டை
3. கிருஷ்ணகிரி
4. கரூர்
5. திருப்பூர்
6. திருச்செங்கோடு
7. நாமக்கல்

செயல்பாடு பல்வேறு நிலைகளில் உள்ளன. இந்த மேம்பாட்டுப் பணிகள் ஆகஸ்ட் 2007-ல் முடிவடையும்.

3.6. 2007-08 ஆம் ஆண்டில், ரூ.100 இலட்சம் செலவில் அரசு உதவியுடன் அரியமங்கலம் (திருச்சி), தேனி மற்றும் தருமபுரி தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தும் பணிகளை சிட்கோ மேற்கொள்ளும்.

3.7. 2007-08 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகளில் சிட்கோ தனது சொந்த நிதி ஆதாரத்திலிருந்து மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும்:

1. காட்பாடி
2. திருவண்ணாமலை
3. கடலூர்
4. தஞ்சாவூர் அருகிலுள்ள பிள்ளையார்பட்டி
5. மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்)
6. நாகர்கோவில் அருகிலுள்ள கோணம்
7. வடலூர் (கடலூர் மாவட்டம்)

## 4. புதிய தொழிற்பேட்டைகள்

4.1. 2006-07 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் கீழ்க்காணும் இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டது:

### 4.1.1. வாழவந்தான் கோட்டை, கட்டம் II, திருச்சி மாவட்டம்

பாரத மிகு மின் நிறுவனம்போன்ற பெரிய நிறுவனங்களுக்கு உதிரிப் பாகங்களைத் தயாரித்து வழங்கும் துணை நிறுவனங்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ரூபாய் 125 இலட்சம் செலவில் வாழவந்தான் கோட்டை, கட்டம் II-ல் உள்ள 83.55 ஏக்கர் நிலத்தை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஜூலை 2007-இல் முடிவு பெறும்.



4.1.2. மதுரையில் உள்ள கப்பலூர் (மகளிர் தொழிற்பூங்கா), விண்ணமங்கலம், மயிலாடுதுறை மற்றும் தேனியில் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்குவதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேனியில் அரசு புறம்போக்கு நிலம் இல்லாததால், நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

5.1 2007-08 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது:

### 5.1.1. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள போளுப்பள்ளி

கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டத்தில் உள்ள போளுப்பள்ளி கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை உருவாக்க 86.64 ஏக்கர் நிலம் கைவசம் உள்ளது. சமீபத்தில் சிறு தொழில் முனைவோர்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களிடம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் தொழில் தொடங்க உள்ள ஆர்வத்தைக் கேட்டறிந்து, ஒப்புவிப்புத் தொகையுடன், சுமார் 160 விருப்பக் கடிதங்கள் பெறப்பட்டுள்ளன. நல்ல ஏற்புத்தன்மை இருப்பதால் அடிப்படை வசதிகள் மற்றும் நிலங்களை மேம்படுத்துவதற்குண்டான வளர்ச்சிப் பணிகள் சிட்கோவினால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

### 5.1.2. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஒரகடம்

சிப்காட் நிறுவனத்திடமிருந்து ஒரகடம் வளர்ச்சி மையத்தில் (இரண்டாவது கட்டம்) 100 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு பெற்று தொழிற்பேட்டை உருவாக்க சிட்கோ உத்தேசித்துள்ளது.

### 5.1.3. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள எலம்பலூர்

எலம்பலூரில் (திருச்சியிலிருந்து 60 கீ.மீ) சிட்கோ வசம் உள்ள 44.48 ஏக்கர் நிலத்தை மேம்படுத்தும் பணிகளுக்காக சிட்கோ குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 5.1.4. பர்கூர், கட்டம் – II (கிருஷ்ணகிரி)

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பர்கூரில் தொழிற்பேட்டை துவங்க 31.640 ஏக்கர் நிலம் சிட்கோவிற்கு உரிமை மாற்றம்

செய்யப்பட்டுள்ளது. சிட்கோ மேற்கண்ட தொழிற்பேட்டையில் முதல் கட்டத்தில் 20 தொழிற்கூடங்களை நிறுவி அவைகளைச் சிறுதொழில் முனைவோருக்கு ஒதுக்கியுள்ளது. நுண் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு சுமார் 19 ஏக்கரில் ரூ.93 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் 100 குறு மனைகளை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

**5.1.5. காக்களூர், திருவள்ளூர் மாவட்ட கட்டம் II**

283.01 ஏக்கர் நிலம் காக்களூரில் தொழிற்பேட்டை அமைக்க கையகப்படுத்தப்பட்டது. இதில் 36 ஏக்கர் நிலம் இதுவரை மேம்படுத்தப்படாத நிலமாகும். கட்டம் II திட்டத்தில் இந்நிலத்தை மேம்படுத்தி சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

5.1.6 இதுவரை தொழிற்பேட்டைகள் அமைக்கப்படாத திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க சிட்கோ திட்டமிட்டுள்ளது

5.1.7 உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லா தொழிற்பேட்டைகளிலும் பெண் தொழில் முனைவோர் தொழில் துவங்குவதற்கு மனைகள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும். மேலும், தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் தொழில் துவங்குவதற்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட தொழில் மைய பொது மேலாளர், முன்னோடி வங்கி, டான்ஸ்டியா / மாவட்ட சிறு தொழில் சங்கங்களின் உதவியுடன் தொழில் முனைவோர் ஊக்குவிப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

**6. மூலப் பொருட்களின் வினியோகம்**

நியாய விலையின் அடிப்படையில் மூலப் பொருட்களைத் தன்னுடைய 17 கிடங்குகளிலிருந்து சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதே சிட்கோவின் பிரதானப் பணிகளில் ஒன்றாகும். சிட்கோவால் கீழ்க்கண்ட மூலப் பொருட்கள் கையாளப்படுகின்றன:

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட்
4. காகிதம்

2006-07 ஆம் ஆண்டில் மொத்த மூலப் பொருட்கள் விற்பனை மதிப்பு ரூ.3770.00 இலட்சமாகும்.



2006-07ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சாதனை மற்றும் 2007-08 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் பின்வருமாறு:

| வ. எண் | விவரங்கள் | 2006–07 ஆம் ஆண்டிற்கான இலக்கு (மெ.ட.) | 2006–07 அடைந்த சாதனை (மெ.ட.) | 2007–08 ஆண்டிற்கு நிர்ணயித்த இலக்கு (மெ.ட.) |
|---|---|---|---|---|
| 1. | இரும்பு மற்றும் எஃகு | 20000 | 8509 | 10000 |
| 2. | மெழுகு | 1500 | 1113 | 1500 |
| 3. | பொட்டாசியம் குளோரேட் | 60 | 27.5 | 60 |
| 4. | காகிதம் | 2265 | 1401 | 2000 |

**7. விற்பனை உதவித் திட்டம்:**

மாநில அரசுத் துறைகள் மூலம் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்குச் சிறு தொழில் நடத்துவோரின் சார்பாக (சிட்கோவிடம் பதிவு செய்துள்ள சிறு தொழில் நடத்துவோர்) சிட்கோ நிறுவனம் கலந்து கொண்டு, வழங்கல் ஆணைகளைப் பெற்று அவைகளை சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பகிர்ந்து அளித்து விற்பனை செய்ய உதவுகிறது.

2006-07ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் சுமார் ரூ.55.02 இலட்சத்திற்கு ஆணைகள் பெற்று நிறைவேற்றி உள்ளது. மேலும், 2007-08 ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் வரை வழங்கல் ஆணை பெறுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**7.1. ஏற்றுமதி விற்பனை உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் விவரங்கள் அதாவது, தயாரிக்கும் பொருட்கள், நிறுவனத்தின் விவரங்கள் ஆகியன சிட்கோவின் **www.sidcoexports.com** என்ற இணையதளத்தின்மூலம் விவரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[2007 மே 2

## 8. 2007–08 ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டங்கள்

*2007-08 ஆம் ஆண்டில், திருச்சியில் உள்ள அரியமங்கலம், தர்மபுரி மற்றும் தேனி ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.100 இலட்சம் செலவில் மேற்கொள்ள சிட்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதில் அரசு மானியம் ரூ.25 இலட்சமும் அடங்கும்.*

### தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகள் துவக்க நிலையில் இருந்தபோது, ஆரம்ப திட்டக் காலங்களில், தொழில் வணிகத் துறையால் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்ட 64 சிறுதொழில் கூடங்களைத் தொகுத்து 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) உருவாக்கப்பட்டது. டான்சி நிறுவனம், வார்ப்பு இயந்திரக் கருவிகள், முலாம் பூசப்பட்ட கம்பிகள், வார்ப்படங்கள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருட்கள், மின்சாரக் கருவிகள், இயந்திர சாதனங்கள், கனரக தளவாடங்கள், முலாம் பூசுதல், இலகு பொறியியல், இரும்பு மற்றும் மர அறைகலன்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. பிறகு, இதன் பெரும்பாலான நடவடிக்கைகளில் தனியாரின் முயற்சி ஆரம்பமானது.

2. தனியார் தொழில் முனைவோர் பல நிறுவனங்களை ஆரம்பித்ததால் டான்சி தன்னுடைய நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டது. தற்பொழுது டான்சியின்கீழ் 23 உற்பத்திக் கூடங்கள், 5 செயல் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரையில் உள்ள நான்கு விற்பனை நிலையங்கள், டான்சியில் உற்பத்தியாகும் பொருட்களை விளம்பரம் செய்யவும் விற்பனை செய்யவும் உதவுகின்றன.

3. முலாம் பூசப்பட்ட மின்கடத்துக் கோபுரங்கள், நுண் அலை கோபுரங்கள், கனரக தளவாடங்கள், ஆழ்குழாய் கைப்பம்புகள், தரமான மரம் மற்றும் இரும்பு அறைகலன்கள் உற்பத்தி செய்வதில் டான்சி முக்கியத் திறமை வாய்ந்தது. சர்வ சிக்சா அபியான் கரும்பலகை செயல் திட்டம், வறட்சிக் காலத்தில் குடிநீர் பம்புகள் அமைத்தல் மற்றும் குழாய் உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் டான்சி நிறுவனம் வழங்கி வருகிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO), பாரத மிகு மின் நிறுவனம் (BHEL) மற்றும் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனம் (HAL) ஆகியவற்றிற்கு உதிரிப் பாகங்களை வழங்கும் ஒரு நிறுவனமாகவும் டான்சி விளங்குகிறது. டான்சியின் துணை நிறுவனமான தமிழ்நாடு பெயின்ட் மற்றும் உபபொருட்கள் லிமிடெட் (டாப்பாப்), அம்பத்தூர் மற்றும் திருச்சியிலுள்ள டான்சியின் இரு ஆழ்குழாய் கைப்பம்புகள் நிறுவனங்கள் மற்றும் வேலூர், பழனி, இராஜபாளையத்தில் உள்ள அறைகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ஐஎஸ்ஓ 9001:2000 சான்றிதழ் பெற்றுள்ளன.



*4. டான்சியின் 3 வருடங்களுக்கான தணிக்கை செய்யப்பட்ட மற்றும் மார்ச், 2007 வரையிலான செயலாக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—*

| | 2003–04 (துணிக்கை செய்யப் பட்டது) | 2004–05 (துணிக்கை செய்யப் பட்டது) | 2005–06 (துணிக்கை செய்யப் பட்டது) | 2006–07 மார்ச் 2007 வரை (துணிக்கை செய்யப்படாதது) |
|---|---|---|---|---|
| விற்பனை | 4978.00 | 5421.00 | 6180.00 | 5839.00 |
| உற்பத்தி | 5119.00 | 5375.00 | 6040.00 | 6075.00 |
| நிகர இலாபம்/ நஷ்டம் (–) | (–)90.07 | (+)9.74 | (+)52.21 | (+)70.00 |

*5. டான்சியின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதை மேற்கண்ட அட்டவணை தெரிவிக்கிறது.*

*6. 2007-08 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனை இலக்காக ரூ.63 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டான்சியின் அனைத்து தொழிற்கூடங்களும் 2007-08-ல் இலாபம் ஈட்டுதலே நோக்கமாகும்.*

### 7. திட்டங்கள்:

மாசு கட்டுப்பாடு விதிகளுக்கிணங்க செயல்படுவதற்காக மேட்டூர் அணையிலுள்ள துத்தநாக முலாம் பூசும் நிறுவனத்தின் காற்று மாசுபடுதலைத் தடுக்கும் உபகரணங்களை நிறுவுவதற்கு ரூ.25 இலட்சம் கடனாக அரசு வழங்கியுள்ளது. மாசு கட்டுப்படுத்தத் தேவையான கருவிகளை வாங்கி நிறுவ தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சிறு தொழில் துறை**

**வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு**

**கோரிக்கை எண் 44**

(ரூபாய் ஆயிரங்களில்)

| கணக்குத் தலைப்பு | 2006–07 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 2006–07 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | 2007–08 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 417958 | 381914 | 559771 |
| 2852 தொழில்கள் | 40679 | 45133 | 50041 |
| 2885 தொழில்கள், கனிம பொருட்கள் குறித்த ஏனைய செலவுகள் | 1 | 7026 | 0 |
| 3451 தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 13534 | 15221 | 21480 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 3000 | 8000 | 2817 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 1 | 1 | 1 |
| 4851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1503 | 1503 | 753 |
| 6851 கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 2500 | 0 | 0 |
| **மொத்தம்** | 479176 | 458798 | 634863 |



## இணைப்பு IV

*(828 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008**

**பட்டு வளர்ச்சித் துறை**

*1.1* பட்டு வளர்ப்பு ஒரு விவசாயம் சார்ந்த ஊரகத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதுடன் காலமுறைதோறும் தொடர் வருவாயினை விவசாயிகளுக்கு வழங்குகிறது. சீனாவுக்கு அடுத்து அதிக அளவு கச்சாப் பட்டு உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாகவும், அதிக அளவு பட்டு நூல் மற்றும் பட்டு ஆடைகள் நுகர்வு செய்யும் நாடாகவும் இந்தியா உள்ளது. உலக கச்சாப் பட்டு உற்பத்தியில் சீனா *81.65* சதவீதமும், இந்தியா *13.14* சதவீதமும் உற்பத்தி செய்கின்றன. தற்போதைய நிலையில் இந்தியாவின் கச்சாப் பட்டுத் தேவை அளவான *25,000* மெட்ரிக் டன்னில் *69* சதவீத அளவான *17,305* மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சியவை பெரும்பாலும் சீனாவிலிருந்து இறக்குமதியாகிறது. ஆண்டுதோறும் *5* சதவீத அளவில் கச்சாப் பட்டுத் தேவையும் வளர்ந்து வருகிறது. எனவே, நாட்டில் பட்டு வளர்ப்பின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

*1.2* கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளத்தினை அடுத்து இந்தியாவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் நான்காவது இடத்தில் தமிழகம் உள்ளது. தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத்தொழில் எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நீலகிரி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழக விவசாயிகளிடையே பட்டு வளர்ப்பு நடவடிக்கைகள் ஆர்வத்துடன் புத்துணர்வு பெற்று வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 10,000 ஏக்கராக இருந்த மல்பரி பரப்பு 151 சதவீதம் அதிகரித்து தற்போது 25,107 ஏக்கரில் 22,886 விவசாயிகளால் மல்பரி சாகுபடி செய்யப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் மட்டும் 10,389 ஏக்கரில் கூடுதலாக மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1.3 அதிகரித்து வரும் பட்டு முட்டைகள் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் பட்டு வளர்ச்சித் துறையில் செயல்படும் 11 வித்தகங்களில் 59.801 இலட்சம் கலப்பினப் பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், தாளவாடி, ஓசூர் மற்றும் கிருட்டிணகிரி ஆகிய 4 வித்தகங்கள் அதிக அளவில் இரு சுழற்சியின கலப்பின பட்டு முட்டைகளை தயாரிக்க ஆரம்பித்துள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 8.31 இலட்சம் இரு சுழற்சியின கலப்பின பட்டு முட்டைகள் உற்பத்தியே துறையின் வரலாற்றில் உயர்ந்தபட்ச உற்பத்தியாக கருதப்படுகிறது. 100 பட்டு முட்டைகளுக்கான பட்டுக் கூடு அறுவடை 44.7 கிலோவிலிருந்து 62.4 கிலோவாக உயர்ந்துள்ளது.

1.4 மாநிலத்தின் பட்டுக் கூடு உற்பத்தி 2005-2006 ஆம் ஆண்டில் 5,225 மெட்ரிக் டன் என்றிருந்த அளவு, 2006-2007 ஆம் ஆண்டில் 7,931 மெட்ரிக் டன் என்ற அளவுக்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழகத்தில் தேவையான அளவிற்கு பட்டு நூற்பு அலகுகள் இல்லாததால் மாநிலத்தில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளில் 60 சதவீதம் கர்நாடக மாநிலத்திற்கு விற்பனைக்காகச் செல்கின்றது. மாநிலத்தில் பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்தும் வகையில் கீழ்வரும் பல்வேறு முறைகளைக் கொண்ட நடவடிக்கை முன்மொழியப்பட்டுள்ளது.

* மூடப்பட்டுள்ள அரசு, கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் பிரிவில் உள்ள நூற்பு அலகுகளை மீண்டும் புதுப்பித்தல்.
* செயல்பட்டு வரும் அலகுகளை விரிவுபடுத்துதல்.
* காட்டேஜ் பேசின், பல முனை பட்டு நூற்பகம் மற்றும் தானியங்கி பட்டு நூற்பாலை என பல்வேறு நிலைகளில் புதிய பட்டு நூற்பு அலகுகளை நிறுவுதல்.



1.5 2006-07 ஆம் ஆண்டில் 474 பட்டு நூற்பு ஏனங்கள் புனரமைத்தும் புதிதாகவும் ஏற்படுத்தப்பட்டு 31-03-2006-ல் 1,103 ஆக இருந்த ஏனங்களின் எண்ணிக்கை 31-3-2007-ல் 1,577 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 2006-07 ஆம் ஆண்டில் ரூ.72.275 இலட்சம் மதிப்பீட்டில் 276 ஏனங்களுடன் 59 புதிய காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள் தனியார் தொழில் முனைவோர் மூலம் நிறுவ அங்கீகரிக்கப்பட்டு, அவைகள் யாவும் மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசு மானிய உதவிகளுடன் நிறுவப்பட்டு வருகிறது. இவ்வாறு பட்டு நூற்பு ஏனங்கள் நிறுவுவதன் மூலம் மொத்த பட்டு நூற்பு ஏனங்களின் எண்ணிக்கை 1,853 ஆக உயரும். இத்தகைய நடவடிக்கைகளினால் 2006-2007 ஆம் ஆண்டில் பட்டு நூற்புத்தொழில் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தில் பட்டுக்கூடுக்கு பிந்தைய நிலையை வலுப்படுத்தும் வகையில் ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகினை ரூ.2.80 கோடி திட்ட மதிப்பீட்டில் கோபிசெட்டிப்பாளையத்தில் நிறுவிட மத்திய பட்டு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் நிதி உதவியாக மத்திய பட்டு வாரியம் வழங்கும். ரூ.15.00 இலட்சம் நிதி உதவியாக வழங்கிட மாநில அரசும் ஒப்பளிப்பு செய்துள்ளது. திட்ட மதிப்பிட்டில் இயந்திரம் மற்றும் கட்டடத்திற்கான மீதத் தொகையினை தொழில் முனைவோரே ஏற்பர்.

1.6 தரமான வெண்பட்டு உற்பத்திக்கு மாநிலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் மொத்த கச்சாப் பட்டு உற்பத்தியில் 26.3 சதவீதமாக 296.00 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தேசிய அளவில் மொத்த வெண்பட்டு உற்பத்தி சதவீதத்தில் தமிழகம் முதன்மை வகிக்கிறது.

## 2. 2006–2007 ஆம் ஆண்டின் சாதனைகள்

### 2.1 இயல்பு

2006-07 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட செயல்பாடுகளில் நிர்ணயிக்கப்பட்ட இயல்பு குறியீடு அனைத்தும் நிறைவேற்றப்பட்டதுடன் குறிப்பிடும் அளவிற்கு குறியீட்டைக் காட்டிலும் அதிக சாதனை அடையப்பட்டுள்ளது.

[2007 மே 2

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | வருடாந்திர இலக்கு | சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | | | அளவு | சதவீதம் |
| 1 | மல்பரி நடவு | ஏக்கர் | 3100 | 10389 | 335 % |
| 2 | பட்டு முட்டை நுகர்வு | இலட்சத்தில் | 95.00 | 127.021 | 134 % |
| 3 | பட்டுக் கூடு உற்பத்தி | மெ. டன் | 5700 | 7930.5 | 139 % |
| 4 | கச்சாப் பட்டு உற்பத்தி | மெ. டன் | 800 | 1124.48 | 141 % |
| 5 | வேலைவாய்ப்பு உருவாக்கம் | நபர்கள் | 15500 | 51945 | 335 % |

**2.2 நிதி**

*2006-07* ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு, பட்டு வளர்ச்சித் திட்ட செயலாக்கத்திற்காக ரூ.*322.434* இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. அத்துடன் இந்திய அரசின் மத்திய பட்டு வாரியம் தனது பங்காக ரூ.*483.078* இலட்சம் ஒப்பளித்துள்ளது. இவற்றில் *31-03-2007* வரை ரூ.*211.006* இலட்சம் மாநில அரசு தொகையும், ரூ.*386.317* இலட்சம் மத்தியப் பட்டு வாரியத் தொகையும் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டம் | நிதி ஒதுக்கீடு | | | நிதி செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாநில அரசு | மத்திய பட்டு வாரியம் | மொத்தம் | மாநில அரசு | மத்திய பட்டு வாரியம் | மொத்தம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | பகுதி–1 திட்டம்* | 304.934 | 471.578 | 776.512 | 193.506 | 374.817 | 568.323 |
| 2. | பகுதி–2 திட்டம் | 17.500 | 11.500 | 29.000 | 17.500 | 11.500 | 29.000 |
| | மொத்தம் | 322.434 | 483.078 | 805.512 | 211.006 | 386.317 | 597.323 |

* (பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி திட்டப் பணிகள்)



2007 மே 2]

**3. அரசு பட்டுக் கூடு அங்காடிகள்**

*3.1* ஓசூர், தர்மபுரி, பெண்ணாகரம், கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, வாணியம்பாடி, திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, நன்னகரம், நாகர்கோவில், திருவில்லிபுத்தூர், சிவகங்கை ஆகிய *17* இடங்களில் அரசுப் பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் இந்தப் பட்டுக் கூடு அங்காடிகளில் பரிமாற்றம் செய்யப்படுகிறது. பட்டுக் கூடுகளின் தர அடிப்படையில் அதற்கான அடிப்படை விலை பட்டுக்கூடு அங்காடி அலுவலரால் நிர்ணயிக்கப்படுகிறது. அரசு அலகுகளும் தனியார் பட்டு நூற்பாளர்களும் திறந்தவெளி ஏலத்தில் பங்கு கொண்டு பட்டுக் கூடுகளை கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். *2006-2007* ஆம் ஆண்டில் *3,203.800* மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் அரசு பட்டுக் கூடு அங்காடிகள் மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனை கடந்த *2005-2006* ஆம் ஆண்டில் பரிமாற்றம் செய்யப்பட்ட *2,315* மெட்ரிக் டன் பட்டுக்கூடுகளை விட *38.4* சதவீதம் அதிகமாகும். இந்த அங்காடி பரிமாற்றம் மூலம் வர்த்தக மதிப்பில் பட்டுக்கூடு கொள்முதல் செய்வோரிடமும் விற்பனை செய்வோரிடமிருந்தும் தலா *0.75* சதவீதம் அளவிற்கு ரூ.*53.049* இலட்சம் லெவித் தொகையாக *2006-2007* ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறையால் வசூலிக்கப்பட்டுள்ளது.

*3.2* மேலும், விவசாயிகளின் நலனுக்காக மாநில அரசு உடுமலைப்பேட்டை மற்றும் பழனியில் இரண்டு நடமாடும் பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட வருடாந்திர செலவினமாக ரூ.*1.15* இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**4. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்**

*4.1* மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால், உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை விற்பனை செய்ய பயன்படுத்தும் மையமே பட்டுப் பரிமாற்றகம் ஆகும். "அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம்" *1991* முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. பட்டு நூற்பாளர்களால் பட்டு பரிமாற்றகத்திற்கு கொணரப்படும் அனைத்து பட்டுநூல் தொகுதிகளும், காஞ்சிபுரத்தில் மத்திய பட்டு வாரியத்தால் நிறுவப்பட்டுள்ள "பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மையத்தில்" தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இதன் தரத்தின் அடிப்படையிலும் கர்நாடக மாநிலத்தில் நிலவும் கச்சாப் பட்டு விலையின்

அடிப்படையிலும் அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டு பின்னர் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), பட்டு நூற்பாளர் கூட்டுறவு சங்கங்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் பெரிய அளவு பட்டு நெசவாளர்கள் இந்த ஏலங்களில் பங்கேற்று கச்சாப் பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுப் பரிமாற்றகம், நூற்பாளர்களுக்கு பட்டு நூல் பரிமாற்றம் செய்தமைக்கான தொகையினை உடன் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

4.2 அண்ணா பட்டு பரிமாற்றகம், பட்டு உற்பத்தியாளர் மற்றும் பட்டு நுகர்வோரிடையே நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் பாலமாக செயல்படுவதுடன் தரகு முகவர் மற்றும் இடைத் தரகர்களின் தலையீட்டினை பெருமளவில் தவிர்க்கிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 125 மெட்ரிக் டன் குறியீட்டு அளவில் 153.643 மெட்ரிக் டன் பட்டு நூல் இந்த பட்டு பரிமாற்றகம் மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த 2005-2006 ஆம் ஆண்டு பரிமாற்றம் செய்த 106.600 மெட்ரிக் டன்களை விட 44 சதவீதம் அதிகமாகும்.

## 5. பட்டு மற்றும் சரிகை பரிசோதனைக் கூடம், காஞ்சிபுரம்.

தரமான பட்டுப் பொருட்கள் பரிமாற்றம் செய்வதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசின் உதவியுடன் காஞ்சிபுரத்தில் பட்டு மற்றும் சரிகை பரிசோதனைக் கூடம் ஒன்றினை மத்திய பட்டு வாரியம் 11-03-2007-ல் நிறுவியுள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில், பட்டு மற்றும் சரிகைப் பொருட்களுக்கு எவ்வித சேதமுமின்றி, எக்ஸ்ரே பகுப்பாய்வின் (X Ray Analyzer) மூலம் உடனடி பரிசோதனை செய்யப்படுகிறது. நாட்டில் பட்டு விற்பனையில் முக்கியத்துவம் வாய்ந்த இடமான காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள இப்பரிசோதனைக் கூடத்தில் பட்டு உற்பத்தியாளர், பட்டு நெசவாளர் மற்றும் பட்டாடை நுகர்வோர் இவ்வசதியினை குறைந்த செலவில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 6. டான்சில்க், காஞ்சிபுரம்

6.1 "தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்" (டான்சில்க்), காஞ்சிபுரம், தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவு சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக 1978-ல் பதிவு செய்யப்பட்டது. இந்த இணையம் பெரும்பாலான கச்சாப் பட்டினை அண்ணா பட்டுப் பரிமாற்றகத்திலிருந்து கொள்முதல் செய்கிறது.



காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோவை, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 7 இடங்களில் இணையம் கிளை மையங்களைக் கொண்டுள்ளது.

6.2 இவ்விணையம் நியாயமான விலையில் தரமான பட்டினை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதயச் சங்கங்கள் போன்ற சான்று பெற்ற பிற நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்கிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான 300 மெட்ரிக் டன் என்ற குறியீட்டு அளவிற்கு, 405.876 மெட்ரிக் டன் பட்டு நூல் டான்சில்க் நிறுவனத்தில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

## 7. பகுதி–2 திட்டங்கள்– 2007–2008

### 7.1 ரூ.72.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தனியாக புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கு உதவியளித்தல்.

பட்டுக் கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் தனிப்புழு வளர்ப்பு மனை பெரும் பங்கு வகிக்கிறது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் 60 விவசாயிகளுக்கு தனியாக புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கு திட்ட உதவிகள் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கான அலகு மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனை மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு), மாநில அரசு மற்றும் பயனாளியால் 50 : 25 : 25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். அதாவது

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு) | ரூ.60,000 |
| மாநில அரசு | ரூ.30,000 |
| பயனாளி | ரூ.30,000 |

2007-08 ஆம் ஆண்டில் 60 புழு வளர்ப்பு மனைகள் கட்ட மாநில அரசு மானியமாக ரூ.18 இலட்சம் வழங்க உள்ளது.

### 7.2 ரூ.40.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பல முனை பட்டு நூற்பு அலகு நிறுவிட உதவியளித்தல்.

பட்டுக் கூட்டிற்கு பிந்தைய நிலை செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பல முனை பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதற்கு

[2007 மே 2

உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் நான்கு பல முனை பட்டு நூற்பு அலகுகளை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவிட உதவிகள் வழங்கப்படும்.

பல முனை பட்டு நூற்பு இயந்திரத்திற்கான அலகு மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதை மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு), மாநில அரசு மற்றும் பயனாளியால் 50 : 25 : 25 விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். அதாவது

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு) | ரூ.5.00 இலட்சம் |
| மாநில அரசு | ரூ.2.50 இலட்சம் |
| பயனாளி | ரூ.2.50 இலட்சம் |

2007-08ஆம் ஆண்டில் நிறுவப்படும் நான்கு பல முனை பட்டு நூற்பு அலகுகளுக்கு மாநில அரசு மானியமாக ரூ.10 இலட்சம் வழங்க உள்ளது.

**7.3 திட்ட வாரியான விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:**

| வ. எண். | திட்டம் | இயல்பு (எண்) | அலகு மதிப்பு (ரூபாயில்) | மொத்த மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | மதிப்பு பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) மாநில அரசு பங்கு (25%) | மத்திய பட்டு வாரிய பங்கு (50%) | பயனாளி பங்கு (25%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு உதவி அளித்தல் | 60 எண்கள் | 1,20,000 | 72.00 | 18.00 | 36.00 | 18.00 |
| 2. | பல முனை பட்டு நூற்பு அலகு நிறுவிட உதவி அளித்தல் | 4 அலகுகள் | 10,00,000 | 40.00 | 10.00 | 20.00 | 10.00 |
| | மொத்தம் | | | 112.00 | 28.00 | 56.00 | 28.00 |



2007 மே 2]

மேலும் ரூ.44.02 இலட்சம் மதிப்பீட்டில் பிற பட்டு வளர்ச்சி திட்டங்களும், உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**8. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்**

8.1 நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பட்டு வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்த விவசாயிகளுக்கு உதவும் வகையில் ரூ.52.80 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்தொகையானது மத்தியப் பட்டு வாரியம், மாநில அரசு மற்றும் பயனாளிகளால் முறையே 50 : 25 : 25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். அதாவது,

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு) | ரூ.23.60 இலட்சம் |
| மாநில அரசு | ரூ.11.80 இலட்சம் |
| பயனாளி | ரூ.17.40 இலட்சம் |

**8.2 திட்டவாரியான விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:**

| வ. எண். | திட்டம் பெயர் | இயல்பு இலக்கு | அலகு மதிப்பு (ரூ) | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | தொகை பங்கீடு (ரூ. இலட்சத்தில்) மாநில அரசு பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு | பயனாளி பங்கு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மல்பரி நடவுக்கான ஊக்குவிப்புத் தொகை | 160 ஏக்கர் | 5,500 (ஏக்கர் ஒன்றுக்கு) | 8.80 | 0.800 (ஏக்கர் ஒன்றுக்கு ரூ.500 வீதம்) | 1.600 (ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம்) | 6.400 |
| 2. | தனியாக புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கு உதவியளித்தல் | 55 எண் | 50,000 | 27.50 | 6.875 (25%) | 13.750 (50%) | 6.875 (25%) |
| 3. | புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட உதவியளித்தல் | 55 எண் | 30,000 | 16.50 | 4.125 (25%) | 8.250 (50%) | 4.125 (25%) |
| | மொத்தம் | | | 52.80 | 11.800 | 23.600 | 17.400 |

## 9. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள்

## (Catalytic Development Programme)

*9.1* பட்டுக் கூடு மற்றும் பட்டு நூல் பரிமாற்றத்தின்போது அரசு பட்டுக் கூடு அங்காடிகள் மற்றும் காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் வசூல் செய்யப்படும் லெவித் தொகை 'பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி'யாக இட்டுவைப்பு செய்யப்படுகிறது. இந்நிதி, மாநிலத்தில் பல்வேறு வகையான கிரியா ஊக்கித் திட்டங்கள் மற்றும் இதர பட்டு வளர்ச்சி செயல்களுக்கு உதவியளிக்க பயன்படுத்தப்படுகிறது.

*9.2* *2007-08* ஆம் ஆண்டில் ரூ.*538.775* இலட்சம் மதிப்பீட்டில் கிரியா ஊக்கித் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை மத்திய பட்டு வாரியம் (மத்திய அரசு), மாநில அரசு (பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி) மற்றும் பயனாளிகளால் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (இந்திய அரசு) | ரூ.*198.750* இலட்சம் |
| மாநில அரசு | ரூ.*85.650* இலட்சம் |
| பயனாளி | ரூ.*254.375* இலட்சம் |

**9.3 திட்ட வாரியான விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இயல்பு இலக்கு | அலகு மதிப்பீடு (ரூ) | மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மொத்த மதிப்பீட்டில் பங்கீடு விவரம் (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில அரசு பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு | பயனாளி பங்கு |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவுக்கான உதவிகள் அளித்தல் | 4000 ஏக்கர் | 5500 | 220.000 | 20.00 | 40.00 | 160.00 |



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | சொட்டு நீர்ப் பாசன அமைப்பு நிறுவிட உதவிகள் அளித்தல் | 150 ஏக்கர் | 20000 | 30.000 | 7.500 | 15.000 | 7.500 |
| 3. | தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காக உதவிகள் அளித்தல் | 205 எண்கள் | 50000 | 102.500 | 25.625 | 51.250 | 25.625 |
| 4. | புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட உதவிகள் அளித்தல் | 100 எண்கள் | 30000 | 30.000 | 7.500 | 15.000 | 7.500 |
| 5. | இளம் புழு வளர்ப்பு மையம் நிறுவிட உதவியளித்தல் | 1 எண் | 500000 | 5.000 | 1.250 | 2.500 | 1.250 |
| 6. | தரமான கிருமி நாசினிகள் விநியோகித்தல் | 1000 விவ– சாயிகள் | 3,000 | 30.000 | 7.500 | 15.000 | 7.500 |
| 7. | தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவிட உதவிகள் அளித்தல் | 1 எண் | 280.000 இலட்சம் | 280.000 | 15.000 | 50.000 | 215.000 |
| 8. | யூ.பி.எஸ். கொள்முதல் | 1 செட் | 75000 | 0.750 | 0.750 | – | – |
| 9. | காப்பியர் இயந்திரம் கொள்முதல் | 1 எண் | 52500 | 0.525 | 0.525 | – | – |
| | மொத்தம் | | | 698.775 | 85.650 | 188.750 | 424.375 |

[2007 மே 2

## 10 பட்டு வளர்ச்சித் துறையின் முக்கிய செயல்பாடுகள்

10.1 2007-08 ஆம் ஆண்டில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கும், பட்டு நூற்பு செய்யும் தொழில் முனைவோருக்கும் கீழ்க்கண்ட திட்டங்களுக்காக மாநில அரசால் திட்ட உதவிகள் வழங்கப்படும்.

* உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவு செய்தல்.
* பட்டுப் புழு வளர்ப்பு பயிற்சி மற்றும் பட்டு நூற்பு பயிற்சி .
* மல்பரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவிடல்.
* தனியாக பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்டுதல்.
* நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திடல்.
* இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம் மற்றும் பட்டு நூற்பு அலகுகள் நிறுவிடல்.
* தரமான கிருமிநாசினிகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

10.2 இதற்கு இணையாக மத்திய அரசின் பங்கு, மத்திய பட்டு வாரியத்தால் வழங்கப்படும்.

10.3 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (2007-2008 முதல் 2011-2012 வரை) மத்திய பட்டு வாரியம், திட்டங்களுக்கான அலகு மதிப்பீட்டினை அதிகப்படுத்திட பிரேரித்துள்ளது. கிரியா ஊக்கித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், பகுதி-2 திட்டம் போன்ற திட்டங்களுக்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடுகளுக்கும் இந்த கூடுதல் அலகு மதிப்பீடு தொகை அளவே பின்பற்றப்பட்டுள்ளது.

## 11. 2007–2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

* இரு சுழற்சியின பட்டு வளர்ப்பு, முன்னுரிமை அடிப்படையில் தொடரப்படும். மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தியின் பங்கினை அதிகரித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
* துறை வித்தகங்களில் இரு சுழற்சியின பட்டு முட்டை உற்பத்தி 7.23 இலட்சத்திலிருந்து 10 இலட்சமாக உயர்த்தப்படும்.
* பட்டுக் கூட்டிற்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்திட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகு, 4 பலமுனை பட்டு நூற்பு அலகுகளை 2007-08 ஆம் ஆண்டில் நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.
* 2007-2008 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சிப் பணிகள், "தொகுப்பு அணுகுமுறை" (Cluster Approach)யில் கவனம் செலுத்தி



2007 மே 2]

செயல்படுத்தப்படும். இந்த முறையில் திட்ட உதவிகள் ஒட்டு மொத்த வடிவில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

* பட்டு நெசவுக்கு தேவையான பட்டு நூலை தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நோக்குடனும் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டும் 2007-2008 ஆம் ஆண்டில் கூடுதலாக 10,000 ஏக்கர் நிலப்பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்படும். மாநிலத்தில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.15 கோடி மதிப்பீட்டில் பட்டு வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 12. 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

மேற்கண்ட குறிக்கோளினை அடைய 2007-2008 ஆம் ஆண்டிற்கு திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கான நிதித் தேவை கீழ்க்காணும் விவரப்படி ரூ.3,122.35 இலட்சம் ஆகும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2007–2008–க்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | **திட்டப் பணிகள்** | | |
| (அ) | (1) பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள் | ரூ.85.65 இலட்சம் | 178.65 |
| | (2) பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி கணக்குகள் இடையே மாற்றம் | ரூ.93.00 இலட்சம் | |
| (ஆ) | பகுதி–2 திட்டம் | | |
| | 1) தனி புழு வளர்ப்பு மனை கட்டுதல், பலமுனை பட்டு நூற்பாலை அமைத்தல் | ரூ.28.00 இலட்சம் | 72.02 |
| | 2) பிற பட்டு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உள் கட்டமைப்பு பணிகள் | ரூ.44.02 இலட்சம் | |
| (இ) | **மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்** | | 11.80 |
| | **திட்டப் பணிகள் உப கூடுதல்** | | 262.47 |
| 2. | **திட்டம் சாராப் பணிகள்** | | |
| | (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித் தொகைகள் முதலியன) | | 2,859.88 |
| | **மொத்தம்** | | 3,122.35 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களுக்கு வளமையான பின்னணியை தமிழகம் கொண்டுள்ளது. தமிழகத்தில் உள்ள கைத்திறத் தொழிலை தற்கால வழக்கிற்கேற்றவாறு மேம்பட்ட புத்தாக்கத்திற்கான இலக்கு நோக்கி பயணிக்க தூண்டுதல் செய்வதற்காக, அரசு "கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம்" (TNHDC Ltd) எனும் கழகத்தினை அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாக அமைத்து இந்நிறுவனம் 1956-ம் ஆண்டைய நிறுவன சட்டத்தின்கீழ் 26-07-1973-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 01-08-1973-ல் ஆரம்பிக்கப்பட்ட போது, தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வர்த்தக சங்கங்களின்கீழ் இயங்கி வந்த அனைத்து கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும் பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின்கீழ் மாற்றப்பட்டன. அரசிடமிருந்து அனைத்து விற்பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டபின் இந்நிறுவனம் "பூம்புகார்" என்ற பெயரில் இயங்கத் துவங்கியது. தற்போது "பூம்புகார்" தமிழ்நாட்டின் தலைசிறந்த கைவினைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக் களஞ்சியமாக உள்ளது.

### 2. நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் தற்போதைய செயல்பாடு

இந்நிறுவனம் அமைக்கப்பட்டதற்கான முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

(i) தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல்.

(ii) கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்த முறையான பயிற்சி அளித்தல்.

(iii) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும் தரத்தினையும் மேம்படுத்துவதோடு அத்தொழிலில் உள்ள தொழில் முறை இடர்பாடுகளைக் களைதல்.

(iv) வடிவமைப்புகளில் புதிய உத்திகளை புகுத்துதல்.

(v) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல்.



### 3. வணிகச் செயல்பாடுகள்

### 3.1 விற்பனை

இந்நிறுவனம், கைவினைஞர்களின் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை 17 பூம்புகார் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் கண்காட்சிகள் மூலமாகவும் நிறைவேற்றி வருகிறது.

3.2 1973-74-ல் ரூ.50.00 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் ஆண்டு விற்பனை கடந்த 33 ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து 2006-07-ல் சாதனை விற்பனையாக ரூ. 1,860 இலட்சங்களை அடைந்துள்ளது.

3.3 விற்பனைக் கோட்பாடுகளை முனைப்பாகவும் ஆதரவாகவும் செயல்படுத்தியதன் மூலமும் மற்றும் சிறப்பு கோவில் திட்டங்களை 2005-06-ல் திறனுடன் நிறைவேற்றியதனாலும் முதன் முறையாக இந்நிறுவனம் ரூ.1,784 இலட்சம் விற்பனையை எட்டி கடந்த ஆண்டைவிட 24 சதவிகிதம் உயர் சாதனை படைத்துள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் இக்கழகம் விற்பனை அளவு ரூ.1,860 இலட்சங்களை அடைந்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தி ரூ.25.00 கோடி விற்பனையை அடைய திட்டமிட்டுள்ளது.

### 3.4 ஏற்றுமதி

கடந்த சில ஆண்டுகளாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விற்பனை நிலையங்களில் வாங்கும் பொருட்களை சிறந்த முறையிலும் குறிப்பிட்ட கால கெடுவிலும் மற்றும் பாதுகாப்பான முறையிலும் அனுப்பி வைப்பதால் ஏற்றுமதியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பஞ்சலோக சிலைகள், பித்தளை அலங்காரப் பொருட்கள், நூக்கமர உபயோகப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை அவ்வாறான ஏற்றுமதி பொருட்களில் அடங்கும்.

### 3.5 உற்பத்தி

இந்நிறுவனம் நாச்சியார்கோவில், மதுரை, தஞ்சாவூர், வாகைகுளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது உற்பத்தி நிலையங்கள் மூலமாக பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. அகில இந்திய அளவில் சொந்த உற்பத்தி மையங்களைக் கொண்ட கைத்திறத் தொழில்கள் நிறுவனம் இந்நிறுவனம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த

[2007 மே 2

2005-2006 ஆம் ஆண்டின் இந்நிறுவன உற்பத்தி மையங்களில் எய்தப்பட்ட மொத்த உற்பத்தியான ரூ.134.34 இலட்சத்திற்கு எதிராக 2006-2007ஆம் ஆண்டில் உற்பத்தி 57 சதவிகிதம் அளவிற்கு அதிகரித்து ரூ.210.36 இலட்சம் எய்தியுள்ளது. இதில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினருக்கு 4315 பித்தளை சலவைப் பெட்டிகளை உற்பத்தி செய்து விநியோகித்ததும் அடங்கும்.

**3.6 சிறப்பு கோவில் திட்டங்கள்**

தனது உற்பத்தி நடவடிக்கைகள் தவிர இக்கழகம் தங்கரதம், வெள்ளி ரதம், மரத்தேர், வாகனம், கொடிமரம், கோவில் மணி போன்ற சிறப்பு கோவில் திட்டப்பணிகளில் ஈடுபட்டு தனக்கென ஒரு தனிச் சிறப்பினை ஏற்படுத்தி உள்ளது. அகில இந்திய அளவில் செயல்பட்டு வரும் அனைத்து கைவினைப்பொருள் கழகங்களில் தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே இத்தகைய தனித்துவம் பெற்றுள்ளது.

2006-07ஆம் ஆண்டில் இக்கழகம் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலின் கோபுர விமானத்திற்கு செப்புத் தகடு போர்த்தி தங்க ரேக் அமைக்கும் பணியை ரூ.30.36 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடித்துள்ளது.

இது தவிர, இந்நிறுவனம் தற்போது கீழ்க்கண்ட கோவில் பணிகளை செய்து வருகிறது:—

| வ. எண் | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலுக்கு 8¼ அடி உயர தங்கத் தேர் செய்தல். | 6.50 |
| 2. | திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு 12½ அடி உயர தங்கத் தேர் செய்தல். | 10.50 |
| 3. | பெங்களூரில் உள்ள இஸ்கான் திருக்கோயிலில் செப்புத்தகடு போர்த்தும் பணி. | 24.00 |
| 4. | திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவிலுக்கு 18 அடி உயர மரத் தேர் தயாரித்தல் | 19.00 |
| | மொத்தம் | 60.00 |

இப்பணிகள் அனைத்தும் ஜூன் 2007-க்குள் செய்து முடிக்கப்படும்.



2007 மே 2]

**4. பகுதி–2 திட்டங்கள் 2006–07**

2006-07 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:

| வ. எண் | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கைத்திறத் தொழில் குழுமங்களை மேம்படுத்துதல் | 30.00 |
| 2. | சென்னையில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைத்தல் | 10.00 |
| 3. | சென்னையில் கைத்திறன் அருங்காட்சியகம் அமைத்தல் | 18.45 |
| | மொத்தம் | 58.45 |

* வரிசை எண் 1-ல் கூறப்பட்ட திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது.

* வரிசை எண் 2-ல் கூறப்பட்ட திட்டமானது ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியாக முறையே ரூ.140.00 இலட்சம் மற்றும் ரூ.60.00 இலட்சம் பெற்று நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்திட்டத்திற்காக தலா ரூ.10.00 இலட்சம் 2006-07-ல் வழங்கியுள்ளன. மீதமுள்ள ரூ.180.00 இலட்சம் 2007-08-ல் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிலம் மாமல்லபுரம் கடற்கரை விடுதி வளாகத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜனவரி 2008 முதல் முழுமையாக செயல்படத் தொடங்கும்.

* வரிசை எண் 3-ல் கூறப்பட்ட திட்டத்திற்கான ஒப்புதல் அரசு அருங்காட்சியக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மத்திய அரசின் அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) புது தில்லி அவர்களிடமிருந்து ரூ.25.00 இலட்சத்திற்கான அனுமதியை எதிர்நோக்கியுள்ளது.

## 5. பகுதி–2 திட்டங்கள், 2007–2008

### 5.1 ஏற்றுமதி வாய்ப்புடைய நான்கு கைத்திறப் பொருட்களுக்கான கைத்திற தொகுப்பு மையங்களை உருவாக்குதல்

தற்போது கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்கள் கைத்திறன் பொருட்களை பெருமளவில் மொத்தமாக தயாரிக்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே, கைத்திறன் உற்பத்தித் திறனை மேம்படுத்த பல்வேறு ஒருங்கிணைந்த கைத்திறன் வளர்ச்சித் திட்டங்களை வகுப்பது தேவைப்படுகிறது. எனவே ஏற்றுமதி சார்ந்த கைத்திறன் பொருட்களை, ஒருங்கிணைந்த கைத்திறன் வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக மேம்படுத்த திட்டமிடப்பட்டது.

2007-08 ஆம் ஆண்டுகளில், ஏற்றுமதி வாய்ப்புடைய கைத்திறன் பொருட்களின் உற்பத்தியில் பின்வரும் மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்த இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது:

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | கைத்திறன் வகை |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | தேங்காய் ஓடு |
| 2. | கன்னியாகுமரி | கடற்சிப்பி |
| 3. | கிருஷ்ணகிரி | இலகு மரச் செதுக்கு வேலை |
| 4. | திருச்சி / சென்னை | மரத்தினால் செய்யப்பட்ட மணி மாலைகள் |

மேற்கண்ட நான்கு மாவட்டங்களிலும் தொகுப்பு மையங்களை ரூ.10.00 இலட்சம் செலவில் உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினம் அனைத்தும் மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் சரிபாதியாக தலா ரூ.5.00 இலட்சம் என்ற அளவில் நிதி உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. மாநில அரசு 2007-08-க்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் தனது பங்காக ரூ.5.00 இலட்சம் ஒதுக்க உத்தேசித்துள்ளது.

### 5.2 கைத்தறி நெசவாளர்களைப்போல் கைத்திறத் தொழில் கைவினைஞர்களுக்கும் உடல் நலன் பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதிகளை ஏற்படுத்துதல்

தற்போது கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்கள் அமைப்பு சாரா நிலையில் உள்ளனர். கைத்திறன் பொருட்களுக்கு, உள் நாட்டிலும்,





உலக அளவிலும் நல்ல சந்தை வாய்ப்பு இருந்தபோதிலும் இக்கைத்திறன் பொருட்கள் உற்பத்தி செய்யும் கைவினைஞர்கள் வாழ்வாதார பாதுகாப்பின்றியே உள்ளனர். எனவே அவர்களுக்கென ஒரு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கைத்திறன் அபிவிருத்தி ஆணையரின் நடைமுறைத் திட்டத்தின்கீழ் ஆண்டு காப்பீட்டுத் தொகையான ரூ.200/-ஐ பின்வருமாறு பகிர்ந்து செலுத்தப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| 1. | ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் சமூக நல மேம்பாட்டு நிதியம் | ரூ.100/- |
| 2. | மத்திய அரசு (அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்) ) | ரூ. 60/- |
| 3. | கைவினைஞர் செலுத்த வேண்டியது (தமிழக அரசு ஏற்கும்) | ரூ. 40/- |
| | **மொத்தம்** | **ரூ.200/-** |

இத்திட்டத்தின்கீழ் வரும் கைவினைஞர்களுக்கு காப்பீட்டுப் பயன்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:—

* இயற்கை மரணம் நேரிடும்பட்சத்தில் ரூ.30,000/-
* விபத்தில் உயிர் இழக்க நேரிடும்பட்சத்தில் ரூ.60,000/-
* பகுதி செயலற்ற நிலை நேரிடும்பட்சத்தில் ரூ.30,000/-
* முற்றிலும் செயலற்ற நிலை ஏற்படும்போது ரூ.60,000/-

அத்துடன் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் காப்புறுதி பெற்ற கைவினைஞர்களின் இரண்டு குழந்தைகளுக்கு மாதம் ரூ.100/- வீதம் உதவித் தொகையாக வழங்கப்படும்.

பெரும்பாலான கைவினைஞர்கள் காப்பீடு பெறுவதற்குத் தேவையான தங்கள் பங்குத் தொகையை செலுத்த விரும்பாத நிலை உள்ளதால் அவர்கள் அனைவருக்கும் காப்பீட்டு வசதியை அளிக்கும் நோக்கத்துடன் அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை அரசு ஏற்று செலுத்தவும் 2007-08 ஆம் ஆண்டில் முதற்படியாக 10,000 கைவினைஞர்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி ஒரு கைவினைஞருக்கு ரூ.40/-வீதம் செலுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 மே 2

இதற்கான நிதிச் செலவினம் ஆண்டுக்கு ரூ.4.00 இலட்சங்களாகும் (ரூ.40 x 10,000 கைவினைஞர்கள்). தேவைப்படின் இத்திட்டத்தை மீதமுள்ள கைவினைஞர்களுக்கு வரும் ஆண்டுகளில் விரிவாக்கம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5.3 சுவாமிமலையிலும், கோயம்புத்தூரிலும் ஒருங்கிணைந்த கைத்திறன் மேம்பாட்டுக்கென பொதுப் பயன்பாட்டு மையம் அமைத்தல்**

கைவினைஞர்கள் தங்கள் கைத்திறன் பொருட்கள் உற்பத்தி நடவடிக்கைகளை மிகுந்த கஷ்டத்துடன் தங்கள் வீடுகளிலேயே செய்து வருகிறார்கள். வெகு காலமாகவே அவர்கள் தங்களுக்கென பொது பணியிடம் ஒன்று வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர். இதன்மூலம் தங்கள் வீடுகளை விட்டு தொலைவில் பொது பணியிடத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எனவே தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் **"பொதுப் பயன்பாட்டு மையங்களை"** அமைப்பதால், அதன் வசதிகளைப் பயன்படுத்தி, கைவினைஞர்கள் தங்கள் கைத்திறன் பொருட்களின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட ஏதுவாகும்.

2007-08 ஆம் ஆண்டில் இத்தகைய பொது பயன்பாட்டு மையங்களை, பஞ்சலோக சிலைகளுக்காக சுவாமிமலையிலும், பூத்தையல் மற்றும் நூல் வேலை, சணல் வேலை, பனை ஓலை முடைதல், மணமூட்டும் மெழுகுவர்த்திகள் தயாரிப்பு, ஊதுபத்திகள் தயாரிப்பு, தோல் பொருட்கள் போன்ற சிறுபான்மையினப் பெண்கள் ஈடுபட்டுள்ள தொழில்களுக்காக கோயம்புத்தூரிலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவி பெற்று அமைத்திட இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இவ்விரண்டு பொது பயன்பாட்டு மையங்களுக்கான மொத்த செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும். இதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கு தலா ரூ.5.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு 2007-2008 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் வழங்க உத்தேசித்துள்ளது.

**5.4 கன்னியாகுமரியில் நகர்ப்புற கண்காட்சித் திடல் அமைத்தல்**

இந்திய அரசு, புதுடெல்லியில் நகர்ப்புற கண்காட்சித் திடல் ஒன்றை அமைத்துள்ளது. அகில இந்திய அளவிலான கைவினைஞர்கள் பெருமளவில் வந்து, கண்காட்சிகளில் பங்கு பெற்று தங்கள் உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு நேரிடையாக விற்பனை செய்து



2007 மே 2]

பயன்பெற்று வருகிறார்கள். இது இவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை அளிப்பது மட்டுமின்றி, அவர்களுக்கு உடனடி ஏற்றுமதி ஆணை பெறும் வாய்ப்புகளையும் அளிக்கிறது.

சென்னையிலும் இத்தகைய நகர்ப்புற கண்காட்சித் திடலை ரூ.2.00 கோடி செலவில் அமைக்கும் திட்டத்திற்கு ஏற்கெனவே இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இத்தகைய திடலை கன்னியாகுமரியில் அமைக்கும் திட்டத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

கன்னியாகுமரி உலகளவில் புகழ் பெற்றுள்ள சுற்றுலாத்தலமாக திகழ்வதுடன் பூகோளரீதியாக இந்தியப் பெருங்கடல், வங்கக்கடல், அரபிக்கடல் இவற்றின் சங்கமத்திற்கிடையே அமைந்துள்ள காரணத்தால் இந்தியாவின் சுற்றுலா வரைபடத்தில் அதற்கென தனித்த இடம் உண்டு. கன்னியாகுமரியில் கலை நயமிக்க கடற்சிப்பிகள், மரச்சிற்பங்கள், கையால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகள், தேங்காய் ஓட்டினால் ஆன பொருட்கள், வாழைநார் பொருட்கள் போன்றவற்றைச் செய்யும் கைவினைஞர்கள் அதிகம் உள்ளனர். எனவே, கன்னியாகுமரியில் ஒரு நகர்ப்புற கண்காட்சித் திடலை ரூ.2.00 கோடி நிதிச்செலவில் அமைக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்தொகை இந்திய அரசினாலும், தமிழ்நாடு அரசினாலும் பின்வருமாறு பங்கீடு செய்தளிக்கப்பட உள்ளது:

(அ) இந்திய அரசு (70 சதவீதம்) - ரூ.140.00 இலட்சம்

(ஆ) தமிழ்நாடு அரசு (30 சதவீதம்) - ரூ.60.00 இலட்சம்

தமிழ்நாடு அரசு தனது பங்கான ரூ.60.00 இலட்சத்தை 2007-08ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின்கீழ் அனுமதிக்க உத்தேசித்துள்ளது.

**6. பூம்புகார் மாநில விருது**

6.1 கைவினைஞர்களின் புதியன படைக்கும் திறனை ஊக்குவிக்கவும், சிறந்த செயல் திறனை வெளிக்கொணரவும் இந்நிறுவனம் ஆண்டுதோறும் பூம்புகார் விருதுப் போட்டியினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கலை மற்றும் கவின் பொருட்கள் களத்தினைச் சார்ந்த மேம்பட்டவர்கள் அடங்கிய நீதிபதிகளின் குழுவினால் ஐந்து மிகச் சிறந்த கலைப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்படும். வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ.5000/-, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டு வந்தது.

2006-2007 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி விருதிற்கான ரொக்கத் தொகையினை ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தியதுடன் 40 கிராம் எடையுள்ள வெள்ளி பதக்கத்திற்குப் பதிலாக 4 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 13-09-2006 அன்று சுவாமிமலையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் 2003-04 மற்றும் 2004-05 ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 9 கைவினைஞர்களுக்கு ரூ.2.25 இலட்சம் செலவில் பூம்புகார் மாநில விருது வழங்கப்பட்டது.

பூம்புகார் விருதினைப் பெற்றவர்கள், 60 வயதைக் கடந்தவுடன் மத்திய அரசிடமிருந்து மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/- பெற தகுதி உடையவராகிறார்கள்.

**6.2 மத்திய அரசின் தேசிய விருது / சில்ப குரு விருது / யுனெஸ்கோ இளம் கைவினைஞர் விருது**

மத்திய அரசு தேசிய அளவில் ஒரு விருதினை ஏற்படுத்தி ஆண்டுதோறும் 25 கைதேர்ந்த கைவினைஞர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மத்திய அரசின் சார்பில் இந்நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களிலிருந்து இந்த விருதிற்கான கைவினைஞர்களை மாநில அளவில் தேர்வு செய்து அதை தேசிய அளவிலான இறுதித் தேர்விற்காக மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கிறது.

6.3 இதே போல் மாநில விருது மற்றும் தேசிய விருது பெற்ற சிறந்த கைவினைஞர்களில் 55 வயதை எட்டிய முதிர்ந்த கைவினைஞர்களுக்கு 'சில்ப குரு' விருது வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை அரசுச் செயலர் அவர்களால் திறமையான கைவினைஞர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு இவ்விருதிற்காக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது.

6.4 ஒவ்வொரு ஆண்டிலும் உலக அளவில் கைவினைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் விதத்தில் சிறந்த கைவினைஞர்களுக்கு யுனெஸ்கோ (UNESCO) விருதும் உலகளவில் இளம் கைவினைஞர்களுக்கான 1-வது, 2-வது, 3-வது பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் போட்டிக்கு தமிழக இளம் கைவினைஞர்கள் போட்டியில் கலந்துகொள்ள இக்கழகம் உதவி செய்து வருகிறது. இந்த



விருதுக்கு தகுதியானவர்கள் கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை அரசுச் செயலர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**7. கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகள்**

7.1 கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை தமிழ்நாடு முழுவதிலும் மற்றும் பெங்களூர், கொல்கத்தா மற்றும் புது தில்லியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் 17 விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்து வருகின்றது.

7.2 இக்கழகம் இந்தியாவில் உள்ள பல்வேறு இடங்களில் வருடம் முழுவதும் கண்காட்சிகளை நடத்தி, கைவினைப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. 2006-07ஆம் ஆண்டில் 128 கண்காட்சிகளை நடத்தியுள்ளது.

7.3 இக்கழகம் ஜனவரி 2007-ல் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தேசிய கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஒன்றினை 11-01-2007 முதல் 20-01-2007 வரை 10 நாட்கள் நடத்தியது. இக்கண்காட்சியில் இந்தியாவிலுள்ள உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், புதுதில்லி, இராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர், குஜராத் மற்றும் தமிழ்நாடு உட்பட 25 மாநிலங்களைச் சார்ந்த 186 கைவினைஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். இக்கண்காட்சியில் உலோகப் பொருட்கள், ஓவியங்கள், துணி நூல், ஆபரணங்கள், சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட பொருட்கள், மூங்கில் கைவினைப் பொருட்கள், நூக்க மர மற்றும் சந்தனமரப் பொருட்கள் உள்ளிட்ட கைவினைப் பொருட்கள் ரூ.45.00 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது. இக்கண்காட்சி அதிக அளவில் பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்ததுடன், கலை ஆர்வலர்களிடமிருந்து அதிக அளவில் பாராட்டுதலைப் பெற்று வெற்றிகரமாக அமைந்தது.

**8. கைத்திறன் ஆணையரகம் அமைத்தல்**

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்திறத் துறையின் வளர்ச்சிக்காக உள்கட்டமைப்புகளை பலப்படுத்துதல், பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசின் நிதி உதவிக்கு இணையாக மாநில அரசிடமிருந்து நிதி உதவி பெறுதல், கைவினைஞர்களுக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறையினை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. மேற்கண்ட அணுகுமுறையினை அடையும்

ரூ.302.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் விளிம்புத் தொகை மானியமாக 287 பயனாளிகளுக்கு ரூ.222.72 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 3. கதர்

### 3.1 கதர்ப் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது கிராமக் கைவினைஞர்களுக்கு நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. ஏறத்தாழ 153 கிராமிய நூற்பு நிலையங்கள், 58 உபகிளைகள், 12 நேபாளி தறி நிலையங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் சுமார் 12,500 கிராமியப் பெண்கள் உள்பட 20,000 கைவினைஞர்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்பினை உருவாக்கி வருகிறது. பருத்திக் கதரின் மூலம் வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் மற்றும் இதர பெரும்பான்மையான கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் தேவை நமூனாக்களின் அடிப்படையில் மட்டும் கீழ்க்கண்ட அரசு மற்றும் இதர துறைகளுக்கு கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| 1. சுகாதாரம் | ரூ.55.22 இலட்சம் |
| 2. கல்வி | ரூ. 6.59 இலட்சம் |
| 3. இரயில்வே | ரூ. 4.22 இலட்சம் |
| 4. இதர அரசுத் துறைகள் | ரூ. 15.37 இலட்சம் |
| மொத்தம் | ரூ. 81.40 இலட்சம் |

### 3.2 கதர் பட்டு

கதர் வாரிய அலகுகளில் உற்பத்தியாகும் கதர் பட்டு பழம்பெருமை கொண்டதாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக்





கட்டுப்பாட்டின்கீழ் 27 கதர் பட்டு உபகிளைகள் இயங்கி வருகின்றன. வாரியத்தினால் ரூ.1,800/- முதல் ரூ.25,000/- விலை வரையிலான உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் தனித்தன்மை வாய்ந்தது. இப்புடவைகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வாரியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சிடப்பட்ட மற்றும் எம்ராய்டரி பட்டுப் புடவைகள் மக்களிடம் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளன. புதுமாதிரியான புடவைகள் கணினி உதவியுடன் குறைந்த விலையில் ரூ.2,500/-ல் அறிமுகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இது விற்பனையை அதிகரிப்பதுடன் பட்டுத் தொழிலில் வியாபாரப் போட்டியினை எதிர் கொள்ளும் வகையில் உள்ளது. இவ்வாரியம் சுமார் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதற்கும் வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் பட்டுநூல் சாயம் தோய்க்கும் தொழிற் பிரிவில் வெளியாகும் கழிவு நீரினை சவ்வூடு முறையில் சுத்திகரிப்பு செய்ய இயந்திரங்கள் அமைக்க ரூ.5.00 இலட்சம் அனுமதித்து சேலம் மாவட்டம் காட்டம்பட்டியிலுள்ள பட்டுநூல் சாய அலகில் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### 3.3 கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கான தள்ளுபடி

மாநில அரசு மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் வழங்கப்படும் விற்பனைக்கான தள்ளுபடி மானியம் கதர், உல்லன், பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு இரகங்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான ஒரு பிரதான நிதி ஆதாரமாகும். மாநில அரசு, மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் தள்ளுபடியுடன் சேர்த்து ஆண்டு முழுவதற்கும் கதர் இரகங்களின் விற்பனை மீது 30 சதவீதத் தள்ளுபடியும், பட்டு இரகங்களின் விற்பனை மீது 20 சதவீதத் தள்ளுபடியும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது. வாரியம் பட்டு இரகங்களின் ரொக்க விற்பனைக்கு கூடுதலாக 10 சதவீதம் தள்ளுபடி அளிக்கிறது. அரசு, மாநில கதர் வாரியத்திற்கு வழங்கும் தள்ளுபடி மானியம் அதிகபட்சம் ஆண்டுக்கு ரூ.2.00 கோடி என நிர்ணயித்துள்ளது. இந்தத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டதனால், வாரியம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.15.01 கோடி கதர் இரகங்களை விற்பனை செய்துள்ளது. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் சான்றளிக்கப்பட்ட 72 நிறுவனங்களின் விற்பனைக்கும் இத்தள்ளுபடி அளிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ.5.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 3.4 நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்

#### i) கைவினைஞர்களுக்கான நல நிதி

கைவினைஞர்களுக்கான நலநிதி ஒன்று இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 சதவீதத்தை இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலன்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கும் கூலியுடன் 10 சதவீத கூலித் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு, நூற்போர் மற்றும் நெய்வோருக்கு அவர்களுடைய கோரிக்கை மற்றும் அவர்கள் கணக்கில் உள்ள தொகைக்கு ஏற்ப இந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2006-07ஆம் ஆண்டில் 1,445 கைவினைஞர்களுக்கு ரூ.30.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

#### ii) குடும்ப நல நிதித் திட்டம்

நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப நலநிதித் திட்டத்தின்கீழ் கருணைத் தொகை வழங்கும் ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டம், வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு அரசு ரூ.20,000/- மானியமாக வழங்கி வருகிறது.

#### iii) குழு காப்பீட்டுத் திட்டம்

2005-2006 ஆம் ஆண்டிலிருந்து நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டம் (காதி காரிகார் ஜீவன் பீமா யோஜனா) கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் நிதியுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1445 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் வாரிய காப்பீடு கட்டணத் தொகையுடன் கைவினைஞர்களின் பங்குத் தொகையையும் வாரியம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நூற்போர் மற்றும் நெசவாளர்களின்



குழந்தைகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு, ஒவ்வொரு வருடமும் ஒரு மாணவருக்கு ரூ.1,200/- வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. (ஒரு கைவினைஞருக்கு அதிகப்படியாக இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) 2006-2007 ஆம் ஆண்டில் 73 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ.1,200/- வீதம் ரூ87,600/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ.20,000/- மற்றும் வாரியத்திலிருந்து ரூ.10,000/- வழங்கப்படும். நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக மொத்தம் ரூ.50,000/- வழங்கப்படும்.

## 4. கிராமத் தொழில்கள்

### 4.1 தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட முக்கியத் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் முதன்மை வாய்ந்ததாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழிலை மிக முக்கியமான தொழிலாக அடையாளம் கண்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 தச்சு மற்றும் கருமாரத் தொழில் துறை அலகுகள் கிண்டி, வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் பேட்டை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அறைகலன்கள் இவ்வலகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிடமிருந்து கணிசமான அளவில் அறைகலன்களுக்கான விநியோக ஆணைகள் பெறப்பட்டு அந்தந்தத் துறைகளுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை | ரூ.270.00 இலட்சம் |
| 2. | எல்காட் நிறுவனம் | ரூ.115.00 இலட்சம் |
| 3. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | ரூ.60.00 இலட்சம் |
| 4. | இதர துறைகள் | ரூ.190.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.635.00 இலட்சம் |

மேற்கண்ட விநியோக ஆணையில் ரூ.131.00 இலட்சம் மதிப்பிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 2007க்குள் மீதம் விநியோகம் செய்யப்படும்.

### 4.2 தோல் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில் தோல் தொழில் பிரதான தொழிலாகும். தமிழகத்தில் தற்போது கதர் வாரியத்தின்கீழ் 19 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இக்காலணி அலகுகளில் தரம் வாய்ந்த காலணிகளும் தோல் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இக்காலணி அலகுகள்மூலம் உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்களில் 80 சதவீதப் பொருட்கள் தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, உள்ளாட்சி நிறுவனங்கள், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் இதர துறை நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், இவ்வாரியமானது பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் கதரங்காடிகளின்மூலம் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் விற்பனை செய்து வருகிறது. இத் தொழிலில் ஈடுபட்டு பலனடைந்து வரும் சுமார் 1,000 கைவினைஞர்களில் பெரும்பாலான கைவினைஞர்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.

2006-2007ஆம் ஆண்டில் காலணிகள் மற்றும் ஷூ உற்பத்திக்கான ஆணைகள் பின்வரும் துறைகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது:



| | | |
|---|---|---|
| 1. | காவல் துறை | ரூ.420.00 இலட்சம் |
| 2. | தீயணைப்புத் துறை | ரூ. 15.00 இலட்சம் |
| 3. | போக்குவரத்துக் கழகங்கள் | ரூ. 25.00 இலட்சம் |
| 4. | உள்ளாட்சி நிறுவனங்கள் | ரூ. 30.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.490.00 இலட்சம் |

மேற்கண்ட விநியோக ஆணையில் ரூ.435.00 இலட்சம் மதிப்பிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்டு 2007க்குள் மீதம் விநியோகம் செய்யப்படும்.

### 4.3 உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்

தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடும் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் செயல்படுத்தப்படும் **"உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்"** முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின்கீழ் தற்போது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவைக் கட்டி மற்றும் தூள், ரப்-அப், பாத்திரம் துலக்கும் கட்டி, கிளீனிங் பவுடர் ஆகியவை பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. வாரியத்தின் தயாரிப்புகளான மூலிகா குளியல் சோப்பு, மூலிகை கை கழுவும் திரவம், எழில் ஷாம்பு மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் ஆகியவையும் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. தொடர்ந்து நடைபெறும் ஆராய்ச்சியின் விளைவாக நிலையான தரத்தைப் பெற்றுள்ளதாலும் வெளிச்சந்தையில் உள்ள சோப்பு இரகங்களைவிட வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்கள் உகந்த விலையில் கிடைக்கப் பெறுவதால், பொதுமக்களிடையே வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகிறது.

வாரியமானது புதிய குளியல் சோப்பு வகையான 'காதி கிராப்ட் கிளிசரின் சோப்'பினை (100 கிராம்) மூன்று வெவ்வேறு நிறங்கள் மற்றும் நறுமணங்களில் உற்பத்தி செய்து அதனை 2007 ஜனவரி மாதத்தில்

[2007 மே 2

விற்பனைக்கு அறிமுகப்படுத்தியது. மேலும் இதுபோன்ற புதிய வகை சோப்புகளை அறிமுகப்படுத்தி அவற்றின் விற்பனையை அதிகரிக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனைத் தவிர்த்து இதர வகைகளான ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சந்தன மாலை, மூலிகை பற்பொடி, கம்யூட்டர் சாம்பிராணி போன்ற பொருட்கள் கரூர் கதர் வளாகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் நெடுந்தெரு அலகில் கருப்பு பினாயில் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தின் அரசு மருத்துவமனைகளுக்கு அவற்றின் தேவை நமூனாவிற்கு ஏற்ப விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வாரியத்தின் சோப்பு வகைகளின் விற்பனையை கூட்டுறவுத் துறை நியாய விலைக் கடைகள் மூலம் அரசு அறிமுகப்படுத்தியதிலிருந்து இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. 2006-2007ஆம் ஆண்டில் நியாய விலைக் கடைகள் மூலம் சோப்பு வகைகள் ரூ.161.51 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. வாரியமானது ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்குத் தேவையான சோப்புகளை விற்பனை செய்து வருகிறது. தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறைவாசிகளுக்கும் தேவையான குளியல் சோப்பு மற்றும் பற்பொடியினை வாரியம் விநியோகம் செய்து வருகிறது.

மேலும் சோப்பு வகைகளின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 2006-2007 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசு ரூ.10.00 இலட்சம் மானியத் தொகையில் திருக்கழுக்குன்றம் மற்றும் மாமண்டூர் சோப்பு அலகுகளுக்கு நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்ய அனுமதித்துள்ளது. புதிய இயந்திரங்கள் நிறுவிட வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.4 தேனீ வளர்ப்புத் தொழில்**

தேனீ வளர்ப்புத் தொழில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். தற்போது 9 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1,370 கைவினைஞர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வாரியமானது சுத்தப்படுத்தப்படாத தேனை பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் தேனீ வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. வாரியமானது தற்போது சுத்தப்படுத்தப்படாத தேனைக் கொள்முதல் செய்யும் இடத்திலேயும், பிறகு அம்சி மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய



2007 மே 2]

இடங்களில் நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் நிலையங்களின் மூலம் பதப்படுத்தப்பட்டு அக்மார்க் முத்திரை பெறப்பட்டு தேன் நிரப்பும் நிலையங்களில் பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் தேன் தரமானதாகவும் மற்றும் நியாயமான விலையிலும் கிடைப்பதால் மக்களின் மத்தியில் மிகச் சிறந்த ஆதரவைப் பெற்றுள்ளது. வாரியமானது அரசு அண்ணா மருத்துவமனை, தமிழ்நாடு மருத்துவக் கூடம் மற்றும் மூலிகை மருத்துவக் கழகம் (டாம்கால்) மற்றும் இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கோவில்களுக்கும் தேன் விநியோகம் செய்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் தேனீ வளர்ப்போரிடமிருந்து 57,410 கிலோ சுத்தப்படுத்தப்படாத தேனை ரூ.27.24 இலட்சத்திற்கு கொள்முதல் செய்துள்ளது மற்றும் 75,000 கிலோ பதப்படுத்தப்பட்ட தேனை ரூ.78.29 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

**4.5 கைமுறைக் காகிதத் தொழில்**

கைமுறைக் காகிதத் தொழில், "கழிவிலிருந்து செல்வம்" என்னும் கொள்கையின் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டதாகும். தற்போது பிடாகம் (விழுப்புரம் மாவட்டம்), செண்பகபுதூர் (ஈரோடு மாவட்டம்), கோவனூர் அட்டைப் பெட்டி தயாரிக்கும் அலகு (கோவை மாவட்டம்) மற்றும் உதகை காகிதப் பை மற்றும் உறைகள் தயாரிக்கும் அலகு (நீலகிரி மாவட்டம்) ஆகிய 4 அலகுகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

இத்தொழிலில் கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், காகித உறைகள், பாண்டு பேப்பர், ரேப்பர், மேனிபோல்டிங் பேப்பர், கைப்பைகள் ஆகியவைகளே பிரதான உற்பத்திப் பொருட்களாகும். இந்த அலகுகளில் பணியில் ஈடுபட்டுள்ள அதிக அளவிலான தொழிலாளர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இத்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி சட்டத்தின்படி கூலி வழங்கப்படுகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவையான உறைகள், கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், பாண்டு பேப்பர் போன்ற காகிதப் பொருட்களை விநியோகம் செய்வதுடன் தனியார் நிறுவனங்களின் தேவைக்கும் விநியோக ஆணைகள் பெறப்பட்டுள்ளன. கிராம விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதற்காக இப்பொருட்கள் தொடர்பான விற்பனையினை விரிவுபடுத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

[2007 மே 2

சோப்பு அலகுகள், காலணி அலகுகள் மற்றும் தேன் நிரப்பும் அலகுகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கட்டுகளாக கட்டுவதற்குத் தேவையான அட்டைப் பெட்டிகளைக் கோவனூர் அட்டைப்பெட்டி தயாரிக்கும் அலகில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உதகை மாவட்டத்தில் உள்ள காகிதப் பைகள் மற்றும் உறைகள் தயாரிக்கும் அலகில் உற்பத்தி செய்யப்பட்ட உறைகள் மற்றும் பைகள் வாரிய உபயோகத்திற்கும், உயர் நீதிமன்றம், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**4.6 மட்பாண்டத் தொழில்:**

இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழில்களில் ஒன்றான மட்பாண்டத் தொழிலை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அபிவிருத்தி செய்து வருகிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செவ்வாப்பேட்டை, விருத்தாசலம், வீரபெருமாநல்லூர் ஆகிய இடங்களில் 3 மட்பாண்ட அலகுகள் செயல்படுகின்றன. இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் மெருகு மட்பாண்டங்கள் மற்றும் இதர மட்பாண்டப் பொருட்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு உள்ளது. தமிழகத்தில் பரவலாக உள்ள கதர் அங்காடிகளின்மூலம் இவ்வலகுகளில் தயாரிக்கப்படும் அழகு வண்ண அலங்கார மட்பாண்டப் பொருட்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

வாரியமானது மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்குத் தேவையான பூந்தொட்டிகளை விநியோகம் செய்து வருகிறது. மேலும் ஆவின் நிறுவனத்திற்குத் தேவையான ஐஸ்கிரீம் குடுவைகளையும் விநியோகம் செய்கிறது.

2006-2007 ஆம் ஆண்டில் மட்பாண்டப் பொருட்கள் ரூ.1.93 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**5. விற்பனை**

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களும் விற்றபின் தொகை வழங்கும் முறையில் கொள்முதல் செய்யப்படும் கைவினைப்பொருட்களும் 169 கதரங்காடிகள் மற்றும் 10 கிராம சில்பாக்கள்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. தோல் பொருட்கள் 8 தோல் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் கொலு கண்காட்சி



2007 மே 2]

நடத்தப்படுகிறது. வெளிச்சந்தையின் போட்டியை சமாளிக்கும் வகையில் குறைந்த விலையில் தரமான பட்டுப் புடவைகள் கண்கவரும் வடிவமைப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்டங்களில் கதர் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க பண்டிகைக் காலங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மேலும் கதரங்காடிகளைப் புதுப்பிக்க படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6. 2006–2007 ஆம் ஆண்டு குறியீட்டின் சாதனை மற்றும் 2007–2008 ஆம் ஆண்டின் குறியீடு:**

வாரியத்தின் 2006-2007ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை மற்றும் 2007-2008ஆம் ஆண்டின் குறியீடு ஆகியவை பின்வருமாறு:

| வ. எண் | தொழில்களின் பெயர் | 2006-2007 (ரூ.இலட்சத்தில்) | | 2007-2008 குறியீடு (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1056.34 | 1501.38 | 2100.00 | 2200.00 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| | (அ) தோல் | 285.87 | 435.71 | 620.00 | 650.00 |
| | (ஆ) தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள் | 155.44 | 109.07 | 520.00 | 550.00 |
| | (இ) சோப்பு . . . | 368.02 | 370.28 | 500.00 | 500.00 |
| | (ஈ) கைமுறை காகிதம் | 45.85 | 30.98 | 75.00 | 60.00 |
| | (உ) தேனீ வளர்ப்பு | 60.58 | 78.29 | 100.00 | 130.00 |
| **மொத்தம்** | | **1972.10** | **2525.71** | **3915.00** | **4090.00** |

2007-2008 ஆம் ஆண்டில் மேற்கண்ட குறியீட்டை அடைந்திட வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | கதர் | அரசுத் துறைகள் மற்றும் மருத்துவமனைகளின் தேவைக்கேற்ப உற்பத்தி செய்ய வாரியம் திட்டமிட்டுள்ளது. விற்பனையை அதிகரிக்க எம்ராய்டரி பட்டுச் சேலைகளை அறிமுகப் படுத்தியுள்ளது. |
| 2. | தோல் | அரசுத் துறைகளின் தேவை நமூனாவை நிறைவேற்றுவதோடு வெளிச்சந்தையில் விற்பனையை அதிகரிக்கவும் வாரியம் புதுமாதிரியான ஷூக்கள் மற்றும் காலணிகள் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. |
| 3. | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | வாரியம் குறைந்த விலைப்புள்ளியை பல்வேறு அரசுத் துறைகளிடம் அளித்து தேவை நமூனாவைப் பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. |
| 4. | சோப்பு | நியாயவிலைக் கடைகள் மற்றும் விற்பனை முகவர்கள் மூலம் சோப்பு விற்பனையை அதிகரிக்க வாரியம் திட்டமிட்டுள்ளது. |
| 5. | தேன் | வாடிக்கையாளர்களைக் கவரும் வகையிலும் விற்பனையை அதிகரிக்கவும் நவீன முறையிலான பாட்டில்களில் தேன் நிரப்ப வாரியம் திட்டமிட்டுள்ளது. |
| 6. | விற்றபின் தொகை வழங்கும் முறை | வாரியத்தின் விற்பனை செயல்பாட்டினை உயர்த்தவும், அதிக இலாபம் ஈட்டவும், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சில பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்றபின் தொகை வழங்கும் முறையில் அனைத்து விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. |



**7. பகுதி–2 திட்டங்கள், 2007–2008 (புதிய திட்டங்கள்)**

வாரிய அலுவலகங்களின் செயலாக்கங்களை அதிகரிக்க

(i) வாரிய அலுவலகங்களின் செயலாக்கங்களை அதிகரிக்க கணினிகளுடன் இதர கருவிகள் கொள்முதல் செய்ய அரசு ரூ.1.35 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(ii) மண்டல அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்ய அரசால் ரூ.1.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) நெசவாளர்களுக்கு, நெசவு செய்ய அச்சு மற்றும் விழுதுகள் மிகவும் முக்கியமான உபகரணம் ஆகும். தற்போது கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் அச்சு மற்றும் விழுதுகள் மாற்றி அமைத்திடாமல் பழமை வாய்ந்தவற்றை வைத்து தொடர்ந்து துணி உற்பத்தி செய்து வருகின்றனர். குறைந்த வருவாய் ஈட்டி வருவதனால் அச்சு மற்றும் விழுதுகளை அடிக்கடி அவர்களால் மாற்றியமைக்க இயலவில்லை. பல்வேறு துணி ரகங்களை உற்பத்தி செய்ய அச்சு மற்றும் விழுதுகள் நெசவாளர்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது. 200 நெசவாளர்களுக்கு ஒரு நெசவாளருக்கு ரூ.2,000 வீதம் அச்சு மற்றும் விழுதுகள் வழங்குவதற்கு அரசு ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(iv) இராட்டைகளைப் பழுதுபார்ப்பதற்காக அரசு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(v) விற்பனை நிலையங்களில் பணியாற்றும் விற்பனை உதவியாளர்களின் திறமையை அதிகரிக்க 40 விற்பனை உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்திட அரசு ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(vi) வாரியத்தில் 179 நேபாளி தறிகள் உள்ளன. அதில் 41 நேபாளி தறிகள் செயல்படும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 138 நேபாளி தறிகள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. துணியின் தரத்தை அதிகப்படுத்துவதற்காகவும், உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் 100 நேபாளி தறிகளை நவீனப்படுத்துவதற்காக ஒரு நேபாளி தறிக்கு ரூ.4,500 வீதம் அரசு ரூ.4.50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(vii) உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கவும், வாரியத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை அலகுகளை மேற்பார்வையிடவும், 2 உபயோகமற்ற ஊர்திகளை மாற்றி 2 புதிய ஊர்திகளைக் கொள்முதல் செய்து கொள்ள அரசு ரூ.9.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(viii) கதரின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு பள்ளி மற்றும் கல்லூரிகளில் முகாம் மற்றும் பொருட்காட்சிகள் அமைத்திட முடிவு செய்யப்பட்டதன் மூலம் மாணவர்கள் கதரைப்பற்றி அறிந்து கொள்வதோடு விற்பனையை அதிகரிக்க வழிவகுக்கும். மேலும் வாரியம் பிளக்ஸ் பேனர் மற்றும் பொருட்காட்சிகள் மூலம் கதர் விற்பனையை அதிகரிக்க உத்தேசித்துள்ளது. இதற்கு அரசு ரூ.5.00 இலட்சம் தொகை நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**8. முக்கிய இனங்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

1. அரசாணை (நிலை) எண் 65, கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள்: 20-6-2006-ல், 31-3-2005 முடிய வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்று நிலுவையிலுள்ள 338 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் மற்றும் விடுப்பூதியம் வழங்க அரசு ஒரு தடவை மானியமாக ரூ.5.19 கோடி வழங்கியுள்ளது.

2. 2006-2007 ஆம் ஆண்டில் வணிகம் சார்ந்த பணியாளர்களின் ஊதியச் செலவை மேற்கொள்ள அரசு ரூ.4.00 கோடி அனுமதித்துள்ளது.

3. அரசாணை (நிலை) எண் 12, கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர் (எப்2) துறை, நாள்: 6-2-2007-ல், 1-1-1996 முதல் 31-3-1998 வரை ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு 6-வது ஊதியக் குழுவின் 60 சதவீதம் நிலுவைத் தொகை, இறப்பு ஓய்வு பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய தொகுப்புத் தொகை வழங்க அரசு ஒரு தடவை மானியமாக ரூ.2.35 கோடி அனுமதித்துள்ளது.



**9. வரவு–செலவுத் திட்டம், 2007-2008 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு**

| வ. எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள் | 1,700.00 |
| 2. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் நிதிக்கு மானியங்கள் | 500.00 |
| 3. | கதர் விற்பனைமீது தள்ளுபடி | |
| | (1) கதர் வாரியம் | 200.00 |
| | (2) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 0.01 |
| 4. | தணிக்கைக் கட்டணத்திற்கு மானியங்கள் | 150.00 |
| 5. | மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு பனைப்பொருள் மேம்பாட்டிற்கான மானியங்கள் | 0.01 |
| 6. | பகுதி 2 திட்டங்கள் | |
| | (1) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 56.06 |
| | (2) தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 8.01 |
| | **மொத்தம்** .. | **2,614.09** |

[2007 மே 2

## தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

1. "தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்" தமிழ்நாடு சட்டம் (15) 1994-ன்படி தனியாக அமைக்கப்பட்டு 1995 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே பனைத்தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.01 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 4.61 கோடி பனைமரங்கள் உள்ளன. பனைமரம் தமிழ்நாட்டின் "மாநில மரம்" ஆகும். பனைமரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது.

2. கிராமப்புறங்களில் உள்ள பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் பனைப்பொருட்கள் உற்பத்தி செய்வதும், கூடுதல் வருமானம் ஈட்டும் வகையில் அவற்றை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுவதும் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் குறிக்கோளாகும். கிராம ஏழ்மை மக்களின் வறுமை நிலையைப் போக்கும்வகையில் மாநிலத்தில் பனைப்பொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேம்படுத்தி வருகிறது. பனைப்பொருள் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் 996 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களும், (பனைஓலை தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனைவெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. மேலும் மாநிலமெங்கும் உள்ள 169 கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

3. தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு சிறிய அளவு மூலதனத்துடன் உள்ளூரில் கிடைக்கும் பனைமர மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும் இவ்வாரியத்தின் நோக்கமாகும். பனைப்பொருட்கள் தூய்மை கேடற்றவை மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவையாகும். இத்தொழிலில் சுமார் 6 இலட்சம் ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.



2007 மே 2]

பனைத்தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பதப்படுத்திய நுங்கு, பனம்பழ ஜாம் வகைகள், பாம் சாக்லெட் வகைகள், காற்றூட்டப்பட்ட குளிர்பான வகைகளான பாம்டா, பாம்கோலா வகைகளும் மற்றும் உண்ணா பொருட்களான பனை ஓலைப்பொருட்கள், பனைநார் பொருட்கள், பனந்தும்பு மற்றும் பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகளும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல் ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப்பொருட்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண் கைவினைஞர்களால் அழகிய பனை ஓலைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு தனியார் முகவர்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகளின்படி, தமிழ்நாடு அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பனைமரம், தென்னை மரம் மற்றும் ஈச்சமரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் மூன்று ஆண்டுகளுக்கு (2007 முதல் 2009 முடிய) உரிமம் நீட்டித்து அனுமதி ஆணை வழங்கியுள்ளது.

### 4. 2006–2007 ஆம் ஆண்டு உற்பத்தி மற்றும் விற்பனை:

அ. 2006-2007 ஆம் ஆண்டில் மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.807.53 இலட்சம் மதிப்பிலான பனைப்பொருட்களை உற்பத்தி செய்து ரூ.857.15 இலட்சம் மதிப்பிலான பனைப்பொருட்களை விற்பனை செய்துள்ளன.

ஆ. 2007-2008 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைப்பொருட்கள் உற்பத்திக் குறியீடாக ரூ.1230.00 இலட்சமும்

பனைப்பொருட்கள் விற்பனைக் குறியீடாக ரூ.1430.00 இலட்சமும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**5. வேலைவாய்ப்பு**

பனைத்தொழிலுக்கு தொழில்நுட்பத் தகுதி தேவை என்றில்லாமல் பாமரரும் செய்யும் வகையில் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு இத்தொழிலின்மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலும். இத்தொழிலில் மாநிலம் முழுவதும் சுமார் ஆறு இலட்சம் ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

**6. பனைத் தொழில் கைவினைஞர்களுக்குப் பயிற்சிகள்**

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைப்பொருட்கள் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**7. 2006–2007 ஆம் ஆண்டு (பகுதி–2 திட்டங்கள்)**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் கீழ்க்காணும் மாவட்ட சம்மேளனங்களுக்கு ரூ.20.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது:—

(i) மதுரை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள சங்ககிரி பதநீர் பிரிவுகளுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்க தலா ரூ.5.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் பனந்தும்பு உற்பத்திப் பிரிவினை நிறுவ ரூ.3.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 400 பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்க ரூ.6.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன.



**8. 2007–2008 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டங்கள் – புதிய திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் கீழ்க்கண்ட மாவட்ட னைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்களுக்கு ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு சய்யப்பட்டுள்ளது:—

(i) திண்டுக்கல் மாவட்டம் கோவிலூரில் உள்ள பதநீர் உற்பத்திப் பிரிவினை நவீனப்படுத்திட ரூ.5.00 இலட்சம் மதிப்பில் தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்.

(ii) சேலம் மாவட்டத்தில் உள்ள ஏழை கைவினைஞர்களுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

9. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு என னியாக வரவு-செலவுத் திட்டம் ஏதும் இல்லை. இவ்வாரியத்தின் செலவினம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய வரவு-செலவுத் ட்டத்தில் அடங்குகிறது. இவ்வாரியத்திற்கென்று தனியாக பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலுவலர் மற்றும் பணியாளர்கள் இவ்வாரியத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

[2007 மே 2

## இணைப்பு V

*(894 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 18—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

## அறிவிப்புகள்—2007–2008

### (I) பட்டு வளர்ச்சித் துறை

1. மல்பரி பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் 4000 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்கள் நடவு செய்ய திட்ட உதவிகள் வழங்கப்படும்.

2. பாசன நீர் ஆதார நிலை குறைவாக உள்ள நிலையில், சொட்டு நீர்ப்பாசன முறை மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறை அமைக்க திட்ட உதவிகள் வழங்கப்படும். நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் 1000 ஏக்கர் பரப்பிலான மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்படும்.

3. சுகாதாரமான முறையில் பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளவும், வெற்றிகரமான பட்டுக் கூடு அறுவடை செய்வதற்கும் தனியாக புழு வளர்ப்பு மனை மிகவும் அவசியமாகிறது. நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் இருவேறு நிலைகளில் மொத்தம் 1000 விவசாயிகளுக்கு இவ்விதம் தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட திட்ட உதவிகள் வழங்கப்படும்.

4. உற்பத்திச் செலவினைக் குறைத்து தரமான பட்டுக் கூடுகள் அறுவடை செய்ய, பட்டுப் புழு வளர்ப்புத் தாங்கிகள், கூடு கட்ட பிளாஸ்டிக் சந்திரிகைகள்போன்ற நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படும். நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் இரு நிலைகளில் மொத்தம் 1000 விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. வெற்றிகரமான பட்டுக் கூடு அறுவடைக்கு அறிவியல் ரீதியில் இளம்புழு வளர்ப்பது மிகவும் முக்கியமாகும். இளம்புழு வளர்ப்பு



2007 மே 2]

மையம் அமைக்கும் தொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்படும். நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் இவ்வாறு 8 இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க திட்ட உதவிகள் வழங்கப்படும்.

6. சிறந்த பட்டுக் கூடு அறுவடை பெறவும் பட்டுப் புழு வளர்ப்பில் தோல்வியைத் தவிர்க்கவும் தரமான நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்களை உபயோகிக்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படும். இதற்கு மானிய விலையில் விவசாயிகளுக்கு நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் வழங்கப்படும். நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2000 விவசாயிகளுக்கு உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

7. தமிழ்நாட்டில் போதுமான அளவு பட்டு நூற்பு மையங்கள் இல்லாத காரணத்தால், மாநிலத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளில் பெருமளவு கர்நாடக மாநிலத்திற்கு விற்பனைக்காகச் செல்கிறது. எனவே, மாநிலத்தில் பட்டுக்கூட்டுக்கு பிந்தைய நிலையை வலுப்படுத்தும் வகையில் நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் கூடுதலாக பட்டு நூற்பகங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### (II) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. அதிக அளவில் ஏற்றுமதிக்கு சந்தை வாய்ப்புள்ள தேங்காய் ஓடு, கடற்சிப்பி, இலகு மர செதுக்கு வேலை, மரத்தினால் செய்யப்பட்ட மணிமாலைகள் போன்ற கைத்திறப் பொருட்களைத் தயாரிக்க சென்னை, திருச்சி, கிருஷ்ணகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் கைத்திறத் தொழில் குழுமங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

2. தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 2007-08 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக சுமார் 10,000 கைவினைஞர்களுக்கு இதுவரை செய்யப்படாத காப்பீடு வசதி ஏற்பாடு செய்து தரவும், அதற்கான ஆண்டுச் சந்தா தொகையினை மத்திய மாநில அரசுகளே ஏற்றுக் கொண்டும், இதன் காரணமாக பயனடையும் கைவினைஞர்களுக்கு எந்தவித நிதிச்சுமையும் இல்லாமல் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

[2007 மே 2

3. கைவினைஞர்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை செய்து உதவிடும் வகையில் மாநிலத்தில் பல்வேறு நகரங்களில் பொது பயன்பாட்டு மையம் அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மையங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி கைவினைஞர்கள் ஒன்றாக இணைந்து வேலைகளைச் செய்ய இயலும். இத்திட்டத்தின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் பஞ்சலோக சிலைகளுக்காக சுவாமிமலையில் ஒன்றும், பூத்தையல் வேலைப்பாடு, சணல் பொருட்கள், பனை ஓலைக் கூடைகள், வாசனையுள்ள மெழுகுவர்த்தி, ஊதுபத்தி தயாரித்தல் மற்றும் தோல் பொருட்கள்போன்ற கைத்திறத் தொழில்களுக்காக கோயம்புத்தூரில் ஒன்றும், ஆக இரண்டு பொது பயன்பாட்டு மையங்கள் பத்து இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கான செலவுகளை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்றுக் கொள்ளும்.

தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களுடைய பொருட்கள் உலகளாவிய சந்தையில் ஈடு கொடுப்பதற்கு இன்றியமையாத தேவையான சமகால கைத்திறத் தொழில்களில் வடிவமைப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பித்தளை விளக்குகள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள், கற்சிற்பங்கள் மற்றும் மரச்சிற்பங்கள் ஆகிய கைத்திறத் தொழில்களில் வடிவமைப்புகளை மேம்படுத்தும் திட்டங்கள் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் ரூ.26.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளன.

தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிக அளவிலான ஏற்றுமதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் வருகிற 2007-08ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் சுமார் ரூ.25.00 இலட்சம் செலவில் குறைந்தபட்சம் இரண்டு கண்காட்சிகளிலாவது கலந்துகொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் 4 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் ரூ.20,000/- ரொக்கப் பரிசினை உள்ளடக்கிய பூம்புகார் மாநில விருது வருடத்திற்கு 5 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள கைவினைஞர்கள் மேலும் சிறந்த படைப்புகள் தயாரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2007-08 ஆம் ஆண்டு முதல் தகுதியுள்ள 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருது வழங்கப்படும்.



2007 மே 2]

7. புது தில்லியில் மாநில விற்பனை வளாகத்தில் அமைந்துள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் சுமார் ரூ.50.00 இலட்சம் செலவில் புதுப்பித்தல் மற்றும் அழகுபடுத்துதல் மேற்கொள்ளப்படும்.

8. இந்து திருக்கோயில்களுக்குத் தேவைப்படும் தங்கத் தேர், வெள்ளித் தேர், கொடி மரம், கோயில் மணிகள், கோயில் கதவுகள், வாகனங்கள் மற்றும் இதரப் பொருட்களை சிறந்த முறையில் தயாரித்து கொடுக்கும் திறமை. இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு மட்டுமே உள்ளது. தற்சமயம் இக் கைவினைஞர்கள் மேற்படி கோயில் திட்டங்களை இந்தியாவில் உள்ள பல இடங்களில் செய்து வருகிறார்கள். உலகத்தில் உள்ள பல நாடுகளில் இந்திய வம்சாவழியினர் அதிக அளவில் வசிக்கும் இடங்களில் பல இந்து திருக்கோயில்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. எனவே தமிழக கைவினைஞர்களின் திறமையினை மேலும் பல நாடுகளில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் வெளிநாடுகளில் திருக்கோயில் பணிகளுக்கான ஆணைகளைப் பெறவும் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்கும் சந்தை வாய்ப்பினை அறிவதற்காக வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.

9. கோயம்புத்தூரில் திருமுருகன்பூண்டி கிராமத்தில் கற்சிற்பத் தொழிலில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன. இவர்களுடைய கற்சிற்பங்களுக்கு உள்ளூர் சந்தையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் நல்ல தேவை உள்ளது. எனவே, திருமுருகன்பூண்டியில் இக்கைத்திறத் தொழிலின் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசின் நிதி உதவியுடன் உரிய பயிற்சியினை அளித்து கைத்திறத் தொழில் குழுமங்களை மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

10. கன்னியாகுமரியில் ரூ.2.00 கோடி முதலீட்டில் (மாநில அரசு ரூ.60.00 இலட்சம், மத்திய அரசு ரூ.140.00 இலட்சம்) கண்காட்சித் திடல் அமைக்கும் பெருமைமிகு திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருவதுடன் இத்திட்டம் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## (III) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1. வாரிய அலுவலகங்களின் செயலாக்கங்களை மேம்படுத்த கணினிகளுடன் இதர கருவிகள் ரூ.1.35 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும். மேலும், மண்டல அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ1.20 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும்.

2. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் நெசவு செய்ய தேவைப்படும் முக்கியமான உபகரணமாகிய அச்சு மற்றும் விழுதுகளை மாற்றி அமைத்து பல்வேறு துணி இரகங்களை உற்பத்தி செய்ய ஒரு நெசவாளருக்கு ரூ.2000/- வீதம் 200 நெசவாளர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பிற்கு உபகரணங்கள் வழங்கப்படும்.

3. பழைய இராட்டைகளை பழுதுபார்ப்பதற்காக இராட்டை ஒன்றுக்கு ரூ.2500/- வீதம் மொத்தம் ரூ.30.00 இலட்சம் மதிப்பிற்கு பழுதுநீக்கம் செய்யப்படும்.

4. விற்பனை உதவியாளர்களின் திறமையை அதிகரிக்க 40 விற்பனை உதவியாளருக்குப் பயிற்சி அளித்திட ரூ.1.00 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது கதர் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், துணியின் தரத்தை அதிகப்படுத்துவதற்காகவும், ஒரு நேபாளி தறிக்கு ரூ.4500/- வீதம் 100 நேபாளி தறிகள் ரூ.4.50 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்படும்.

6. கதர் மற்றும் கிராமப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கவும் அலகுகளை மேற்பார்வையிடவும் இரண்டு உபயோகமற்ற ஊர்திகளை மாற்றி இரண்டு புதிய ஊர்திகளை கொள்முதல் செய்துகொள்ள ரூ.9.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. கதர் பற்றி புதிய தலைமுறைகள் அறிந்து கொள்வதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் முகாம் மற்றும் பொருட்காட்சிகள் நடத்தி கதர் விற்பனையை அதிகரித்து கிராம கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பிளக்ஸ் பேனர் மூலம் விளம்பரம் செய்யவும் மற்றும் பொருட்காட்சிகள் நடத்திடவும் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## (IV) தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

1. திண்டுக்கல் மாவட்டம் கோவிலூரில் உள்ள பதநீர் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் பிரிவினை நவீனப்படுத்தி, அங்குள்ள கைவினைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

2. சேலம் மாவட்டத்திலுள்ள ஏழை கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பனை வெல்லம் தயாரிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.3.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

[2007 மே 2

## இணைப்பு VI

*(905 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 44—ஊரகத் தொழில் துறை

## அறிவிப்புகள்—2007–2008

தமிழகத்தில் பெருகி வரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொழில் முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக நிர்வாகச் சீரமைப்பு, அடிப்படை கட்டமைப்பு வசதி, புதிய மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறு தொழிற்கடன் வசதி ஆகியவற்றின் அடிப்படையில் புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு இவ்வாண்டு செயல்படுத்தப்பட உள்ளன என்பதை அறிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

### I. நிர்வாக சீரமைப்பு

### 1.1. மண்டல தொழில் மையங்கள் உருவாக்கம்

தமிழகத்தில் நடைபெற்று வரும் தொழில் புரட்சியின் காரணமாக தொழில் முனைவோர்கள் தங்களின் தொழில்களைப் பக்கத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்தி வருகின்றார்கள். புதிய தொழில் முனைவோர்களும் உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்த தொழிலகங்களை நகருக்கு வெளியில் அமைத்து வருகின்றனர்.

இதுபோன்ற முயற்சிகளுக்கும் தொழில் முனைவோர்களுக்கு மண்டல அளவில் தகவல்கள் ஒருகுடையின்கீழ் கிடைக்க உதவுவது அவசியமாகின்றது.

இதை நன்கு உணர்ந்த இந்த அரசு எந்தவிதக் கூடுதல் நிதிச் செலவும் இன்றி தற்போது தொழில் வணிகத் துறையின்கீழ் 30 மாவட்டங்களில் தனித்தனியே இயங்கிவரும் தொழில் மையங்களின் செயல்பாடுகளை மண்டல அளவில் ஒருங்கிணைக்க முடிவு செய்தது.

அதன்படி சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களை மண்டல தலைமையகமாகக் கொண்டு தொழில் வணிகத் துறையின் மூத்த அலுவலர்களை மண்டல இணை இயக்குனர்களாக நியமித்து இவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் திட்டங்களைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும்



2007 மே 2]

பொறுப்புடையவர்களாக ஆக்கப்படுவார்கள். இதனால் அரசுக்கு எந்தக் கூடுதல் செலவும் இல்லை. அதே நேரத்தில் மாவட்டத் தொழில் மையத்தின் செயல்பாடுகளில் புதுப்பொலிவு ஏற்படும்.

### 1.2. பரிசோதனைச் சேவை மையங்களின் நிர்வாகச் சீரமைப்பிற்கான ஆய்வு

தொழில் வணிகத் துறையில் சேவைகளை வழங்கும் மையங்களாக இரசாயன மற்றும் மின் பரிசோதனைக் கூடங்கள், மற்றும் மின் மருத்துவக் கருவி பழுதுபார்ப்பு நிலையங்கள் போன்றவற்றை இயக்கி வருகின்றன. மேற்கண்ட மையங்கள் மற்றும் நிலையங்களில் வழங்கும் சேவைகளை அதிகரிக்க அவற்றை ஒரு பிரத்தியேக நிர்வாகததின் கீழ் (Special Purpose Vehicle) கொணர இயலுமா என்று ஆய்வு செய்யப்படும்.

*1.3.* “இந்திய அரசு அறிவிக்கை செய்ய உள்ள 2006 ஆம் ஆண்டு மிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி சட்டத்திற்கிணங்க சிறு தொழில் துறையினருடன் கலந்தாலோசித்து, சிறு தொழில் வளர்ச்சிக்காக கொள்கை வகுக்கப்படும்” என்று கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் சிறு தொழில் சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்திய பின், வரைவு நுண் மற்றும் சிறு தொழில் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வரைவுக் கொள்கை அரசின் [illegible] உள்ளது. இவ்வரைவில் நுண் நிறுவனங்களின் [illegible] கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

### II. அடிப்படைக் கட்டமைப்பு வசதி

### தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்[illegible])

### நுண்தொழில் நிறுவனங்களுக்கு அடுக்குமாடிக் கூட[illegible]

*2.1* நுண்தொழில் நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தித் தேவைகளுக்கு என பல அடுக்குமாடி தொழிற்கூட வளாகங்களை அமைத்துத் தரும்படி கோரியுள்ளனர். டான்ஸ்டியா நிறுவனம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. இது தொடர்பாக சென்னை நகருக்கு மிக அருகில் உள்ள மூன்று இடங்களில் உற்பத்தித் தொழில்களுக்கான அடுக்கு மாடி தொழிற்கூட வளாகங்கள் நுண் தொழில் நிறுவனங்களுக்காக உருவாக்குவதற்கும், திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த

227664

அடுக்கு மாடித் தொழிற்கூட வளாகங்கள் அமைப்பதற்கு உண்டான பணிகள் 2007-2008-ல் துவங்கப்படும்.

### 2.2. கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் சிட்கோவின் தலைமை அலுவலகக் கட்டடம் கட்டுதல்

சிட்கோ தலைமை அலுவலகம் அனைத்து வசதிகளுடன் கத்திப்பாரா சந்திப்பில் கட்டப்பட்டு 1991 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைத் துறையின் விரிவாக்கப் பணிகளின் காரணமாக இவ்வலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. தற்சமயம் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள ஆயத்த ஆடை வளாகம்-II-ல் இயங்கி வருகிறது.

கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் சுமார் ரூபாய் 57.21 கோடி மதிப்பில் சிட்கோ தனது புதிய தலைமை அலுவலகத்தை அமைத்துக் கொள்ளவும் ஒரு பகுதியை வாடகைக்கு விடுவதற்காகவும் ஒரு திட்ட அறிக்கையை தயாரித்துள்ளது. இந்தப் புதிய அலுவலக வளாகத்தில் தொடர்புடைய நிறுவனங்களான தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநரின் அலுவலகம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிலையம் அமைத்துக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2.3 தமிழகத்தில் தொழிற்பேட்டைகள் இல்லாத மாவட்டங்களான திருவாரூர், விழுப்புரம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் 7 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

### 2.4. நுண்தொழில் தொழிற்பூங்காக்கள்

சிப்காட் வசம் உள்ள தொழில் வளாகங்கள் விரிவுபடுத்தப்படும்போதும், புதிதாக உருவாக உள்ள தொழிற்பூங்காக்களிலும் ஒரு குறிப்பிட்ட சதவிகித நிலங்களை சிறு மற்றும் நுண்தொழில் தொழிற்பேட்டைகளுக்காக ஒதுக்கீடு செய்யுமாறு சிட்கோ கோரியுள்ளது. சிப்காட்டினால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகளில் 20 சதவிகித அளவில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே போல் சிட்கோ உருவாக்கியுள்ள தொழிற்பேட்டைகளில் தேவைக்கேற்ப பத்திலிருந்து 30 விழுக்காடு நிலத்தை நுண்தொழில் நிறுவனங்களுக்காக சிட்கோ ஒதுக்கீடு செய்யும்.



எனினும் விண்ணமங்கலம் மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் நுண்தொழில் நிறுவனங்களுக்காகவே தொழிற்பேட்டைகள் துவக்கப்படவுள்ளன.

### 2.5. சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருட்களை முறைப்படுத்தி வழங்குதல்

நுண் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெறுவதில் மிகுந்த சிரமங்களுக்குட்பட்டு வருகின்றன. அத்தகைய குறிப்பிட்ட மூலப்பொருட்கள் வழங்குவதை சரிப்படுத்தும் வகையில் 2007-08 ஆம் ஆண்டில் சிட்கோ உரிய நடவடிக்கைகளை எடுக்க உள்ளது. இக்குறிப்பிட்ட மூலப்பொருட்களை தெரிவு செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.6 அனைத்து மாவட்டங்களிலும் சிட்கோ கிளை இல்லாததால் கிளைகள் இல்லாத மாவட்டங்களில் சிட்கோ மேலாளர்கள் படிப்படியாக நியமிக்கப்படுவர். இவர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தில் இடம் அளிக்கப்படும்.

### 2.7. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)

மேட்டூர் துத்தநாக முலாம் பூசும் நிறுவனத்தில் காற்று மாசுபடுவதைத் தடுக்கும் உபகரணங்களை நிறுவ இவ்வரசு வழங்கியுள்ள ரூ. 25 இலட்சம் கடன் தொகை மூலம் இவ்வாண்டில் மேற்படி கருவி நிறுவி முடிக்கப்படும்.

## III குழும தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள்

### (1) தேயிலைத் தொழில்கள்

3.1. தேயிலை விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக நல்ல விலை கிடைக்க நமது அரசு இந்திய அரசின் தேயிலை வாரியத்துடன் தொடர்ந்து கலந்தாலோசனை செய்து வருகிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக நீலகிரியில் உள்ள தேயிலைத் தொழில் கூட்டுறவுகளைப் புத்துயிர் ஊட்ட ரூ.88.57 கோடி செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்காக மாண்புமிகு முதல்வரின் அறிவுரையின் பேரில் அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்ட ஒப்புதலை எதிர்நோக்கி தொழிற்சாலைகளின் தொழில்நுட்ப மேலாண்மை அமைப்பை உடன் மேம்படுத்துவதற்காகவும், இன்ட்கோசர்வ் நிறுவனத்தின் தேயிலையின் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும்

[2007 மே 2

தொழில் நுட்ப வல்லுனர் ஆலோசனை உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அனுமதிக்கப்படும்பட்சத்தில் ஐந்து ஆண்டு கால அளவில் இன்ட்கோசர்வ் தேயிலை தொழிற்சாலையை தொழில் நுட்ப மேம்பாடு அடையச் செய்து திறம்பட செயல்படுத்தவும் நீலகிரியில் பச்சைத் தேயிலை விலையின் ஸ்திரத்தன்மையைப் பெற்றுத் தரவும் இயலும்.

### 3.2. சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தித் தொழில்கள் நவீனப்படுத்தலுக்கு மானியத்துடன் கூடிய கடன்

தமிழ்நாட்டில் சுமார் *500* சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவற்றில் *364* சவ்வரிசி உற்பத்தி தொழிலகங்கள் சேகோசர்வ் எனப்படும் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த நிதிநிலை கூட்டத்தொடரின்போது சேகோசர்வின் உறுப்பினர் நிறுவனங்கள் நவீனப்படுத்தி செயல்படுத்த திட்டம் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். சேகோசர்வின் ஒவ்வொரு அலகும் தனது நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரங்களை நிறுவி தங்களது நிறுவனத்தை நவீனப்படுத்திக்கொள்ள ஆகும் செலவில் ரூ.*4* இலட்சத்திற்கு மிகாத அளவில் *50* விழுக்காடு மானியம் சேகோசர்வின் மூலம் வழங்கப்படுவதில் *50* விழுக்காடு மானிய அளவை தமிழக அரசு ஏற்கும் வகையில் ரூ.*50* இலட்சத்தை ஒப்பளித்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு நிறுவனமும் மொத்த மானியமாக ரூ.*4* இலட்சம் பெறலாம்.

இதன் தொடர்ச்சியாக நவீனப்படுத்த தேவைப்படும் கடன் தொகையை உறுப்பினர் நிறுவனங்களுக்கு பெற்றளிக்கும் வகையில் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் ரூ.*50.00* இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்த நடவடிக்கைகள்மூலம் சேகோசர்வின் உறுப்பினர் நிறுவனங்களை நவீனப்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.3. சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கான தனி பரிசோதனை மையம்

சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவின் தரத்தைப் பரிசோதிக்கத் தேவையான சோதனைக் கருவிகளின் தேவை இன்றியமையாதது. சிறு தொழில் வளர்ச்சிக் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (SICDP) கீழ்



2007 மே 2]

மத்திய அரசின் அனுமதி வேண்டி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான திட்ட மதிப்பில் முதல் தவணையாக ரூ.*120* இலட்சங்கள் சோதனைக் கூடங்கள் அமைப்பதற்கும் ரூ.*10* இலட்சம் பயிற்சி வழங்குவதற்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

### 3.4. சேகோசர்வ் தொழிற்கூட்டுறவுச் சங்கத்திற்கு கூடுதல் கிடங்கு அமைத்தல்

தற்போது சேகோசர்வ் தொழிற்கூட்டுறவுச் சங்கத்தில் *2* இலட்சத்து *35* ஆயிரம் சதுர அடி கிடங்கு பரப்பு மட்டுமே உள்ளது. ஆனால் தேவை அதிகமாக உள்ளது. எனவே கூடுதலான கிடங்குகளை அமைக்க நிலம் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 3.5. சிறு தொழில் குழுமம்

தமிழகத்தில் பல நுண் மற்றும் சிறு தொழில் குழுமங்கள் இருப்பதால், இவற்றின் திறமை மற்றும் வியாபார உத்திகளை அதிகப்படியாக மேம்படுத்த வாய்ப்புள்ளது. தொழில் வணிகத் துறை மற்றும் சிறு தொழில் சேவை மையம், சென்னை ஆகியவற்றின்மூலம் மொத்தமாக தமிழகத்தில் *50* குழுமங்கள் கண்றியப்பட்டு, அவற்றுள் இவ்வாண்டில் *2007-08*-ல் *15* குழுமங்களை முதன்மை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வெளிப்பாட்டின் அடிப்படையில் சிறு தொழில் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குழு மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதியினைப் பெற கருத்துருக்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்படும்.

### .6. கயிறு குழுமம்

கயிறு குழுமம் துவக்குவதற்காக மொத்தம் *7* கோடி ரூபாய் திட்ட ρதலீட்டில் பாரம்பரிய தொழில்களின் புத்துயிரூட்டும் நிதி ட்டத்தின்கீழ் மத்திய கயிறு வாரியம் மூலமாக ஒப்புதல் பறப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டு காலத்திற்கு நீடிக்கும் இத்திட்டத்தில் சிவகங்கை, பெரியகுளம், சலம், வேலூர், பட்டுக்கோட்டை மற்றும் கடலூரில் உள்ள கயிறு ழுமங்கள் இணைக்கப்படும். குழும வளர்ச்சி முகமைகளைக் ண்டறிவதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளன. *2007-2008* ஆம் ண்டில் இத்திட்டம் செயல்படத் துவங்கும். இந்தத் திட்டத்தின்மூலம் *00* குடும்பங்கள் பயன்பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## IV. நுண்தொழிற்கடன் வசதி

### 4.1. நுண்தொழில் நிறுவனங்களுக்கு அதிகக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு முதல்வரின் விருது

மத்திய அரசின் 2006 ஆம் ஆண்டின் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாடு சட்டத்தின்படி ரூ.5 கோடி மதிப்பிலான இயந்திர தளவாடங்களைக் கொண்ட நிறுவனங்களும் சிறு தொழில் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எனவே நுண் தொழில்களைப் பாதுகாக்கும் வகையில் ஆண்டுக் கடன் திட்டத்தில் (ACP) வரையறுக்கப்பட்ட தொகையில் உரிய அளவு கடன்கள் நுண்தொழிலகங்களுக்கு வழங்கப்படுவதை ஊக்குவிக்க அதிக அளவு நுண்தொழில் கடன் வழங்கும் முதல் 3 வங்கிகளுக்கு முதல்வரின் விருது அறிவிக்கப்படுகின்றது.

### 4.2. நுண் மற்றும் சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுவதை உத்வேகப்படுத்த வங்கியாளர்களுக்குப் பயிற்சி முகாம்

வங்கியாளர்கள் நுண் மற்றும் சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குவதை உத்வேகப்படுத்த அரசு பல்வேறு மானிய சலுகைத் திட்டங்களை உருவாக்கி வருகின்றது. வங்கி மேலாளர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு பணி அலுவல்களுக்கிடையில் மானிய திட்ட விவரங்களை முழுமையாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு குறைவாகவே உள்ளது. எனவே மண்டல அளவில் வங்கியாளர்களுக்கான பயிற்சி முகாமினை நபார்டு, சிட்பி போன்ற வங்கிகளோடு இணைந்து நடத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

### 4.3. நுண்தொழில் மற்றும் குடிசைத் தொழிலுக்கான கடன் திட்டம்

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், நிறுவனங்கள், தனி நபர்கள் ஆகியோருக்கு வழங்கி வரும் கடன்களுடன் முதற்கட்டமாக நுண்தொழில் மற்றும் குடிசைத் தொழில் புரிவோருக்கு வங்கியின் மொத்த கடன்களில் 10 சதவீதம் வரை கடன் வழங்க தாய்கோ வங்கி உத்தேசித்துள்ளது.

4.4 தாய்கோ வங்கியில் பிணையம் இல்லாமல் கடன் பெற தொழில் முனைவோர்களுக்கு வகை செய்ய ஏதுவாக கடன் உத்திரவாத நிதியத்தில் தாய்கோ வங்கியை உறுப்பினர் நிறுவனமாக அறிவித்தல்



தொழில் முனைவோர்கள் ரூ.25 இலட்சம் வரை பிணையம் இன்றி கடன் பெற வழிவகை செய்யும் மத்திய சிறு தொழில் அமைச்சகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்தில் தாய்கோ வங்கியையும் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு நிதி நிறுவனமாக அறிவிக்கை செய்ய மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ளும்.

### 4.5. கதர் கிராமக் கைத் தொழில் ஆணையம்

KVIC செயல்படுத்தும் (REGP) ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியங்களை தாய்கோ வங்கியில் கடன்பெறும் தொழில் முனைவோர்களுக்கு பெற்றளிக்கும் வகையில் தாய்கோ வங்கியை (KVIC)-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் உறுப்பினர் நிறுவனமாக அறிவிக்க மத்திய அரசை கேட்டுக் கொள்ளும்.

4.6. தாய்கோ வங்கியில் **ATM:** தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான கடன் வசதி அளிக்க பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் அனைத்து கிளைகள் முழுவதும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் அதன் கிளைகள் அனைத்தையும் "மின்னணு இணைவமைவு" (Internet Banking) முறை வாயிலாக இணைத்து அதன் மூலம் சாத்தியங்கள் உள்ள இடங்களில் தொழில் முனைவோர்களின் வசதிக்காக தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரங்கள் (ATM) நிறுவப்படும்.

227664

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.